கலையமுதம்

அன்பு அறிவிப்பாளர்

பீ. எச். அப்துல் ஹமீத்

அவர்களின்

பாராட்டு விழா மலர்



31-07-2004

London

384
அப்து
ட/PR

We don't claim to be number one but we are second to none!!

AYNGARAN TELECOM

Best Quality. Best Price. Best Service.

GET YOUR FREE ACCOUNT REGISTRATION

SAVE UPTO 95% ON YOUR INTERNATIONAL CALLS



* No Connection Charges
* No Monthly Fees
* Prepaid Account
* Optional Itemized Billing
* Clear and Quickest Connections
* 4-6 Digit access from Landlines
* Mobile Phone Access
* View your itemized bills online
* Keep track of when and whom you call online



தெளிவான தொடர்புகளுக்கும், தரமான சேவைகளுக்கும்
மிகக்குறைந்த கட்டணத்துடன் இப்பொழுது முதல்
ஐங்கரன் ரெலிகொம்

INTERNATIONAL CALLS AT LOWEST AFFORDABLE PRICES!!

FASTEST WAY TO CONNECT TO YOUR FAMILY & FRIENDS ABROAD

call us now to set up your account on 0800 635 36 37.

AYNGARAN TELECOM
Unit 19, Riverside Business Park, Lyon Road, Wimbledon, SW19 2RL, UK.
web: www.ayngaran.com/telecom/ E-Mail:telecom@ayngaran.com

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

'கலைஞானிதன்' அன்பு அறிவிப்பாளர்

பீ.எச்.அப்துல் ஹமீத் அவர்களுக்கு பாராட்டு விழா

31

07

2004

சனிக்கிழமை

மாலை





FAIRFIELD HALL CROYDON UK

உலகத் தமிழ் கலையகம்

பிரித்தானியா

36081

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



மூத்த ஒலிபரப்பாளர்

ஈழத்து மெல்லிசையின் நதிமூலம்

பீ.எச்.அப்துல் ஹமீத் அவர்களின்

அறிவுப்புத்துறை வழிகாட்டி

அமரர் 'விவிதகலாவினோதன்'

எஸ்.கே.பரராஜசிங்கம்

அவர்களுக்கு இம்மலர்

சமர்ப்பணம்



அன்புத் தமிழ் நெஞ்சங்களே வணக்கம்!

எங்கள் வாழ்கையோடு ஒன்றித்துவிட்ட வானொலிக் கலையின் நாயகன் ஒருவரின் பாராட்டுவிழா.

வானொலியில் வாய்ப்புத்தேடி அலைந்தவர்கள் மத்தியில், இவரை சின்னவயதில் வாய்ப்பு வந்து வாசல் கதவைத்தட்டித் தத்தெடுத்துக் கொண்டது.

வானலையில் படைக்கும் கலை காற்றோடு கலந்து சென்றுவிடும், அதனால், வானலைக் கலைஞர் களை மக்கள் அவ்வளவாக மனதில் நிலை நிறுத்தி வைத்திருக்க மாட்டார்கள் என்ற கருத்தும் கலையுலகில் நிலவியுள்ளது.

அந்தக் கருத்தைப் பொய்யாக்கி வானலைகளில் படைத்த கலைகளால் மக்கள் மனங்களில் நிலையான இடத்தைப்பிடித்து உலகத் தமிழ் ஒலிபரப்பாளராக உலா வரும் ஒப்பற்ற கலைஞருக்கு விழா எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஒலிபரப்புத்துறையில் ஈடுபடக்கிடைத்த நாள் முதல் தமிழுக்குப் பணி செய்யும் ஒருவர். தமிழைப் பிழையின்றிப் பேச வேண்டும். லகர, ளகர, ழகர, னகர, ணகர பேதங்களை எல்லாம் தன் தமிழ் உச்சரிப்பில் தனித்துவமாக நிலைநாட்டுபவர். ஆற்றலுடையவர்களை அரங்கேற்றிப் பெருமைப்படுத்துபவர். திறமையுடையவர்களை அவர்கள் சார்ந்த துறையில் தட்டிக் கொடுப்பவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ் சேவை ஒலிபரப்பிலே பல புதுமைகளை நிலை நாட்டிக் கொண்டவர். தேசிய சேவையில் ஒலிபரப்பாகிய சில நிகழ்ச்சிகளை வர்த்தக சேவையிலும் நிகழ்த்தி சாதனை நிகழ்த்தியிருக்கின்றார்.

கலை, இலக்கியம், நாடகம் என எல்லாத்துறைகளிலும் ஈடுபாடு கொண்டவரான இவர் அந்தத் துறையில் பல புதிய முகங்களை வானலை வழியாக வெளிக் கொணர்ந்தவர்.

இன்று உலகெங்கும் வாழும் தமிழ்மக்கள் அனைவரும் அறிந்தவராகவும், அவர்களின் நேசத்துக்குரியவராகவும் விளங்கும் உங்கள் அன்பு அறிவிப்பாளர் அவர்கள் வேடிக்கை வினோத இசை நிகழ்ச்சியாக இலங்கை வானொலியில் ஆரம்பித்ததுதான் பாட்டுக்குப் பாட்டு. இதன் மூலமாகவே இவர் இன்று உலகம் முழுவதும் அறியப்பட்டுள்ளார். இந்தப்பாட்டுக்குப்பாட்டு நிகழ்த்தியுள்ள சாதனைகள் பல. குறிப்பாக கொழும்பு நகரத்திலே ஒரு காலகட்டத்தில் ஓரிரு தமிழ்ப் பாடகர்களும் ஒரு சில தமிழ் இசைக்கலைஞர்களுமே இருந்தார்கள்.

பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி பல இசைக்குழுக்கள் தோன்றவும், இசைக்கலைஞர்கள், பாடகர்கள் பலர் உருவாகவும் வழிவகுத்தது. இன்று தொழில் நிலைக்கலைஞர்களாக அவர்கள் இசைத்துறையில் வலம் வர துணை செய்தது.

இன்று தென்னிந்தியாவிலே ராஜ் தொலைக்காட்சியில் ராஜகீதம் என்ற நிகழ்ச்சியில் பங்குபற்றுவோர் திரைப்படப் பாடகர்களாக மாறி வருவதை அவதானிக்க முடிகின்றது.

கார்த்திக், மதுமிதா, முக்கேஸ் என திரைப்படப் பின்னணிப் பாடகர்களின் பட்டியலை உயர்த்திவரும் ஒளிபரப்பாளர்.

வானொலி, தொலைக்காட்சி என்கின்ற இரு ஊடகங்களிலும் ஒரே நேரத்தில் பணி செய்து தமிழுக்குத் தொண்டாற்றும் தமிழ் கலைஞர் கலைஞானிதன் உங்கள் அன்பு அறிவிப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களைக் கௌரவிக்கக் கிடைத்த வாய்ப்பினை உலகத் தமிழ் கலையகம் பெருமையாகக் கருதுகின்றது.

எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அன்பு அறிவிப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எஸ்.கே. ராஜென் - சுந்தரம் சிறிஸ்கந்தராஜா

இயக்குனர்கள்

உலகத் தமிழ்க் கலையகம்

பிரித்தானியா

அந்தக் காலத்தில் எங்கள் வானொலியில் சிறுவர் மலர் என்ற குழந்தைகள் நிகழ்ச்சி ஒன்று ஒலிபரப்பாகி வந்தது. அப்போ தெல்லாம் ஒலியிழை (டேப்) புழக்கத்தில் வராத காலம் என்பதால் சிறுவர் மலர் நிகழ்ச்சிகூட நேரடி ஒலிபரப்பில் தான் வரும். இந்த நிகழ்ச்சியை நேரில் பார்க்க ஒவ்வொரு வாரமும் இரண்டு மருமக்கள் (சிறுவர்கள்) அனுமதிக்கப்படுவார்கள். அப்படித்தான் என் பள்ளியிலிருந்து நானும் இன்னொரு சிறுவனும் சென்றிருந்தோம். அப்போது எனக்குப் பத்து வயது இருக்கும். சிறுவர் மலர் நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகிக் கொண் டிருந்த ஒரு தொடர் நாடகத்தில் நடிக்க வேண்டிய ஒரு சிறுவன் வரவில்லை. நேரடி ஒலிபரப்பு என்பதால் பார்வையாளராக வந்திருந்த எங்கள் இருவரையும் அவசரமாகப் பரீட்சித்துப் பார்த்ததில் எனக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அதன்பின் தொடர்ந்து நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

அந்தக் காலகட்டத்தில் அறிவிப்பாளர் என்பது மிக உயர்ந்த பதவியாக மதிக்கப்பட்டு வந்தது. மதிப்பிற்குரிய மயில்வாகனம் போன்றவர்கள் அறிவிப்பாளராக இருந்த காலம் அது. நான் பள்ளிப் படிப்பை முடித்துப் பல்கலைக்கழகம் நுழையும் தறுவாயில் என் மீது அன்பு கொண்ட அதிகாரி ஒருவர் என்னை அறிவிப்பாளருக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ள, விண்ணப்பித்ததும் அறிவிப்பாளராகவும் செய்தி வாசிப் பாளராகவும் நான் தேர்வு பெற்றேன். வானொலி வரலாற்றிலேயே மிக இளம் வயதில் அதாவது பதினெட்டு வயதிலேயே அறிவிப்பாளராகத் தேர்வு பெற்றவன் நானாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். சொன்னால் சிரிப்பீர்கள். நான் அரைக்கால் சட்டை போட்டுக் கொண்டு தான் அப்போது வானொலிக்குப் போவேன்.

தமிழ் அறிவிப்புத் துறையின்
தலைமகனே அன்பு அறிவிப்பாளர்
அப்துல் ஹமீத் அவர்களே!
தங்களுக்கு எங்கள் இனிய வாழ்த்துக்கள்!

Diamonds Palace - Mithus Jewellery

நகை எங்கும் வாங்கலாம் தானே?
அப்படியிருக்கும் போது ஏன்
Diamonds Place, Mithus
பற்றி அதிகமாக மக்கள் பேசிக்
கொள்கின்றார்களே ஏன்?

அவர்கள் எல்லாம் Diamonds Place,
Mithus Jewelley நகைகளை வாங்கிப்
பாவித்து பயனடைந்துள்ளார்கள்.

ஓ... உங்களுக்கும்
Diamonds Place, Mithus Jewelley
பற்றித் தெரியுமா? அப்படின்னா
இன்றைக்கு அங்கேயே என்ன
கூட்டிட்டுப் போங்களேன்.

DIAMONDS PLACE
MITHUS JEWELLEY

76, Tooting High Street, 22-324, London Road,
London SW17 0RN. Croydon CR0 2TJ
Tel: 020 8767 5333 Tel: 020 8683 1756
Fax: 020 8767 5814 Fax: 020 8683 1792

Open 7 Days a Week



என் முதல் மரியாதைக்குரிய மூத்த ஒலிபரப்பாளர் சோதரர் பீ.எச்.அப்துல் ஹமீத் அவர்கள்

எஸ்.கே. ராஜென்

ஈழத்தின் தமிழ் ஒலிபரப்பு வரலாறு என்பது அமரர் சோ. சிவபாதசுந்தரம் அவர்களோடுதான் முழுமையாக ஆரம்பமானதாகக் கூறப்படுகின்றது.

இந்த வரலாற்றில் எத்தனையோ ஒலிபரப்பாளர்கள் அங்கம் பெறுகின்றார்கள். இலங்கை வானொலி என்கின்ற ஒலிபரப்புக் கலைக்கூடம் தனது சேவையை ஆரம்பித்த காலகட்டம் மிகவும் பொன்னான காலம்.

அந்தக் காலம் முதல் இப்பொழுது வரை இந்த ஒலிபரப்புத்துறை வளர்ச்சியடைந்து வருகின்றது. வானலையில் கலை படைக்கும் கலைஞர்கள் பலர் வானொலி நேயர்களால் சிறந்த கலைஞர்களாக அடையாளம் காணப்பட்டார்கள். அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டார்கள்.

இப்படியாக நேயர்கள் வழங்கிய வரவேற்பு அந்த ஒலிபரப்பாளர்களை, அவர்கள் சார்ந்த துறையில் நேர்த்தியாக, நேர்மையாக, உற்சாகமாகச் செயல்பட வைத்தது.

அவ்வாறு அவர்கள் செயற்பட்டதினால் மக்கள் மனங்களில் நிலைபெற்றார்கள், வானொலிக் கலைஞர்கள் என அங்கீகாரம் பெற்றார்கள்.

வானொலி தமிழ் ஒலிபரப்பில் எதுவும் பேசலாம், எப்படியும் பேசலாம் என்ற தத்துவம் அன்று இருந்ததில்லை. வானொலியில் ஒருவர் அறிவிப்பாளராகப் பணிசெய்யத் தெரிவு செய்யப்படுகின்றார் என்றால், அவர் பல்வேறு விடயங்களில் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும். தனியே குரல்வளம் மட்டும் இருந்தால் போதும் என்ற நிலை அன்று இருக்கவில்லை.

ஒலிபரப்பாளர்கள் எப்பொழுதும் நல்ல தமிழ் பேசவேண்டும். நல்ல தமிழ் என்றதும் பயந்துவிட வேண்டியதில்லை. கடினமாகத் தமிழ் பேசவேண்டும் என்பதில்லை. இலகு தமிழை, எளிமையான தமிழை நல்ல முறையில் பேசவேண்டும். நாம் நூல்களில், பத்திரிகைகளில் நல்ல தமிழ் படிக்கின்றோம். அந்தத் தமிழை ஒலிபரப்பாளர்கள் வானலைக்கு எடுத்துவர வேண்டும். பிழையின்றிப் பேசவேண்டும். சுருதியோடு பேசவேண்டும்.

ஒரு விடயத்தை அறிவிப்பதற்குத் தயாராவதற்கு முன்னர் அந்த விடயத்தை அறிவிப்புக்கு உரிய முறையில் வடிவமைத்துக் கொள்ள வேண்டும். சொல்வதை எப்பொழுதும் சுவைபடச் சொல்ல வேண்டும்.

ஒலிபரப்புக்கூடத்திலே பணிபுரியும் ஓர் அறிவிப்பாளர் ஓர் ஆசிரியர் என்ற நிலையைப் பெறுகின்றார். ஆகவே, அந்த ஆசிரியர் எவ்வளவு பொறுப்புணர்வோடு பணியாற்ற வேண்டும். ஒரே நேரத்தில் வானொலி ஒலிபரப்பைப் பல்லாயிரக்கணக்கானோர் கேட்டுக்கொண்டிருப்பார்கள். அவர்களில் எல்லாவிதமான இரசனையுடையவர்களும் இருப்பார்கள். பாமரர்கள் இருப்பார்கள், படித்த கல்விமான்கள் இருப்பார்கள். அவர்கள் வானொலியைக் கேட்பதன் மூலம் பயன்பெற வேண்டும். எந்தத் தரப்பினரும் வானொலியை நிறுத்திவிடும் அளவுக்குச் சென்றுவிடக் கூடாது. அவ்வாறு நிகழாமல்



பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியின் மூலம் மட்டும் என்னை இனங்காண்பதை நான் விரும்ப வில்லை. இது என்னுடைய தாழ்மையான கருத்து. க.பொ.த. உயர்தர மாணவர் களுக்காக நட்சத்திர அறிவுக் களஞ்சியம், பரராசசிங்கம் அவர்கள் நடத்திய இலக்கிய தரத்தினைக் கொண்ட இதய ரஞ்சனி என்பன அறிவு பூர்வமான நிகழ்ச்சிகளாக இருந்தன. ஆனால் குளியலறை சங்கீத ஞானமுடையவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற நோக்குடைய நிகழ்ச்சியாகவே பாட்டுக்குப் பாட்டினை ஆரம்பித்தோம். இந்நிகழ்ச்சி மூலம் எத்தனையோ கலைஞர்கள் வெளிச்சத்திற்கு வந்தார்கள். புதிய இசை யமைப்பாளர்கள் உருவானார்கள். அவர் களுக்கு இரசிகர்கள் உருவானார்கள். இதற்கு அடித்தளம் அமைத்தது பாட்டுக்குப் பாட்டு. அதைப் பலர் மறந்து விட்டனர். இந் நிகழ்ச்சிக்கு ஆதரவு அளித்த விளம்பர தாரர்களுக்கே நன்றி சொல்ல வேண்டும்.

இப்போது இன்னுமொரு பரம்பரை வந்து கொண்டு இருக்கிறது. அவர்களுக்கு என்னைத் தெரியாது. தெரிந்தது பாட்டுக்குப் பாட்டு மட்டுமே. இப்போது புதிதாக ஒரு நிகழ்ச்சி செய்ய நேரமோ அவகாசமோ இல்லை. பாட்டுக்குப் பாட்டு மட்டுந்தான் என்னை இனங்காண வைக்கிறது. அது தவிர்க்கமுடியாத ஒன்று.

தமிழுக்கும் கலைக்கும்
பணியாற்றும் பீ.எச். அப்துல் ஹமீத்
அவர்களது சேவை தொடர
எமது இனிய வாழ்த்துக்கள்!

International
Refugees Organisation

நாம் தெரிந்திருப்பவை சில! தெரியாதிருப்பவை பல!
பிரித்தானியாவில் நிரந்தர வசிப்பிட அனுமதி பெறுவது எப்படி?
அரசியல் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது எவ்வாறு?
மேன்முறையீடுகள் செய்வது எப்படி?
மாணவர்கள் தமது விசாக்களை நீடிப்பது எவ்வாறு?
திருமண விண்ணப்பங்கள் மேற்கொள்வது எப்படி?
இவை போன்ற உங்களின் பல கேள்விகளுக்கு
விடை, ஆலோசனை கிடைக்குமிடம்.
குடிவரவு ஆணையாளர் அலுவலகத்தினால்
குடிவரவு ஆலோசனை வழங்க தகுதி வாய்ந்த நிறுவனமாக
அங்கீகரிக்கப்பட்ட தமிழர் நிறுவனம்
10 வருடங்கள் சட்ட ரீதியாக,
14 வருடங்கள் சட்டவிரோதமாக,
பிரித்தானியாவில் வாழ்ந்துவிட்டீர்களா?
நிரந்தர வதிவிட அனுமதி பெறுவது பற்றி
ஏன் இன்னும் யோசிக்கவில்லை?
சிறிலங்கா பிரஜைகள் வேலை செய்துகொண்டே விடுமுறையைக்
கழிக்கும் இரண்டு ஆண்டுகால விசா பெறும் ஆலோசனைகள்!

OISC
MEMBER OF JCWI And JUSTICE

International
Refugees Organisation

1083, Garratt Lane, Tooting,
London SW17 0LN.
Tel: 020 8682 9480, 020 8682 4494
Fax: 020 8682 9922

ஒலிபரப்பை நடத்திச் செல்ல வேண்டும். இதிலேதான் ஓர் ஒலிபரப்பாளரின் திறமையும், கடமையும் வெற்றியும் தங்கியுள்ளது.

ஒலிபரப்புக் கூடத்துக்குள்ளிருந்து வானலையில் நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருக்கும் ஓர் ஒலிபரப்பாளருக்கு எவர் கேட்கின்றார், கேட்கவில்லை என்பது தெரியவராதுதான். ஆனால், அந்த ஒலிபரப்பாளர் நடாத்தும் நிகழ்ச்சியில் அவர் கொண்டிருக்கும் ஈடுபாடு என்பது, நிகழ்ச்சிகளைக் கேட்கும் நேயர்களின் வீதத்தைக் கணிப்பீடு செய்ய உதவும். அந்தக் கணிப்பீடு, பின்னர் வரும் நேயர் கடிதங்கள், தொலைபேசி அழைப்புக்கள் மூலமாகப் புலப்படும். நேயர்களின் கருத்துக்களுக்கு ஈடுகொடுத்து நிகழ்ச்சிகளை நடாத்திச் செல்வதிலேயே ஒலிபரப்பாளர்களின் தனித்துவம் தங்கியிருக்கின்றது.

முன்னர் ஒரு நிகழ்ச்சியை நடாத்திவிட்டு ஒருவாரம் காத்திருக்க வேண்டும் நேயர் கருத்துக்களை அறிய. ஆனால், இன்று அப்படியல்ல, தொலைமடல், தொலைபேசி மூலமாகவே நேயர்களின் அபிப்பிராயங்கள் நிகழ்ச்சி நிறைவு பெற்று மறுகணமே கிடைக்க ஆரம்பித்துவிடும்.



இப்படி நவீன வசதிகளை எல்லாம் பயன்படுத்திக் கொள்ளும் இன்றைய ஒலிபரப்பாளர்கள் இந்தத் துறையின் முன்னோடிகளையும், அவர்களின் அனுபவங்களையும் எந்தளவுக்குத் தம்வசப்படுத்திக் கொள்கின்றார்கள் என்பது கேள்விக்குறி?

தமிழ் ஒலிபரப்புத் துறையின் முன்னோடியான வரான சகோதரர் அப்துல் ஹமீத் அவர்கள் இந்தத் துறையை எப்படி நேசித்தார்? எவ்வாறு அந்தத் துறையிலே பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்பதை இந்த மலரின் பக்கங்களில் பலர் படம்பிடித்திருக்கின்றார்கள்.

1970 களில் தான் எனக்கும் இவருக்குமிடையிலான நேரடிச் சந்திப்புக்கள் நிகழ்ந்தன. வல்வெட்டித்துறையில் இந்திரவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கே கண்ணன் கோஷ்டியோடு நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அமரர் மேஜர் சுந்தரராஜன் அவர்களுடன் மேடைக்கு வந்தார். ஒலிவாங்கியை அவரிடம் கையளித்தேன். நன்றி ராஜென் எனக்கூறி என்னைத் திடுக்கிட வைத்தார். அன்று அவரிடமிருந்து கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் முதன்முதலாக 'பாட்டுக்குப் பாட்டு', 'ஏழுகேள்விகள்' நிகழ்ச்சிகளை நடாத்த வருகை தந்தபோது சந்திப்பு. அமரர் நித்தி அவர்களை அறிமுகம் செய்துவைத்தேன். அவரே முழு ஒலிப்பதிவுகளையும் செய்து கொடுத்தார். வாரம்தோறும் நித்தி அவர்களின் பெயரை வானொலியில் அறிவித்திருந்தார்.

80களில் இலங்கை வானொலிக்கு பகுதிநேர அறிவிப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்த வேளையில், ஒருமுறை வானொலி நிலையத்தில் சந்திப்பு, வாழ்த்துக் கூறினார். எனக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வரவில்லை என்றேன். உடனே பணிப்பாளரை (திருமதி. பொன்மணி குலசிங்கம் அவர்கள்) பார்க்கும்படி கூறினார். இப்படிச் சந்திப்புக்கள் தொடர்ந்தன. 1984ல் பாரீஸ் வந்ததின் பின்னர் நான் கடிதம் மட்டும் எழுதிக் கொண்டேன். 1988ல் தொலைபேசியில் உரையாடிக் கொண்டேன். அப்பொழுதுதான் "வாருங்களேன் பாரிசுக்கு ஒரு நிகழ்ச்சியை நடாத்திச் செல்லலாம்" என்றேன். "நீங்கள் அழைத்தால் வருகின்றேன்" என்றார். இந்த உரையாடலின் பின்னர் தொடர்ந்தது தான் ஐரோப்பிய கலைப்பயணம். 1988ல் தனியாகப் பாரீசுக்கு வருகைதந்து இரண்டு நாள் நிகழ்ச்சிகளை நடாத்திக் கொண்டவர், அடுத்த ஆண்டில் இன்னும் பல கலைஞர்களை அழைத்துவர விரும்புகின்றேன் என்றார். அத்தனை இரசிகர்களும் அமோக கரகோசம் செய்தனர். அதன் பின்னர் தான் என்னிடமே பேசிக்கொண்டார். 1989ல் இசை - நாடகக் கலைஞர் குழுவே பயணம் புரிந்தது. ஆண்டுதோறும் பயணம் தொடர்ந்தது.

இந்தப் பயணங்களின் போது அவருடன் சேர்ந்து மணிக்கணக்காக உடன் இருந்தேன். அந்த நேரங்களில் அவரிடமிருந்து அறிந்து கொண்டவைகள் பல. ஒலிபரப்பாளர்கள், கலைஞர்கள், பாடகர்கள் எனப் பலரது விபரங்கள் தெரிந்துகொண்டேன்.

இந்திய சுற்றுலா பிரகடனப் படுத்தப்பட்டு அவ்வாண்டினை சிறப்பிக்கும் வகையில் தைப்பொங்கல் தினத்தன்று இசைவிழா அங்கு ஏற்பாடாகி இருக்கிறது என்று உத்தியோகபூர்வமாக எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டு நான் அங்கு சென்றேன்.

ஐந்தரைக்கோடி தமிழ் மக்கள் வாழும் தமிழ் நாட்டிலே நிகழ்ச்சி நடத்துவதற்கு இலங்கையிலிருந்து ஒரு அறிவிப்பாளனை அழைக்கின்றார்களே என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது. நீங்கள் ஒளிப்பேழையில் பார்த்த முகங்கள் கொஞ்சம். நான் அங்கு பார்த்த முகங்கள் ஏராளம். 1940களில் இருந்து 90வரை பல வகைகளிலும் பங்களிப்புச் செய்த கலைஞர் குழாமே அங்கு திரண்டு இருந்தது. அந்த நிகழ்ச்சிக்காக முதல்நாள் இரவுதான் அங்கு போய்ச் சேர்ந்தேன். யார் யார் பங்குபற்றப் போகிறார்கள் என்ற பூரண விளக்கமும் எனக்கு அங்கு இல்லை. அவர்களைப் பற்றிய தகவல்களும் என் கைவசம் இல்லை. மேடையில் ஏற்றிவிட்டார்கள். அந்நிகழ்ச்சி மாலை ஆறுமணிக்கு ஆரம்பமாகி அடுத்தநாள் அதிகாலை 1-1/2 மணிக்கு முடிவடைந்தது. பிறகு அந்த ஒளிப்பேழை உலகெங்கும் வெளியிடப்படப் போகிறது என்பதைக் கேள்விப் பட்டதுடன் சந்தோசம் அடைந்தேன். அதில் என்னுடைய அறிவிப்பையும் சேர்த்துத்தான் வெளியிடப் போகிறார்கள் என்பதை அறிந்து ஆச்சரியப்பட்டு அவர்களுடன் நான் தொலைபேசியில் தொடர்புகொண்டு இதை யாராவது பொறுமையுடன் பார்ப்பார்களா என நான் வாதம் செய்தேன். அதனை வழங்கிய என்னுடன் அன்பு கொண்ட தொழிலதிபர் வி.கே.ரி. பாலன் அவர்கள் அந்த ஒளியிழையில் பெறுமதி வாய்ந்ததாக இருக்கப்போவது நீங்கள்தான் என்றார். அவருடைய வாதம் எவ்வளவு சரியாக இருந்தது என்பதை நான் அனுபவபூர்வமாக உணர்ந்தேன்.

நான் கனடாவுக்கு அழைக்கப்பட்டு எனக்கு அங்கே ஒரு பாராட்டு விழாவும் செய்தார்கள். அங்கே ஒவ்வொரு இல்லத்திலும் அதன் ஒரிஜினல் பிரதியை பொக்கிசம் போல் பாதுகாத்து வைத்திருந்தனர். அவர்கள் எல்லோரும் சொல்வதைக் கேட்ட பின்புதான் அதனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அங்குதான் நான் அதனைப் பார்த்தேன். ஒரு புதுமனிதனாக இரசிகனாக இருந்து நான் என்னையே ரசித்தேன்.

அன்பு அறிவிப்பாளர்
பீ. எச். அப்துல் ஹமீத் அவர்களே!
அன்பு நிறை வாழ்த்துக்கள்

TIME TRAVEL & TOURS

இலங்கை–இந்தியா–பிரித்தானியா
யாழ்ப்பாணம்–கொழும்பு–சென்னை–இலண்டன்

எங்கும் அலுவலகங்கள்
இயங்குகின்றன

விமானப்பயண ஏற்பாடுகளில்
நீண்டகால அனுபவம்
விமானச்சீட்டுக்களை
வழங்குவதில் துரிதம்

உலகெங்கும் பயணம் செய்ய
உகந்த விமானப்பயண
ஏற்பாட்டாளர்கள்

TIME TRAVEL & TOURS

020 8907 6969, 020 8429 8333, 020 8767 0000

0094 1 12390 041, 0091 44 8554298

ஒரு மேடையை எவ்வாறு கையாள்வது, கலைஞர்களை எப்படி அறிமுகம் செய்வது, ஒரு நிகழ்ச்சியை எந்தவகையில் தொகுப்பது இப்படிப் பல அவரிடமிருந்து படித்திருக்கின்றேன்.

ஒருமுறை பாரீஸ் நகரத்திலே கலைஞர் ஒருவரை அறிமுகம் செய்கின்றபோது அந்தக் கலைஞரின் பெயரை மட்டும் கூறி மேடைக்கு அழைத்தேன். நாடகம் நடித்துவிட்டு உடைமாற்றிக் கொண்டிருந்தவர் ஓடோடி வந்தார், என்னிடத்திலிருந்து ஒலிவாங்கியைப் பெற்றுக்கொண்டார். அந்தக் கலைஞரைப் பற்றிய ஓர் அறிமுகம் கொடுத்தார். இது எனது மனதிலே படமாகப் பதிந்து கொண்டது.

ஒலியமைப்பு, ஒலிப்பதிவுச் சாதனங்களை எல்லாம் இப்பொழுது லாவகமாகக் கையாள முடிகின்றது என்றால் அந்தப் பயிற்சியைத் தந்தவரும் அவரே. முன்னர் எல்லாம் ஒலியமைப்புக் கருவிகளுடன் ஒலியமைப்பாளரையும் நாம் அழைத்துக் கொள்வதுண்டு. ஆனால், இவர் ஐரோப்பிய நாடுகளுக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதின் பின்னர் நாமே அவற்றையெல்லாம் கையாளும் முறையைப் பயின்றுகொண்டோம்.

ஒலிபரப்பாளர் என்பவர் ஒலிவாங்கிக்கு முன்னால் இருந்து எழுதியிருப்பதை வாசித்துவிட்டுச் செல்பவரா? ஓர் ஒலிபரப்பாளர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு பல்கலைக்கழகமாக விளங்குபவர் எனது முதல் மரியாதைக்குரிய மூத்த ஒலிபரப்பாளர் சகோதரர் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்கள்.

தமிழ் ஒலிபரப்புக்கள், கலைநிகழ்வுகள் நேர்த்தியாக நடைபெறவேண்டும் என்பதில் அவர் எடுக்கும் கவனம் பல விடயங்களைக் கற்றுத் தந்திருக்கின்றன, கற்றுத் தருகின்றன.

அனுபவம் கற்றுக் கொடுக்கும் பாடம் அற்புதமானது. அனுபவம் என்றென்றும் உறுதியாக நிலைபெறும் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். அந்தவகையில் ஒலிபரப்புத் துறையில் பழுத்த அனுபவம் கொண்ட அன்பு அறிவிப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களின் வழிகாட்டல் உலகெங்கும் தமிழ் ஒலிபரப்புப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது. அவரது பயிற்சி, அவர் வழங்கும் ஆலோசனைகள் தமிழ் ஒலிபரப்புத் துறையை மென்மேலும் வளப்படுத்தும்.

எனது முதல் மரியாதைக்குரிய மூத்த ஒலிபரப்பாளரான அன்புச் சோதரர் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு ஒரு பாராட்டு விழாவை நடாத்த எடுத்த முயற்சிக்கு என்னோடு தோளோடு தோள்நின்று ஒத்துழைக்கும் நண்பர் சுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பாடுடையவன். அவருக்கு எனது உளமார்ந்த நன்றி!

ஒலிபரப்பு, ஒளிபரப்புத் துறையிலே சோதரர் இன்னும் பல சாதனைகள் புரிய வேண்டும். அத்துடன் அவர் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் தமிழ் ஒலிபரப்புச் சார்ந்த எண்ணங்கள் ஈடேற வேண்டும் என்றும் வாழ்த்திக்கொள்கின்றேன்.

அன்புடன்

சோதரன்,

எஸ்.கே. ராஜென்









சிங்கப்பூரில் எனக்கு ரசிகர்கள் இருப்பார்கள் என்று எனக்கு எதிர்பார்க்க முடியாது. அதனால் இரண்டு மூன்று நாட்கள் அங்கு தங்க வேண்டியிருந்தது. கோயில்கள் அமைந்திருக்கம் அந்தப் பாதையிலே நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது ஊர்வாசிகள் நடந்து வந்து என்னை இனங்கண்டு எங்கள் கடைக்கு வாருங்கள், எங்கள் கடைக்கு வாருங்கள் என்று உபசரித்தார்கள். எப்படிச் சாத்தியமானது என்று பார்த்தால், 'மதுரா இசை விழா ஒலிப்பேழைதான்'. அப்படி நீங்கள் சொன்ன ஒலிப்பேழை ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. ஆனால் இன்னொன்றைச் சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். 92ம் ஆண்டு ஒலிப்பேழைதான் நீங்கள் பார்த்தது. 93ம் ஆண்டும் ஒரு விழா நடந்தது. அதைவிடப் பிரமாண்டமான விழா. ஐந்து மணிக்கு ஆரம்பித்து அடுத்தநாள் அதிகாலை வரை இடைவிடாமல் தொடர்ந்து நடைபெற்றது. இந்தியாவிலே அத்தனை கலைஞர்கள் ஒன்றுசேர்ந்த காட்சியை யாருமே பார்த்திருக்க முடியாது. தமிழ்ச் சினிமாவின் முதலாவது இசையமைப்பாளர் எஸ்.பீ. வெங்கட்ராமன் அவர்தான் முதல் பாடலைப் பாடினார். அதாவது அவரை ஒரு தள்ளும் நாற்காலியில் உட்காரவைத்து தூக்கிக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். முதல் பாடல் அவர் பாடியது "பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் றஹீம்" என்று ஆரம்பிக்கும் நபி நாயகமே என்ற பாட்டு. அந்தப் பாடல் முடிந்ததும் அடுத்த பாடல் என்ன என்று நினைக்கிறீர்கள்? "சின்னச் சின்ன ஆசை சிறகடிக்கும் ஆசை". இப்படிப் பழமையையும் புதுமையும் அன்றைய தலைமுறையையும் இன்றைய தலை முறையையும் கலந்த அனுபவம் அது.



வீடுகள் தோறும் வானொலிக்கருகில்
எம்மை வரவேற்ற குரலுக்குரிய
அறிவிப்பாளர் வேந்தனே வெற்றிகள்
சேர்த்திட வாழ்த்துகின்றோம்

வீ கே ஓட்டோஸ்

வாகனத் திருத்த வேலைகளை
மேற்கொள்வதில் வல்லுனர்களாக
இலண்டனில் விளங்குவோர்

MOT
SERVICING
CLUTCHES
BRAKES
OVERHAULS
CAR ELECTRICALS
ALL TYPES OF REPAIRS

VEE KAY AUTOS

Call: Vagan
48,Belfast Road
London
N16 6UN
Tel: 020 88 06 19 65
Mob: 079 56 30 60 54



வானலை வெளியினில் ஒரு வழிப்போக்கன்....

பி.எச்.அப்துல் ஹமீத்

எதனை.. எங்கே.. எப்படி ஆரம்பிப்பது..?

சிந்திக்கும் மூளைக்கும், கைவிரல்களுக்கும் இடையில் உள்ள இடைவெளியைக்குறைப்பது எங்ஙனம்...?

பேச்சுக்கலையும் எழுத்துக்கலையும் இருவேறு கரைகள் என்பது மட்டும் உண்மை. முடிந்தவரை நீந்துகிறேன்.....

வாழ்வில் கிடைக்கக்கூடிய மிகப்பெரும் பாக்கியம்,

- நல்லமனிதர்களைச் சந்திப்பது.

பெறக்கூடிய மிகச்சிறந்த, சிக்கலான கல்வி,-மனிதர்களைப் படிப்பது.

எண்ணங்கள் சீராவதும் சீரழிவதும், நமது வாழ்வில் சம்பந்தப்படும் மனிதர்களிடமிருந்து நம்முள் ஏற்படும் தாக்கங்களாலேயே என்பது எனது திடமான நம்பிக்கை.

வாழ்வில் எனக்குக் கிடைத்த மூன்று பெரும் செல்வங்கள்-

-கருவில் எனைச்சுமந்து நற்குண இயல்புகளை எனக்குள் பதியம்போட்டு வளர்த்த அன்னை.

-அன்னையை இழந்த துயரத்தை ஈடுசெய்து என்னைத் தன் நெஞ்:சில் சுமந்து வரும் மனைவி.

சுரதா போன்றவர்களும் நான் மேடையில் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய பாங்கினைக் கண்டு கவிஞர் வைரமுத்துவிடம் சொன்னாராம். இவருக்கு ஒருவிழா எடுக்க வேண்டும் என்று. அதை நான் பெருமையாகச் சொல்ல வேண்டும். என்னைப் பற்றித் தலைக்கனத்தோடு சொல்வதல்ல. வைரமுத்து அதை என்னிடம் சொன்னபோது என் உடம்பெல்லாம் புல்லரித்தது. இப்படி அந்தத் தலைமுறையின் அன்பையும் பெறுமளவுக்கு இறைவன் வாய்ப்பினை வழங்கினான். அந்த வாய்ப்பு இலங்கை வானொலி மூலமாகக் கிடைத்தது. ஆகவே தான் வெளிநாடுகளிலிருந்து எனக்கு அழைப்புகள் வந்தும்கூட இப்பொழுது உலக நாடுகள் அனைத்திலுமே எப்.எம். வானொலி ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. பெரும் பாலான எப்.எம். வானொலி நிலையங்கள் என்னிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள் தான் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அத்தனை இடங்களிலும் இருந்தும் அழைப்பு வந்தும் எனக்கு இந்த நாட்டை விட்டுப் போகவோ இலங்கை வானொலியை விட்டுச் செல்லவோ முடியாத ஒரு நிலை. நன்றி மறந்தவனாக இருக்கக் கூடாது என்பதால் இப்பொழுது ஏற்படும் சிறுமைத்தனங்களையும் பொறுத்துக் கொண்டு, தொழில் ரீதியான போட்டி பொறாமைகளையும் சகித்துக் கொண்டு தொடர்ந்தும் வளர்ந்து வருகின்றேன்.



தமிழ் அறிவிப்புத்துறையின் தலைமகனே
தமிழ்த் துறையில் என்றும் துலங்கிட
வாழ்த்துகின்றோம்.

தமிழ் விஷன்

அலுவகத் தேவைக்குரிய
நிழல்ப்படங்கள் ஸ்ரூடியோவில்

திருமணம்
பிறந்தநாள்
பூப்புனிதநீராட்டு

DVD யில் படப்பிடிப்புப்பிரதிகள் வழங்குவோர்
களியாட்டம் கலைவிழா அரங்கேற்றம்
CD யில் நிழல் படப் பிரதிகள் தருவோர்

அனைத்தையும் தொழில் நுட்பரீதியில் வீடியோ
படப்பிடிப்புச் செய்து தருவோர்
அழகான நிழல் படப்பிடிப்புச் செய்வோர்

TAMIL VISION

162 MERTON HIGH STREET
SOUTH WIMBLEDON
LONDON SW19 1AZ
TEL: 020 8540 3251
web: www.tamilvisions.com

-எனது வெற்றிகளையும்,புகழையும் தமக்கும் கிடைத்த பேறாக நினைத்து,

எனது முன்னேற்றத்துக்குத் தூண்டுகோலய் விளங்கும் நண்பர்கள். (திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது போல, நல்ல நண்பர்கள் அமைவதும் இறைவன் கொடுத்த வரமே) அந்த வரிசையில் ஒருவரைப்பற்றி முதலில் எழுத விழைகிறேன்.

பால்ய வயதிலிருந்து இன்றுவரை எனக்கமைந்த நல்ல நண்பர்கள் வரிசையில்.. புலம்பெயர்ந்த மண்ணிலே, ஈழத்துக்கலைஞரின் பங்களிப்புகளுக்கே, என்றும் முன்னுரிமை வழங்கி, அவர்களது கலைத்திறமைகளுக்குக் களம் அமைப்பதில், தனது வாழ்நாளின் பெரும்பகுதியை அர்ப்பணித்துவரும் சகோதரர் எஸ்.கே.ராஜென், எனது கலைவாழ்வில் மிக முக்கியமானவர்களுள் ஒருவர்.



ஒலிபரப்புக்குடும்பத்துள் தன்னையும் இணைத்துக்கொள்ள வேண்டும் எனும் அவாவுடன், இலங்கையின் முதலாவது தனியார் வானொலிச்சேவையாய் நான் கணிக்கும், யாழ் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இயங்கிய, மணிக்குரலைத் தொடர்ந்து, பெஸ்டோன் (BESTONE) சேவையினை ஆரம்பித்து,சுயம்புவாக ஒலிபரப்புத்துறையில் தன்னை வளர்த்துக்கொண்டவர், எஸ்.கே.ராஜென். இத்துறையில் தனக்கு உந்துசக்தியாகவும், வழிகாட்டிகளாகவும் விளங்கும் ஒலிபரப்பாளர்களை, மதித்துப் போற்றும் ஒருபண்பாளராக, அவரை முதன் முதலில் அவரது ஒலிபரப்புக்கூடத்தில் சந்தித்தேன். நமது வானொலியில், அறிவிப்பாளராகப் பணியாற்றக்கூடிய அனைத்துத் தகுதிகளும் அவரிடமிருந்தும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் விதிகளின்படி, பகுதிநேர அறிவிப்பாளர்கள் அழைக்கப்பட்ட சில மணிநேரங்களுக்குள் கடமைக்கு வரக்கூடிய எல்லைக்குள் தலைநகர் பகுதியிலேயே வாழவேண்டிய வசதி இல்லாமையினால் அவரது எதிர்பார்ப்பு காலந்தள்ளிப்போனது.

ஆனாலும், அது கைகூடிவரும் காலகட்டத்திலேதான் நமது மண்ணிலே போர்மேகங்கள் சூழ்ந்தன. தாம் பிறந்த மண்ணையும், உறவுகளையும் பிரிந்து புலம்பெயர்ந்த மக்கள் கூட்டத்தில் ஒருவராக ராஜெனும் பயணமானார்.

புதிய சூழலில், வருமானத்தை ஈட்டக்கடுமையாக உழைத்தால்தான் வசதியாக வாழலாம் என்ற நிலையிலும்கூட, தன் பொன்னான பொழுதுகளைத் தமிழுக்காகவும், தமிழ்வானொலிக்காகவும் அர்ப்பணித்த எஸ்.கே. ராஜென், பாரிஸ் மண்ணிலிருந்து முதலாவது தமிழ் வானொலிநிகழ்ச்சியை ஆரம்பித்த முன்னோடியாகத்திகழ்ந்தார். அந்நியமொழிக்கலாசாரத்தின் மத்தியில் நம்மவர் தம் தாய்மொழியை மெல்ல மெல்ல மறக்கவேண்டியிருந்த சூழலிலே.. அவர்களது தமிழ்த் தாகத்தைத் தீர்த்து வைத்தது ராஜெனின் தமிழமுதம்.



புலம்பெயர்ந்த மண்ணிலே சிலர், தென்னிந்தியத் திரைக்கலைஞர் பலரை வரவழைத்துக் கலைநிகழ்வுகளை நடத்திப் பெரும்லாபம் தரும் வியாபாரங்களை நடத்திவந்த காலத்திலே, தாயகக்கலைஞரை வரவழைத்துப் பெருமைப்படுத்த வேண்டும், என்ற முனைப்புடன் 1988ம் ஆண்டு பாரிஸ் மண்ணுக்கு என்னை அழைத்துப் பெருவிழாக்கண்டார். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல தனியொரு கலைஞனுக்கு மக்கள் வழங்கிய பேராதரவு, மேலும் பலகலைஞரை தாயகத்திலிருந்து வரவழைத்துக் கலைநிகழ்வுகளுக்குக் களமமைக்கும் துணிவைக்கொடுத்தது. அந்த ஆரம்பம்தான் எத்தனை இனிமையானது. அடுத்தடுத்த ஆண்டுகளில் எத்தனை எத்தனையோ கலைஞர்கள்..ஐரோப்பிய அரங்குகளில் கலைவிருந்துகளை வழங்கி, எம்மவரது அன்பையும் பாராட்டையும் பெற்றுப் பெருமையடைந்தார்கள். தாயகத்துக்கும், புலம்பெயர்ந்த மண்ணுக்கும் இடையில், ஒரு மாபெரும் கலைப் பாலமாகவே அவர் விளங்கினார். இந்தப் பயணத்தில் எத்தனையோ சிரமங்களையும் அவமானங்களையும், நன்றிமறந்த செயல்களையும், பொறுமையோடு தாங்கித் தன் பணியைத் தொடர்ந்த ராஜென், கடந்துபோன ஒன்றரை தசாப்த காலத்துள் தனது



ஏ.ஆர் ரகுமான்

ரகுமான் ஒரு அற்புதமான 23 வயது இளைஞன். உலக சாதனையாளராக அவர் உயர்ந்திருப்பது பெரும் ஆச்சரியமாக உள்ளது. அவருடைய பலம் இறைவன்தான் என்று நான் சொல்வேன். ஏனென்றால் அவர் இறைபக்தி மிக்கவர். அவர் இசையமைக்கும் விதத்திலே ஒரு அதீதமான இறை ஈடுபாட்டை நான் அவதானித்தேன். இது பலருக்குத் தெரியாத விஷயம். நள்ளிரவில் அவரது வீட்டில் இருக்கும் கலையகத்துக் குள்ளே ஒரு பெரிய மெழுகுதிரி ஒன்று இருக்கிறது. கயைகத்தில் உள்ள விளக்குகள் அனைத்தையும் அணைத்துவிட்டு இருளில் இருந்துதான் அவர் மெட்டுக்களை உருவாக்குகிறார். இது அதிகாலை வரை தொடரும். அவரது பாடல்கள் உலக அரங்குவரை போய்விட்டது. பி.பி.சி. நிகழ்ச்சியொன்றை தொலைக்காட்சி ஒன்றில் பார்த்துக் கொண்டு இருக்கும் போது பாரிஸ் நகரில் நடைபெறும் ஒரு பெசன் அணிவகுப்பிலே பின்னணியில் என்ன ஒலிக்கிறது எனப் பார்த்தால் 'ஒட்டகத்தைக் கட்டிக்கோ'. தமிழில் இந்த அந்தஸ்து யாருக்குமே கிடைக்கவில்லை. ரகுமான் திரையுலகிற்கு வருமுன் உலகளவிலே மற்றவர்களால் இனங்காணப்பட்டார். மற்றும்படி திறமையாகப் பாடக்கூடியவர். அதனால்தான் அவருடைய இசை நுணுக்கங்களை எஸ்.பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் பொறுமையாக இருந்து இசையைப் புரிந்து பாடிக்கொடுக்கிறார். மிக எளிமையானவர். வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கொண்டு இருப்பார். அவர் முதல் படத்தின் மூலம் தேசிய விருதினைப் பெற்ற ஒரே இசையமைப்பாளர் என்ற பெருமையும் அவருக்கு உண்டு.

பாரெல்லாம் பறந்து சென்று
பாட்டுக்குப் பாட்டு நடாத்தி
பாடகர் பலரை அடையாளம் கண்டு
படத்துறைக்கு அறிமுகம் செய்யும்

அன்பு அறிவிப்பாளர்
அப்துல் ஹமீத் அவர்களே!
இன்னும் உங்கள் சேவை தொடர
இனிதாய் நாமும் வாழ்த்துகிறோம்!

பத்மினி ஜுவலர்ஸ்

பார்ப்போரை மயக்கிடும்
பளிச்சிடும் தங்க நகைகள்
பற்பல வடிவங்களில் வழங்குகின்றோம்
பார்க்கவும் வாங்கவும் வாருங்கள்

PATHMINI
JEWELLERS

892, LONDON ROAD,
THORNTON HEATH, SURREY CR7 7PB

TEL: 020 8665 1111
FAX: 020 8664 8999

கலைப்பயணங்களில் எனக்களித்து வந்த முக்கியத்துவமும், முதல்மரியாதையும் உயிருள்ளவரை மறக்கமுடியாதவை. இதோ அதன் சிகரமாக இந்தப் பாராட்டு விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார்.

நான்கு தசாப்தகாலமாய்த் தொடரும் எனது கலைவாழ்வுக்கு மணிமகுடம் சூட்டவேண்டும் எனக்காலம் காலமாய்க் காத்திருந்தவர் இன்று, அருமை நண்பர் சுந்தரம் ஸ்ரீ அவர்களுடன் இணைந்து, புரவலர் பலரது மனமுவந்த பங்களிப்புடன், லண்டன் மாநகரிலே அதுவும் பெருமைக்குரிய ∴பெயர் ∴பீல்ட் அரங்கிலே விழாவெடுக்கிறார்.

பாராட்டுவிழா என்றாலே, ஓய்ந்திருக்கும் காலத்திலே சாமரம் வீசும் சம்பிரதாயம் எனும் கருத்துடைய நான், கடந்த சில ஆண்டுகளாகவே ராஜெனின் வேண்டுகோளைத் தட்டிக்கழித்து வந்தேன். அவ்வாறு நடக்கத்தான் வேண்டுமெனில் அதனை ஒரு நூல் வெளியீட்டு விழாவாக மாற்றி நியாயப்படுத்தலாம் என்றும் சொல்லிவந்தேன். அவருக்கோ இரட்டிப்பு மகிழ்ச்சி, எனது ஒலிபரப்பு அனுபவங்களைத் திரட்டி ஒரு நூலாக வடித்திட சகல ஏற்பாடுகளையும் செய்து தந்தார்.

ஆயினும் என்னசெய்ய இக்கட்டுரையின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட சிக்கல்தான்,தடையாக நின்றது. சிந்தனையின்வேகத்துக்கு ஈடுகொடுக்கமுடியாத விரல்களின் இயலாமை.

இச் சிக்கலிலிருந்து மீண்டு நானும் ஒரு எழுத்தாளனாக எடுத்த முயற்சிகளில் காலந்தான் கரைந்தோடிவிட்டது. ஆயினும் அந்த முயற்சிகள் தந்த பயிற்சி, இந்தக்கட்டுரையை ஓரளவேனும் சீராக வடித்திட வழி வகுத்திருக்கிறது என்று நம்புகிறேன். இனி நிச்சயமாய் எழுதலாம். ஆனால் இதுவரை வந்த நூல்களைப்போல், சுயபுராணம் பாடாமலும், அந்தந்த காலகட்டங்களிலே வாழ்ந்தவர்கள் மட்டுமே படித்துப் பழையநினைவுகளை அசைபோட்டு இன்புறும் குறுகிய வட்டத்துள் சிக்கிவிடாமலும், வளரும் தலைமுறை ஒலிபரப்பாளர்களுக்கு வழிகாட்டி நூலாக அமையும் நூலொன்றை வடித்திடவேண்டும் என்ற முனைப்பு மேலோங்கியிருக்கிறது. தூண்டுகோலாய் விளங்கும் ராஜெனுக்கு நன்றி.

ஒரு சிறிய ஆலாபனை.....

தமிழே தாய்த்தமிழே.....

தமிழ்வெறியனாய் இருப்பது வேறு, தமிழை நேசிப்பது வேறு.

நானும் ஒருகாலத்தில் தமிழ்வெறியனாக இருந்தவன்தான். கல்விகற்கும் காலத்திலே கட்டாய பாடமாக்கப்பட்ட பெரும்பான்மை இனமொழியைக் கற்காமல் புறக்கணித்தவன்தான். ஆனால் இன்னொரு மொழியைக் கற்பதனால் நமது தாய்மொழிப்பற்று குறைந்து விடாது, மாறாக நமது அறிவும், மற்றவர் மத்தியில் நமது தகுதியும் அதிகரிக்கும் என்ற உண்மையை சிறிதுகாலம் கடந்துதான் புரிந்துகொண்டேன். தவிரவும் எனது தாய் எனக்குத் தாய். அதற்காக இன்னொருவனது தாயை நான் பேயாக நினைக்கலாமா? என்ற தெளிவும் பிறந்தது. நான் என் தாயை நேசிப்பதுபோல்தானே அவனும் தன் தாயை நேசிப்பான் என்பதை புரிந்து கொண்டபின்னர்தான், தாயை நேசிப்பதுபோல் தமிழைநேசிப்பதற்கும் பழகிக்கொண்டேன். இந்தத் தெளிவு இருந்தால் மட்டுமே மனிதநேயம் மலரும். சரி தாய்மொழி என்றால் என்ன? என்று சிந்தித்துப் பார்த்தேன். பெற்றோர் தமிழ்பேசுவோராக இருந்தால் மட்டும், குழந்தைக்கும் அது தாய்மொழியாகிவிடுமா? முதல்உறவு, கருவிலே உருவான தொப்புள்கொடி உறவு, எனவே அன்னையின் பாசமே முன்னிலை வகிக்கிறது. அதுபோல எமது எண்ணங்களை ஒலிவடிவாக்கி உச்சரித்த முதல்மொழியும் எமது பாசத்துக்கும் நேசத்துக்கும் உரிய தாய்மொழி என்றாகிறது. அந்தவகையில் பார்த்தால் தமிழ்ப் பெற்றோருக்குப் பிறந்த குழந்தை முதலில் உச்சரிக்கப் பழகியது





நான் கவிஞனல்ல. பாடல் ஆசிரியர் என்று இனம் காண்பதில் கூட எனக்கு சற்றுப் பயம். அதனால்தான் 'இறைதாசன்' என்ற புனைபெயருக்குள் நுழைந்து இயங்கி வருகின்றேன். அன்னை பற்றிய பாடல்கள், காலைப்பொழுது பற்றிய பாடல்கள் எழுதியிருக்கின்றேன். 'அனிச்சமலர்' என்ற நாடகத்தையும் எழுதியிருக்கின்றேன். 97 நாட்கள் தொடர்ந்து ஓடிய 'கோமாளிகள்' என்ற திரைப்படத்திலும் நடித்து இருக்கின்றேன்.

நல்லதொரு தொலைக்காட்சி நாடகத்தை இயக்கவேண்டும் என நினைத் திருக்கின்றேன். நண்பர் ராமதாஸ் அந்தச் சந்தர்ப்பத்தைத் தர மேஜர் சுந்தரராஜனை வைத்து குறுநாடகம் ஒன்றினை இயக்கினேன். திரையுலக நுணுக்கங்கள் பலவற்றை அனுபவம் மூலமாகப் பார்த்தும் தெரிந்தும் வைத்திருக்கின்றேன்.

அறிவுரை கூறும் அளவிற்கு நான் பெரிய ஆசான் அல்ல. இப்பொழுது பொழுது போக்கும் சாதனங்கள் ஏராளமாக இருக்கின்றன. கொஞ்ச நேரத்துக்குள்ளேயே ஒருவன் வானொலி கேட்கின்றான் என்றால் அதனை எப்படியும் ஆகர்ச்சிக்கக் கூடிய அளவு அதீத திறமையுடன் நிகழ்ச்சிகளைத் தயாரிக்க வேண்டும். வெறும் வாசிப்பாளர் நமக்குத் தேவை இல்லை. நிறைய விடயங்களைப் படித்து அவற்றைக் கிரகித்துத் தேவைப்படும் நேரத்தில் நேயர்களுக்கு வழங்குபவனாக இருக்க வேண்டும்.

ஒரு அறிவிப்பாளர் படைப்பாளனாகவும் திகழவேண்டும். ஒலிபரப்புத் துறையில் ஒவ்வொரு அம்சங்களையும் கற்றுணர்ந்த வனாகவும் இருக்க வேண்டும். சினிமா அறிவு மட்டுமன்றி உலக அறிவினையும் தெரிந்து நேயர்களுக்கு வழங்குபவனாகவும் இருத்தல் வேண்டும். இதுதான் நான் வளர்ந்து வரும் கலைஞர்களுக்குக் கூறும் அறிவுரை.

இலங்கை வானொலியை அறியாதவர்கள் இல்லை. ஆகவே அப்துல்ஹமீத்தை அறியாதவர்கள் இல்லை. உலகின் ஒவ்வொரு மூலையிலும் வாழும் தமிழ் நெஞ்சங்களில் குடியிருக்கும் ஒப்பற்ற ஒலிபரப்பாளர் பீ.எச்.அப்துல்ஹமீத் அவர்களுக்கு எமது நல் வாழ்த்துக்கள்.

சிறிகாந்த் அன்ட் கோ

சட்ட ஆலோசனைகள் தக்கபடி வழங்குவோர்

வீடுகள் வாங்க விற்க பராமரிக்க வாடகைக்கு விட வாடகைக்குப் பெற

SRIKANTH & CO.

557 HIGH STREET, WEMBLEY, MIDDLESEX HA0 2DW

TEL - 020 8795 0648
FAX - 020 8795 0649
MOBILE - 07831 195 979

ஆங்கிலமெனில் அக்குழந்தைக்குத் தாய்மொழி ஆங்கிலமே என்பது எனது தாழ்மையான கருத்து. ஏனெனில் ஒவ்வொருவரும் பேசுவதற்கு மட்டுமல்ல சிந்திப்பதற்கும் ஒருமொழி அவசியமாகிறது. என்ன? சிந்திப்பதற்கு ஒருமொழியா? என்று யோசிக்கிறீர்களா? நன்றாக சிந்தித்துப்பாருங்கள். மனிதர்கள் எல்லோரும் ஏதோ ஒரு மொழியில் சிந்தித்துப் பின் அதனைச் சொல்லாக வெளிப்படுத்துகிறார்கள். எவருக்குமே முதல் சிந்தனை தாய் மொழில்தான் உருவாகும்.

தாய்மொழியில் சிந்தித்து அதனை மற்றொரு மொழிவாயிலாக வெளிப்படுத்தும் போது சிறு இடைவெளி ஏற்படுவது இயற்கை. காலஞ் செல்லச்செல்ல தாய்மொழியை மறந்து பிறமொழிக் கலாசாரத்தில் மூழ்கிவிடுவோருக்கு இந்த இடைவெளி குறைந்துவிடுகிறது. எப்படியோ. நம்மை தமிழர்களாய் அடையாளப்படுத்துவது எது?.

சிலர்நினைப்பதுபோல் மதவழிபாடுகளின் வழிவந்த எச்சசொச்ச கலாசாரங்களல்ல. மாறாக தமிழனை தமிழன் என்று அடையாளப்படுத்தும் முகம் நமது மொழி ஒன்றே. உடை, உணவுப்பழக்கவழக்கங்கள், இன்னபிறவற்றில் சிறிதாக மாறி மாறிவிட்டோம் எஞ்சியிருப்பது மொழி ஒன்றே. அவ்வாறாயின் இன்றைய தமிழகத்திலும். நமது மக்கள் தற்போது புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இனிவரும் தலைமுறை அந்த அடையாளத்தைத் தொலைத்து விட்ட இனமாக மாறிவிடுமா? இந்தக் கேள்விக்குச் சரியான விடையொன்றை, அல்லது தீர்வொன்றைக் காணாமலேயே நமக்குள் விதண்டாவாதம் பேசிக்காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கிறோம். மொழிப்பற்று என்ற பெயரிலே, நமக்கு முன்னே வாழ்ந்த சிலர் மற்றமொழிகளையும் அம்மொழி பேசுவோரையும் புறக்கணித்து, எம்மைவிட அவர்கள் கீழானவர்கள் என்றும் நாம் ஏதோ தேவபாஷை பேசுவோர் போன்றதுமான, போலிப் பிரமைக்குள் எம்மை ஆழ்த்திவிட்டதால் நமது மொழி இன்றைய யுகத்தின் தேவைக்கு ஈடுகொடுக்காமல் தொன்மையானமொழி என்ற பெருமையோடு மட்டுமே தேங்கிக் கிடக்கிறது. இதன் விளைவு ?

ஐ எம் எ டமில் பட் ஐ டோன்ட் நோ டமில்

I am a Tamil.. But I don't know Tamil என்று சொல்வதைப் பெருமையாகக் கருதும் ஒரு பரம்பரையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இந்நிலை உருவாக மிக முக்கியமான காரணிகள் இரண்டு.

எனது சுட்டுவிரல் முதலில் நீள்வது ஊடகத்துறையின் பக்கம்...

குறிப்பாக தமிழகத்தை மையமாகக் கொண்டு, இயங்கும் ஜனரஞ்சக ஊடகங்களைக் குறிப்பிடவேண்டும். பத்திரிகை,தொலைக்காட்சி,தனியார் வானொலி என்று அனைத்திலும் தமிங்கிலி' மயம். ஆங்கிலத்தை வெறுக்கச்சொல்லவில்லை.

அது வெளி உலகத்தைப்பார்க்க நமக்குப்பரிச்சியமான சாளரம். எனவே பெயர்ச்சொற்கள் ஆங்கிலமாய் இருப்பதில் தவறில்லை, அவற்றைத் தமிழ்ப்படுத்த வேண்டிய அவசியமுமில்லை.ஆனால் சிலர் வழக்கில் இருக்கும் சொற்களையும்கூட வலிய மாற்றி ஆங்கிலம் கலந்து செயற்கையாகப் பேசும்போது தமிழ்மொழியில் பேசுவதே ஏதோ அநாகரீகம் என்று நினைத்துக்கொண்டு பேசுவதுபோல் தெரிகிறது. சென்னையிலிருந்து இயங்கும் ஒருதனியார் தமிழ் வானொலியில் தமிழைத்தேடவேண்டியிருக்கும்.ஆனால் இளைய தலைமுறையின் வரவேற்பை அதிகம்பெற்ற வானொலி அதுதானாம். வேடிக்கை என்னவென்றால் தமிழர் அல்லாதவர்கள்தான் இதுபோன்ற வானொலிகளை ஆரம்பித்து நடத்துகிறார்கள். அவர்களுக்கு வர்த்தக நோக்கம் மட்டுமே இருக்குமன்றி, மொழிக்கு ஏற்படும் அழிவைப்பற்றிய அக்கறை இல்லாதிருப்பதில் ஆச்சரியமில்லை.





எல்லாமே எனக்குப் பிடித்தவை தான். என்றாலும், நான் மிகவும் சிரமப்பட்டுத் தயாரித்த ஒரு தொடர் நாடகம்தான் எனது புதுமைகளில் மறக்கமுடியாத ஒன்று. இந்த நாடகத்தில் தமிழகத் திரை நட்சத்திரங்களான ஜெமினிகணேசன், ஸ்ரீவித்தியா போன்றோரும் மற்றும் பல இலங்கைக் கலைஞர்களும் பங்கேற்று நடித்தார்கள். இதில் நான் செய்த புதுமை என்னவென்றால், இதில் எந்த ஒரு கதாபாத்திரமும் மற்றவரைச் சந்தித்துக் கொள்ளாமலே ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இப்படித் தனித்தனியாக ஒலிப்பதிவு செய்த அனைத்தையும் அப்படி ஒரு விஷயமே தெரியாத அளவுக்கு எடிட் செய்து நாடகமாக ஒலிபரப்பினோம். அந்தத் தொடர் நாடகம் முடிந்தபிறகு தான் இந்த சஸ்பென்ஸையே நேயர்களுக்கு உடைத்தோம். அனைவரும் வியந்து பாராட்டினார்கள்.

பாட்டு, படம், பாடியோர் அறிவிப்பதோடு
மட்டும் நின்றுவிடாமல், ஒலிபரப்பின்
பலதுறைகளிலும் பாண்டித்தியம் பெற்று
பல்வேறு நாடுகளிலும் கலைப்பணி
தொடரும் எங்கள் அன்பு அறிவிப்பாளர்
பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களே!
தங்கள் கலைச்சேவை மென்மேலும்
தொடர வாழ்த்துகின்றோம்.

Palm Beach Restaurant

சுவையின் தரத்தினால் சுவைஞர்களைக் கவர்ந்தவர்கள்
ஒருமுறை குடும்பத்தவர் நண்பர்களுடன்
பாம் பீச்சில் விருந்துண்டு பாருங்கள்.
மீண்டும் மீண்டும்
உங்களை நாடிடச் செய்திடும் உணவகம்.
திருமணம் – பிறந்தநாள் – ஏனைய
கொண்டாட்டங்களுக்கு
நீங்கள் விரும்பும் உணவு வகைகள் தயார் செய்து நீங்கள்
அழைக்கும் இடத்துக்கு வருகைதந்து
உணவுவகைகளைச் சுடச்சுடப் பரிமாறுவோர்

Palm Beach
Restaurant

17, Ealing Road, Wembley, Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664 Res: 020 8900 1681
Mob: 079 3958 7338
Web: www.palmbeach.uk.com

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்ற கூற்றுக்கு முன் ஒன்றைச்சேர்க்க வேண்டும்.

செவிவழி எதுவோ அதுவே சொல்மொழி.

ஒரு குழந்தை எப்படிப்பேசக் கற்றுக்கொள்கிறது? தன்காதில் விழும் ஒலிநயங்களைக் கிரகித்து சிறிது சிறிது முயன்று அவ்வொலிகளைப் பிரதிபலிக்க எடுக்கும் முயற்சிதானே மழலையின் பேச்சு? ஆகவே செவிவழியாகச் செல்லும் ஊடகத்தின் சக்தியைத் தவறாகப் பயன்படுத்தி, நம் செவிவழியாக மொழிக்கலப்படவிஷம் ஊற்றினால் காலப்போக்கில் ஒரு தலைமுறையையே திசைதிருப்பி விடுகிறோம் என்பதுதானே உண்மை?

சிங்கப்பூரில் முன்பு இயங்கிவந்த ஒருதனியார் வானொலியில் என்னை செவ்வி கண்டபோது கேட்டார்கள்- இங்கு வாழும் மக்களுக்கு ஆங்கிலமும் தமிழும்கலந்து பேசுவதுதான் பேச்சுவழக்கு. அவ்வாறே நாமும் பேசினால்தானே நேயர்களோடு நெருங்கி உரையாட உறவாடமுடியும் என்று கேட்டபோது அதற்குப் பதில்கூறாமல் அவர்களிடம் நான் ஒரு கேள்வி கேட்டேன். அப்படியென்றால் செய்திகள் வாசிக்கும்போது மட்டும் ஏன் நல்ல தமிழில் வாசிக்கின்றீர்கள்? அதனையும் கொச்சைத்தமிழில் அல்லது பேச்சுத் தமிழிலேயே வாசிக்கலாமே நேயர்களுக்கு இன்னும் நன்றாகப்புரியுமே என்று.



அவர்களால் பதில் பேச முடியவில்லை. ஊடகத் துறைக்கென்று ஒரு கடமை இருக்கிறது மொழியை வளர்க்க முடியவில்லை யெனினும் அழிந்துவிடாமல் காத்திடும் கடமை, மறந்து மறைந்து போகும் நல்ல தமிழ்சொற்களை நினைவூட்ட அவர்களால்தான் முடியும். எம்மை அறிவிப்புத்துறையில் பயிற்றுவித்தவர்கள் சொன்ன அறிவுறைகளில் வேதமந்திரம் போல் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருப்பதும், எனக்குப் பின்னே வந்தவர்களைப் பயிற்றுவிக்கும் போது நான் முதலில் சொல்வதும் இதனைத்ததான் - *செய்தி வாசித்தாலென்ன வெறும் விளம்பரமொன்றை வாசித் தாலென்ன வளரும் தலைமுறைக்குத் தமிழ் அட்சரங்களைப் பிழையறத் தெளிவாக, அதிலும் காதுக்கு இனிமையாக உச்சரிக்கக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் நாம் என்ற பொறுப்புணர்வோடு ஒலிவாங்கியின் முன் செல்லவேண்டும்* என்பதே. ஆனால் இந்த பொறுப்புணர்வை அறிந்தவர் எத்தனைபேர் இன்றைய புதிய தலைமுறையில் இருக்கின்றார்கள் என்பதை விரல் விட்டு எண்ணிவிடலாம். நல்லவேளையாக புலம்பெயர்ந்த மண்ணில் வானொலிகள் இவ்விடயத்தில் ஓரளவு திருப்திதரும் வகையில் இயங்குவதை இங்கு குறிப்பிடவேண்டும். ஆனால் தொலைக்காட்சிகளைப் போல் தமிழகத்தின் *தமிங்கில* வானொலிகளும் இங்கு படையெடுத்து வந்தால்? நம்மவர்களும் போட்டியைச்சமாளிக்க செம்றிக்கூட்டத்தில் சேரவேண்டிய நிலை ஏற்படுமோ? என்ற கவலையும் வாட்டுகிறது. தமிழகத்தில் தனியார் வானொலியில் தான் இந்த நிலை-யென்றால் பத்திரிகைத் துறையின் நிலையோ இன்னும் கவலைக்குரியதாக மாறியுள்ளது. இன்றைய நவீன எழுத்தாளர்களின் எழுத்து நடை, தமிங்கிலீஸை அமோகமாக ஆதரிக்கும் வகையிலேதான் அமைந்துவருகின்றன.

அதுமட்டுமல்ல தமிழகப் பத்திரிகைளின் பெயர்களே கூட ஆங்கிலம் கலந்த பெயர்களோடுதான் இப்போது வருகின்றன என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். நிச்சயமாக பாரதத்தின் மற்ற மாநில மொழிகளில் இந்த இழிநிலை இல்லை. தொலைக்காட்சியை எடுத்துக்கொண்டால் கேட்கவே வேண்டாம். வேலிதாண்டி வரும் இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நீங்களும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். அப்படி இருந்தும்கூட, வெறும் வேடிக்கை வினோத இசை நிகழ்ச்சியாக நான் தமிழகத்தில் நடத்தி வரும் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியிலும், பாடும் திறமையுள்ளவர்களை வெளிச்சத்துக் கொண்டுவரும் ராஜகீதம் நிகழ்ச்சியிலும், ஆங்கிலம் கலவாமல் நான் பேசுவதை எல்லோரும் வியந்து பாராட்டுகிறார்கள். என்ன வேடிக்கை? தமிழ்நாட்டில் தமிழ்பேசுவதை வியந்து பாராட்டும் நிலை.

நடிகர் திலகத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். அவர் எனது நெடுங்கால நண்பர். முதன் முதலில் அவரைப் பேட்டி எடுப்பதற்காகச் சென்ற போது அவர் உதவியாளர் மூலமாக நான் வந்திருக்கும் விஷயத்தைச் சொல்லி அனுப்பிவிட்டுக் காத்திருந்தேன். அவர் வந்தவுடன் என்னை என் பெயர் சொல்லி அழைக்காமல் 'வாருங்கள் கேப்டன் சாம்பசிவம்' என்றார். நான் அதிர்ந்து போனேன். ஏனென்றால், அப்போது இலங்கை வானொலியில் பிரபலமாக ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த ஒரு தொடர் நாடகத்தில் நான் நடித்த கதாபாத்திரத்தின் பெயர்தான் அது. தான் அந்த நாடகத்தைத் தொடர்ந்து கேட்பதாகவும், தான் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளின் தீவிர ரசிகன் என்பதையும் அவர் சொன்னதைக் கேட்டதும் வியந்து போனேன்.

அடுத்து நண்பர் ரஜினிகாந்தை முதலில் சந்தித்த அனுபவம். நான் மிகவும் விவரமாக விளக்கிப் பல நிமிடங்களில் கேட்கும் ஒரு கேள்விக்கு 'ஆம்' என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிடுவார். அடுத்து அதேபோல் வரும் இன்னொரு கேள்விக்கு 'இல்லை' என்று சொல்லி முடித்துவிடுவார். இப்படியாக நான் ஒருமணிநேரம் கண்ட பேட்டியில் நான் 55 நிமிடங்களும் அவர் 5 நிமிடமும் பேசியது ஒலிப்பதிவாகியிருந்தது. நான் கேட்ட கேள்விகளுக்கு விரிவாகவும் பதில் சொல்லியிருக்க முடியும். என்றாலும், ரஜினி சுருக்கமாக பதில் சொல்வதையே தேர்ந்தெடுத்தார். பிறகுதான் யோசித்துப் பார்த்ததில் ஒன்று புரிந்தது. நான் கேட்ட பெரும்பாலான கேள்விகளுக்கு எனது கேள்வியிலேயே பதிலும் இருந்தது. இது எனக்கு ஒரு நல்ல பாடமாக அமைந்தது. ரஜினி போன்ற அதிகம் பேசாதவர்களிடமும் விரிவான பதிலை வரவழைக்கும் படியான கேள்விகளைக் கேட்பது எப்படி என்பதை அன்றிலிருந்துதான் நான் கற்றுக்கொண்டேன்.

மனது மறக்காத நிகழ்ச்சிகள் மூலம்
மக்களை வானலைகளில் மகிழ்ச்சிப்படுத்தும்
மக்கள் ஒலிபரப்பாளர் எங்கள்
பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களே!
உங்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

ஹப்பி ரெக்ஸ்ற்

குதூகலம் பெறும் நகைத்தேர்வுக்கு
குடும்பத்தோடு நாடுங்கள்
நாகரீகத்தின் சின்னமாய் வெம்பிளியில்
நவீன ஆடைத் தினுசுகளுடன்
காட்சியளிக்கும்
ஹப்பி ரெக்ற்ஸ் நிறுவனத்தில்
நங்கையர் - ஆடவர் - சிறுவர் உடைகள்,
அழகுமிகு கைக்கடிகாரங்கள்,
அன்பளிப்புக்கள்
அனைத்தும் மலிவாக எப்பொழுதும்
பெற்றுக்கொள்ளலாம்.

Happy Text

Textiles & Jewellery
6, Ealing Road, Wembley,
Middlesex HA0 4TL, London.
Tel: 020 8903 0782

தமிழ் நாட்டு மக்களுக்கு இன்னும் தமிழ்த் தாகம் இருப்பதை இவர்கள் ஏன் புரிந்துகொள்ளவில்லை?

இந்தப் பாதிப்புக்கு மற்றுமோர் முக்கிய காரணம் இன்றைய தமிழ்சினிமா. கவிஞர் அறிவுமதி கவலைப்படுவதைப்போல் பெரும்பாலும் வேற்று மொழிக்காரர்களே முதலீடு செய்து இலாபமீட்ட முயலும் இத்துறையில் தமிழ்மொழிக்கு ஏற்படும் அவலம் படத் தலைப்புகளிலிருந்து வசனம் பாடல்கள் என அனைத்திலும் வியாபித்துள்ளது. தமிழ் மட்டுமா? நமது கலாசார விழுமியங்களுக்கும் இவை, பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. தமிழகத்துப் பாடசாலைகளில் 5ம் ஆண்டு வரை போதனாமொழி தமிழாக அமையவேண்டும் என அப்போதைய தமிழக அரசு எடுத்த தீர்மாணத்தைக் கூட தமிழ்நாட்டுப் பெற்றோரே எதிர்த்து நீதிமன்றம் சென்று வென்ற கதை ஒன்றிருக்கும்போது இந்த நிலை உருவானதில் வியப்பில்லைத்தான்.

ஆனால் இந்தப் பெருநோய் இப்போது தேச எல்லைகள் தாண்டி ஈழத்தமிழர் புலம் பெயர்ந்துவாழும் மண்ணிலெல்லாம் படையெடுத்து வந்து தாண்டவமாடுவதைப் பார்க்கும்போது கவலை அதிகமாகிறது. சொந்தமண்ணையும், உறவுகளையும் விட்டுப்பிரிந்து வந்தவர்கள் தமது பண்பாட்டுக்கோலங்களையும் தாய்த்தமிழையும் மறவாமல் தமது பிள்ளைகளும் அவற்றைப்பற்றி அறிந்து தமிழைக் கலப்பின்றிப் பேசவும் அந்நியக்கலாசாரத்தில் தமது விழுமியங்களை மறந்துவிடாமல் பேணவும் எடுத்து வரும் முயற்சியில், பத்திரிகை, வானொலி,தொலைக்காட்சி என நமக்கே சொந்தமான ஊடகத்துறை அரும்பி மலர்ந்து மணம் வீசக்கூடிய காலகட்டத்திலே இந்த தமிங்கிலீ படையெடுப்புக்குக்கு நம்மவர்களே தரகர்களாகவும் விளங்குவதை அறியும்போது கவலையாயிருக்கிறது. இந்தப் பாதிப்பின் விளைவு? சரக்கு வச்சிருக்கேன்.... மன்மதராசா... என்னைக் கணக்குப்பண்ணேன்டா... போன்ற கொச்சையான பாடல்களுக்கு நமது இளையதலைமுறை ரெக்கோர்ட் டான்ஸ் ஆடுவதே தமிழ்க் கலைநிகழ்ச்சி என்ற இழிநிலைக்கு இட்டுச்செல்கிறது.

சரி நம்மவர் நடத்தும் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளிலும் தமிழகத்து இறக்குமதிகள் இடம்பெறவில்லையா என்று கேட்பீர்கள்?



ஏன் கூடாது? தாராளமாக.. ஒளிபரப்பலாம். ஆனால் எவற்றை? இந்தக் குப்பைகளுக்கு மத்தியிலும் சில நல்ல நிகழ்ச்சிகளுண்டு. பாடும் திறமையை வளர்த்துக்கொள்ள, பாரம்பரிய இசையறிவை மேம்படுத்த, பயனுள்ள தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள, நல்ல சினிமா, மற்றும் கலை இலக்கியச் சுவையுள்ள, பொதுஅறிவைத் திரட்டித்தரும் நிகழ்ச்சிகள் பலவுண்டு. அவற்றில் எனது பங்கும் சிறிது உண்டு. (தற்போது மூன்று தலைமுறையைச் சார்ந்தவர்கள் பங்குகொள்ளும்-வெல்லமுடிந்தால் வெல்லுங்கள்- எனும் பொதுஅறிவுப்போட்டி நிகழ்ச்சியை தூர்தரஷனின் பொதிகைத் தொலைக் காட்சிக்காக நடத்திக்கொண்டிருக்கிறேன்.) அவ்வாறான நல்ல நிகழ்ச்சிகளைத் தேடித்தெரிவு செய்து நம்மவர் தொலைக்காட்சிகளின் வழியே வழங்குவதில் தவறு இல்லை.

இன்று தமிழகத் திரையிசைப்பாடல்கள் இல்லையெனில் நம்மவர் நடத்தும் வானொலிகள் அனைத்தையும் இழுத்து மூடவேண்டியிருக்கும் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் பாடல்களைத் தெரிவுசெய்யும்போது கொஞ்சம் பொறுப்புணர்வு வேண்டும். நேயர்களது ரசனையைச் செம்மைப்படுத்துவதில் செவிவழியாகச்செல்லும் சக்திமிக்க ஊடகமான வானொலிக்கு அதிக பொறுப்பிருக்கிறது. அதேவேளையில் நமது முற்றத்து மல்லிகையின் மணத்துக்கும் மதிப்பளிக்கும் வகையில் நம்மத்தியில் வளர்ந்து வரும் திறமைகளுக்குக் களம் அமைத்து ஊக்கம் தரவேண்டும். நமது கலை இலக்கியத் திறமைகளுக்கு நாம் கைகொடுக்காமல் வேறு யார் தருவது?

எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியிலும் குறைந்த பொருளாதார வசதியுடன் தொலைக்காட்சி சேவைகளை நம்மவருக்காக நடத்துவோர், தேசஎல்லைகள் தாண்டிவரும் தொலக்காட்சிகளது, கவர்ச்சியுடன் போட்டிபோட முடியாமல் திணறுவதும் புரிகிறது. அவர்களுக்குக் கைகொடுத்துக் காப்பாற்றவேண்டியது புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் ஒவ்வொருவரதும் கடமை அல்லவா?

பத்திரிகைத்துறையை எடுத்துக்கொண்டால் நம்மவரால் நடத்தப்படும் பத்திரிகைகளில் இந்த தமிங்கிலீ கலப்பு ஏற்படவில்லை என்பது மனதுக்கு ஆறுதலைத் தருகிறது.

கமல்ஹாசனைச் சந்தித்தேன். மணிக்கணக்கில் அவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் ஓர் அறிவுக்களஞ்சியம் என்பதை உணர்ந்தேன். இந்த பேட்டியின் போதுதான் 'தேவர் மகன்' பற்றிய ஒரு கேள்வியை அவரிடம் கேட்டேன். வன்முறையை எதிர்க்கும் கருவைக் கொண்ட ஒரு படத்தின் முடிவில் நீங்களே வன்முறையைக் கையில் எடுப்பது போன்ற காட்சியை வைத்திருக்கிறீர்களே என்று கேட்டேன். அவர் தந்த விளக்கம் இதுதான்:

'எல்லாருமே படத்தைப் பார்த்துவிட்டு இப்போது என்ன சொல்கிறீர்கள்? என்ன இருந்தாலும் முடிவு இந்த மாதிரி இருந்திருக்கக் கூடாது என்றுதானே சொல்கிறீர்கள். அதுதான் நான் சொல்ல விரும்பிய செய்தியே. இதுவே வன்முறைக்கு எதிராகக் கிடைத்த வெற்றிதானே' என்றார். வாயடைத்துப் போனேன்!"

பாட்டுக்குப் பாட்டு நாயகனே!
பாரெல்லாம் உங்கள் புகழ்
ஓங்கி நிற்க எங்களின்
இனிய நல்வாழ்த்துக்கள்!

வாஹீசன்
டிஸ்க் வேல்ட்

பாடல்கள் கேட்க
படங்கள் வீடியோவில் பார்க்க
பக்கத்தில் இருப்பவர்கள்

Video படப்பிரதிகள்
பாடல் CDக்கள்
DVDக்கள் அனைத்துக்கும்
விஜயம் செய்யுங்கள்

கர்நாடக இசைப்பாடல்கள், இசைகள்
நாதஸ்வரக் கச்சேரிகள் அடங்கிய
Audio CDக்கள் எப்பொழுதும்
மலிவு விலைகளில் கிடைக்குமிடம்

Vahizan Disc World

52B, Ealing Road, Wembley, HA0 4TQ.
Tel: 020 8902 8828 Fax: 020 9802 8829
Web: www.vahizan.com

தமிழ் மொழி தழைக்காதிருப்பதற்கான மற்றுமோர் காரணம்?

இன்றைய யுகத்தின்தேவைக்கு ஈடுகொடுக்கும் வகையில் நமது மொழியை வளர்க்கத் தவறிவிட்டோம். தமிழறிஞர்களோ- மாநாடுகள் நடத்துவதும், தமிழின் பெருமைபற்றி பழையபுராணம்பாடுவதும், கவிதை,சிறுகதை,நாவல் எனப்படைப்புகளைத் தருவதும்,பட்டிமன்றம் நடத்துவதும்,என்ற எல்லைக்குள் தமிழ்ப்பணி ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அடுத்து வரும் தலைமுறைகளின் பால் அவர்களது பார்வை திரும்பவில்லை.தமிழில் மட்டுமே புலமையுள்ள அறிஞர்களை நான் குறை கூறவில்லை அவர்களது பணி மேலும் தொடரட்டும்.மகிழ்ச்சி. ஆனால் வெவ்வேறு அறிவியல் துறைகளில் சிறந்துவிளங்கும் அதேவேளையில் பொழுதுபோக்காக மட்டும் தமிழில் தங்கள் புலமைகளை மேடைகளில் முழங்கிவரும் அறிஞர்களைத்தான் வினயமுடன் கேட்கிறேன். தமிழை விஞ்ஞானத்தேரில் ஏற்றிவையுங்கள் என்று. இன்றைய காலத்தின்தேவை அதுதான். ஏன்? அதற்காகத்தானே இணைத்தளத்தில் தமிழுக்குச் சிம்மாசனமிட்டிருக்கிறோம்.

இணையத்தள மாநாடுகளை நடத்துகிறோம், தமிழ் விசைத் தட்டுப் பலகையை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். ஆங்கிலம் தவிர்ந்த மொழிகளிலே தமிழில்தானே அதிக இணையத்தளங்கள் இருக்கின்றன என்று பெருமையோடு சிலர் சுட்டிக்காட்டலாம். உண்மைதான் உங்கள் பணிகளுக்கு தமிழறிந்த,இன்றைய தலைமுறை கோடானுகோடி நன்றி மலர்களைத்தூவும் ஆனால் அடுத்த தலைமுறை? அதற்கடுத்த தலைமுறை?...

மொழி என்பது, எண்ணங்களைப் பரிமாறத்துணையாகும்,தொடர்பு ஊடகம் மட்டுமே அல்ல. பொருளாதார ஸ்திரத்தன்மையுடன் நம்மை வாழவைக்கக்கூடிய, தொழில்வாய்ப்புகளுக்குப் பயன்படும் ஒன்றாகவும் விளங்கவேண்டும். அந்த உத்தரவாதத்தை இம்மொழி தருமா என்பது தான் இன்றைய தலைமுறையின் கேள்வி? இல்லையெனில் அவர்கள் பிறமொழியை நாடுவதில் பிழையில்லை. சுற்றிவளைத்து எங்கே வருகிறேன் என்றால், கல்வித்துறையில் அதுவும் உயர்கல்வித்துறையில் தமிழ் வளரவேண்டும். அது எப்படி? மருத்துவக் கல்வி, பொறியியற் கல்வி, இவையெல்லாம் தமிழில் கற்கமுடியுமா எனப் பொறுப்பின்றிக் கேட்பவர்களும் பலருண்டு.



ஒரு துயரச் சம்பவம் என்னை மிகவும் பாதித்தது. ஒரு காலகட்டத்தில் 'சக்கரங்கள்' என்று ஒரு தொடர் நாடகம் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி வந்தது. அதை எழுதிய எழுத்தாளரான 'அஷ்ரப்கான்' என்பவர் எப்போதுமே அளவுக்கதிகமான சோகக் காட்சிகளையும் உணர்ச்சிபூர்வமான காட்சிகளையும் வைத்து வானொலி கேட்பவர்களையே கண்ணீர் விடும்படி செய்து விடுவார். நாடகத்தில் நானும் நடித்தேன். இந்த நாடகம் திடீரென ஒரு பீதியைக் கிளப்ப ஆரம்பித்தது. அதாவது இந்தத் தொடர் நாடகத்தில் வரும் சில சம்பவங்கள் அப்படியே அந்தக் கதாபாத்திரமாக நடிப்பவர்களின் நிஜ வாழ்க்கையிலும் நடப்பதாக ஒரு வதந்தி பரவியது. வாரம் ஆக ஆக அது வதந்திய அல்ல உண்மை என்பது நாங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதில் தெரியவந்தது. எனினும், இதெல்லாம் மூடநம்பிக்கை என்று நினைத்து அலட்சியமாக இருந்த சமயத்தில்தான் எனக்கும் அந்தப் பாதிப்பு உருவானது. ஒரு குறிப்பிட்ட வாரம் நாடகம் ஒலிப்பதிவு செய்யப்படும்போது அந்த வாரம் கதைப்படி என் தாயார் இறந்துவிடுவது போல் ஒரு காட்சி வந்தது. எனக்குக் கொஞ்சம் வருத்தமாக இருந்தது. இருந்தாலும் மனதைத் தேற்றிக்கொண்டு நடித்தேன். ஒலிப்பதிவு முடிந்து வெளியே வரும்போது எனக்காக இரண்டுபேர் காத்திருந்தார்கள். எனது தாயார் சீரியஸாக இருப்பதாகச் சொல்லிக் கூட்டிச் சென்றார்கள். வீட்டுக்குப் போன பிறகுதான் தெரிந்தது. ஏற்கெனவே என் தாயார் இறந்துவிட்டார்; அதை என்னிடம் எப்படிச் சொல்வது என தயங்கி வந்தவர்கள் சீரியஸாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று. இது உண்மையிலேயே என்றும் மறக்கமுடியாமல் மனதில் பதிந்துவிட்ட சோகச் சம்பவம்.

வானொலியாளர்களின் வழிகாட்டி
பீ.எச்.அப்துல் ஹமீத் அவர்கட்கு
வாழ்த்துக்கள்!

அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்-தமிழ்

IBC Tamil

Astra - Eutel செய்மதிகள் வழியாக
24 மணிநேர ஒலிபரப்பு

மத்தியலை MW 558
தினமும் பிரித்தானிய நேரம் மாலை
7மணி முதல் 9 மணி வரை
சிற்றலை 41 அல்லது 25 மீற்றர்
அலைவரிசையில்
இலங்கைநேரம் 6மணி முதல் 7மணி வரை
இந்திய நேரம் 5.30 முதல் 6.30 வரை

ஒலிபரப்பாகிவருகின்றது

Tel: 00 44 (0) 20 81 00 00 12
Fax: 00 44 (0) 20 81 00 00 03
Web: www.ibctamil.co.uk



இவ்வளவ காலமும் நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?. பட்டிமன்றம் நடத்துவதிலும், பழையபுராணம் கேட்பதிலும் காலத்தை விரயமாக்கியிருக்கறீர்கள். உலக நாடுகளை எடுத்துக்கொண்டால் நம்மைவிட மிகச்சிறிய நாடுகளில்கூட உயர்கல்வியை அந்தந்த மொழிகளில் கற்கும் வகையில் தமதுமொழியை வளர்த்திருக்கிறார்கள். டென்மார்க்கில்,டெனிஷ் மொழியிலும், நோர்வேயில் நொஷ்க் மொழியிலும் கற்கலாம். நமது மாணவர்கள் மருத்துவக்கல்வி கற்க ரஷ்யாவுக்குப் போனால், முதலில் ரஷ்ய மொழியைக் கற்கவேண்டும். ரஷ்யமொழியில் தான் மருத்துவக்கல்வி, பொறியியல் கற்க ஜெர்மனிக்குப்போனால் முதலில் ஜெர்மன் மொழியைக்கற்க வெண்டும். ஜெர்மன் மொழியில்தான் பொறியியற் கல்வி. ஆங்கிலமல்ல. இந்த நாடுகளிலெல்லாம் விஞ்ஞானம் வளர வளர அந்த வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் தங்கள் மொழியையும் வளர்திருக்கிறார்களே? ஆனால் ஏழு நாடுகளுக்குச் சமமான மக்கள் தொகையைக்கொண்ட ஏழு கோடித் தமிழர்கள் வாழும் தமிழ்நாட்டில் இத்தனை ஆண்டுகளாய் என்ன செய்துகொண்டிருந்தார்கள். தமிழ்ப் புலமைவாய்ந்த அதே வேளை மருத்துவ, பொறியில், தொழில்நுட்ப, விஞ்ஞானத் துறைகள் சார்ந்த எத்தனையோ தமிழறிஞர்கள் இன்னும் இருக்கின்றார்களே. இவர்கள் எல்லோரும் சிறுகச் சிறுக முயற்சிகள் எடுத்து தமிழ் மொழியில் பாடநூல்களையும் பாடநெறிகளையும் உருவாக்கி வந்திருந்தால், இன்று ரஷ்யாவில் இருந்து அல்லது ஜெர்மனியிலிருந்து மாணவர்கள் தமிழ் மொழி மூலமாக மருத்துவக்கல்வி அல்லது பொறியியற் கல்விகற்க தமிழ்நாட்டுக்கு வருவார்களே? அடடா.. கற்பனையே எத்தனை சுகமாயிருக்கிறது பாருங்கள்? நடைமுறைச் சாத்தியமில்லாத பைத்தியக்காரனின் உளறல் இது என்று சிலர் நினைக்கலாம். இப்படி விதண்டாவாதம் பேசிப்பேசியே காலத்தைக் கடத்தி தமிழைத் தேக்க நிலையில் வைத்திருக்கிறோம் என்பதுதான் உண்மை.

ஆனால் நமது தமிழ்ப் பற்றை நிரூபிக்க ஒன்றை மட்டும் தவறாமல் செய்துவருகிறோம். அது என்னவெனில் யார் யாரோ கண்டுபிடித்த விஞ்ஞான சாதனங்களுக்குத் தமிழ்ப் பெயர் கண்டுபிடிப்பதிலே சுய இன்பம் கண்டு வந்திருக்கிறோம். பலவிதமான கலைச்சொற்களை அறிமுகப்படுத்தி அந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்பையே நாம் கண்டுபிடித்து விட்டதைப்போன்ற போலிப்பெருமை அடைந்து வருகிறோம். நன்றாக யோசித்துப்பாருங்கள். இந்தப் பெயர்களெல்லாம் ஏட்டளவிலேதான் இருந்து வருகின்றன. வழக்கில் வருவதில்லை. ஆயின் என்ன பயன்? சில சந்தர்ப்பங்களில், நம்மைப்போன்றவர்கள் மேடைகளில் அவ்வாறான சொற்களைப் பயன்படுத்தும்போது அவையினர் ஏதோ பழைய அருங்காட்சியகத்தில் புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களைப் பார்க்கும் ஆச்சரியத்தோடு வாய்பிளந்து ஆஹா என்னே இவரது தமிழறிவு என்று பாராட்டுவதோடு சரி. இதனால் தமிழுக்கு என்ன பயன்? முன்னேறிய நாடுகளில் பேசப்படும் மொழிகளைப் பொறுத்த வரையில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும், அன்றாடம் நாம் பயன்படுத்தும் நவீன சாதனங்களுக்கும், அவர்கள் தங்கள் மொழியில் பெயர் கண்டுபிடித்து காலத்தை விரயம் செய்வதில்லை அவற்றைப் பெயர்ச் சொற்களாகவே ஏற்று தங்கள் மொழிக்குள் ஈர்த்துக்கொண்டார்கள்.

அவ்வாறெனில் நாம் என்ன செய்யவேண்டும்? தமிழன் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை உலகுக்குத் தந்து அவற்றுக்குத் தமிழ்ப்பெயர் வைக்கவேண்டும்.

அதனை அந்நியமொழிபேசுவோரும் உச்சரிக்கவேண்டும்.

அதுவல்லவா தமிழுக்கு நாம் ஆற்றும் பெரும்சேவை? ஆனால் நடப்பது என்ன? நமது மொழியைப் பற்றி நாம் எவ்வளவ தாழ்வு மனப்பாண்மையோடு இருக்கிறோம் என்பதற்கு சிறு உதாரணம் தருகிறேன்.



ஈழத்துப்பாடல்.....

1967 காலகட்டத்தில் தனிப்பாடல்கள் என பக்திப்பாடல்கள், பாரதி பாடல்கள் கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்டு பதிவாகிய பொதுப்பாடல்கள் ஒலிபரப்பாகிவந்தன. மறைந்த மூத்த ஒலிபரப்பாளர் விவிதகலாவிநோதன் அமரர் எஸ். கே. பரராஜசிங்கம் அவர்கள் மலிபன் கவிக்குரல் என்ற விளம்பரதாரர் நிகழ்ச்சிக்காக நம் நாட்டின் வாய் மொழிப்பாடல்களான நாட்டுப் பாடல்கனை தேடி எடுத்து. அவற்றுக்குப் புதிய மெட்டுப்போட்டு இசைசேர்த்து ஒலிப்பதிவு செய்து அந்த நிகழ்ச்சியில். ஒலிபரப்பினார். இந்தப் பாடல்களுக்கு அமரர் எம். கே. றொக்சாமி இசைய மைத்திருந்தார்.

இந்த விளம்பர நிகழ்ச்சி சிறிது காலத்தில் நின்றுபோக இந்தப் பாடல்களின் ஒலிபரப்பும் நிறுத்தப் பட்டது. குறிப்பிட்ட பாடல்களால் கவரப்பட்ட நான், பரா அவர்களின் வீட்டுக்குச் சென்று அந்தப் பாடல்களைத் தேடிஎடுத்து, வானொலி நிலையத்தில் விளம்பரங்கள் மட்டும் பதிவு செய்யும் அலுமினியத் தட்டில்

இன்று பாராட்டு விழாக் காணும்
அறிவிப்புத்துறையின்
இமயம் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு
எங்கள் வாழ்த்துக்கள்!

தமிழ் தொலைக்காட்சி இணையம்
தமிழ் ஒளி

நாள் ஒன்றுக்கு 36p மாத்திரமே

நம் தேசத்து நிகழ்வுகளும்
உலக நடப்புக்களும்
உங்கள் முன்னால்

எம்மைப் பற்றி நாம் சிந்திக்கின்றோம் என்றால்
எங்களுக்கான தொலைக்காட்சி ஊடகம் இதுவே.

ttn
தமிழ் ஒளி
020 8100 0000
தரணியெங்கும் வாழும் தமிழரின் விம்பம்
www.ttntamiltv.com

தமிழகத்திலே சித்தவைத்தியத்தில் பெரும் புகழ்பெற்ற தமிழ்சித்தவைத்தியர் ஒருவர், நீரிழிவு நோயைக் குணமாக்கும் மருந்தொன்றைக் கண்டுபிடித்திருப்பதாகவும் அதனை அமெரிக்காவுக்கே ஏற்றுமதிசெய்யும் அங்கீகாரம் கிடைத்திருப்பதாகவும் ஒருதொலைக்காட்சிசேவையின் செவ்விநிகழ்ச்சி ஒன்றில் அறியும் வாய்ப்புக்கிடைத்தது. அடடா! தமிழ்மண்ணுக்கே உரிய சித்தவைத்தியத்துறையில் இத்தனை அரியதோர் கண்டுபிடிப்பா எனும் பிரமிப்போடு அத்தயாரிப்புக்கு என்ன பெயர் என அறியமுற்பட்டேன். அதற்கு அவர் இட்டிருந்த பெயர் -டயா க்கியோர்-(Dia-Cure) நமது மொழியின் மீது நமக்குள்ள தாழ்வு மனப்பான்மைக்கு வேறென்ன உதாரணம் வேண்டும்?

உலகமகா யுத்தத்தில் சாம்பல் மேடாகிப்பின்னர் .ஃபீனிக்ஸ் பறவையாய் உயிர்த்தெழுந்த ஜப்பானியர்கள் அன்றும் சரி இன்றும் சரி, தங்கள் பொருள்களை அமெரிக்காவுக்கு எற்றுமதி செய்தாலும் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்தாலும் அவற்றுக்குத் தங்களது ஜப்பானிய மொழியிலேயே பெயர் சூட்டி வருகிறார்கள். நாமும் டொயோட்டா என்றும் சுஸுக்கி என்றும் மிற்சுபிஸி என்றும் உச்சரிக்கவில்லையா? அதுவல்லவோ அவர்கள் மொழிக்காற்றும் மரியாதையும் சேவையும்.

இன்றைய பாரத ஜனாதிபதியும் உலகின் சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவருமான அப்துல்கலாம் அவர்கள்கூட உயர்கல்வி வரை தமிழிலே கற்றவர். அவரைப்போல் நல்ல தமிழறிவுள்ளோர் பல்வேறு துறைகளில் மேதைகளாகவும் விளங்குகிறார்கள் இவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து. கல்வித்துறையில்- உயர்கல்வித்துறையில் தமிழ் தன் புதிய பயணத்தை ஆரம்பிக்க வழிசெய்யவேண்டும். அப்போது தான் பேசமட்டுமல்ல பிழைக்கவும் உகந்த, உயர்ந்தமொழி என்ற தகுதி தமிழுக்குக் கிடைக்கும். இல்லையெனில் மெல்லத் தமிழினிச்சாகும் என கவிபாரதியிடம் சொன்னவர்களின் ஆரூடம் பலிக்கும்.

ஈழத்து மண்ணிலே போர்மேகங்கள் சூழ்ந்து மக்கள் புலம்பெயராமல் இருந்திருப்பார்களேயானால் நிச்சயமாக கல்வித்துறையில் தமிழ் வளர்க்கும் பணியிலே தமிழகத்துக்கே முன்னோடிகளாய்த் திகழ்ந்திருப்பார்கள் என்பது நிச்சயம். அன்று யாழ்மண்ணிலே நடந்த தமிழராய்ச்சி மாநாட்டிலே வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக் கலை நிகழ்ச்சிகளிலே எனது நெறியாழ்கையில் வீணைக்கொடியோன் நாடகத்தை நடத்தச் சென்றிருந்தபோது இந்த இலட்சியத்தைத் தூரதரிசனமாகக்கண்டேன். ஆனால் கடந்துபோன இரண்டு தசாப்த காலத்துள் எத்தனையோ அறிவார்ந்த மேதைகளையும், எதிர்கால அறிஞர் பலரையும் யுத்தபூமியில் பலிகொடுத்துவிட்டோம்.

எஞ்சியோர் அந்நியமொழிச்சூழலிலே ஆத்மதிருப்திக்காகத் தமிழ்ப்பணி ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும், தமிழகத்தைச்சேர்ந்த அறிஞர்களுக்கும் எனது வேண்டுகோள்...

இனியும் தமிழ் வாழவேண்டுமெனில் நமது அணுகுமுறையில் மாற்றம் வேண்டும். புதியசிந்தனை உருவாகவேண்டும் என்பதே.

கிணற்றிலும் குளத்திலும் எறிந்த கல்லைப்போலல்லாமல் தமிழ் சமுத்திரத்தில் இத் தமிழ்ச் சிறுவன் சிந்தனைக் கல்லொன்றை எறிந்திருக்கிறேன். இதனால் எழும் அலைகள் தமிழ் வளரத் தடையாய் இருக்கும் கரைகளை உடைத்துப் புதுச்சரித்திரம் படைக்கட்டும்

நன்றி

பணிவுடன்

பி.எச்.அப்துல் ஹமீத்



பதிவு செய்தேன். இசைக் களஞ்சியம் நிகழ்ச்சியின் நிறைவில் இவற்றிலிருந்து ஒவ்வொரு பாடல்களை ஒலிபரப்பி வந்தேன். இதனை அவதானித்த அன்றைய அதிகாரி திரு. விவியன் நமசிவாயம் அவர்கள், இந்தப் பாடல்களை ஒலிபரப்ப தனி நேரம் ஒதுக்கித்தந்து உற்சாக முட்டினார். ஈழத்துப் பாடல்கள் என்று கூறி ஒலிபரப்புமாறும் பணித்தார். அவ்வாறே நானும் ஈழத்துப்பாடல்கள் என்ற தனி நிகழ்ச்சியை 15 நிமிடங்கள் நடாத்தினேன். பின்னாட்களில் தமிழ்ச் சேவைப் பணிப்பாளராக பணிபுரிந்த திருமதி. பொன்மணி குலசிங்கம் அவர்கள் இலங்கை வானொலி நிலைத்தில் தனியான தமிழ் வாத்தியக்குழு அமைக்க வழிவகுத்தார்.

அதற்குத் தலைவராக அமரர் ஆர். முத்துசாமி திகழ்ந்தார். ஈழத்துப் பாடல்களை ஆரம்பத்தில் பாடியவர்கள் அமரர் எஸ். கே. பரராஜசிங்கம், திருமதி அம்பிகா தாமோதரம், திருமதி மீனா மகாதேவன் ஆகியோர். வானொலிக்கு வெளியே இசைபிருந்தா என்ற நிகழ்வை கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலே நடாத்தி முற்று முழுதாக ஈழத்துப் பாடல்களையே பாடினார்கள் அமரர் எஸ். கே. பரராஜசிங்கம், அமரர் எம். ஏ. குலசீலநாதன், கோகிலா சகோதரிகள் ஆகியோர் இந்த நிகழ்ச்சிக்கு இசையமைப்பாளர் மொகமட் சாளி இசை வழங்கியிருந்தார். இந்த கால கட்டத்தில் நித்தி கனகரட்ணத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பொப் பாடல்களும் வளர்ச்சி பெற்றுவந்தன. ஈழத்துப் பாடல் பிரசவித்தது இலங்கை வானொலி வர்த்தகசேவையில், பின்னாளில் அது தேசிய சேவையால் தத்தெடுக்கப்பட்டு, வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லப்பட்டது. இன்று இந்த ஈழத்துப் பாடல் புலம்பெயர்ந்து வாழும் நம் நாட்டுக் கலைஞர்களினால் மென் மேலும் மெருகூட்டம் பெறுகின்றது.

கானங்கள் ஒவ்வொன்றினதும்
ஆதி, அந்தம் அறிந்த
அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத்
அவர்களே உங்கள் கலைச் சேவை
தொடர வாழ்த்துகின்றோம்!

CAPITAL AUTOS LTD

Accident Repair Specialists

கார்கள் பழுதடைந்து விட்டனவா?
கவலை வேண்டாம்!
கப்பிரல் ஓட்டோஸுக்கு
கார்களை எடுத்துவந்து விடுங்கள்
கார்கள் அடுத்த நிமிடமே இயங்க
ஆரம்பித்துவிடுகின்றன.
கார்கள் எவ்வகையானவையாகவும்
இருக்கலாம்.

CAPITAL AUTOS LTD

51A, Milton Avenue,
Eastham, London E6 1BG
Tel: 020 8470 4789
Fax: 020 8472 2147
Website: www.capitalautos.com

தமிழின் முதல் நிகழ்ச்சி அளிக்கையாளர் பீ.எச்.அப்துல் ஹமீத்...

- பேராசிரியர் கா. சிவத்தம்பி -

நண்பர் பீ.எச்.அப்துல் ஹமீத்துக்கு மேலும் ஒரு பாராட்டு விழா புகலிடத் தமிழர் நிலையில் நடைபெறுகிறது என்று அறிந்து மிகவும் சந்தோஷப்படுகின்றேன்.

அமரர் சானா சண்முகநாதனின் நெறியாள்கையில் நண்பர் பீ.எச்.அப்துல் ஹமீத் வானொலி நாடகங்களில் நடித்த காலம் முதல் எனக்கு அவருடன் பரீட்சயம் உண்டு.

அவர் ஒரு முக்கிய வானொலிக் கலைஞராக முகிழ்த்தது வர்த்தக ஒலிபரப்புத் துறையிலேயே. அதுவும், காலஞ்சென்ற நண்பர் எஸ்.கே. பரராஜசிங்கத்தின் வழிகாட்டலில் சென்று தன்னை மேம்படுத்திக் கொண்டு மிகச் சிறந்த சாதனைகளைப் படைத்துள்ளார்.

வானொலி என்பது 1950 - 1960களிலே எமக்கு ஒரு புதிய ஊடகமாகவே வந்தது. அதன் தாக்கம் பல புதிய மொழிவள எடுத்துக்காட்டல்களுக்குக் காரணமாக அமைந்தது. அப்படியானவற்றில் ஒன்று, அறிவிப்பாளர்களாக இருந்தவர்களுடைய சேவை.

இந்த விடயம் முதலில் வர்த்தகசேவை அல்லாத தேசிய சேவை மட்டத்திலும், பின்னர் வர்த்தக சேவை மட்டத்திலும் தெரியவந்தது. அனைத்திந்திய வானொலி நிலையத்தைப் பொறுத்தவரையிலும் கூட இந்த வர்த்தக சேவை என்பது மிகப் பிந்தியே வந்தது. அங்குள்ள அறிவிப்பாளர்கள் சிலரும் இந்த முக்கியமான கவனிப்புக்கு உள்ளானார்கள். தர்மம்பாள் முதல் நாகரத்தினம் வரை பல முக்கியமான அறிவிப்பாளர்கள் மிக முக்கிய இடம் வகித்தது எமக்குத் தெரியும்.

இலங்கை வானொலியில் வர்த்தக ஒலிபரப்பு வந்ததும் அதில் புதிய சாதனைகளை ஏற்படுத்தியவர் எஸ்.பி. மயில்வாகனம். அந்தச் சேவையின் புதிது தன்மை காரணமாகவும், அவருடைய அடிப்படை நிகழ்ச்சி காரணமாகவும் அவரால், பல புதிய காரியங்களைச் செய்யக்கூடியதாகவிருந்தது. அவர் காலத்தில் தொடங்கிய அந்தப் பண்புகள் படிப்படியாக வளரத்தொடங்கின.

திரைப்படம் - வானொலி என்கின்ற ஊடகங்களுக்கிடையே ஏற்பட்ட ஊடாட்டம் காரணமாகத் தமிழர் மரபில் பல புதிய கலை நிகழ்ச்சிகள் தோன்றுவதற்குக் காரணமாயிற்று. வானொலியில் திரைப்படத்தைப் பற்றிப் பேசுவது, திரைப்படத்தில் உள்ளவர்கள் வானொலியில் இடம்பெறுவது என்ற ஓர் ஊடாட்டம் மிக முக்கியமான ஒன்றாக இருந்துவந்தது.

இதன் காரணமாக வானொலியில் பல நிகழ்ச்சிகள் திரைப்படத்தைத் தளமாகக் கொண்டு அமைந்தன. திரைப்படத்தைப் பயன்படுத்தி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. அதுமாத்திரமன்றித் தொலைக்காட்சி வருகின்ற பொழுதும் இந்தக் கலை ஊடாட்டத்தின் விஸ்தரிப்பு மேலும் ஒருபடி அகன்றது. இவ்வாறு அகன்று செல்கின்றபோது இந்த மூன்று நிலைகளிலும் நின்று நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிக்கக்கூடியவர்களின் தேவை அதிகரிக்கத் தொடங்கியது.

'மாஸ்ரர் செரமணி', (master of ceremony) 'இம்பிரசாரியோ' (impressario) என்று கூறப்படுகின்ற தன்மைகளில், ஒரு நிகழ்ச்சியைத் தயாரித்து, அதனை முன்னின்று நடாத்திக் கொடுப்பது, அல்லது நிகழ்ச்சியில் வருகின்றனவற்றை அறிமுகம் செய்து அளிப்பது போன்ற ஒரு பாரம்பரியம் முன்னர் எமது ஆற்றுகைக் கலைகளிலே மிகக் குறைவு. பாடல்களுக்குக் கூட பாடியவர், பாடலாசிரியர் அறிமுகம் செய்வதில்லை. இந்த மரபு முதன் முதலில் வானொலியில் தான் உருவானது. இப்படி ஒரு புதிய கலைத்துறை நடவடிக்கை வருகின்றபோது அதில் ஈடுபடவேண்டிய சாதுரியம் மிக்க கலைஞர்கள் தேவைப்பட்டார்கள். இப்படியான நிலமை ஏற்படுகின்ற பொழுது உச்சரிப்புத் தெளிவும், சரளமாக ஆற்றொழுக்காகப் பேசுகின்ற திறனும் மிக முக்கியமான தேவைகளாகின்றன.

இந்தத் தேவையை மற்றெந்த வானொலிக் கலைஞரையும்விட, தமிழைப் பொறுத்தவரையில் முதலாவதாகவும், மிகச் சிறப்பாகவும் செய்திருப்பவர் பீ.எச்.அப்துல் ஹமீத் என்றே நான் நம்புகின்றேன்.

தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றது இந்தக் காலகட்டத்திலேயே ஆரம்பித்தது என்பதினாலும், இந்த ஊடகப் பண்பாடு அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் போற்றப்படத் தக்கதாக அமைந்ததினாலும் அப்துல் ஹமீத்துக்குச் சென்ற இடங்களிலெல்லாம் சிறப்புக்களே சேர்ந்தன. இவர் போன்று சிறப்பான முறையிலே செய்வதற்கான கவர்ச்சி தமிழகத்திலே கூட இல்லாதிருந்த காரணத்தினாலே இவரே அங்கு வரவழைக்கப்பட்டு வானொலி - தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றமை எமக்குத் தெரியும்.

உண்மையிலே அவ்வாறு பார்க்கின்ற போது அப்துல் ஹமீத்தை தனியே ஒரு வானொலி அறிவிப்பாளர் என்றோ அல்லது ஒரு நிகழ்ச்சித் தயாரிப்பாளர் என்றோ கொள்வதிலும் பார்க்க, இவரை நாங்கள் ஒரு புதிய நிலைபட 'நிகழ்ச்சி அளிக்கையாளர்' என வரையறுத்துக் கொள்வது அவசியம் என நம்புகின்றேன். உண்மையில் அப்துல் ஹமீத் தோற்றுவித்த நியமங்கள் தான் நிகழ்ச்சி அளிக்கைகளுக்கு மிக முக்கியமாக அமைகின்றது. அதனை நாம் இங்கும் காண்கின்றோம். தமிழகத்திலும் காண்கின்றோம். புகலிடங்களிலும் காண்கின்றோம். மிக முக்கிய நிகழ்ச்சிகளில் அவரே அறிவித்து, அந்த நிகழ்ச்சிக்கு வேண்டியவற்றைச் செய்வதை நாம் பார்க்கின்றோம்.

ஊடகப் பண்பாடு வந்ததன் பின்னர், தமிழில் ஏற்பட்டுள்ள புதிய வளர்ச்சிகளில் இதுவும் ஒன்று. இந்த வளர்ச்சியில் மிகப் பெரிய சாதனைகளை ஈட்டிய, பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தெரிந்த நண்பர் பீ.எச்.அப்துல் ஹமீத்துக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அவர் மென்மேலும் சிறப்புக்களைப் பெறுவாராக.



எனது குடும்பம்

எனது மனைவியின் பெயர் சாமிலா. என் மகனின் பெயர் சிறாஜ். ஒரு முறை ஆனந்தவிகடன் பத்திரிகையில் தவறுதலாக ஸ்ரீராஜ் எனப் போட்டுவிட்டார்கள். என்னுடைய திருமணம் ஒரு கலப்புத் திருமணமான போதிலும் எனது மனைவி இஸ்லாத்தை தழுவி சாமிலாவாக வாழ்ந்து வருகிறார்.

தமிழ்க் கலையுலகின்
தங்கக் குரலோன்
அப்துல் ஹமீத் அவர்களே!
தங்களின் தமிழ்க் கலைப்பணி
தரணியெங்கும் தொடர வாழ்த்துகின்றோம்!

தாரணி ஜுவல்லறி

தரங்குன்றாத தங்க நகைகள்
தாராளமாகத் தெரிவு செய்ய
தற்போதைய நவீன டிசைன் நகைகள்
தங்கச் சுரங்கமாகக் காட்சிதரும்
நகை மாளிகை
திருமண நகைகள் அனைத்தையும்
உரிய நேரத்தில் தயாரித்து வழங்குவோர்

கவர்ச்சி மிக்க – கல்பதித்த நகைகளுக்கும்
தங்கம், வைரம் வாங்கிக்கொள்ளவும்

Tharani Jewellery

Jewellers & Diamond Merchants
54, Ealing Road, Wembley,
Middlesex HA0 4TQ, U.K.
Tel: 0044 20 8902 7111
Tel: 0044 20 8902 6777
Website: www.tharanijewellery.com

பாரதிவளிமீடு
வீரகேசரி

உங்கள் அன்பு அறிவிப்பாளர் பீ.எச் அப்துல் ஹமீத்துக்கு இலண்டனில் பாராட்டு விழா

உலக அரங்கில் தமிழ் அறிவிப்புத்துறைக்கு அரியாசனம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும், உங்கள் அன்பு அறிவிப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு இலண்டனில் பாராட்டுவிழா.

வானொலிக் கலைஞராய் மிகச் சிறுவயதில் வானொலி வாழ்வை ஆரம்பித்த பீ.எச்.அப்துல் ஹமீத் இலங்கை வானொலியில் பல துறைகளிலும் பணியாற்றியிருக்கின்றார். இலங்கை வானொலியில் நிரந்தரப் பதவியை இவர் துறந்தபோதிலும், இலங்கை வானொலியுடனான உறவு தொடர்ந்து செல்வதை நாம் அவதானிக்கலாம்.

1988ம் ஆண்டு அன்றைய இலங்கைக் கலையகத்தின் அழைப்பை ஏற்று பாரீஸ் நகரம் சென்று கலைவிருந்து படைத்த அப்துல் ஹமீத், எமது நாட்டின் கலைஞர்கள் பலர் மேற்குலக நாடுகளில் அரங்கேறிடவும் வழிசமைத்தார். இவரின் பணி இப்பொழுதும் உலகெங்கும் தொடர்ந்துவருகின்றது.

ஆண்டுதோறும் ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்கும் கலைப்பயணம் மேற்கொண்டு வருகின்றார்.

உலகெங்கும் இயங்கும் தமிழ் வானொலி நிலையங்கள் தமது கலையகத்துக்கு அப்துல் ஹமீத்தை அழைத்துப் பெருமையடைந்துவருகின்றன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கலைப்பாலம் அமைத்துச் செயற்படும் ஒரு கலைஞராகவும் அப்துல் ஹமீத்தை பார்க்க முடிகின்றது.

இவ்வாறு பல்வேறு பட்ட சிறப்புக்களுக்குரிய ' கலைஞானிதன்' பீ.எச்.அப்துல் ஹமீத் அவர்களுக்கு உலகத் தமிழ்க் கலையகம் பிரித்தானியாவில் பாராட்டு விழா எடுக்கிறது. இந்த விழா Croydon Fairfield பிரமாண்டமான மண்டபத்தில் நடைபெறுகின்றது. ஒலிபரப்பு - ஒளிபரப்புத்துறை சார்ந்தோரும் ஏனைய ஊடகவியலாளர்களும், கலைஞர்களும், கலாரசிகர்களும் கலந்து சிறப்பிக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியாக இந்த விழா அமைய வாழ்த்துகின்றோம்.



தமிழகத்தில் எஸ்.கே. ராஜென், பி.பி. ஸ்ரீநிவாஸ், பீ.எச். அப்துல் ஹமீத்

என் மீது ரசிகர்கள் பற்று வைத்திருக்கிறார்கள் என்று நான் உணர ஆரம்பித்ததே அறிவிப்பாளராகி 15 ஆண்டுகள் கழித்துத்தான். 1983–ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது சிறிது காலம் இலங்கை வானொலியில் என் குரல் ஒலிக்கவில்லை. என் குரல் சிறிது காலம் வானொலியில் வராமல் போகவே நானும் கலவரத்தில் இறந்துவிட்டதாக இங்கு ஒரு தகவல் வந்துவிட்டது. அதிலும் மலையாளப் பத்திரிகையான மாத்ருபூமி 'அப்துல் ஹமீதுவைக் கொன்னு' என்று செய்தியே போட்டுவிட்டது. பிறகு சிறிய இடைவெளிக்குப் பின் மீண்டும் என் குரல் வானொயிலில் ஒலிக்க ஆரம்பித்ததும் எனக்குத் தமிழகத்திலிருந்து வந்து குவிந்த கடிதங்கள் சொல்லி மாளாது. 'நீங்கள் இறந்திருக்கக் கூடாது என்று நாங்கள் பிரார்த்தனை செய்தோம். அது பலித்துவிட்டது.' என்றெல்லாம் பலர் எழுதியிருந்த கடிதங்களைப் படித்துவிட்டு ஒரு வானொலி அறிவிப்பாளன் மீது இவ்வளவு பற்றா என நினைத்துக் கண்ணீர் விட்டேன்."

வானொலி – தொலைக்காட்சியில்
லாவகமாகப் பேசி
எம்மைக் கவர்ந்த
அன்பு அறிவிப்பாளர்
அப்துல் ஹமீத் அவர்களுக்கு
இனிய நல்வாழ்த்துக்கள்!

Latha

Window and Door

உங்கள் இல்லங்களின் ஜன்னல்களை
விருப்பம்போல் வடிவமைத்துத் தருவோர்

தச்சு வேலைகளை மெச்சும் வகையில்
தாயகத்தில் மேற்கொண்டவர்களின்
தரமான உறுதியான வீட்டு வேலைகளுக்கு
தவறாது நாடுங்கள்!
Latha Window
and Door
வீட்டுத் திருத்த வேலைகளைத் துரிதமாக
மேற்கொண்டு வருவோர்
ஜன்னல் Double Glazing பொருத்துவதிலும்
கதவுகள் இணைப்பதிலும்
கைதேர்ந்த நிறுவனத்தினர்

Latha

Window and Door

28, Boston Road, Cryodon CR0 3ED

Tel: 020 8665 9975

நடிப்பிலும் அறிவிப்பிலும் முத்திரை பதித்த அப்துல் ஹமீத்



வாழ்த்துச் செய்தி ஒன்று அப்துல் ஹமீத்க்கு எழுத வேண்டும் என்று கேட்டதும், எனக்கு மனதிற்குள் சிரிப்பு. ஏனென்றால் ஹமீத் 12 வயதிலிருந்தே என்னுடைய வாழ்த்துக்களையும், ஆசீர்வாதத்தையும் பெற்று வளர்ந்து வந்தவர். அவருடைய அயராத உழைப்பைக் கண்டு பெருமிதமடைந்தேன். சிறுவர் மலர் நிகழ்ச்சிக்கு வரும் பிள்ளைகளுக்கு தத்தம் பிரதிகளை வாசிக்க வேண்டும் என்று கொடுத்தால் அவர்கள் விளையாடிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் ஹமீத் தன்னுடைய பிரதியை மனனம் செய்து நிகழ்ச்சியிலே பிரமாதமாக நடிப்பார்.

அப்படி ஆரம்பித்த சிறுவன், வானொலி நிலையத்தில் அறிவிப்பாளராகச் சேர்ந்தார். இதே வழியில் ஒரு நிகழ்ச்சியைத் தொகுக்கும் பொறுப்பை கொடுத்தவுடன், இசைத்தட்டுக்களை தேர்ந்து எடுத்து, நிகழ்ச்சியை தொகுப்பதோடு நிற்காமல் ஒவ்வொரு பாடலையும் கேட்டுக் கேட்டு மனனம் பண்ணி நிகழ்ச்சியை உணர்ச்சியோடு ஒலிபரப்புவார். இந்தத் திறமை தான் ஹமீத்க்கு ஒரு தனித்துவத்தைக் கொடுத்தது.

சில வருடங்கள் ஆனதும் பாட்டுக்குப் பாட்டு என்ற நிகழ்ச்சியை உருவாக்கி நேயர்களுடைய மனதை ஈர்த்துக்கொண்டார். தற்சமயம் உலகமெல்லாம் புகழ் பெற்று நேயர்களுடைய அபிமானத்தையும் பெற்றிருக்கிறார். அவருடைய அடுக்கு மொழியும், இனிமையான குரலும், கொஞ்சலாகப் பேசும் ஆற்றலும், எந்தப் படப் பாட்டையும் ஞாபகமாக வைத்திருக்கக்கூடிய அறிவும், நாடகங்கள் எழுதுவதற்கும், தயாரிப்பதற்கும், நடிப்பதற்கும் உள்ள ஆற்றல் ஹமீத் இப்பேர்ப்பட்ட சிறந்த விழாவுக்கு தகுதியை பெற்றிருக்கிறார்.

இன்று பெருமையோடு நான் அவரை ஆசீர்வதிக்கிறேன்.

பொன்மணி குலசிங்கம்



எல்லாமே எனக்குப் பிடித்தவை தான். என்றாலும், நான் மிகவும் சிரமப்பட்டுத் தயாரித்த ஒரு தொடர் நாடகம்தான் எனது புதுமைகளில் மறக்கமுடியாத ஒன்று. இந்த நாடகத்தில் தமிழகத் திரை நட்சத்திரங்களான ஜெமினிகணேசன், ஸ்ரீவித்தியா போன்றோரும் மற்றும் பல இலங்கைக் கலைஞர்களும் பங்கேற்று நடித்தார்கள். இதில் நான் செய்த புதுமை என்னவென்றால், இதில் எந்த ஒரு கதாபாத்திரமும் மற்றவரைச் சந்தித்துக் கொள்ளாமலே ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இப்படித் தனித்தனியாக ஒலிப்பதிவு செய்த அனைத்தையும் அப்படி ஒரு விஷயமே தெரியாத அளவுக்கு எடிட் செய்து நாடகமாக ஒலிபரப்பினோம். அந்தத் தொடர் நாடகம் முடிந்தபிறகு தான் இந்த சஸ்பென்ஸையே நேயர்களுக்கு உடைத்தோம். அனைவரும் வியந்து பாராட்டினார்கள்."



இரசனையின் சிகரமே இலங்கை வானொலியின்
இணையற்ற சொத்தே இனிய வாழ்த்துக்கள்

இராசம் காயத்திரி சில்க்ஸ்

ரசனைக்குரிய உடைகள்
ராசியான வர்ணங்களில்

சேலை வாங்கும்போது
சட்டை துரிதமாகத் தைத்தே தந்துவிடுகிறார்கள்

எங்கும் கிடைக்காத லேற்றஸ்ற் புடவைகள்
எப்பொழுதும் இங்கே கிடைக்கும்

பரதக் கலைபயிலும் மாணவிகளே
பரதநாட்டிய உடைகளை
லண்டனில் தெரிவுசெய்ய ஓரிடம்

RASAM GAYATHRY SILKS

**312, HIGH STREET NORTH,
EASTHAM, LONDON SW12 6SA**

TEL:020 8552 6060

Web:www.rasamsilk.com



காந்தக்குரல் வேந்தன்

அருமை நண்பர் அப்துல் ஹமீது அவர்கள் எனக்கோர் ஆச்சரியம்.

அவர் ஒரு திரைப்பட நூலகம்.

வரலாறுகளைக் காலவரிசையில் தொகுத்து வைத்திருக்கும் கணிப்பொறி.

பழைய தலைமுறைக்கும் இளைய தலைமுறைக்கும் பாலமாகத் திகழும் பண்பாளர்.

ஒலிபரப்புத் துறைக்குக் கூடுதல் கவனஈர்ப்பைக் கொடுத்தவர்.

தன் குரலால் மட்டுமே லட்சக்கணக்கான ரசிகர்களை ஈட்டியிருப்பவர்.

அவர் அறிவிப்பில் பிசிறோ பிழையோ நேர்ந்ததாக என் காதுக்குத் தகவலில்லை.

அவர் வழிநடத்தும் மேடைகளில் ஒழுங்கிருக்கும்; உற்சாகமுமிருக்கும்.

மேடையில் பாடவரும் புதிய பாடகர்கள் பாட்டுவரிகளை மறந்துவிட்டாலோ அல்லது பிறழ உச்சரித்தாலோ அதை எடுத்துக் கொடுக்கும் வல்லமை அவருக்கு உண்டு.

இவரால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்கள் அல்லது இவருடைய ஏகலைவர்கள் உலகெங்கும் ஒலிபரப்புத் துறையில் கொடிகட்டிப் பறக்கிறார்கள்.

உரையாடலில் கூட யாரையும் காயப்படுத்தாத பெருங்குணம் இவரிடம் நான் காணும் அருங்குணம்.

இவரைப் போன்ற திறமையாளர்களையெல்லாம் உள்ளடக்கியதுதான் தமிழின் கலாசார பலம்.

எனவே அப்துல் ஹமீது அவர்களைப் பாராட்டுவது தமிழ் கூறும் நல்லுலகத்தை இன்னும் வலிமைப்படுத்திக் கொள்வதாகவே ஆகும். இவர் காக்கப்பட வேண்டிய ஒரு கருவூலம்.

இவருக்கு விழா எடுப்பவர்களும் இவரைப் பாராட்டுபவர்களும் இனத்திற்கும், மொழிக்கும் ஏற்றம் சேர்க்கிறார்கள்.

இவருக்குக் "காந்தக்குரல் வேந்தன்" என்ற பட்டமளித்துப் பாராட்டுகிறேன்.

அன்போடு

"உலகிலேயே வர்த்தக ஒலிபரப்புக் கென்றே ஒரு அலைவரிசையை ஏற்படுத்தியது இலங்கை வானொலி தான். பரீட்சார்த்த ரீதியாக 'கோவா' வானொலி வர்த்தக ஒலிபரப்பைச் செய்திருந்தாலும் நடைமுறைப்படுத்தியது இலங்கை வானொலிதான்.

வியாபார நோக்கில் தொடங்கப்பட்டாலும் வெறும் விளம்பரங்களை மக்கள் கேட்க முடியுமா? அதனால் வர்த்தக ஒலிபரப்பில் மாறுபட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை வழங்க யோசனை செய்தேன். அதில் ஒன்றுதான் இசைத்திறன் போட்டி! அதன் மூலம்தான் 'பாட்டுக்குப் பாட்டு' என்கிற நிகழ்ச்சியை உருவாக்கினேன். அது மிகப்பெரிய வெற்றியடைந்ததால் 27 வருடங்களாக நேயர்களை அசத்திக் கொண்டிருக்கிறது. இதன் வெற்றியால் ஈர்க்கப்பட்ட தனியார் தொலைக்காட்சிகளிலும் இந்நிகழ்ச்சி இடம்பெற்று வருகிறத. வட இந்தியாவில் கூட 'அந்தாக்சரி' என்கிற பெயரில் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது."

"பாத்ரூம் பாடகர்களுக்காகத்தான் தொடங்கினோம். அரைகுறை பாடகர் களும் தங்கள் குரல் அரங்கேற்றமாக வேண்டும் என்கிற ஆசையில் இந் நிகழ்ச்சியில் பங்கு கொள்வதை விரும்புகிறார்கள்.

இதன் மூலம் தங்கள் திறமைகளையும் வளர்த்துக்கொள்ள வாய்ப்புக் கிடைக் கிறது! அத்தோடு போட்டியைக் கடுமையாக நடத்துவதில்லை! இசை 50% நகைச்சுவை 50% எனக் கலந்து நடத்துகிறேன்."

போட்டியில் கலந்துகொள்பவர்களுக்கு மேடைக்கூச்சம் விலகுகிறது. பார்வை யாளர்களுக்கு நேரடி அனுபவம் கிடைக்கிறது. முன்பெல்லாம் தமிழ் நாட்டிலிருந்து இசைக் குழுவை வரவழைத்து இலங்கைத் தமிழர்கள் விசேஷ தினங்களில் நடத்துவார்கள். ஆனால் இப்போது... 'பாட்டுக்குப் பாட்டு'வில் கலந்து அனுபவம் பெற்ற பலர் பல இசைக்குழுவை தொடங்கி... தொழில் ரீதியான பாடகர்கள் நிறைய உருவாகியிருக்கிறார்கள்.

அன்னைத் தமிழின் அரிய கலைஞர்
அப்துல் ஹமீத் அவர்களே!
அன்பு நிறைந்த வாழ்த்துக்கள்

அம்பாள் ஜுவலர்ஸ்

அழகு ஜெலிக்கும்

அத்தனை நகைகளையும் தெரிவு செய்ய
பொன்னுருக்குதல் நடாத்திட வசதிகொண்ட
அம்பாள் ஜுவலர்ஸ்

அனைவரும் விரும்பும் நகைகளை
அள்ளி வழங்குவோர் அனைத்தும் புதிய
வடிவங்கள்

AMPAAL JEWELLERS

784. LONDON ROAD.
THORNTON HEATH.
SURREY CR4 6JB
TEL:02086898293

176. UPPER TOOTING ROAD.
TOOTING
LONDON SW17 7ER
TEL: 02086729955
FAX:0286727097



சமூக வாழ்த்துப்பெறும் மதுர ஒலி பிஎச்.அப்துல் ஹமீத்

- ஏ.சீ. தாசீசியஸ் -

தலை சிறந்த உலகத் தமிழ் அறிவிப்பாளர்களிடையே ஒப்பாரும் மிக்காரும் இல்லாதோர் என்று நயத்தற்கும் போற்றுதற்கும் தக்காராய்த் திகழ்பவர்கள் மிகச் சிலரே. அத்தகையோர் மத்தியில் திலகமாய்த் திகழ்பவர் பி. எச். அப்துல் ஹமீத் அவர்கள். தாம் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளுக்குத் தனி உயிர் ஊதி, அன்பர்களின் இதயங்களில் இனிமை பொழிந்து, உறவுச் செதுக்கல் பெற்றவர் இவர்.

வித்தைகளும் வித்தகர்களும் அவரவர்க்குரிய மோடிகளாலும் பாணிகளாலும் மானசீகமாகத் தொழப்படுவதும் கடைப்பிடிக்கப்படுவதும் உலகம் பூராவும் காலாகாலமாக வேரோடிவிட்ட உண்மை. மேதைகள், சம்பிரதாயங்களையும் வேதங்களையும், கலைகளையும் ஞானங்களையும் பற்றற்ற சுயம்பு நிலையில் நின்று உருப்படி நோற்று உலகுக்கு அருளுகின்றார்கள். அவற்றிலுள்ள தாய்மைக் கூறுகள் சந்ததி விருத்திக்கு வித்திடுகின்றன. வேத, சம்பிரதாயங்களாக வியாபிக்கின்றன. இவையே, தொழப்படுகின்றன. கடைப்பிடிக்கப்படுகின்றன. தற்காலத் தமிழ் அறிவிப்புக்கலைப் பாரம்பரியத்துக்குப் புது மோடி வகுத்த நயத்தகு வித்தகர்களுள் ஏற்றம் பெற்றவராக அப்துல் ஹமீத் அமைகிறார். நூற்றுக்கணக்கான பாண்டவ கௌரவர்களையும் ஆயிரக்கணக்கான ஏகலைவர்களையும் அறிவிப்புக்கலை மாணவர்களாகக் கொண்ட துரோணாச்சாரியப் பெருமைக்கு உரியவராக அவர், தமிழ்க்கலை வரலாற்றில் இடம்பிடிக்கிறார்.

பாம்பின் கால் பாம்பறியும் என்பார்கள். வல்லவன் ஹமீதின் வல்லமையை, துறை சார்ந்த இன்னொரு வல்லவனான எஸ். கே. ராஜன் நயந்து அவருக்கு விழா எடுப்பது, பாராட்டுதற்குரியது. இலங்கையிலும் இந்தியாவிலும் வாழும் தேர்ந்த தமிழ் அறிஞர்களையும் கலைஞர்களையும் கடந்த 20 ஆண்டுகளாக ஐரோப்பாவுக்கு அவ்வப்போது தருவித்து வெற்றிகரமாக நிகழ்ச்சிகள் வழங்கிவருபவர், ராஜன். வழக்கமாக, இங்கே உள்ள மக்களை ஒன்று திரட்டி, அவர்களுக்கு மகிழ்வூட்ட, வெளியேயிருந்து கலைஞரைத் தருவிக்கும் எஸ்.கே.ராஜென், இந்தத் தடவை, வெளியேயிருந்து தாம் அழைக்கும் கலைஞரைக் கௌரவிப்பதற்காகவும் அவருக்கு நன்றிகூறுவதற்காகவும் அங்கே உள்ள மக்களை ஒன்று திரட்டுகிறார். தமிழ் ஒலிபரப்புத் துறை முகாமையாளராகவும் திட்டமிடலாளராகவும் பட்டறிவுச் சிறப்புப் பெற்ற சுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா தமது ஆளமை வளங்களோடு இந்த முயற்சியில் ராஜனுடன் இணைந்து கொள்கிறார். இவர்களுடைய கூட்டு முயற்சி, வருங்காலத் தமிழ்க் கலை அரங்கங்களில் வெற்றிக் கம்பளம் விரிக்கட்டும்.

கலைஞர்கள் வாழும்போதே அவர்களுக்கு விழா எடுப்பது ஒரு சமூகத்தின் நன்றியுணர்வையும் பாராட்டுணர்வையும் புலப்படுத்துவதாகும். நமது தமிழ்ச் சமூகத்தின் அந்த நல்ல பக்கத்தை வளர்த்தெடுக்கும் முயற்சியில் ராஜென்-ஸ்ரீ கூட்டு தொடர்ந்து வெற்றிபெற, நெஞ்சார வாழ்த்துகிறேன். இவர்களுடைய முயற்சியின் முதல் நாயகனாக, சமூக வாழ்த்துப்பெறும் மதுர ஒலி பிஎச்.அப்துல் ஹமீத் அவர்கள், கலைக்கும் மொழிக்கும் புரிந்துவரும் கம்பீரமிக்க தன்னேரில்லாப் பணிக்காக நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறேன்.



"ஸ்ரீராம் சிட்ஸின் 'கிராமத்தின் இதயம்' எனும் வானொலி நிகழ்ச்சிக்காக தமிழகத்தின் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்றேன். செம்மண்காடு! அங்கே வேர்வை சிந்த உழைக்கும் கூலித் தொழிலாளர்கள்... அவர்களின் அலுப்பைத் தீர்க்க மரக்கிளையில் தொங்கவிடப்பட்டிருக்கும் வானொலிப் பெட்டி! பெரும்பாலும் அந்தப் பெட்டியில் இலங்கை வர்த்தக ஒலிபரப்புத்தான் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. இப்படி காடுமேடு வரைக்கும் தொலைக்காட்சிப் பெட்டியால் வரமுடியாது! அதனாலேயே வானொலியில் வேலை பார்ப்பதே எனக்குப் பெருமையாக இருக்கிறது! கேலக்ஸி ரமேஷ்பிரபாவின் 'லலிதாவின் பாட்டுக்குப் பாட்டு' நிகழ்ச்சியை என்னை நடத்தச் சொல்லி அழைத்தபோதுகூட இதே நிகழ்ச்சியை வானொலிக்காகவும் பதிவுசெய்வேன் எனப் பேசியபின்தான் ஒப்புக்கொண்டேன். எனக்கு வானொலி மீது எப்போதுமே ஒரு தீராத காதல்!"

"பொதுவாகவே இன்றைய தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் பெரும்பாலானவர்கள் தமிழ்ப்படுகொலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 'ஹாய்... பாய்..' என்று தேவையற்ற அலட்டல்கள்! 'நன்றி! வணக்கம்!' என்று சொல்லுவதில் என்ன கஷ்டம்? கேட்டால் இன்றைய தலைமுறை இதைத்தான் விரும்புகிறது. ஆங்கிலக் கலப்பு உரையாடல்தான் அவர்களுக்குப் புரியும் என்கிறார்கள். பின் ஏன் செய்தி வாசிப்பில் மட்டும் தனித்தமிழ்? அப்படியென்றால் செய்தி புரியத்தேவையில்லை என்று அர்த்தமா?

'பிரதமர் நாளை மார்னிங் ப்ளைட்ல புறப்பட்டு மெட்ராஸ் வர்றார். சில பங்க்ஷன்ல கலந்துக்கிறார்னு செய்தி சொல்லலாமே?"

வானொலியிலும் தொலைக்காட்சியிலும்
வரவேற்புக்குரிய நிகழ்ச்சிகளை வழங்கும்
பீ. எச். அப்துல்ஹமீத் அவர்களே
எமது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!

விசாலமான இடவசதியில்
விருந்துண்டு மகிழ உங்கள்
விருந்தினர்களுடன் வாருங்கள்

100க்கு மேற்பட்ட இருக்கைகள்
உங்கள் பிறந்தநாள் – திருமண
விருந்துபசாரங்களுக்கு ஏற்ற இடம்

உங்கள் வசதிக்கேற்ப இசைக்குழுவினரின்
இசைவிருந்தும் ஒழுங்குசெய்து தரப்படும்

ஓடர் உணவுகள்
2 மைல்களுக்குள் விநியோகம் இலவசம்

உங்கள் வைபவங்களில் உணவு தயாரித்து
பரிமாறிக் கொள்ளவும் நாம் தயார்

YOU & ME RESTAURANT

6-8, UPPER GREEN EAST,
MITCHAM, SURREY CR4 2PA

Tel: 020 8648 9555
020 8648 3116

'மானஸரோவர்'
2, முதல் லிங்க் தெரு,
கற்பகம் கார்டன்ஸ்,
அடையாறு, சென்னை - 600 020.
தொலைபேசி : 4918899
மின் அஞ்சல் : jibu@md3.vsnl.net.in
வலைதளம் : www.sivasankari.com

ஜூலை 13, 2004

திரு. எஸ். கே. ராஜென்
இயக்குனர்
உலகத் தமிழ் கலையகம்
39, Tintern Road
Carshalton, Surrey
SM5 IQF, U.K.

அன்பான திரு. ராஜென்,

வணக்கம்.

உலகப் புகழ்பெற்ற ஒலிபரப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு உலகத் தமிழ் கலையத்தினர் பாராட்டுவிழா நடத்தவிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி.

தனது இனிமையான குரல் வழியே, கலப்பில்லாத தூயதமிழில் நிகழ்ச்சிகளை வழங்கிவரும் அப்துல் ஹமீத் அவர்கள், தேமதுரத் தமிழோசையை உலகமெலாம் பரவச்செய்து வருவதில் பெரும்பங்கு வகிப்பவர். கம்பீரமும் இனிமையும் கொண்ட இவரது குரல், இலங்கையைத் தாண்டி தற்போது தொலைக்காட்சிகள் மூலமும் உலகம் முழுமைக்கும் பரவியிருப்பது, தமிழர் என்ற முறையில் எனக்கு மிகுந்த பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் தருகிறது. இளைய தலைமுறையையும் கவர்ந்திழுக்கும் இவரது தமிழ், உலகம் முழுவதிலுமுள்ள தமிழரின் நெஞ்சங்களில் நிச்சயம் பல்லாண்டு இனிதே வாசம் செய்யும். நண்பர் அப்துல் ஹமீத் அவர்களுக்கு நல்ல ஆரோக்கியத்துடன் கூடிய நிறைவான வாழ்வு தொடர எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

பாராட்டு விழா சிறப்பாக நடைபெறவும், விழா மலர் நல்ல முறையில் வெளியாகவும் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

சிவசங்கரி.

"தாய்மொழி. நம் தமிழ்மொழி மேல் தாமிழ்நாட்டுக் காரர்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை! வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டால் தமிழில்தான் பேசுகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டு தமிழர்கள் 'ஹலோ'வுக்கு மாறிவிட்டார்கள்.

பிரஞ்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே தூரம் குறைவுதான். ஆனாலும் பிரான்சில் ஆங்கிலம் பேசினால் அடிதான் விழும்! ஆங்கிலம் உலகமொழி இல்லை என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்."

நற்றமிழ் அறிவிப்பினால்
நம்முள்ளம் நிறைந்த அப்துல் ஹமீத்
அவர்களே
நாளெல்லாம் நல்வாழ்வு வாழ நாமும்
வாழ்த்துகிறோம்.

நல்லூர்க் குமரன்
ரெக்ஸ்ரைல்ஸ்

நங்கையர் விரும்பும் உடைகள்
நவீன ரகத்தில் இறக்குமதி செய்வோர்

நாளுக்கு நாள்வரும் புதிய டிசைன்
புடவைகள்
நல்லூர்க் குமரனில் நிறைந்திருக்கின்றன

மணமக்களுக்கேற்ற
திருமணப் பட்டுப்புடவைகள்

சேலைக்குரிய சட்டை
உடனுக்குடன் தைத்துத் தருகின்றனர்

NALLUR KUMARAN
TEXTILES

1025, London Road (A23),
Croydon - Thornton Heath,
Surrey CR7 6JF
Tel/Fax: 020 8684 1026

26, High Street (A24),
Colliers Wood, Tooting,
London SW19 2AE
Tel: 020 8543 3230

E-mail: nallur-kmaran@hotmail.com

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

என் ஞாபகத்தில் பி.எச். அப்துல் ஹமீத்

- கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் -

ஆலோசகர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், முன்னாள் தமிழ்ச்சேவை பணிப்பாளர்.

வானொலி மாமாவாக சரவணமுத்து மாமா கடமையாற்றிய வேளையில், சின்னஞ் சிறார்களாய் சிறுவர் மலர் நிகழ்ச்சியில் கதை படித்து, கட்டுரை வாசித்து, பாடல்கள் பாடி மகிழ்ந்த வேளையில், அவ்வப்போது சந்தித்து கதைத்த ஞாபகம். பல்லைகழகப் படிப்பு முடிந்து இசைச் சித்திரங்கள், மாதர் பகுதி, இசை நிகழ்ச்சிகள் எனப் பங்குபற்றச் சென்றபோது அறிவிப்பாளனாகச் சந்தித்த ஞாபகம். கீதாஞ்சலி - சிவாஜிதுரையின் நாட்டிய நிகழ்ச்சிகளுக்குப் பாடச்சென்ற போது அமரர் S.K. பரராஜசிங்கத்துடன் அமர்ந்து பல இசை, ஒலிபரப்பு சம்பந்தமான விடயங்களை நாம் அலசி ஆராய்ந்த போது பார்த்த ஞாபகம். என்னை மணக்கும் முன்னரேயே எனது கணவர், இவரது அறிவிப்பு பற்றியும் திரைப்படத் துறையிலிருந்த அறிவு ஆர்வம் பற்றிக் கூறிய ஞாபகம். முதல் தடவையாக 50 வீணைகளைக் கொண்டு நான் மேடையேற்றிய இசை நிகழ்ச்சிக்கு 'ராகமாலிகா' எனப் பெயரிட்டதும் இவர்தான் என ஞாபகம்.

வங்கியியல் துறையிலிருந்து ஒலிபரப்புத் துறைக்கு என்னை மாற்றி தயாரிப்பாளராய், கட்டுப்பாட்டாளராய், பணிப்பாளராய், இன்று ஆலோசகராக இருக்கும் அந்த நீண்ட ஒலிபரப்புப் பாதையில் நான் கண்ட அப்துல் ஹமீத் இந்த ஞாபகங்களிலிருந்து துளிர்த்த வானொலிக் குடும்பம் எனும் உறவு. பண்பானவர். நல்ல தமிழ் பேசும் செஞ்சொற் செல்வர். ஒலிபரப்புத் துறையின் நுணுக்கங்களில் தேர்ந்தவர். சாதி, மதங்களைக் கடந்து தமிழைப் பாலமாகக் கொண்டு உலகையே வலம் வருபவர். இவர் இலங்கையர் என தலைநிமிர்ந்து நாம் பறைசாற்றும் சால்புடையவர். இற்றைக்கு பவளவிழாவையும் கண்ட இலங்கை வானொலி பெற்றெடுத்த மைந்தர் எனும் பெருமைக்குரியவர்.

இத்துணை பெருமைக்குரியவருக்கு லண்டன் மாநகரில் பாராட்டுவிழா எடுப்பது குறித்துப் பெருமிதம் கொள்கிறேன்.

மேலும் பல்லாண்டுகள் இந்த நற்பணியில் தொடர்ந்து துலங்கவேண்டும் என வாழ்த்துகிறேன்.

வானொலி – தொலைக்காட்சி ஊடாக
உலகெங்கும் தமிழ் மணம் பரப்பும்
அன்பு அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத்
அவர்களே
உங்கள் தமிழ்க் கலைப்பணி தொடர
நல்வாழ்த்துக்கள்!

London Video's

தமிழ்
ஒலி – ஒளி வடிவங்கள்
தரமாகக் கிடைக்குமிடம்

பழைய புதிய – படங்கள் வீடியோவில்
DVDயில் பாடல்கள்
CDயில் Audio கசெற்றில்
தமிழ் பத்திரிகைகள் சஞ்சிகைகள்
எல்லாமே கிடைக்கின்றன

London Video's

தமிழ் – மலையாளம் – ஹிந்திப்
படங்கள் Videoவில் வாடகைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்.

London Video's

**359, London Road, Croydon,
Surrey CR0 3PB.
Tel: 020 8239 8806
Fax: 020 8240 0401**

"இந்தியாவில் எழுதப்பட்ட காமசூத்ரா ஒரு கலவிக்கல்வியாகத்தான் சொல்லப்பட்டது. அதில் ஆபாசமில்லை! ஆனால் செயற்கை கோள் மூலம் தனியார் தொலைக்காட்சிகள் சில தரங்கெட்ட ஆங்கிலப் படங்களை ஒளிபரப்பி ஆபாச அலையை ஏற்படுத்தி வருகிறது. எம்.டி.வி. போன்றவற்றைத் தடைசெய்ய வேண்டும்.

இலங்கையில் இந்த வசதி இல்லைதான். ஆனாலும் அதை ஒளிபரப்புச் செய்யும் ஆப்பரேட்டர்கள் அந்த மாதிரி காட்சிகள் வரும்போது அழகிய கார்ட்டூன் ஸ்டில்களை வைத்துவிடுவார்கள். அப்படிப்பட்ட சமூக அக்கறை வர வேண்டும்."



இலங்கை வானொலி என்ற ***பல்கலைக்கழகத்திலிருந்து*** வெளியேறும் ***பட்டதாரிகள்*** ஏராளம். இவர்கள் கையில் சான்றிதழ் இருப்பதில்லை. ஆனால் மனதில் ஒரு நிறைவும் வார்த்தையில் ஒரு தெளிவும் இருக்கும். அவர்களின் தயாரிப்புகளில் ஒரு அனுபவ முத்திரை பளிச்சிடும்.

மருத்துவக் கல்லூரியில் ஒன்றாகப் பட்டம் பெற்ற டாக்டர்களில் ஒருவர் தனது கிராமத்தில் டிஸ்பென்சரி மருந்தகம் நடத்துவார். மற்றவர் சவூதி அரேபிய மன்னரின் அந்தரங்க மருத்துவராக கோடி கோடி றியால்களை சம்பாதிப்பார். இதேபோல அறிவிப்பாளர்களில் பயிற்சி பெற்று வெளியேறும் அனைவரும் சாதனைகளைப் புரிவதுமில்லை, வாய்ப்புகள் கிட்டுவதுமில்லை.

என் நண்பர் பீ.எச். அப்துல் ஹமீத் இலங்கை வானொலியில் எனது சம காலத்தவர். இன்று பல சிகரங்களைத் தொட்டவர். ஆனாலும் 60களில் நான் முதன் முதலாக கண்ட அன்பு சொட்டும், மரியாதை வழங்கும் இளைஞன் ஹமீத்தைத்தான் நான் நேற்றும் கண்டேன். இன்றும் காண்கிறேன்.

வாழ்க்கையின் ஏற்றங்களிலும், இறக்கங்களிலும், நண்பர்களுடன், சகாக்களுடன் உறவுகளில் மாற்றம் எதுவும் காட்டாதவர். மாற்றம் காட்டத் தெரியாதவர் நண்பர் ஹமீத். அவரது இந்தக் குணம் தான் அவரது வெற்றியின் அத்திவாரமாக, ஆணிவேராக அமைந்து அவரைஇறுக்கமாக உயர்த்தி வைத்துள்ளது.



முஸ்லீம்கள் என்றால் தமிழ் சரியாகப் பேசத்தெரியாதவர்கள் என்ற கருத்து. அறுபதுகளின் பிற்பகுதியில் ஆழமாகப் பதிந்திருந்த காலத்தில் முஸ்லீம் இளைஞர்கள் இருவர் துரவ நட்சத்திரங்கள் போல சுர்ரென மண்ணிலிருந்து புறப்பட்டு விண்ணில் நின்று கண் சிமிட்டினார்கள். ஒருவர் கொழும்பு பத்திலிருந்து கோடம் பாக்கம் வரை தன் தமிழ் மொழியால் அரங்கேறிய நண்பர் ஹமீத். மற்றவரும் எனது சகா சட்டக்கல்லூரி நண்பர் அமரர் அஷ்ரப். தமிழ் பேச்சுப் போட்டிகளில் சட்டக்கல்லூரி தங்கப்பதக்கம் பெற்றவர். பிற்காலத்தில் இலங்கை அமைச்சர்.

கர்வம் மிக்க தமிழர்கள் பலரின் கருத்துக்களை உடைத் தெறிந்து சாதனைகள் பல படைத்த ஹமீத், நாளொரு நிகழ்ச்சியும் பொழுதொரு பாராட்டுமாக வளர்ந்து உச்சிக்கே சென்று விட்டார்.

கடந்தஆண்டு ஐ.பி.சி வானொலியில் ***மனதைத் திறவுங்கள்*** என்ற எனது நிகழ்ச்சியில் நேரில் வந்து கலந்து என்னை மகிழ்வித்ததோடு ஜரோப்பா வாழ், ஜரோப்பிய நேயர்கள் நூற்றுக்கணக்கானோரையும் சிரிக்க வைத்தார். திருப்திப் படுத்தினார். அவரது பாராட்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

தனது ஆரம்பகால நண்பர்களையும், தனது உயர்வுக்கு ஏணியாக அமைந்த நேயர்களையும் அன்றுபோல இன்றும் கௌரவித்து அன்பால் பிணைந்து நிற்கும் பீ.எச். அப்துல் ஹமீத், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சி மலர்.

குறிஞ்சி மலர்

- விமல் சொக்கநாதன் -

வானொலி நிகழ்ச்சிகளின் மீதான ஆர்வம்...

"நாடகங்களிலும், வித்தியாசமான பரீட்சார்த்தமான நிகழ்ச்சிக் கோவை களைத் தயார் செய்வதிலும் தான் என் ஆர்வம் அதிகமாக இருந்தது.

இசைக்கோலம், இசையும், கதையும் போன்ற நிகழ்ச்சிகள் தான் அதற்கான ஆரம்பம். ஜெமினி கணேஷ், ஸ்ரீவித்யா போன்றவர்களின் பிரபலமான சினிமா வசனங்களைச் சேர்த்து நாடகம் மாதிரி ஒலிபரப்பினேன். இது நேயர்கள் மத்தியில் மிகப்பெரிய ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. 'உண்மையாகவே இந்த நடிகர்கள் பேசினார்களோ' என்று அதிசயமடைந்தார்கள்.

மீனவர்களுடனான வாழ்க்கையை நானும் வாழ்ந்தேன். வாரக்கணக்கில் அவர்களோடு தங்கி, கடல் பயணத்திலும் கலந்துகொண்டு, அவர்கள் வலை பிரிக்கும் போதும், மீனுக்கு வீசும் போதும், இன்னும் பல்வேறு மீனவ சூழ்நிலைகளிலும் அவர்கள் பாடும் பாடலைப் பதிவுசெய்து கூடுதல் இசை எதுவும் சேர்க்காமல் ஒலிபரப்பினேன்.

ரொம்பவும் அற்புதமான பாடல்கள் அவை. விளம்பரப்படுத்தும் பொருளுக் கேற்ப உலக நடப்புக்களையும் சேர்த்து விளம்பரப் படுத்தும் யுக்தியைக் கொண்டுவந்தேன்.

வானொலி விளம்பரங்களுக்கான புதிய பரிமாணங்களின் ஆரம்பம் இலங்கை வானொலிதான். எந்த விதத்திலும் நிகழ்ச்சி தொய்வடைந்து விடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்தேன். இப்பவும் கூட, நிர்வாகம் சார்ந்த துறைகளுக்கு மாறுமாறு அழைப்புகள் எனக்கு வருகின்றன. எனக்கு அதில் விருப்பமில்லை. கடைசிவரை நேயர்களுடனான தொடர்பை இழந்துவிடக் கூடாது என்று நான் நினைக்கிறேன். எனக்கு கலைஞனாக இருக்கத்தான் ஆசை."



எங்கும் தமிழ் முழங்கும் தங்க தமிழ் சங்கு எங்கள் அன்பு ஒலிபரப்பாளன்
பி.எச்.அப்துல்ஹமீட் அவர்களுக்கு என் இனிய வாழ்த்துக்கள்.

கொஞ்சநேரம் என் இமைகளை மூடிக்கொள்கிறேன்
நினைவுத்திரைகளில் படிந்தவற்றை பதித்துப்பார்க்கிறேன்.

உங்கள் பார்வைக்கு அதனை அனுப்பிவைக்கிறேன்.
கிட்ட இருந்து வாழ்த்தவில்லையாயினும், எட்டியிருந்து வாழ்த்துகிறேன்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

புகழுக்கு புதுமாலை தந்தவன் நீ ஒலி
அகலுக்கு திரியென நின்றவன் நீ
திரை தமிழுக்கு தாயுமானவன் நீ முழு
நிலவென வான்கண்டவனும் நீ
உன மதம் எல்லாம் அன்பின் வழியேதான்
உன் வேதமெல்லாம் புதுகவி மொழிதான் - நீ
நாடியதெல்லாம் ஓங்கு புகழ் ஒன்று தான்
என்மனம் பூரித்து நிற்பதெல்லாம் வாழ்த்து மடல் தூவத்தான்



உவமைக்கு உவமையானவன் நீ
புதுமைக்கு புதுமை என்றானவன் நீ
திறமைக்கு தந்த சிம்மாசனத்தையே என்றென்றும்
உனதாக்கிக்கொண்டவன் நீ

திரைத்துறை சார்ந்தோர்க்கு நீ ஒரு கலைக்களஞ்சியம்
ஒலித்துறை சார்ந்தோர்க்கு நீ ஒரு பயிற்சி கூடம்
உன்குரல் கேட்டால் உலகம் மயங்கும்
உன் இயற்றமிழ் நடைகேட்டால்
தமிழ் அன்னை மனம்மகிழ்வாள்

காலமெல்லாம் கருத்துடனே செயலாற்றினாய்
கருத்தெழில் கோலமெல்லாம் தமிழ் என்றே பறைசாற்றினாய்
வானொலியின் வரலாற்றில் நீயும் ஒரு மைல்கல் என்றெண்ணும்போது
எனக்குள்ளே எழகின்றதே பூரிப்பு
மடி:மனது உடல்:ஊன் எல்லாம் மகிழ்ச்சியில் கனக்கிறது.
ஒலி அலையில் உல்லாச பவனி வரும் உன்னத கலைமகனே
நம்மவருக்கு புகழ் சேர்க்கும் உலக ஒலிபரப்பாளனே
உன் பணி மேலும் சிறக்க வாழ்த்தும் இந்நேரம்
ஒன்று சொல்லி விடைபெறுகிறேன்



"தங்கு தடையின்றி எங்கும் தமிழ் முழங்கும் தங்க தமிழ் சங்கே
வெற்றி வெற்றி வெற்றியென்றே முழங்கு"

ஒலி அலையில் உன்னோடு பயணித்துக்கொண்டிருப்பவள்

ராஜேஸ்வரி சண்முகம்

ரேடியோவும் டெலிவிஷனும்...

"டெலிவிஷன் வந்ததால் வீடுகளில் வானொலி மறுக்கப்பட்டு விடவில்லை. ரேடியோவை அழிக்கவும் முடியாது. டெலிவிஷன் துறையினர் கோபித்துக் கொள்ளக் கூடாது. டி.வி.யால் மக்களின் பொழுது வீணாகிறது. காரணம் – டி.வி. பார்க்க வேண்டுமென்றால் எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு எதிரில் உட்கார்ந்தால்தான் முடியும். ஆனால், ரேடியோ அப்படி இல்லை. அது ஒரு மூலையில் உங்களைத் தொந்தரவு பண்ணாமல் என்னவாவது சொல்லிக் கொண்டே இருக்கும். நீங்கள் காதில் மட்டும் வாங்கிக்கொண்டே பல் தேய்க்கலாம். குளிக்கலாம், உடை மாற்றலாம், சாப்பிடலாம்... இந்த வசதி டி.வி.யில் இல்லை. பலநேரங்களில் காட்சிகள் இல்லாமல் தகவல் பெற்றுக் கொள்வது மட்டும் சுலபம், பயனுள்ளதும் கூட என்பதால், இந்த வசதியை ரேடியோவில் மட்டும்தான் தரமுடியும் என்பதால் தான் ரேடியோவை யாரும் மறுக்க முடியாது என்கிறேன்."

சிம்மக் குரலோன்
பீ. எச். அப்துல்ஹமீத் அவர்களுக்கு
எமது வாழ்த்துக்கள்

சினமன் காட்டன்ஸ்

எங்கும் காணாத
எல்லா வசதிகளும் நிறைந்த
எல்லா உணவு வகைகளுக்கும் – பானங்களுக்கும்
ஏற்ற நிறைவான உணவகம்

நண்பர்கள் – குடும்பத்தவர்கள் – உறவினர்கள் சகிதம்
உணவுவகைகள் சுவைக்க உகந்த இடம்.

120 இருக்கைகள் உடைய அழகு நிறைந்த உணவகம்

திருமண விருந்துபசாரம் நடாத்திட ஏற்றதோர் இடம்.

புதிய நிர்வாகத்தில்

CINNAMON GARDENS

புதிய நிர்வாகத்தில்
Under New Management

42-44 Ealing Road,
Wembleu, Middix
Tel & Fax: 020 8902 0660
Mobile: 07956 832 633

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

மதிப்புக்குரிய அப்துல் ஹமீத் அவர்கள்

தமிழ் ஒலிபரப்புக் துறையின் ஒரு தனி மனித ஆளமை, ஒரு துறைசார் நிபுணன்.

ஒலிபரப்புத் துறை நுணக்கங்கள் தெரிந்த பொக்கிம் குரல் வளம், மொழி வளம், வித்தகத் தன்மை கொண்ட சிறந்த ஒலிபரப்பாளர்.

இவரது பணிகள் மேன்மேலும் சிறக்கவும் தொளுவும் எமது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - தமிழ் -
இலண்டன்

பாதிப்புகள்...

"மனதில் ஆழமாகப் பதியும் சம்பவங்கள், அதனால் நமக்குள் ஏற்படும் மாற்றங்கள் என்று இதை எடுத்துக் கொள்ளலாம். பத்திரிகைகள் எனக்குள் எந்தவிதமான ஆதிக்கமும் செலுத்தியது இல்லை. அதேபோல சினிமாவும், 'ரம்பா எழுந்து குளித்தார்கள். காலையில் சாப்பிட்டார்கள்' போன்ற செய்திகள் பத்திரிகைகளில் வரும்போது லேசாக ஒரு வருத்தம் தோன்றும். இந்த மாதிரி செய்திகள் நமக்குக் கிடைப்பதால் ஏற்படும் பயன்கள் என்ன? என்று யோசிப்பது உண்டு.

புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், தி. ஜானகிராமன் ஆகியோரின் கதைகளில் என்னை இழந்திருக்கிறேன். ஒரு நீண்டகால அனுபவத்தில் இலங்கைத் தமிழர்களின் சிக்கலான அரசியல் விவகாரம் என்னைப் பாதித்திருக்கிறது. இலங்கையை 'பேரடைஸ்' என்று சொல்வார்கள். அது ஒரு காலம். எண்பத்து மூன்றில் நடந்த தமிழர் – சிங்களவர் இனக்கலவரம் 'யாரோ போட்ட விதை!'.

இலங்கையிலிருந்து நாங்கள் ஏற்றுமதி செய்வதற்கு நிறையப் பொருட்கள் இருந்தன, இருக்கின்றன. ஆனால், எங்கள் தேசத்தில் ஆயுதங்கள் மட்டும்தான் இறக்குமதி ஆகின்றன. இதற்குச் சமமான வேதனை என் சமகால நண்பர், வானொலி அறிவிப்பாளர் கே.எஸ். ராஜாவின் இறப்பில் இருந்தது. ஒரு நாள் அதிகாலை கடற்கரையில் அவருடைய உடல் கிடைத்தது. மரண விசாரணையில் சயனைட் சாப்பிட்டு இறந்து போனதாகச் சொன்னார்கள். அதற்கு முன்பே அவர் வாழ்க்கையில சந்தித்த வலிமிகுந்த நாட்கள் ஏராளம். துரதிர்ஷ்டவசமாக எல்லாவற்றையும் அவராகவே தேடிக் கொண்டார். 'எந்தக் காலத்தில் வாழ்ந்தாலும் அந்தச் சூழ்நிலையில் இளைய தலைமுறையினரின் ரசிப்புத் தன்மை பக்கம் நில்!' என்னும் விஷயத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தவர் அவர்".

காலங்கள் தோறும் காதுகளில் இனிக்கும்
காந்தர்வக் குரலோன் அப்துல் ஹமீத்
அவர்களே வாழ்த்துக்கள்!

கற்பகம்

பல்பொருள் அங்காடி

கடையில் பொருட்கள் வாங்கவேண்டுமா?
கற்பகம் வரவேற்கின்றது.

கடல் உணவுப் பொருட்களுடன் மரக்கறிகள்
கற்பகம் பல்பொருள் அங்காடியில் மலிவு விலையில்

கானங்கள் கேட்க Audio CD - Cassette
காட்சிகள் காண VCD - DVD
கதை பேச தொலைபேசி அட்டைகள்
கற்பகம் மலிவுக்கும் தரத்திற்கும் மறுபெயர்

KATPAKAM

CASH & CARRY

**36, Loampit Hill,
Lewisham,
London SE13 7SW.
Tel: 020 8694 8810**

வானொலிக் கலைஞர்களில் சீனமதில்போல் எல்லை



உச்சரிப்பில் பாலூற்றி ஒலிபரப்பில் தேனூற்றி
இச்சகத்தில் உரையாற்றும் ஏந்தலென்பார் அப்துல் ஹமீத்

கார்மேகம் கண்டுவிட்டால் களித்து மயிலாடும் - உன்
பேர்மேகம் ஒலிபரப்பில் பெருவெள்ளம் போட்டு விடும்

உணவும் மறந்திடுவார் உறவும் மறந்நிடுவார்
பணியும் மறந்திடுவார் பசுந்தமிழில் உரை கேட்போர்

அன்புத் தமிழ்த்தாய் அடிவைத்த நிலமலைத்தும்
உன்புகழின் தென்றல் ஒலிகேட்டு அதில் மிதந்தோம்

பாடல்களின் வேரறிவாய் பாடியவர் இயற்றியவர்
மேடையிலே அகராதி விரித்திடுவாய் கருத்தோடு

வானொலிக் கலைஞர்களின் வரிசையிலே தமிழ் உலகில்
சீனமதில் போல் எல்லை, சிறப்புக்கோர் திருவிளக்கு

வீட்டில் கிடந்து வெதும்பிவந்த நறுமலர்கள்
பூட்டை உடைத்துப் புதுமேடை ஏற்றிவைத்தாய்

கலையின் கிளை அனைத்தும் கருத்தாக நீதடவி
அலைந்து மலர்கொய்து அரியணையில் ஏற்றிவைத்தாய்

நிலைகுலைந்த நம்நாட்டின் நெஞ்சினிலே பால்வார்த்த
தலைவர் வரிசையிலே தமிழ்இசையின் வள்ளல் ஐயா?

எத்தனையோ வெள்ளிகளை இனங்கண்டு அணைத்துவந்த
சித்தத்தில் உறுதிகொண்ட செய்மதியும் நீதானோ?

மாற்றாரும் போற்றுகின்ற மாணிக்கப் பெட்டகமே!
காற்றுக்கும் சுவைதந்த கனித்தமிழின் சித்திரமே!

வாழுகவே பல்லாண்டு வானொலியின் யாழிசைபோல்
நாளெல்லாம் சேவையெண்ணி நாண்மலர்கள் தூவுகின்றோம்

'தமிழ்க் கங்கை'
செவாலியர்
இளவாலை அமுது

சினிமா அனுபவம்

"கோமாளிகள் என்ற என்னுடைய நகைச்சுவைத் தொடர் நாடகத்தை 'கோமாளிகள் கும்மாளம்' என்று படமாகப் பண்ணினோம். இலங்கையில் எடுக்கப்பட்டு வெற்றிகரமாக ஓடிய முதல் திரைப்படம் அது. தொண்ணூற்று ஏழு நாட்கள் ஒரே தியேட்டரில் ஓடியது. இன்னும் மூன்று நாட்கள் ஓடியிருக்கும். அதற்குள் எம்.ஜி.ஆரின் புதுப்படம் ஒன்று ரிலீசாகிவிட்டது."



அப்துல் ஹமீத்திற்கு... அன்போடு ஒரு வாழ்த்து!

தப்பில்லாத தமிழ்தனைப் பேசித்
தனித்துவக் குரலாற் தமிழுடன் வாழும்
அப்துல் ஹமீத்தை அன்புடன் வாழ்த்தும்
அரும்பணி தந்த ஐ.பி.சி. ராஜனே!

இப்பொழுதெல்லாம் இனிக்கும் தமிழ்தனை
எம்மவர் ஊடகமொன்றினிற் கேட்பது
அற்புதமான அனுபவ மென்பேன்!
அன்றொடு எமது ஆற்றல்கள் யாவும்

கப்பலில் ஏறி விட்டதோ வென்று
கவலை கொள்வோருடன் நிற்பவன் நானுமே!
எப்படி யெக்கலை யாற்றுவ தென்ற
இயல்புடன் இலக்கணம் காட்டுவோர் சிலரே!

அத்தகையோரின் அனுபவ வரிசையில்
அப்துல் ஹமீத்தை நம்மவர் அறிவர்!
முத்தென வார்த்தைகள்; மொழியிற் கம்பீரம்
கொட்டிடும் தமிழைக் கோர்த்திடும் ஆளுமை!

பத்தையும் அறிந்து பகிர்ந்திடும் அறிவு!
பார்ப்பவர் கேட்பவர் பலரை ஈர்க்கும்
வித்துவம் அனைத்தும் விளங்கிடும் கலைஞராம்
அப்துல் ஹமீத்தை அணைப்பதெம் கடனே!

வானலை வழியே வந்திடும் ஓசை
வாசலில் நின்று மீள்வது அல்ல!
கானமாய்க் கருத்தாய்க் கவிதையாய்க் கலையாய்
நேயரின் வாழ்வில் நெருக்கமாய் இணைவது!

ஏனெது வென்று எதிர்க்கணை தொடுப்போர்
வாதிடும் படியாய் சொற்களம் அமைப்பது!
ஆனது கூறி அடுத்தது யாதெனும்
ஆதங்கம் தந்து வானரங்கமைப்பது!

ஊர் நடப்பறியவும் உலகினைப் புரியவும்
தேசத்தின் நிகழ்வுகள் தெளிவாகத் தெரியவும்
தார்மீகத்தோடு தர்மத்தின் குரலாய்
வாசலைத் திறந்து வந்துள்ளே சேர்வது!

யார் தடுத்தாலும் தடைகளை யுடைப்பது!
யாகத்தின் தீயாய் நீதியை வளர்ப்பது!
பாரினில் உண்மை பலத்துடன் நிமிரப்
பக்கத்தில் நின்று வாசகம் உரைப்பது!

தனித்துவர் வாழ்விலும் தங்க பஷ்பமாய்த்
தைரியம் கொடுத்து நிமிர்ந்திட வைப்பது!
மனித்துவம் என்ற மாநதிக் கிளையாய்ப்
பயிர்களை நனைக்கும் பலம் வாய்ந்த நீரிது!

இனிப்பதை மட்டும் உரைப்பது அல்ல!
இதயத்துச் சுமைகளைப் பகிர்ந்திட வல்லது!
கணிப்புகள் தகவல்கள் அனைத்தையும் திரட்டிக்
களஞ்சியமாக்கிக் காதினிற் தருவது!

இத்தகை பொறுப்புடை ஊடகப் பணியில்
இருப்பவர் தேசத்தின் இணையற்ற தூண்களாம்!
பற்றுடன் தம்பணி யாற்றிடும் வானொலிப்
பரப்பினர் வரிசையை வாழ்த்திடல் கடமையே!

அப்புக்குட்டி ராமதாஸ் இவருடன்
அப்துல் ஹமீத்தை அரங்கினிற் கண்டு
பக்கத்திருந்த பலரையும் மறந்து
பல்சுவையுண்டேன் லண்டனில் ஒருமுறை!

அப்படியிருந்தது இவர்கள் நாடகச்சுவை!
அப்துல் ஹமீத்தின் அழகுறு தமிழ்ச்சுவை!
விற்பனராகி வியத்தகு கலையினால்
விருந்தினைத் தந்து மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்!

உணர்ச்சி மிகுதியால் உடனேயொருசில
உண்மை வரிகளைச் சுடச்சுட வெழுதி
அவைக்குப் பின்னே சென்று அவர்களின்
முன்னே பாடி முழுதாய் வாழ்த்தினேன்!

இலங்கை வானொலி ஈன்ற கலைஞர்கள்
இதய மேடையில் உலவிய கலைஞர்கள்!
அரங்கில் நின்று பாடியும் நடித்தும்
அனைத்துப் பேரையும் ஈர்த்த கலைஞர்கள்!

அவர்கள் வரிசையில் அணிவகுத்தெழுந்த
அருமைக் கலைஞர் அப்துல் ஹமீத்தை
உலகத் தமிழின் கலையக நண்பர்
உளமுவந் தணைத்துப் புகழுதல் நன்றே!

இவரது குரலில் எழுந்திடும் தமிழை
இளையவர் கேட்டு இன்புறவோடு
தவழ்ந்திடும் அலையிற் தாங்களும் இணைந்து
தமிழதன் ஓசை பரப்பில் நன்றே!

வாழிய அப்துல் ஹமீத் எனும் கலைஞன்!
வாழிய தமிழர் வானொலி யோசை!
வாழிய கலைஞர் வாழ்வினைப் போற்றி
வாழ்பவர் என்றே வாழ்த்தி நின்றேனே!

- அன்புடன்
புலவர் சிவநாதன்

நெகிழ வைத்த சம்பவம்...

"எண்பத்து மூன்றாம் ஆண்டு நடந்த கலவரத்தில் என்னைக் கொலை செய்துவிட்டார்கள் என்று வதந்தி பரவியது. என் குடும்பத்தைப் பாதுகாக்கும் வேலைகளில் இருந்ததால் மூன்று தினங்கள் வானொலியிலும் என் குரல் ஒலிக்கவில்லை. உலகம் முழுவதிலும் என் மீது அபிமானமுடை யவர்கள் துயரத்தோடு ஆலயங்களில் பிரார்த்தனை பண்ணி யிருக்கிறார்கள். தொலைபேசி மூலமும், கடிதங்களிலும் இரசிகர் இதயங்கள் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தன.

கடைசியாக வானொலி நிலை யத்தினர் என்னைத் தேடிப்பிடித்து இழுத்துக் கொண்டுபோய், 'நான் தான் அப்துல் ஹமீத் பேசுகிறேன்' என்று சிறப்புச் செய்தி ஒன்றைப் படிக்க வைத்து எல்லோரையும் சமாதானப் படுத்தினார்கள். முகம் தெரியாத நண்பர்கள் உலகம் முழுவதிலுமிருந்து என்மீது காட்டிய அன்பு மறக்க முடியாதது."

அன்பு அறிவிப்பாளர்
அப்துல் ஹமீத் அவர்களின்
கலைப்பணி மென்மேலும் தொடர்ந்திட வாழ்த்துகின்றோம்.

UPS LINKK

உங்கள் சொத்துக்கள் தொடர்பாக
உங்கள் கேள்விகள் அனைத்துக்கும்
பதிலும் தீர்வும் கிடைக்குமிடம்.

வீடு – கடை வாங்க மோட்கேச்
உங்கள் பக்கத்தில் வழங்கக்கூடிய
தஸ்தாவேஜிகள் இல்லையா?
கவலை வேண்டாம் **UPS LINKK** இடம்
உங்கள் பிரச்சினையை எடுத்துக் கூறுங்கள்.
குறைந்த வட்டியில் இலகுவாகக்
கடன் பெற்றுத் தருவோம்.

இலங்கை – இந்தியா – சிங்கப்பூரில்
சொத்துக்கள் வாங்க விரும்புகின்றீர்களா?
வேறு நாடுகளிலிந்து இங்கிலாந்தில்
சொத்துக்கள் வாங்கப் போகின்றீர்களா?
ஆலோசனை, மோட்கேச் அனைத்தும் செய்துதரப்படுகிறது.

UPS LINKK

113, Loampit Vale,
Lewisham,
London SE13 7TG.
Tel: 020 8472 2222

241,HighStreet North,
Manor Park Eatham,
London E12 6SJ.
Tel: 020 8694 6600

www.upslinkk.com

36081

'ஹமீத்' என்றால் புகழுக்குரியவர் என்று பொருள்

- அப்துல் ஜப்பார் -

"ஆத்மார்த்தம்" மலையாள மொழியில் அதிகம் புழக்கத்திலுள்ள சொல். தமிழில் அவ்வாறில்லை. ஒருவேளை நம்மில் பலருக்கு அது இல்லை என்பது காரணமாக இருக்கலாம். இதைத் தமிழில் சொல்வதானால்... 'உளமாற...' என்று சொல்லலாம். இதற்கு பொருளோ உதாரணமோ தேவை என்றால் வேறு எங்கும் போகவேண்டியதில்லை. அதாவது பீ.எச். அப்துல் ஹமீத் என்கிற மனிதரை உங்களுக்குத் தெரியுமென்றால்! எனக்குந் தெரியும். அதிலும் நன்றாகத் தெரியும். எதிலும் ஆத்மார்த்தம் அதாவது உளமார்ந்த ஈடுபாடு என்பது அவரது தனி முத்திரை.

1962ல் நான் இலங்கை வானொலியை விட்டும் ஏன் இலங்கையையும் விட்டும் வெளியேறிய தருணத்தில்தான் அவர் இலங்கை வானொலியில் உள் நுழைகிறார் - ஒரு சிறுவனாக!

43 ஆண்டுகள் அயராத உழைப்பு - அசையாத தன்னம்பிக்கை - அசாத்திய திறமை அத்தனையும் அணிகலனாகக் கொண்டு உலக அரங்கில் - ஒலி - ஒளிபரப்புத் துறைகளில் உயர்ந்து நிற்கிறார் - பெரிய மனிதனாக!

27 வருடங்களுக்குப் பிறகு நான் இலங்கை சென்றபோதுதான், இவரை முதன் முதலாக நேரில் சந்திக்கிறேன். தன் இடுப்பளவு கையை உயர்த்தி "நான் இந்த உயரம் இருக்கும் போதே உங்கள் ரசிகன்" என்கிறார். நான் என் தலைக்குமேல் கையை உயர்த்தி "நான் இந்த அளவுக்கு வந்துவிட்ட பின்னும் உங்கள் ரசிகன்" என்கிறேன். உண்மை அதுதான். கலை - இலக்கியம் - விளையாட்டு - அரசியல் என்று நான் தொட்டுப்பார்க்காத துறைகள் இல்லை. அதுவும் குறிப்பாக இந்த 55 வருட ஒலிபரப்பு வாழ்க்கையில் எல்லாவற்றிலும் என் பங்கைச் சிறப்பாக ஆற்றியிருப்பதாகவே நினைக்கிறேன். எனக்குக் கிடைக்க வேண்டிய அங்கீகாரங்களும் கிடைத்துள்ளதாகவே திருப்தியும் காண்கிறேன்.

ஆனால் பீ.எச். அப்படி நினைக்கவில்லை. நான் இதைவிட எத்தனையோ சாதித்திருக்க வேண்டும் - சாதித்திருக்க முடியும் - அதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தால் - என்று எப்போதும் நினைக்கிறார்.

லண்டன் ஐ.பி.சி. - தமிழ் வானொலி, தீபம் தொலைக்காட்சி, கனடா தமிழோசை வானொலி ஆகிய மூன்றுடனும் எனக்குள்ள நெருக்கமான தொடர்பின் மூலத்தை ஆராய்ந்தால் அங்கே, அறிமுகம் - அப்துல் ஹமீது என்றிருக்கும்! வானலைகளில் என் பங்களிப்புத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதில் என்னை விடவும் அவருக்கு ஆர்வம் அதிகம். அந்த அன்பை என்னென்பேன்!

அத்துடன் விட்டாரா? - இல்லை. இன்றும், "மேற்கில் ஒரு தொலைக்காட்சியைத் திட்டமிடுகிறார்கள். அவர்கள் என்னைக் கேட்டார்கள். நான் உங்களைச் சொல்லி இருக்கிறேன். கிழக்கில் ஒரு வானொலி துவங்க நினைக்கும் சிலர் என் உதவி வேண்டும் என்கிறார்கள். நான் உங்களைப் பரிந்துரைத்திருக்கிறேன்" என்பார். ஒப்புக்குச் சொல்கிறார் என்கிறீர்களா அதுதான் இல்லை. ஒருவர் திடீரென்று ஒருநாள் தொலைபேசியில் தொடர்பு கொள்வார். அது நடந்துவிடும்.

27 ஆண்டுகளுக்குப் பின் நான் 1979ல் மீண்டும் இலங்கைக்குச் சென்றபோது எனக்கென ஒரு நாடகத்தை எழுதவைத்து, தயாரித்து, தானும் என்னுடன் நடித்து என்னைக் கௌரவித்தார்.

1993ல் இலங்கை அரசின் கலாசார அமைச்சு எனக்கும் அவருக்கும் ஒருசேர விருது தந்து கௌரவிக்கத் தீர்மானித்து. விருது பெறும் மேடையிலேயே நாங்கள் இருவரும் சேர்ந்து ஒரு கலைநிகழ்ச்சியை வழங்கினால் நன்றாக இருக்கும் என்று விழா ஏற்பாட்டாளர்கள் ஓர் ஆசையை வெளியிட்டார்கள்.

79ல் ஒலிபரப்பப்பட்ட "ஆக்ராவின் கண்ணீர்" என்கிற அந்த நாடகத்தைத் தூசுதட்டி எடுத்தார். அதில் நான் அக்பர், அவர் சலீம். உருவப் பொருத்தம்

ஆரம்பகாலங்களில் கல்வி, தகவல், பொழுதுபோக்கு (Education, Information, Entertainment) என்பன ஒன்றோடொன்று கலந்த நிகழ்ச்சி களே அதிகம் நேயர் களுக்காக வழங்கப்பட்டன. தேசிய வானொ லியில் நாம் கூட அப்படித்தான் பயின்றோம். பின்வந்த வர்களையும் அப்படித் தான் பயிற்றுவித்தோம்.

படிப்படியாக இந்த நிலைமை மாறிப்போய் கல்வி என்பது பின்தள்ளப்பட்டு... கடை நிலைக்கு வந்து வெறும் பொழுது போக்கு அம்சங்களைக் கொண்டதாகவே ஒலிபரப்புத்துறை மாறியிருக்கின்றது. தனியார் வானொலிகளில் இந் நிலைமைகளை நாம் இன்று அதிகம் காணலாம். அங்கே தகவல் என்கிற அம்சம் கூட இருப்பதாகவும் தெரியவில்லை. எல்லாமே கேளிக்கை என்றாகிவிட்டது.

வானொலி நேயர்களை எடுத்த எடுப்பில் கவரவேண்டும் என்பதற்காக புதியபாணி என்று சொல்லிக் கொண்டு கொச்சைத் தமிழில் பேசுவது, மரபுகளை மீறிச் செயற்படுவதும் ஆரோக்கியமான ஒலிபரப்புத் துறைக்கு உகந்ததல்ல.

மரபுகள் மீறப்படும் போதுதான் புதிய அலை... புதிய கலைவடிவம் பிறக்கலாம் என்பது உண்மைதான். மீறுவதற்கு முதலில் மரபுகளைத் தெரிந்திருக்க வேண்டும். மரபுக் கவிதையை மீறிய போதுதான் புதுக்கவிதை பிறந்ததென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்ற போது, ஒலிபரப்பாளர்களும் எதை மீறுவது என்கிற இலக்கைத் தெரிந்திருக்க வேண்டுமே... அடிப் படையைத் தெரியாமல் எப்படி மீறி விட்டோமென்று சொல்வது? இந் நிலைமையில்தான் இன்று அதிகம் தனியார் ஒலிபரப்பாளர்கள் இயங்கிக் கொண்டிருப்பது தெரிகிறது. குழம்பிப் போயிருக்கிறார்கள்.

வானொலியின் சக்தியை அறிந்து
வாழ்வை அதனோடு இணைத்து
வருடங்கள் பலவற்றைக் கடந்து
வருங்காலத்தினர்க்கும் வானொலிக் கலை கற்பித்து
வலம்வரும் அப்துல்ஹமீத் அவர்களே
வளமான தங்கள் சேவைக்கு வாழ்த்துக்கள்!

ராகுல் லண்டன்

ரகம் தெரிந்து
புடவைகள் வரவழைக்கப்பட்டுள்ளன
அவை உங்கள் தெரிவுக்கு
இலகுவாகவுள்ளன

புதிய டிசைன் சேலைகள்
பஞ்சாபிப் பட்டாடைகள்
சேட்ஸ்–ரவுசர்ஸ், சிறுவர் உடைகள்
எல்லாமே எப்போதும்
மலிவு விலையில்

RAHUL LONDON

162B MITCHAM ROAD,
TOOTING, LONDON SW17 9NJ

Tel: 020 8682 1010
Fax: 020 8682 1010
Website:www.rahul-e.co.uk

பற்றிய சந்தேகம் ஒருபுறமிருக்க ஒத்திகை பார்க்கவோ உடைகள் தயார் செய்யவோ, ஏன் ஒப்பனையிடவும் கூட நேரம் இல்லை. ஒரு வானொலி நாடகம் எப்படித் தயாராகிறது என்கிற அறிவிப்புடன் அது மேடை ஏறிற்று. எனக்கு வாய்த்த அற்புதமான பாத்திரங்களுள் அக்பர் பாத்திரமும் ஒன்று.

எனக்கு கேமராவின் முன் நின்றால் என் உருவம் சின்னத்திரையிலோ பெரிய திரையிலோ எவ்வாறு பிரதி பலிக்கும் என்பது இன்றுவரை தெரியாது. ஆனால் ஒலி வாங்கியின் முன் நின்றால் அது ஒலிப்பதிவிலோ அல்லது ஒலிபரப்பிலோ எப்படி வெளிவரும் என்பது எனக்கு நூறு சதவீதம் அத்துபடி. அதிலும் குறிப்பாக நாடகம் நடிக்கும் போது சில ஜகஜ்ஜால சித்து வேலைகளையும் ஜிகினா விளையாட்டுக்களையும் முயன்று பார்ப்பதுண்டு. அதற்கு எனக்கு முழு அளவில் சந்தர்ப்பம் தந்தது அக்பர் பாத்திரம். நாடகம் நிறைவு பெற்றதும் அரங்கமே எழுந்து நின்று தொடர்ச்சியாக ஐந்து நிமிடங்களுக்கு மேல் கைதட்டி மகிழ்ந்தது ஒரு மறக்கமுடியாத அனுபவம். நாடகத் தயாரிப்பில் அப்துல் ஹமீதின் கைவண்ணம் அற்புதமாக வெளியாகியது அன்று.

இவைகள் எல்லாவற்றையும் விட என்னை நன்றிப் பெருக்கால் நிறைவித்த நிகழ்ச்சி ஒன்றுண்டு. பார்வைப் புலன் இழந்த ஒரு நிருபர் ஒரு பெரிய பத்திரிகைக்காக அப்துல் ஹமீத்தை பேட்டி கண்டார். "உலகெங்குமுள்ள தமிழ் ஒலிபரப்பாளர்களுக்குத் தாங்கள் ஒரு முன்னோடியாக ஆதர்ஷபுருஷராக இருக்கிறீர்கள். நீங்கள் முன்மாதிரியாகக் கருதும் உங்கள் 'ரோல் மாடல்' யார்?" என்று கேட்டார்.

அதற்கு பதில் சொன்ன அப்துல் ஹமீது "அவர் உங்கள் மத்தியிலேயே இருக்கிறார்" என்று என்னை விரல் சுட்டிக் காண்பித்த போது ஓர் இன்ப அதிர்ச்சி என்னைத் தாக்க நான் சற்று நேரம் திக்குமுக்காடிப் போனேன்.

எங்கள் நெருக்கத்தைக் கண்டு அதிசயப்படுபவர்களும் இருக்கிறார்கள். கொஞ்சம் அசூசைப்படுபவர்களும் இருக்கிறார்கள். ஒன்றில் நான் தெளிவாக இருக்கிறேன். எங்கள் இருவருக்கும் ஏறக்குறைய ஒரே துறை என்றாலும் அவருடைய புகழையோ செல்வாக்கையோ என் சுய லாபத்துக்காக என்றும் நான் பயன்படுத்திக் கொண்டது கிடையாது. என் எல்லைக் கோடுகளை மிகத் துல்லியமாக வரையறுத்துக் கொண்டு அதற்குள்ளேயே நின்று கொள்கிறேன்.

அவரைப் பற்றிச் சொல்ல வந்த நான் என் சுய தப்பட்டத்தை அடிப்பதாக நீங்கள் நினைத்தால் என்னால் அதற்குப் பதிலொன்றும் சொல்ல முடியாது. என்னிலிருந்தே உதாரணங்கள் தேட நினைத்தேன். அதனால் அப்படி!

அப்துல் ஹமீதைப் போன்ற ஒரு நல்ல கலைஞரை அதைவிட முக்கியமாக ஒரு நல்ல மனிதரைப் போற்றிப் பாராட்டி வாழ்த்திக் கௌரவிக்கும் வாய்ப்பு என் இனிய நண்பர் எஸ்.கே. ராஜெனுக்கும், நண்பர் சுந்தரம் ஸ்ரீக்கும் கிடைத்திருப்பதில் ஓர் உளமார்ந்த பெருமையும் உண்மையைச் சொன்னால் கொஞ்சம் பொறாமையும் ஏற்படுகிறது எனக்கு.

அப்துல் ஹமீது என்றும் புகழுக்கு அடிமைப்பட்டவரல்ல. அவர் பெயரே சொல்வது போல் புகழுக்குரியோனின் அடிமை அவர். அந்தப் புகழுக்குரிய இறைவன் என்றென்றும் அவரைப் புகழோடும் பூரிப்போடும் வைத்திருக்கட்டும்.



அறிவிப்பாளன் என்பதைவிட ஒலிபரப்பாளன் என்பதுதான் பாக்கியம். ஒலிபரப்பு என்பது ஒரு மகத்தான பணி. ஒலிபரப்பாளன் கூறுவதை வயது, பால் வித்தியாச மின்றி எந்த வேளையில் – எந்தச் சூழ்நிலையில் யார் கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. யாரும் கேட்க நேரிடலாம். இங்கே சிறந்ததொரு ஆசிரியனாக இயங்கவேண்டிய பொறுப்பு ஒலிபரப் பாளனுக்கு இருக்கவேண்டும். மனித விழுமியம், கலாசாரம் பேணப்பட வேண்டிய பொறுப்பு.... தமிழ் எனும் போது தூய்மையான அழகிய தமிழில் சொற்களைப் பிரயோகிக்கும் பாங்கு தெரிந்திருக்க வேண்டும். அது சவர்க்கார விளம்பரமாக இருந்தாலும் கூடப் பரவாயில்லை.

முன்பெல்லாம் தேசிய வானொலியில் வர்த்தக ஒலிபரப்பு, தேசிய ஒலிபரப்பு என இருந்த இரண்டு பிரிவுகளில் வர்த்த நோக்கங்களுக்காகப் 15 வீதமான நிகழ்ச்சிகளே தயாரிக்கப்பட்டன. நாம் கூட முழுக்க முழுக்க வர்த்தக ரீதியில் செயற்பட்டவர்களல்லர். ஆனால், இன்றைய தனியார் வானொலிகள் முழுக்க முழுக்க வர்த்தக ரீதியாகவே செயற்படும் கட்டாயத்தில் இருப்பதால், ஒலிபரப்பாளர்களும் புதிய அணுகுமறையென்று சொல்லிக்கொண்டு வித்தியாசம் செய்கிறார்களோ என்னமோ...? அதற்காக ஒலிபரப்பு வரைமுறைகள் மாற்றக்கூடாது. இன்றைக்கு, நாளைக்கு என்றல்ல... ஒலிபரப்பு வரைமுறைகள் என்றைக்கு மாற்றப் படக் கூடாது. இன்றைக்கு, நாளைக்கு என்றல்ல... ஒலிபரப்பு வரைமுறைகள் என்றைக்கும் மாற்றப்படக்கூடாது.

எமக்கு உற்சாகமூட்டி
இசைத்துறையில்
இன்னும் முன்னேறத் தூண்டும்
அன்பு அறிவிப்பாளர் அவர்களுக்கு
இனிய நல்வாழ்த்துக்கள்!

துஷி – தனு
நண்பர்கள் இசைக்குழு

கானக்குயில் நிகழ்ச்சிக்கு
தொடர்ச்சியாக இசை வழங்கிவருவோர்

கானக்குயில்களாகக்
கௌரவிக்கப்பட்டிருப்போர்

எந்த வைபவத்திலும் இனிமையான
இசைநிகழ்ச்சியை வழங்க
துஷி – தனு நண்பர்கள் இசைக்குழு

Thushi - Thanu
&
Friends
Tel: 020 8857 4022

மனிதநேயம் கொண்ட பீ.எச். அப்துல் ஹமீத்

இலங்கையின் மூத்த வானொலி நிறுவனம் இலங்கை வானொலி. ஆம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். இங்கு பயிற்சி பெற்றுப் பணியாற்றிப் புகழீட்டிய அறிவிப்பாளர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள் என்கின்ற கலைஞர்கள் ஏராளம். அவர்கள் உலகின் பலபகுதிகளிலும் இன்று பரந்து வாழ்ந்து வருகின்றார்கள்.

இலங்கையில் மட்டுமல்லாது, இந்தியாவிலும், ஏன் தமிழ் மக்கள் வாழும் உலக நாடுகள் எங்கும் தனக்கென ஒரு தனியிடம் பெற்று ஒலிபரப்புத் துறையில் பிரகாசித்துக் கொண்டிருப்பவர் பீ.எச். அப்துல் ஹமீத். இவர் வானொலியில் மட்டுமல்லாது தொலைக்காட்சியிலும் பெரும் சாதனைகளைப் படைத்தவர்.

நிகழ்ச்சி அறிவிப்பாளர், செய்தி வாசிப்பாளர், மேடை நிகழ்ச்சித் தொகுப்பாளர், வானொலி, திரைப்பட நடிகர், வானொலி நாடகத் தயாரிப்பாளர் எனப் பல முகங்களைக் கொண்டவர்.

நான் வர்த்தகக் கட்டுப்பாட்டாளராக இலங்கை வானொலியில் கடமையாற்றிய காலகட்டத்தில் பல்வேறு விதங்களில் என்னோடு ஒத்துழைத்தவர் பீ.எச். அப்துல் ஹமீத். விளம்பரதாரர் ஒவ்வொருவரும் அப்துல் ஹமீத் குரலிலேயே விளம்பரம் வேண்டும் என்று வருவார்கள். விளம்பரதாரர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய கடமை எமக்கிருந்தது. அந்தவேளைகளில் நிலையத்திற்காக ஹமீத் எம்மோடு மிகச் சிறப்பாக ஒத்துழைத்தார். அதனை என்றென்றும் மறக்கமுடியாது.

பின்னாட்களில் நான் தமிழ்ச்சேவைப் பணிப்பாளராகப் பணியாற்றிய காலங்களில் இவரது நற்பண்புகளை அறியக்கூடியதாக இருந்தது.

ஹமீத் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். மற்றையவர்களை மதித்து நடப்பவர், இவர் ஒரு மனிதநேயம் கொண்ட கனவான் என்றே கூறுவேன்.

1988ம் ஆண்டு ஹமீத் முதன்முதலாக ஐரோப்பிய நாட்டிற்குக் கலைப்பயணம் மேற்கொண்டார். அன்று பாரீஸிலிருந்து இலங்கைக் கலையகம் இவருக்கு அழைப்பு விடுத்திருந்தது.

அன்று, கொழும்பிலே ஒரு வழியனுப்பு விழா நடைபெற்றது. அந்த விழாவில் நான் கலந்து கொண்டு அப்துல் ஹமீத்தை வாழ்த்தினேன்.

இப்பொழுது அவருக்கு இலண்டனில் பாராட்டுவிழா உலகத் தமிழ் கலையகத்தினால் நடாத்தப்படுகின்றது.

இந்த விழாவிலும் கலந்துகொள்ளவே விரும்புகின்றேன்.

காலம் கனிந்திருந்தால் பீ.எச். அப்துல் ஹமீத்தை நேரடியாகவும் வாழ்த்தும் பணியைச் செய்வேன்.

பீ.எச். அப்துல் ஹமீத் இன்னும் பல வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்து நடாத்தி புகழ் பெற்று விளங்க வேண்டும் என வாழ்த்திக் கொள்கின்றேன்.

என். சிவராஜா
முன்னாள் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர்,
முன்னாள் விளம்பரக் கட்டுப்பாட்டாளர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.



விளம்பரங்கள், பாடல்களை ஒலிபரப்புவதில் கூட வரைமுறைகள் இருக்கின்றன. ஒரே மாதிரியான விளம்பரங்கள் – நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து ஒலிபரப்பப்படக் கூடாது. ஒரே பாடல் 48 மணித்தியால நேரத்துக்குள் மீள் ஒலிபரப்புச் செய்யப்படலாகாது. பாடல் ஒலி பரப்பின்போது கூட நேர காலத்துக்கு ஏற்ற மாதிரி... மனித உணர்வுகளில் அறையாத போக்கில்... அதாவது காலை, மாலை, இரவு வேளை களுக்கு ஏற்ற மாதிரியான பாடல்களே ஒலிபரப்பட வேண்டும். தேசிய வானொலியில் முன்பெல்லாம் அப்படி யொரு வரைமுறையிருந்தது. இப் போது நிலைமை தலைகீழ்.

விளம்பரங்களை எடுத்துக் கொள்ளும் போதுகூட, இன்ன நேரத்தில் இன்னதுதான் ஒலி பரப்பப்பட வேண்டும் என்பதே தர்மமானது. மதியம் சாப்பாட்டு வேளையில் சொறி, சிரங்குக்கான மருந்து விளம்பரம் செய்வது நியாயமல்ல. நியாயப்படுத்தினாலும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நவீனம் என்று வரும்போது, மனித மனம் அதன் பக்கம் சாய்வது இயல்பான விசயம். ஒருகாலத்தில் நூதனமாகப்பட்ட வானொலி, இன்று பல்கிப் பெருகி நேயர்களை நெருங்கி வந்திருப்பது நன்மையானதுதான். அதேவேளை ஆயுளைத் தக்க வைத்துக் கொள்வதில்தான் தமிழ் அலை வரிசைகளின் செயற்பாடு கேள்விக்குறியாக இருக்கின்றது."

வானொலி ஒலிபராப்புத்துறையின்
வரலாற்று நாயகனே வாழ்த்துக்கள்

வாரணி கோல்ட்

வானவில்லின் நிறங்கள் மாறுவதில்லை
வாரணி கோல்ட் நகைகளின் தரமும்
மாறுவதில்லை

வாஞ்ஞையான நவீனவடிவ நகைகள்
வனிதையர் விருப்புக்குஏற்ப வழங்குவோர்

VARANY GOLD

5,EALING ROAD

WEMBLEY, MIDDLESEX HA0 4AA

TEL: 020 89 00 16 25

அருமை நண்பனுக்கு

என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்!

எனது அருமை நண்பன் B.H. அப்துல் ஹமீத்துக்கு லண்டனில் மாபெரும் பாராட்டு விழா என்று கேள்விப்பட்டேன். மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். அப்துல் ஹமீத்துக்குக் கிடைக்கும் பாராட்டு விழாக்களில் எனக்கும் பங்கு இருக்கிறது. இலங்கை வானொலி மூலமாக புகழ் அடைந்த அப்துல் ஹமீத், இலங்கை வானொலியில் குரல் ஒலிப்பதற்கு நான் தான் காரணம் என்று பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

அது சுவையான கதை ஒன்று, எனக்கும் ஹமீத்துக்கும் வயது பதினொன்று இருக்கும். இலங்கை வானொலியில் சிறுவர் மலர் நிகழ்ச்சியில் ஒரு தொடர் நாடகத்தில் நான் நடித்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் சுகயீனம் காரணமாக என்னால் சிறுவர் மலர் நிகழ்ச்சிக்குச் செல்ல முடியவில்லை. அன்று என்னுடைய பாத்திரத்தில் நடிப்பதற்கு ஒருவரைத் தேடினார்கள். அனைவரது கண்களிலும் அப்துல் ஹமீத் தென்பட்டார். உடனே அப்துல் ஹமீத்தை அழைத்து ராம்தாஸ் நடித்த பாத்திரத்தில் நீ நடிக்கிறாயா என்று கேட்டார்கள். ஹமீத்தும் ஒப்புக்கொண்டார், தொடர்ந்து ஒரு வருடம் அப்துல் ஹமீத் தான் அந்த பாத்திரத்தில் நடித்தார். அப்துல் ஹமீத் பல பேட்டிகளில் குறிப்பிட்டிருக்கிறார், எனக்கு மிக்க சந்தோஷமாக இருந்தது.

இலங்கை வானொலியில் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் நான் தயாரித்த 'பாட்டுக்குப் பாட்டு' என்ற நிகழ்ச்சி வெற்றியடைய ஒரேகாரணம் அப்துல் ஹமீத்தான். நிகழ்ச்சி அனைத்தும் அவர் கட்டுப்பாட்டின் கீழ்த்தான் நடக்கும். அவ்வளவு திறமைசாலி அவர். எல்லாவற்றையும் விட எனக்கு ஒரு பெருமை இருக்கிறது. கொழும்பில் தயாரிக்கப்பட்ட 'கோமாளிகள்' என்ற திரைப்படத்தில் நான் 'மரிக்கார்' என்ற இஸ்லாமிய பாத்திரமும், அப்துல் ஹமீத் 'ஐயர்' என்ற பாத்திரத்திலும் நடித்தார். அந்தப் படம் தொண்ணூற்று ஏழு நாட்கள் ஒரே தியேட்டரில் தொடர்ந்து ஓடியது என்றால் அந்தப் பெருமை அப்துல் ஹமீத்தையே சாரும்.

அப்துல் ஹமீத் மேலும் பல வெற்றிகள் பெற என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்!

மரிக்கார் எஸ். ராம்தாஸ்

"உலகமெலாம் தமிழோசை ஒலிக்க வேண்டும்!"

"எல்லாவற்றிலும் புதுமைகள் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய தாகமாகவே இருந்திருக்கிறது. ரயிலில் பயணம் செய்வது தான் எனக்குப் பிடிக்கும். 'ரயில் சத்தத்தைக் கூர்ந்து கவனித்திருக்கிறீர்களா? அதில் ஒரு தாளக்கட்டு இருக்கும். இந்தத் தாளக்கட்டுக்கூட ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கும். ரயிலில் போகும்போது வரும் இந்தச் சத்தத்தைப் பதிவுசெய்து, இதற்குத் தகுந்த மாதிரிப் பாடல் எழுத முன்வாருங்கள்...' என்று போட்டியும் நடத்தினேன். அதில் முதலிடம் பெற்ற பாட்டு, ரயில் சத்த தாளத்தோடு வானொலியிலும் ஒலி பரப்பானது. எனக்குப் பெயர் வாங்கித்தந்த நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று".

"இலங்கை வானொலியில் இருபத்தாறு வாரம் ஒரு நாடகம் ஒலிபரப்பினேன். அதில் பங்கேற்ற கலைஞர்கள், யாரும் ஒருவருக்கொருவர் பார்க்காமலேயே... அவரவர்களுக்கான வசனங்களை மட்டும் பேசிவிட்டுப் போகவைத்து, அதை மொத்தமாக்கி நாடகமாக்கினேன். தமிழ்நாட்டு ஜெமினி கணேசன், ஸ்ரீவித்யா போன்றவர்களும் அதில் பேசியிருந்தார்கள். 'ஜெமினியும் ஸ்ரீவித்யாவும் இங்க எப்போ வந்தாங்க?' என்று இலங்கையில் பரபரப்பான பேச்சாக இருந்தது. 'நம்ம ஆளுங்க அங்க போயி நடத்தியிருப்பாங்களோ'ங்கிற சந்தேகமும் எழுந்தது. கடைசி வாரம் தான் இந்த ரகசியத்தைச் சொன்னேன். வானொலி துறையில் உச்சக்கட்டப் பரபரப்பு ஏற்படுத்திய நிகழ்ச்சி இது".

உலகெங்கும் பறந்து
தமிழ்க்கலை பரப்பும்
அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத்
அவர்களே
அன்புநிறை நல்வாழ்த்துக்கள்!

LINK AIR

உலகெங்கும் செல்ல
உடனடி விமானச் சீட்டு
கொழும்பு
சென்னை
சிங்கப்பூர்
கனடா
விஷேட மலிவுக்கட்டணம்

கொழும்பு – யாழ்ப்பாணம் – கொழும்பு
லண்டனிலேயே விமானச் சீட்டுப்
பெற்றுக்கொள்ளலாம்.

LINK AIR
TRAVEL LIMITED
361, LONDON ROAD, CROYDON,
SURREY CR0 3PB.
TEL: 020 8665 0206
FAX: 020 8669 8579
WWW.LINKAIR.CO.UK

வானொலிக்கலையில் ஒரு சகாப்தம்

அப்புக்குட்டி ரி.இராஜகோபால்



இலங்கை வானொலியில் சகாப்தம் படைத்த உங்கள் அன்பு அறிவிப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத் என் குடும்பத்து உறவு இன்று கௌரவம் பெறும் பெருவிழாவில், இந்த மேடையில் என்னையும் கலந்து கொள்ளவைத்த, எல்லோர்க்கும் பொதுவான இறைவனுக்கு நன்றி கூறும் அதே வேளையில், என் இனிய நண்பனின் சாதனைகள் பலவற்றை எடுத்தியம்ப விரும்புகின்றேன்.

1963ம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் நாடகத்தந்தை, கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் நாடகப்பட்டறையில் இருந்து கொழும்பில் தொழில் வாய்ப்புக் கிடைத்து வருகை தந்த எனக்கு, என் ஒன்றவிட்ட சகோதரர் அமரர் கே.எம். வாசகர் மூலம் தொடர்ந்தும் நாடகங்களில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைத்தது. இங்கே தான் சிறந்த கலைஞர்களை, அரவணைக்கும் தோழர்களை, சந்திக்கும், பழகும் ஆரம்பம் எனக்கு கிடைத்தது. இவர்களில் ஒரு இனிய நண்பராக அறிமுகமானவர்தான் என் அன்புக்குரிய தம்பி பீ.எச். அப்துல் ஹமீத். இவர்களோடு இணைந்திருந்தவர்கள் தான் எஸ். ராமதாஸ், (இப்போது மரிக்கார் ராமதாஸ்) எஸ். செல்வசேகரன், (இப்போது உப்பாலி). உங்கள் அன்பு அறிவிப்பாளர் கோமாளிகள் கும்மாளம், வானொலித் தொடர் நாடகம் மூலம், ஐயராக பாத்திரம் தாங்கியவர் பீ.எச்.அப்துல் ஹமீத். அவரோடு எஸ்.சந்திரசேகரன் (இப்போது டேவிட்) என நாடகப் பாத்திரங்களோடு இணைந்து அழைக்கப்படுபவர்கள். என்னைத் தவிர இவர்கள் எல்லோரும் இலங்கை வானொலியில் சிறுவர் மலர் நிகழ்ச்சியில் இணைந்து புகழ்பெற்றவர்கள். நண்பர்களின் ஆதரவும், வரவேற்பும், 1966ம் ஆண்டில் இடம் பெற்ற தேர்வுப் பரீட்சை மூலம் நானும் ஒரு வானொலிக் கலைஞனாகத் தெரிவு செய்யப்பட்டு, இவர்கள் குடும்ப நண்பராகும் பாக்கியம் கிடைத்தது. அன்று ஆரம்பமாகிய எங்கள் நட்பு எத்தனை ஆணித்தரமானது என்பதனை இத்தனை வருடங்களுக்குப் பிறகும் தொடரும் உறுவுப் பாலத்தின் மூலம் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

கொழும்பில் சிலோன் சேவா ஸ்டோஸ் என்ற பெயரில் கே.எம். வாசகரின் இயக்கத்தில், பார்வதி பரமசிங்கம், சுமதி, புரோக்கர் கந்தையா, மனிதவலை போன்ற மேடை நாடகங்களில் எங்களோடு பங்கெடுத்துக் கொண்ட பீ.எச். அப்துல் ஹமீத், அந்தச் சிறிய வயதிலேயே திட்டமிட்டு, செயற்பட்டு, சளைக்காமல், கலைத்துறையில் பல பரிமாணங்களில் சிறந்து விளங்கியவர். மிகச் சிறிய வயதில் அளப்பரிய புகழ்பெறும் இயல்பான திறமை இவரிடம் காணப்பட்டதனால் தான், தன்னடக்கமாக வாழ்ந்த இந்த சிறப்பு மிகு கலைஞன்,இன்று வெற்றிச் சிகரத்தின் உச்சப்படியில் முத்திரை பதித்து, மக்களின், குறிப்பாகத் தேசமெங்கும் வாழும் நேசமிகு தமிழர்களின் அனபுக்குரிய பாத்திரமானார்.

தமிழ் கூறும் நல்லுலகம், இவர் மணிக்குரலை வானொலியில் கேட்பதும் தங்கள் செவிகளில் தேன் தமிழ் வந்து ஒலிக்கப் போகின்றதென வானொலிக்குப் பக்கத்தில் வந்தமர்ந்து கொள்வார்கள். நிகழ்ச்சி முடிவில் மீண்டும் உங்களை மற்றுமொரு நிகழ்ச்சியில் சந்திக்கும் வரை அன்பு வணக்கங்கள் கூறி விடை பெறுவது உங்கள் அன்பு அறிவிப்பாளர் பீ.எச் அப்துல் ஹமீத் என்று விடை பெறும்போது, இன்னும் சற்று நேரம் உரையாட மாட்டாரா என அவர் சிம்மக் குரலுக்காக தவம் கிடந்தவர்களில் நானும் ஒருவன் என்றால் மிகையாகாது.

இத்தனை புகழ் மிக்க கலைஞனோடு எனக்கு இவ்வளவு பரீச்சியமான நெருக்கம் ஏற்படுமென அன்று நான் கனவில் கூட நினைத்திருக்கவில்லை. நிஜங்களின் தரிசனம் இது தான் போங்கள்.

வெவ்வேறு மனிதங்கள், வெவ்வேறு சூழல்களில் வாழ்ந்து அற்ப, சொற்ப பெயருக்கும், புகழுக்குமாக பகைத்துப் பிரிந்து போன அன்றைய காலகட்டங்களில், ஒரு தாயின் குழந்தைகள் போல் தொப்புக்கொடி உறவுகளாக, ஒரே கலைக்குடும்பமாக, இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றால் அதற்குக் காரணம் எம்மிடையே விட்டுக் கொடுப்பும், தட்டிக்கொடுப்பும், ஒருவருக்கு கிடைக்கும் புகழில் இமயத்தின் உயரத்தைக் கண்டு மகிழும் மனப்பான்மையும் வளர்ந்திருப்பது தான் எனலாம்.



"சதா சினிமாப் பாடல்களை முணு முணுத்துக் கொண்டிருக்கும் நிறையப் பேரை நேரில் பார்த்திருக்கிறேன். முறையான பயிற்சியும் சரியான வாய்ப்பும் இல்லாததால் இவர்களின் திறமை வீணாகியிருக்கிறதே என்ற கவலையில் உதித்ததுதான் 'பாட்டுக்குப் பாட்டு!' சுமார் இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் இருநூறு பேர் கூடியிருக்கிற சபையில் 'பாட்டுக்குப் பாட்டு' தொடங்கினேன். பின்னாளில் பொதுமக்கள் நிறைந்த அரங்குகளில் நேரில் தோன்றி நான் நிகழ்ச்சி நடத்தியபோது, என் நண்பன் ஒருவனே கண்டித்தான். 'உனக்கு இருக்கிற அபிமானம் வேற. உன்னை எப்படியெல்லாமோ கற்பனை செய்து வைத்திருப்பார்கள்... இப்படியொரு வழுக்கைத் தலையோடு போகணுமா?' என்றெல்லாம் கேட்டான். அவனுக்குச் சொன்னேன்: – 'நான் நானாக மட்டுமே இருக்க ஆசைப்படுகிறேன்' என்று"

நினைவில் என்றும் நிலைத்திருக்கும்
அன்பு அறிவிப்பாளருக்கு இனிய
வாழ்த்துக்கள்!

NEW ASHLEY
CASH & CARRY

நீங்கள் விரும்பும் அனைத்துவிதமான
மளிகைப் பொருட்கள் – மரக்கறி வகைகள்
கடல் உணவுகள் – பழவகைகள்
தரமாக மலிவாக
எப்பொழுதும் கிடைக்கிறது.

ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கு
அழைக்கக்கூடிய தொலைபேசி அட்டைகள்

வீட்டுத் தேவைகள் ஏற்படும் ஒவ்வொரு
வேளையிலும் விரையுங்கள்

NEW ASHLEY
CASH & CARRY

443, Kingsbury Road,
London NW9 9DT.
Tel: 020 8204 7666

தமிழால் அனைவருக்கும் பெருமை ஆனால், பீ.எச். அப்துல் ஹமீத்தினால் தமிழுக்குப் பெருமை என்ற சிறப்புப் பாராட்டினை தமிழ் அறிஞர்களாலும், கவிஞர்களாலும் பெற்றிருக்கும் இந்த அறிவிப்பாளனின் அயராத உழைப்பினால் கிடைத்த சாதனைகளை சற்று இரை மீட்டிப் பார்க்க விரும்புகின்றேன். நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.

இவரது 19வது வயதிலேயே இலங்கை வானொலியில் ஒரு அறிவிப்பாளனாக இணைந்து தொடர்ந்த மூன்று ஆண்டுகளில் மிகச் சிறந்த ஒலிபரப்பாளர்கள் ஐவரில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்ட பெருமைக்குரியவர் பீ.எச்.அப்துல் ஹமீத். வானொலியில் இணைந்த 5 ஆண்டுகளில் நெதர்லாந்து நாட்டுப் புலமைப்பரிசில் பெற்று, அங்கு சென்று 5 மாதப்பயிற்சியில் ஆகக் கூடிய புள்ளிகள் பெற்ற, முதன்மைக்குரிய பீ.எச்.அப்துல் ஹமீத்

எனது இனிய நண்பன், இலங்கை வானொலியில் தொட்டுத் துலங்காத அம்சங்களும், தொடாத அம்சங்களும் இல்லையென்று அடித்துக் கூறும் அளவுக்கு பன்முக சாதனையாளன் என்பது எனது தாழ்மையான கருத்து.

வானொலிச் செய்தியாளராக, இசைக்கோலம், ஒலிமஞ்சரி திரையிசை நிகழ்ச்சிகள், நவரசக்கோவை, நாடகங்கள் தயாரிப்பாளராக செவ்விகாணும் திறன்கொண்டவராக, அரசாங்க விழாக்கள் பலவற்றின் நேர்முக வர்ணனையாளராக, புதியபரிமானங்களில் மிளிர்ந்த இவர், பாட்டுக்குப் பாட்டு என்ற ஜனரஞ்சக நிகழச்சியொன்றின் மூலம் கடல் கடந்து வெற்றிக் கொடி நாட்டி புகழ் பெற்றவர் பீ.எச். அப்துல் ஹமீத்.

மெல்லிசையில் கூட இவர் பங்களிபபு அளப்பரியது. இலங்கையில் துள்ளல் இசை (Pop Music) யை அறிமுகப்படுத்தியவர். இறைதாசன் என்ற புனைபெயரில் பல பாடல்களை எழுதியவர். வானொலியில் மட்டுமல்ல திரைப்படங்களிலும் இவர் பாடல்கள் இன்றும் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இவர் என்னோடு கோமாளிகள், ஏமாளிகள் திரைப்படங்களில் பங்களிப்புச் செய்துள்ளார்.

இன்று இலங்கையில் புகழ் பெற்று விளங்கும் இசைக்குழுக்கள், பாடகர்கள் எல்லாம் தொழில் சார் துறையாக, புகழ் பெறுவதற்கும் இவர் காரணமானவர். இத்தனை புகழுக்கும் மேலாக அமரர் நடிகர்திலகம், பத்மஸ்ரீ, டாக்டர் சிவாஜிகணேசன் இவரது நாடகங்களான ஒரு வீட கோவிலாகின்றது, றோமியோ யூலியட் போன்ற நாடகங்களில் பரம இரசிகர். இந்தப் பெருமைக்கும், புகழுக்கும் உரிய மாபெரும் கலைஞன் இலங்கைக்கு வந்திருந்தபோது அனைவரும் அவரைச் செவ்வி காணத்தயங்கியபோது துணிச்சலோடு சிவாஜிகணேசனை செவ்வி கண்டு அதற்கும் பாராட்டுப் பெற்றவர் பீ.எச். அப்துல் ஹமீத்.

இவரது அன்புக்குப் பாத்திரமான அறிவிப்பாளர் எஸ்.கே.ராஜென் அவர்களின் இலங்கைக் கலையகத்தின் (பிரான்ஸ்) அழைப்பினை ஏற்று முதன் முறையாக ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்து நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்த பாராட்டுக்குரியவரும் பீ.எச். அப்துல் ஹமீத் தான் என்பதில் பெருமையடைகிறேன். இன்று லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் I.B.C. (தமிழ் வானொலியில்) பிரதான அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக, செவ்வி காண்பவராக மேடை நிகழ்ச்சி தொகுப்பாளராக விளங்கும் அறிவிப்பாளர் எஸ்.கே. ராஜென் அவர்களும் இவரது மாணவரே.

தொடர்ந்து 1989லிருந்து 1993 வரை இலங்கைக் கலையகத்தின் அழைப்பினை ஏற்று, மரிக்கார் ராமதாஸ், அப்புக்குட்டி இராஜகோபால், நிலாமதி, உப்பாலி செல்வசேகரன், பிராங் புஸ்பநாயகம், அணைனைறைட் கே.எஸ்.பாலச்சந்திரன், ஸ்ரீதர் பிச்சையப்பா, இலங்கையின் புகழ்பெற்ற இசைக்குழுக்களான அப்சராஸ் சித்தாரா குழுக்களையும் ஐரோப்பிய ஆசிய நாடுகளுக்கு அழைத்து வந்து, நிகழ்ச்சிகள் நடாத்தி புலம் பெயர் தமிழ் உறவுகளுக்கு கலை விருந்து படைத்தவரும் என் அன்புக்கு இனியவன் பீ.எச். அப்துல் ஹமீத். இங்கே எவற்றையும் நான் மிகைப்படுத்திக் கூறவில்லை. உண்மையைத்தான் இரை மீட்டிப் பார்த்துள்ளேன்.

இந்தப் பண்பட்ட கலைஞனிடம், கலைத்துணிவும், கலைப்பணியும் இருப்பதுதான் இவரது வெற்றிப்படிகளின் அத்திவாரங்களாகும்.

இன்று உலகத் தமிழ் கலைஞர்களின் ஒட்டுமொத்த அன்பினைப் பெற்று மிகப் பெருமளவில் பாராட்டும், கௌரவமும் பெற்றுக்கொள்ளும் என் இதயத்தில் நிறைந்த பீ.எச். அப்துல் ஹமீதுடன் இணைந்து கொண்ட மனைவி சசிகலாவும் இவரது பரமரசிகை. எங்களது குடும்ப உறவு, அப்துல் ஹமீத்தின் சாதனைகளுக்குப் பலம் சேர்த்த இவர் அவரது வாரிசாக கணணித்துறை நிபுணராக சிறந்த தமிழ் ஆங்கில அறிவிப்பாளராக ஒரு அன்பு மகனையும் (Shiraj) பெற்றுக்கொடுத்த பெருமைக்குரியவர். நல்ல குடும்பம், நல்ல மனைவி, நல்ல பிள்ளை என்ற தெய்வீக குடும்ப அந்தஸ்தைப் பெற்றுள்ள என் நண்பனின் புகழில், பெருமையில் எனக்கும் பங்குண்டு என்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

தனக்குக் கிடைக்கும் புகழும், பெயரும் மற்றவர்களும் பெற்று மகிழ வேண்டுமென்ற உண்மையான கொள்கையுடையவன். இன, மத வேறு பாடின்றி திறமை-களை மதிப்பீடு செய்து, அவர்களுக்கு ஏற்ப கலையுலகில் சந்தர்பங்களை வழங்கிவந்த என் இனியவன் பீ.எச்சை நானும், என் குடும்பத்தின் உறவுகளும் பல்லாண்டு காலம் வாழ்ந்து, பார்புகழும் சாதனைகளை மேலும் படைக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

பல் கலைத்துறையில் பீ.எச். அப்துல் ஹமீத் ஒரு சாதனையாளன். வானொலிக்கலையில் அவர் ஒரு சகாப்தம். வாழ்க அவர் புகழ். தொடரட்டும் எங்கள் உறவு.

"லலிதாவின் 'பாட்டுக்குப் பாட்டு' இற்காக தமிழகத்தில் நான் செலவிட்ட சமயங்கள் மறக்க முடியாதவை. போட்டிக்கு ஆயிரம் பேர் வந்தால் அதில் நூற்றைம்பது பேர் பார்வை இழந்தவர்களாக இருப்பார்கள். விபத்து ஒன்றினால் பார்வை இழந்த ஒருவர், தன் குரல் வளத்தினால் சபையோர் அனைவரையுமே ஈர்த்தார். அவர் இழந்த பார்வையை மீண்டும் பெற முழுச் செலவையும் தானே ஏற்பதாக அந்த இடத்திலேயே லலிதா ஜுவல்லரி உரிமையாளர் அறிவித்தார். ஹேமா என்ற பெண் ஸ்ருதி, தாளத்தோடு பாடினார். இதைப் பார்த்த இசையமைப்பாளர் தேவா, தன்னுடைய 'சந்திப்போமா' படத்தில் அவரைப் பாடவைத் திருப்பதாகச் சொன்னார்கள். பாட்டுக்குப் பாட்டு ஒளிபரப்பாகும் போது, பதிவு செய்து வைக்கச் சொல்லியிருக்கிறார் ஏ.ஆர். ரஹ்மான் என்றும் கேள்விப் பட்டேன்."

அன்பு அறிவிப்பாளர்
அப்துல் ஹமீத் அவர்களுக்கு

இனிய வாழ்த்துக்கள்!

TLMS

வீடு வாங்க, விற்க
கடன் ஒழுங்கு செய்ய
வாடகைக்குப் பெற, வாடகைக்குவிட பராமரிக்க
வியாபாரக் கடன் பெற
காப்புறுதி செய்ய

TLMS

இவர்கள் Mortgage

பெற்றுக் கொடுப்பதில் வல்லவர்கள்
878, London Road,
Thornton Heath, Surrey CR7 7PB

Tel/Fax: 020 8665 6340
E-mail: property@tlmsuk.com

சுந்தரத்தமிழால் சொந்தமானவர்

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் சில விடயங்களை மறக்க மாட்டார்கள். முருகனுக்கு கோயில் எழுப்புவார்கள். கடைகள் நடத்துவார்கள். தமிழ் வானொலி ஆரம்பிப்பார்கள்.

வானொலி என்பது எங்களில் பலரின் வாழ்வோடு கலந்தது. காலம் காலமாக அதனோடு நாம் வளர்ந்தோம். வானொலியோடு சம்பந்தப்பட்டவர்கள் பலருக்கு ஆதர்ச புருசர்களாகினார்கள். உலகில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் பல அறிவிப்பாளர்களின் குரல்கள் அவர்களின் நினைவில் நிலைத்திருந்தன.

அத்தகையதோர் சுந்தரக்குரலுக்குரியவர், என்னருமை நண்பர் பி.எச். அப்துல் ஹமீட் அவர்கள். கனடாவிலிருந்து அவுஸ்திரேலியா வரை அவரை விரும்பி அழைக்காத நாடுகள் இல்லை. எங்கள் நாட்டுக் கலைஞர்களிடையே மிக அதிகமான நாடுகளிலே, கலை நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்ட பெருமை அவருக்கேயுரியது.

வழக்கமாக தவில் வாத்தியம் என்பது நாதஸ்வரத்துக்கு துணை வாத்தியம் என்று கருதப்பட்டு வந்த காலத்திலே, அந்த கருத்தை மாற்றி, தவிலைப் பிரதான வாத்தியம் என்று சொல்லப்படும் அளவிற்கு தனது கைவேகத்தினால் ஆக்கிய பெருமை லயஞான குபேர பூபதி தட்சணாமூர்த்திக்கே உரியது.

அதேபோல அறிவிப்பாளர் என்பவர் கலை நிகழ்ச்சிகளிலே கலைஞர்களை முன்னிறுத்தி அறிமுகம் செய்து வைக்கும் பணிபுரிபவர்கள் என்று நாம் கருதிக்கொண்டிருக்க அவருக்காகவே மக்கள் கூட்டம் சேரும் அளவிற்கு பிரதான இடத்தை சுவீகரித்துக் கொண்டவர் நண்பர் ஹமீட் அவர்கள்.

தனது சுயமுயற்சியினால் தமிழறிவையும், இசையறிவையும், பொது அறிவையும் வளர்த்துக் கொண்டு அறிவிப்பாளர்களுக்கு முன்னுதாரணமாய் விளங்குபவர். பாட்டுக்கு பாட்டு என்ற ஜனரஞ்சகமான நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தியவர். இதற்கு எத்தனை பிரதிகள் பலர் எடுக்க முனைந்தாலும், அவரது மூலப்பிரதிக்கு நிகர் எதுவும் இல்லை.

தென்னிந்திய கலைஞர்களே உலகெங்கும் வலம் வந்த காலத்திலே, எம் கலைஞர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பதில் சகோதரர் எஸ்.கே. ராஜனோடு முன்னின்று உழைத்தவர். அவர்கள் கட்டிய கலைப்பாலத்தில் நானும் பயணித்தவன் என்பதை நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

தான் கடந்த கலைப்பாதையை நினைவில் வைத்துக் கொண்டு அதில் சந்தித்தவர்களை மறக்காமல் என்றும் அன்பு காட்டும் பண்புடையவர்.

அறிவிப்பாளர் என்று மட்டும் அறிந்து கொண்டவர்களுக்காக இந்த தகவல் - அவர் சிறந்த நடிகர், எழுத்தாளர், கவிஞரும் கூட. அவர் எழுதிய மெல்லிசைப்பாடல்கள் ஏராளம். வானொலியில் ஒலித்திருக்கின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னர் அவர் வானொலிக்கென தயாரித்த வானொலி நாடகமொன்றைக் கேட்டுவிட்டு, அதிகாலையிலேயே யாழ்ப்பாண தபாற்கந்தோர் சென்று வாழ்த்துத் தந்தி அடித்தது ஞாபகத்திற்கு வருகிறது.

திரைப்படங்களிலும் அவர் பங்களிப்பு பிரசித்தமானது.

தெனாலியில் அவர் கமலஹாசனோடு என்னைச் சம்பந்தப்படுத்திய முறையை கமலஹாசனே என்னிடம் வியந்து கூறியிருக்கின்றார். தன்னை முன்னிலைப்படுத்தாமல் தன் நண்பனை புகழுக்குரியவனாக்கும் பண்பு அவருடையது.

தன் சுந்தரத் தமிழால் உலகெங்கும் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கு சொந்தமான என்னருமை நண்பர் பி.எச். அப்துல் ஹமீட் அவர்கள், எல்லோருக்கும் பொதுவான இறையருளால், என்றும் குன்றாத இளமையுடன் திகழும் தமிழைப்போலவே, நின்று நிலைத்து மங்காப் புகழுடன் வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.

கொழும்புதமிழ்ச்சங்கம்

கே.எஸ். பாலச்சந்திரன்

(அண்ணை றைட்)

நூலகம்

"நான் முறையாக சங்கீதம் கற்றவனில்லை. கல்லூரி நாட்களில் கர்நாடக சங்கீதம் கற்றேன். தேர்வு வரைக்கெல்லாம் போகவில்லை. எனக்கு இந்துஸ்தானியும் ரொம்பப் பிடிக்கும். இசை என்பது எது? மனதை மகிழ்விப்பது தான். மிக நெடுங் காலமாகவே இதில் இருப்பதால் இசை மாற்றங்களை அவதானித்து வருகிறேன். ஒவ்வொரு புதிய அலையையும் அங்கீகரிப்பவர்கள், புதிய தலை முறையினர்தான். எம்.எஸ். விஸ்வ நாதனும் கே.வி. மகாதேவனும் கோலோச்சிய நேரத்தில்... 'ஓரம்போ ஓரம்போ... ருக்குமணி வண்டி வருது' என்று வந்த இளையராஜா கடுமையாக விமரிசிக்கப்பட்டார். பின் அவர் இசைஞானியாக பட்டம் சூட்டப்பட்டார். அடுத்து ஏ.ஆர். ரஹ்மான் வந்திருக்கிறார். ஒருவரைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள விரும்பாமலேயேதான் பெரும்பாலான விமரிசனங்கள் வருகின்றன. 'இது அந்தப் பாட்டோட காப்பி' என்று செய்துவிடும் விமரிசனத்தால் என்ன பயன்? பழைய மெட்டையே புதிய கற்பனையோடு இப்போது எப்படிக் கொடுத்திருக்கிறார் என்று பார்க்கவேண்டும். ஒன்றிலிருந்து தான் இன்னொன்று வரும். அதற்காக அப்பட்டமான காப்பிக்கு நான் வக்காலத்து வாங்கவில்லை."



Kamal Haasan.

15 / 07 / 2004

நண்பர் சகோதரர் திரு. B.H.அப்துல் ஹமீத் அவர்கட்கு ஒரு பாராட்டு விழா எடுக்க வேண்டும் என்ற அவா அவரது குரலின், குணத்தின் ரசிகர்கள் பலர் மனதிலும் உள்ளது. அந்த ஆசையுள்ள கூட்டத்தில் நானும் ஒருவன். நற்செய்திகளை கொண்டு தரும் அசரீரிகள் முன்பெல்லாம் ஞானியர்க்கு மட்டுமே கேட்டதாய் கதைகள் உண்டு.

நபிகள் நாயகம் போல மலைக்குகையில் குரல் கேட்கவோ, புத்தர் போல் போதியின் அடியில் ஞானம் பெரும் யுகத்திலோ நாம் இல்லை. சராசரி மனிதர்கள் வாழும் சாதாரண யுகத்தில் வாழ்கிறோம். இந்தச் சாதாரண யுகத்தில் நமது வாழ்வைப் புனிதமாக்குவது, நமது சகஜீவிகளைப் பற்றி நாம் கேட்டறியும் சேதிகளும், மனித நேயத்திற்கு இந்தச் செய்திச் சேகரிப்பை பயன் படுத்துதலுமே.

மனித மனங்களுக்கு சுவிசேஷம் சொல்லும் நல்ல ஒரு அசரீரியாய் பல மாமாங்கங்கள் ஒலித்துக் கொண்டிருக்கும் குரல், தமிழ் குரல், அப்துல் ஹமீதின் குரல். அழகான குரலாக மட்டும் நின்றுவிடாமல் அறிவுள்ள குரலாகவும் அவர் திகழ்கிறார்.

போரினால் அல்லல்பட்ட ஒரு இனத்திற்கு இருக்கும், சொற்பமான சந்தோஷ நினைவுகளில் ஒரு முக்கிய இடம் ஹமீத் அவர்களின் குரலுக்கு உண்டு.

நான் ரசிக்கும் நடிகர் திலகமே ரசித்த குரல். இதுவே சகோதரர் ஹமீதிற்கு நல்ல மகுடம். இன்னமும் பல பாராட்டுக் கிரீடங்களை சுமக்கத் தகுதியுள்ள கனமில்லாத தலை அவருக்கு இருப்பது ஆச்சரியமான விஷயம்தான்.

தமிழர்க்கும் தமிழ் மொழிக்கும் தனது குரலால் நிதம் சேவை செய்து வரும் திரு.ஹமீதிற்கான பாராட்டு விழாக்களில் ஒன்றிலேனும் கண்டிப்பாய் நான் பங்குகொள்ள நேரிடும். இன்னும் பல வாய்ப்புக்கள் இருக்கும் தயிரியத்தில் இவ்விழாவுக்கு என் வாழ்த்து மடலை மட்டும் அனுப்பி வைக்கிறேன்.



அன்புடன்

கமல்ஹாசன்

சீராகத் தமிழ்பேசி
ஒலிபரப்புத்துறையின்
சிகரத்தைத் தொட்டு விட்ட தமிழ்
குரலோனே
சிறப்பான எங்கள் வாழ்த்துக்கள்



தாயக உறவுகளுடன் தரமாக உரையாட ஒரு நிறைவான சேவை
SRI LANKA TELECOM இன் SIGIRI உங்கள் தேவை

Sigiri Card விநியோகிக்க உள்ளூர் முகவர்கள் தேவை
ஒய்வான நேரத்தில் துரிதமாக சம்பாதிக்க இலகுவான வழி
விரும்புவோர் பின்வரும் இலக்கங்களில் தொடர்புகொள்ளவும்

+61 (0) 3967 03055
+1 (0) 416 548 9334
+47 (0) 2324 6595
+33 (0) 1446 40514
+49 (0) 6924 007860
+39 (0) 0226 15687
+31 (0) 624 635 976
+47 (0) 2324 6595
+47 (0) 2324 6595
+41 (0) 4331 71871
+44 (0) 7940 466 277
+1 (0) 416 548 9334

"எனது அபிமான பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம். அவருக்கே பிடித்த பாடகர் ஜேசுதாஸ். எனவே, ரெண்டு பேரையும் எனக்குப் பிடிக்கும். ஒவ்வொருவருக்கும் ஒரு அளவு... வரையறை இருக்கும். ஆனால், எஸ்.பி.பி. எல்லா பாவங்களிலும் பாடக்கூடியவர். நவரச பாட்டுக்காரர் என்றே சொல்வேன்."

அழியாத சாட்சியம்

- மாலி -

"...ஏடுகள் படித்துவிட்டா சாமர்த்தியம் வரப்போகிறது? இல்லை. சிலர் இக்கலைக்கு வேண்டிய சாமர்த்தியத்தை எப்படியோ அடைந்திருக்கிறார்கள். பிறப்புடன் வந்த சம்பத்து என்று சொல்வதற்கில்லை. உலக அநுபவமும் தகுந்தபடி வாய்த்து, பிறப்புடன் வந்த சக்தியை மலரச் செய்து, அந்தநிலை அடைந்திருக்கிறார்கள் என்று சொல்லலாம்."

ஒலிபரப்புத் துறையின் 'பைபிளாக' விளங்கும் "ஒலிபரப்புக்கலை" என்ற நூலின் ஆசியுரையில் மூதறிஞர் ராஜாஜி குறிப்பிடுகின்றவை இவை.

சரியாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், இந்திய மொழிகள் அனைத்துள்ளுமே முதன் முதலாக ஒலிபரப்புத்துறை பற்றித் தமிழில் வெளியான இந்நூலை எழுதியவர் இலங்கையரான சோ. சிவபாதசுந்தரம். தமிழ் ஒலிபரப்பின் பிதாமகர் அவர்.

அவர் பணியாற்றிய இலங்கை வானொலியில் அதன் ஆரம்ப காலங்களிலிருந்தே இவர்கள் நெறிப்படுத்திப் பேணிய ஒலிபரப்பு முறை, தமிழ் ஒலிபரப்புக்கான 'மாதிரி' நிலையமாக இலங்கை வானொலியை ஆக்கியது. அங்கு பணியிலே சேர்ந்தபின்னர் அவர்களிடையேயான பதவி அல்லது அந்தஸ்துப் போட்டிகளில் இலங்கை வானொலி எக்காலத்திலுமே 'பகிரங்கமான பிரசித்தத்தை'ப் பெற்றிருந்தாலும், பணியில் சேர்வோருக்குரிய ஆற்றல் தொடர்பில் அது நெறிபிறழவில்லை. அந்த நிலையத்திலிருந்து காற்றலைகளில் பவனிவந்த அனைவரும் இதற்குச் சாட்சியமாகவே திகழ்கிறார்கள்.

ஆனால், இவர்களிடையே ராஜாஜி சொன்ன சாமர்த்தியசாலிகளையும் நாம் காண்கிறோம். அந்த நிலையத்தில் அவர்கள் இன்னமும் இருக்கிறார்களோ இல்லையோ, அவர்கள் ராஜாஜி கூற்றின் அழியாச் சாட்சியங்கள். தமிழ் சினிமா தமிழரிடையே வகிக்கும் அந்தஸ்தில், அதுசார்ந்த சிறப்பான ஒலிபரப்புச் சாமர்த்தியத்தால் சிவாஜி கணேசனுக்கு இணையான புகழோடு திகழ்ந்தவர் இலங்கை வானொலியின் எஸ்.பி. மயில்வாகனன்.

அதேபோல, அவருக்குப் பின்னர் இலங்கை வானொலியில் அத்தகைய ஒரு புகழை உலகளாவிய ரீதியில் பெற்றுத் திகழும் 'சாமர்த்தியசாலி' பி.எச். அப்துல் ஹமீத்.

அறிவிப்பாளரின் குரல் ஆரோக்கியமாகவும், நாகரிகமாகவும், தேஜஸ் பொருந்தியும் ஒலிக்கவேண்டும் என்பார்கள். இவர்கள்தாம் நேயர்களை வசப்படுத்தி, தாம் சார்ந்த அல்லது சார்ந்திருந்த நிலையங்கள் மீது அவர்களுக்கு ஒரு பற்றுதலையும், அவர்களிடத்தில் தமக்கு ஒரு பேரபிமானத்தையும் ஏற்படுத்திவிடுகிறார்கள்.

அப்படி, அந்த அழியாத சாட்சியம் அப்துல் ஹமீத்.



பின்னணிப் பாடகர் பி.பி. ஸ்ரீநிவாஸ் அவர்களுடன்.

"தொலைக்காட்சியை விஷுவல் மீடியா என்கிறோம். வானொலியை மல்ட்டி விஷுவல் மீடியா என்கிறோம். வானொலியை மல்ட்டி விஷுவல் மீடியா என்று சொல்லலாம். வானொலியில் கேட்கும் ஒவ்வொன்றையும், ஒவ்வொரு வரும் அவரவர் கற்பனையில் யோசித்து வைத்திருப்பார்கள். அந்தக் கற்பனை கலந்ததுதான் என்மீது வைத்திருக்கும் பாச உணர்வு. 83'ம் ஆண்டு கலவரத்தில் நான் இறந்துவிட்டதாகப் பரவிய வதந்தியை அடுத்து வந்த கடிதங்கள், தமிழ்நாட்டுடனான என் நேசத்தை அதிகப்படுத்தின. தமிழ் மக்கள் காட்டிய அந்தப் பாசத்துக்கு என்ன காரணம்? என் குரல். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். நான் சொல்வேன்... அகத்தின் அழகு குரலில் தெரியும். நம் உள்ளத்தைக் குரல்தான் பிரதிபலிக்கும். என் தமிழாசிரியர், தமிழை அழகாக உச்சரிக்கக் கற்றுத் தந்தார். அழகாக ரசித்து உச்சரித்துப் பாருங்கள். நீங்கள் ஈர்க்கப்படுவீர்கள்."

போற்றுதற்குரிய ஒலிபரப்பாளர்
பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு இனிய
வாழ்த்துக்கள்!

Portland Estate Agents

இல்லங்களை விற்பனை செய்யவும்
வாடகைக்கு வழங்கவும் உதவுபவர்கள்

Mortgage
Re-Mortgage
Business Lands For Shops
Petrol Stations
Hotel
Mortgages For European Residents

துரித சேவைக்கு நாடுங்கள்

Portland Estate Agents (U.K.) Ltd.

9, St. James Road, Croydon,
Surrey CR0 2SB.
Tel: 020 8683 1313
Fax: 020 8484 0444

எனது ஆதரச அறிவிப்பாளர்

குமரன்

முன்னைய நாட்களில் இலங்கை வானொலியில் நல்ல தமிழ் கேட்போம் என்ற ஒரு நிகழ்ச்சி ஒலிபரப்பாவது வழக்கம். இலக்கியத் தமிழ், அடுக்கு மொழித் தொடர் முதலான தூயதமிழ் அல்லது செந்தமிழ் வசனங்கள் பெரும்பாலும் புரான சரித்திர சினிமாக்களில் இருந்து எடுத்தாளப்படும். இந்த நிகழ்ச்சியைக் கேட்கும் போதெல்லாம் பேசாமல் அப்துல் ஹமீதைப் பேசச் சொல்லி விடலாமே நல்லதமிழ் கேட்டதாக இருக்குமே என நான் நினைப்பதுண்டு.

விதந்துரைப்பதாகவோ புகழாரமாகவோ இல்லாமல் உண்மையாகவே சொல்கிறேன். எத்தனையோ அறிவிப்பாளர்களுக்கு மத்தியில் ஹமீத் அவர்களுக்கு பெயர் தேடிக் கொடுக்கின்ற முதல் விடயம் இந்த நல்ல தமிழ் தான். அதை, தான் மட்டும் மேற்கொள்ளாமல் முடிந்த போதெல்லாம் (எத்தனையோ நிகழ்ச்சிகளில்) அதை மற்றவர்களும் மேற்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை நாசூக்காகவும் நாகரீகமாகவும் அவர் சொல்வதே ஒரு தனித்தன்மை தான். சிங்கப்பூர் வானொலியின் ஒரு பேட்டியில் இது பற்றிப் பேசியபோது மக்களுக்கு விளங்க வேண்டும், போய்ச் சேரவேண்டும் என்பதாலேயே நாங்கள் எளிமைப்படுத்தப்பட்ட, இறங்கிவருகின்ற தமிழில் பேசுகிறோம் என்ற வாதத்தை அவர்கள் வைத்தபோது அப்படியானால் செய்திகளை மட்டும் எப்படி நல்ல நல்ல தமிழில் வாசிக்கிறீர்கள், அவை மக்களுக்கு சென்று சேரத் தேவையில்லையென்றா? என அவர் கேட்டது தர்க்கரீதியான பதிலாக இருந்த அதேவேளை வானொலிச் செய்திகள் குறித்த ஒரு கிண்டலாகவும் இருந்ததை ஆச்சரியத்தோடு ரசித்தேன்.

நல்ல தமிழுக்கு அடுத்தது அவரது குரல்வளம். அன்றிலிருந்து இன்றுவரையிலும் எந்தப் பிசிறுமில்லா அதே ஸ்தாயியில் வரையறுத்த தெளிவான உச்சரிப்பில் அந்தத் தொனியைக் கேட்க முடிகிறது. கானாமிர்தம், காந்தருவம், கணீர் என்ற இந்த வர்ணனைகள் எல்லாம் எனக்கு சரியாக இல்லை. உண்மையில் இவைகள் குரலைப் பற்றிச் சொல்ல வேண்டியதைச் சொல்கின்றனவா எனத் தெரியவில்லை. சிகரங்கள் 2000 நிகழ்வில் கவிஞர் வைரமுத்து இவரைத் தங்கக் குரலோன் என்றார். ஒருவேளை தங்க நகை உரிமையாளர்கள் தமிழ் சகோதரர்களால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சி என்பதனால் அப்படிச் சொன்னாரோ? எது எப்படியானாலும் அந்த வர்ணனை எனக்குப் புதுமையானதாகவும் பொருத்தமானதாகவும் பட்டது. தங்கம்தான், அன்றிலிருந்து இன்றுவரை தனது தரத்தை தக்கவைத்துக் கொள்ளும் உலோகமாக இருக்கிறதே.

தமிழும், குரலும் மட்டுமல்லாமல் விடயஞானத்திலும் கூட நான் வியந்து பார்க்கின்றவராக ஹமீத் அவர்கள் விளங்குகின்றார். எங்கோ ஒரு முறை ஒரு புத்தகத்தில் படித்த ஒரு தகவல். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் யாரோடோ ஒரு நடிகருக்கு சிகரட்டை விரல்களில் பற்றும் முறைகளில் பல விதங்களைக் காட்டினாராம். இது கதானாயகன், இது வில்லன், இது முதியவர், இது இளைஞர், இது நகைச்சுவை நடிகன் என இப்படி இதைச் சொல்லி விட்டு நடிகர் திலகத்தைப் பற்றிய அந்த நூற்குறிப்பு அவர் நடிப்பு நுணுக்கங்களை விரல் நுனியில் வைத்திருக்கிறார். இந்தக் குறிப்பு விடயஞானத்தைப் பொறுத்தவரை அப்துல் ஹமீதுக்குப் பொருந்துமென நினைக்கிறேன். சினிமாப் பாடல் வரிகளாகட்டும், அவைபற்றிய தகவல்களாகட்டும், ஆண்டுக்கணக்குகளாகட்டும், சிகரங்கள் 2000 போன்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பாகட்டும் தேவையானதைப் பொருத்தமான இடத்தில் நேரக்கச்சிதத்தோடு எப்படி இவரால் வெளிக்கொணர முடிகிறது என்று நான் பல தடவை வியந்திருக்கிறேன். எனக்குத் தெரிந்தவரை இப்படியான தகவல்களஞ்சியமாக இருந்த ஒரே அறிவிப்பாளர் உலக வானொலிகளிலேயே பெரிய பெயர் கொண்டவரான (குமுதம் குறிப்பு) ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம் தான். ஆனால் அவரோடு ஒப்பிடுகையில் ஹமீத் அவர்களின் இன்னொரு சிறப்பு வெளிப்படுகிறது. சாதாரண பாமர ரசிகனையும் அல்லது நேயரையும் கவர்ந்து விடும் அந்த ஈர்ப்பு விசை எளிதாகப் புறந்தள்ளி விடக்கூடிய ஒன்றல்ல.

இத்தனை தகுதிகளுக்கும் உரித்தானவரான அப்துல் ஹமீத் அவர்கள் ஓர் அறிவிப்பாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர். இவற்றையும் கடந்து இலங்கைத் தமிழரின் தமிழின் புகழை உலகெல்லாம் பரப்பி வைத்தவர் என்ற வகையில் என்றோ பாராட்டி கௌரவிக்கப்பட்டிருக்க வேண்டியவர். இங்கு நான் குறிப்படுவது நம்மவர்களால் நடந்திருக்க வேண்டும் என்பதைத் தான். வாழும் கலைஞர்கள் வாழ்கின்ற காலத்திலேயே கௌரவிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்ற முடியாத கருத்துள்ளவன் நான். இருக்கும் வரை கண்டு கொள்ளாமல் விட்டு விட்டு இழப்புக்குப்பின் இந்திரன் சந்திரன் ஆகா ஓகோ எனத் தூக்கி வைப்பதெல்லாம் நமது செயலுக்கு சமாதானமும் பரிகாரமும் தேடுவதுதான் என நம்புகிறவன். அந்த வகையில் இதே கருத்துக்களைக் கொண்டிருப்பது மட்டுமன்றிச் செயற்படுத்தியும் வருகின்ற நண்பர் எஸ்.கே.ராஜென் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

அவரால் மேற்கொள்ளப்படும் இந்தப் பாராட்டுவிழா தமிழ் மக்களால் சிறப்பிக்கப் படவேண்டும் என வேண்டுகிறேன். விழா தொடர்பாக வெளியிடப்படும் மலரில் எனது ஆக்கமும் இடம்பெற வழி செய்தமைக்கு உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து மனம் நிறைகிறேன். மதிப்புக்குரிய அப்துல் ஹமீத் அவர்கனை இதயம் நிறைய வாழ்த்தி அவரின் பணி மேலும் சிறந்து தொடர வேண்டுமென வேண்டி எல்லாம் வல்ல எல்லோருக்கும் பொதுவான இறைவனை வேண்டி அமைகிறேன்.

"நான் ஒரு சாதாரண ஒலி பரப்பாளன்தான். எனக்கு முன் சாதனை படைத்த ஒலிபரப்பாளர்களெல்லாமே மறக்கப்பட்டு விட்டார்கள். ஆனால், நாம் நிலைபெற வேண்டும் என்பதற்காகத் தான் ஜனரஞ்சகமான இந்த நிகழ்ச்சிக்குள் நுழைந்தேன். இது வெறும் பொழுது போக்கு அம்சம் கொண்டது மட்டுமல்ல. உலகின் பிற நாடுகளிலும் வாழும் தமிழர்கள், தமிழ்ப் பெயர் கொண்டவர்களாக மட்டுமே இருந்து... தமிழிலில் எழுத... பேச... வாசிக்கத் தெரியாதவர்களாகவும் ஆகிக்கொண்டிருக் கிறார்கள். இவர்களுக்குத் தமிழை நினைவுபடுத்த ஒரு ஊடகம் தேவை. குடும்பத்தினரோடு பேசுவதைவிட, வானொலி, தொலைக்காட்சியில் பேசுவதைக் கேட்பதில்தான் அதிகநேரம் செலவழிக்கப் படுகிறது. எனவே என் போன்ற அறிவிப்பாளர்களுக்கான பொறுப்பு அதிகமாகிறது".

"பி.பி.சி., வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா – இரண்டும்தான் உலகம் முழுவதும் செய்தி ஒலிபரப்பி வருகிறது. இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் கனடா, ஆஸ்திரேலியா, லண்டன் போன்ற இடங்களில் வானொலி அலை நடத்தி வருகிறார்கள். தமிழகத்திலும் ஒரு வானொலியைத் தொடங்கி 'உலகத் தமிழோசை' என்ற ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறேன். இதுதான் என் ஆசை!"

அன்பு அறிவிப்பாளர்
பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களே!
எமது நல்வாழ்த்துக்கள்!

MEGAA SUPER STORE

மளிகைப் பொருட்கள் அனைத்தும்
மலிவு விலையில் கிடைக்குமிடம்

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்
மரக்கறி வகைகள் - கடல் உணவுகள்

எல்லா நாடுகளுக்கும் பேச ஏற்ற
தொலைபேசி அட்டைகள்

அனைத்துக்கும் உங்களுக்கு
அருகிலேயே ஓரிடம்

MEGAA SUPER STORE

99, Burlington Road,
New Malden,
Surrey KT3 4LR.
Tel: 020 8336 0061

ஆற்றலாளர் எங்கள் அப்துல் ஹமீத்

- சூ.யோ. பற்றிமாகரன் -

உங்கள் சிம்மக் குரலால் தமிழ் வானொலி உலகை

உயர்த்தினீர்கள்! பாராட்டுக்கள்!

உங்கள் பணியால் தாயக இனங்களின் உறவைப்

பலப்படுத்துங்கள்! வேண்டுகிறோம்!

இலங்கை வானொலியின் தலைசிறந்த அறிவிப்பாளர் திரு. பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு இலண்டனில் பாராட்டு விழா என்பது இலங்கையின் தமிழ் வானொலியின் வரலாற்றினை நன்றியுடன் மீள நினைவுகூரும் தமிழர் பண்பாகவே எனக்குத் தெரிகிறது.

திரு. பீ.எச். அப்துல் ஹமீத் கடந்த அரை நூற்றாண்டாக பல்வேறு வகைகளில் தமிழ் வானொலி வளர்ச்சிக்கு வழிகாட்டியவர். ஒரு வானொலி அறிவிப்பாளன் தனக்கு என்று ஒரு பாணியைத் தோற்றுவிக்கும் பொழுது தான் அவன் கேட்பவர்களின் மனதை விட்டுப் பிரிக்க முடியாத உறவாக அவர்களுடன் வாழத் தொடங்குகிறான்.

நான் மாணவனாக இருக்கும் பொழுதே திரு. பீ.எச். அப்துல் ஹமீத்தின் கம்பீரமான குரலைக் கேட்டதும் என் மனது மற்றைய சிந்தனைகள் எல்லாவற்றிலும் நின்று விடுபட்டு அவர் வழங்கும் நிகழ்வில் ஒட்டிவிடும். இதனால் செய்யாமல் விட்ட வீட்டு வேலைகள் எத்தனையோ. போகாது விட்ட இடங்கள் எத்தனையோ. அந்த இழப்புக்களை ஏன் அடைய விரும்பினேன் என்றால் இந்த அப்துல் ஹமீத்தின் குரலைத் தொடர்ந்து கேட்க வேண்டும் என்ற இதயப்பற்று என்றுதான் கூறவேண்டும்.

சொல்லில் அழுத்தம், குரலில் உறுதி, உணர்ச்சிகளை வெளிப்படுத்தக்கூடிய குரல் அசைவு இம்மூன்றும் நன்கு கவனமாகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சியை வெளிப்படுத்தும் பொழுது கேட்பவர் செவி தமிழ் அமுதை உணவாகப் பெறும். அந்த கேட்கக் கேட்கத் தெவிட்டாத அமுதக் குரலோன் தாங்கள் எங்கள் பீ.எச். அப்துல் ஹமீத்.

பாருங்கள் தமிழின் சக்தியை. எங்களிடையே உள்ள இன மத பிரதேச வேறுபாடுகள் எல்லாவற்றையும் மறந்து எங்களைச் சகோதரர்களாக மாற்றும் வல்லமை எங்கள் தமிழ் அன்னைக்கு உண்டு.

திரு. பீ.எச். அப்துல் ஹமீத் முஸ்லீம் மதத்தவராக இருந்தும், நான் கிறிஸ்தவ மதத்தினராக இருந்தும் எங்கள் தமிழ் என்றதும் உணர்வால் சகோதரர்களாகின்றோம்.

'இறைவனிடம் கையேந்துங்கள்! அவன் இல்லையென்று சொல்லுவதில்லை!' என்ற நாகூர் ஹனிபாவின் முஸ்லீம் பக்திப் பாடலை உச்சரிக்காத தமிழ் நாவேயில்லை எனலாம்.

முஸ்லீம்களின் பக்கிரி பாடலில் மயங்காத தமிழர் இல்லை. முஸ்லீம்களின் மட்டக்களப்பு நாட்டார் பாடல்களில் கொப்புளிக்கும் தமிழினிமையைச் சுவைக்காத தமிழர் இல்லை. இலங்கை தமிழ் நாவல் உலகைத் தொடக்கி வைத்தவர் சித்திலெவ்வை. இலங்கையின் சிறுகதை உலகை சுபைர் இளங்கீரனை படிக்காது முழுமையாக ஆய்வு செய்ய முடியாது. தமிழ்த்தேசியத்தின் கிழக்கின் ஆரம்ப வளர்ச்சியை மௌசூர் மௌலானாவின் பங்கை நோக்காது ஆய்வு செய்தால் அது பூரணமாகாது.

அவ்வாறே இலங்கையின் தமிழ் வானொலியின் வரலாற்றை வி.ஏ. கபூரை மறந்து அப்துல் ஹமீத்தை விட்டு விட்டு யாருமே தொட்டுக்கூடப் பார்க்க இயலாது. இதனால் தான் தமிழ் வானொலி உலகின் மற்றொரு சிம்மக்குரலோனாகிய திரு. எஸ்.கே. ராஜென், நண்பர் சுந்தரம் ஸ்ரீ ஆகியோர் இன்று பாராட்டு விழாவொன்றை அப்துல் ஹமீத்துக்கு இலண்டனில் ஏற்பாடு செய்துள்ளனர்.

தமிழர்கள் முஸ்லீம்களைத் தங்களில் ஒருவராக்கப் பார்க்கும் பொழுது, முஸ்லீம்களும் தமிழர்களைத் தங்களில் ஒருவராகப் பார்க்கும் தன்மையை வளர்க்க வேண்டும். நிச்சயமாக திரு. அப்துல் ஹமீத்துக்கு இந்த தமிழ் - முஸ்லீம் ஒருமைப்பாடு உண்டு. அதனால் தான் இன்று புலம்பெயர் தமிழர்கள் அவருக்குப் பாராட்டு விழாச் செய்கின்றனர்.

இந்த தமிழ் - முஸ்லீம் ஒருமைப்பாட்டைச் சிதைத்து தமிழீழத் தாயகத்தையே தமது தாயகமாகக் கொண்டு வாழும் முஸ்லீம்களிடமும் தமிழர்களிடமும் சந்தேகங்களை, சண்டைகளைக் கிளப்பிவிடுபவர்கள் சிங்கள பௌத்த பேரினவாதிகளும் அவர்கள் வழங்கும் பதவிகளுக்கு அடிமையாகும் சில முஸ்லீம் தலைவர்களுமே ஆவர். இவர்களை இனங்கண்டு தமிழ் - முஸ்லீம் மக்களின் உறவைப் பலப்படுத்த இவ்வாறான இரு இனமக்களும் கூடிக் கொண்டாடும் விழாக்கள் வளர வேண்டும்.

"உலகத் தமிழர்களுக்காக என்குரல் ஒலித்துக்கொண்டே இருக்கும்!"

"என்னுடைய வாழ்க்கையில் இன்றுவரை நான் எதையும் தேடிச் சென்றதில்லை. இதைத் தற்பெருமைக் காகச் சொல்லவில்லை. சிறுவயதி லிருந்தே அனைத்துமே என்னைத் தேடிவந்த விஷயங்களாகவே அமைந்தன.

பத்து வயதில் நான் வானொலி நிலையத்திற்குச் சென்றது கூட சடுதியில் நடந்த ஒன்றுதான். எனது நண்பர் ஒருவரோடு வேடிக்கை பார்க்கப் போயிருந்தேன். சென்ற அன்றே 'சிறுவர் மலர்' நிகழ்ச்சியில், நேரடி ஒலிபரப்பில் எனது குரல் ஒலித்தது – அதுவும், நாடகத்தில் மிக முக்கியமான கதாபாத்திரத்தில்.

தமிழ் ஒலிபரப்புலகில்
கோலோச்சி நிற்கும்
அன்பு அறிவிப்பாளர்
அப்துல் ஹமீத் அவர்களுக்கு
இனிய நல்வாழ்த்துக்கள்!

கோகுலம் மல்ரி ட்ரேடேர்ஸ்

கொடுக்கும் பணத்திற்கு
மிகவும் பெறுமதியான மளிகைப் பொருட்கள்
மற்றெல்லாத் தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய
உகந்த இடம்

மரக்கறி வகைகள்
மீன் வகைகள்

தொடர்பாடலுக்குரிய தொலைபேசி அட்டைகள்
பத்திரிகைகள் - சஞ்சிகைகள் அனைத்துக்கும்

Gogulam Multi Traders

303-305, Mitcham Road,
Tooting, London SW17 9JQ,

தொடர்புகளுக்கு
KRISHNA

இனி திரு. பீ.எச். அப்துல் ஹமீத்தைப் பொறுத்தமட்டில் அறிவிப்பாளராக அவர் வெளிப்படுத்தி நிற்கும் தனியான ஆளுமையையும் அவரை மற்றவர்கள் பாராட்டும் நிலைக்கு உயர்த்தி உள்ளது என்பதையும் சிறப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இன்று அறிவிப்பாளர்கள் என்பவர்கள் வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ அல்லது மக்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளிலோ தகவல்களை அளித்து மக்களை மகிழ்விக்கும் பொறுப்பு உடையவர்கள் என விளக்கமளிக்கப்படுகிறது. இன்று பாடல்களைத் தெரிவு செய்து, தாங்கள் விளக்கி அல்லது விவரித்து அப்பாடல்களை ஒலிபரப்பி நிகழ்ச்சிகளை நடாத்தும் அறிவிப்பாளர்களை டிஸ்க் ஜோக்கிஸ் என்னும் வகையினராகப் பிரித்து அழைக்கின்றனர். இவர்கள் இந்த நிகழ்ச்சியை நடாத்துவதுடன் கூடவே மற்றைய அறிவிப்பாளர்களுக்கு உள்ள கடமைப் பொறுப்புக்களாகிய செய்திகளை வாசித்தல், செவ்விகளை எடுத்தல் போன்றவற்றையும் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்.

அதேவேளை டிஸ்க் ஜோக்கிஸ் தங்கள் விளக்கங்களைத் தாயரித்து எழுதி வாசிக்க கால அவகாசம் இருப்பதில்லை. இதனால் தங்களின் அறிவுகொண்டு வாயினாலேயே உடனுக்கு உடன் விளக்கங்களை அளிக்கும் நிலை உண்டு. ஆனால் அன்றே இந்த அறிவிப்பாளர் என்றால் யார் என்பதை தன் அனுபவத்தால் ஆர்வத்தால் கண்டறிந்து இந்தப் பணிகளையும் பொறுப்புடன் தன்னிச்சையான பேச்சுக்களால் சிறப்பித்த திரு. அப்துல் ஹமீத்துக்குப் பாராட்டு என்பது இயல்புடைய ஒன்றாக அமைகிறது.

அவ்வாறே டோக் சோ என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் ஒரு தலைப்பை அறிமுகப்படுத்தி விட்டு அதைக் குறித்து நேயர்கள் உடன் கலந்துரையாடும் நிகழ்ச்சிகளை வகைப்படுத்துகின்றனர். கேள்விகளைக் கேட்டுச் சரியான பதில்களுக்குப் புள்ளி வழங்கும் விளையாட்டுச் சுவை அளிக்கும் நிகழ்ச்சிகளும் உண்டு. நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சியை விவரணம் செய்து தொடர்ச்சியாகப் பேசுவதை லைவ் செய்தல் என்று வகைப்படுத்துவார்கள். இப்படியாகப் பலவாறு அறிவிப்புக்கள் வகைப்படுத்தப்பட்டு அந்த அந்த வகையினையே ஒரு அறிவிப்பாளர் செய்யவேண்டும் என்னும் வேலை விவரணமும் கொடுக்கப்படுகிறது. ஆனால் இப்படிப் பலர் செய்யும் வேலையைத் தனியாகவே நின்று வெற்றிகரமாக நடாத்தி அறிவிப்பாளன் ஒருவனின் அத்தனை அம்சங்களையும் தன் மூலம் வெளிப்படுத்திய ஆற்றலாளர் எங்கள் அப்துல் ஹமீத். இதனால் தான் இந்தப் பாராட்டுவிழா.

22-02-1924ல் எட்வர்ட் ஹர்ப்பரால் தொடங்கப் பெற்ற வயர்லஸ் கிளப்பினர் கொழும்பு வை.எம்.சீ.ஏ. கட்டிடத்தை ஆயர் திறந்து வைத்த நிகழ்ச்சியை ஒலிபரப்புச் செய்து இலங்கைத் தீவில் முதன் முதல் வானலைத் தகவல் பரிமாற்றத்தைத் தொடக்கி வைத்தனர். 27-06-1924 மதியம் 2.30 க்கு அன்றைய கவர்னர் சேர். வில்லியம் ஹென்ரி மன்னிங்ஸ் ஆல் வானொலி ஒலிபரப்பு சென்ரல் டெலிகிராப் அலுவலகத்தின் ஒரு பகுதியில் இலங்கையில் தொடக்கி வைக்கப்பட்டது. 1934 வரை ஆங்கில ஒலிபரப்புக்களே நடாத்தப் பெற்று அதன் பின்னர் சிங்கள, தமிழ் ஒலிபரப்புக்கள் ஆரம்பமாயின. 01-10-1949ல் பி.பி.சி. அறிவிப்பாளர் ஜோன் லாம்பிரே அவர்களைத் தலைவராகக் கொண்ட இலங்கை ஒலிபரப்பு நிலையம் தோற்றம் பெற்றது. 05-01-1967ல் பிரதமர் டட்லி சேனநாயக்காவால் நெவில் ஜயவீரா அவர்களை இயக்குனராகக் கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டு 1972க்குப் பின்னர் சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாக அது மாறியது. அத்துடன் 1973 முதல் சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சிறிலங்கா அரசாங்கத்தின் உடமையாகச் செயற்பட்டு வருகிறது. இவ்வாறாக இலங்கையின் வானொலியின் வளர்ச்சியில் அது காலத்துக்குக் காலம் இலங்கையை ஆளும் அரசாங்கத்தின் அரசியல் தன்மையைப் பிரதிபலிக்கும் தன்மையுள்ளதாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் ஒரு கலைஞன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிசெய்வது என்பது சுதந்திரமான ஒன்றல்ல. ஆகவே அரசாங்கத்தின் பரப்புரைகளைத் தனது குரலில் வெளிப்படுத்தும் கடமையைத் தான் பலரும் செய்யவேண்டிய நிலை. இந்த இக்கட்டான சூழலில் திரு. அப்துல் ஹமீத் அவர்கள் கத்தி விளிம்பில் நடக்கும் அவதானத்துடன் தன்னை வெளிப்படுத்திய அவரின் திறமையையும் நாம் பாராட்டியே ஆகவேண்டும்.

இறுதியாக திரு. பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களே உங்கள் தமிழ்ச் சகோதரர்கள் உங்களுக்கு அளிக்கும் இந்தப் பாராட்டு விழாவை தமிழீழத்தைத் தாயகமாகக் கொண்ட நாங்கள் இணைந்து ஒற்றுமையுடயன் நமது தாயகம் என்ற உணர்வுடனும் வளர்வதற்கான வித்தாக நீங்கள் மாற்ற வேண்டும். எங்களின் தேசியம் தாயகம், தன்னாட்சி என்ற பாதுகாப்பான அமைதிக்கான தன்மைகளை நாம் பெற்று எங்கள் தாயகத்தில் வாழும் அனைவரும் அரசியல் பொருளாதார சமூக முன்னேற்றங்களைப் பெறத் தூதுவராக நீங்கள் மாறவேண்டும் என வேண்டுகிறேன்.

உங்கள் குரல் தமிழ் வானொலிக்கு வளமூட்டிப் பலரை உருவாக்கித் தமிழில் வானொலி நிகழ்ச்சி நடத்துவது என்றால் அப்துல் ஹமீத் போல் செய்ய வேண்டும் எனத் தூண்டியது. அதுபோல உங்கள் தூதுப்பணி எங்கள் தாயகத்தின் விடுதலைக்கான இரு இனங்களினதும் உழைப்பைப் பலப்படுத்த உதவட்டும் என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

அதற்குப் பிறகு 'இளைஞர் மன்றம்' என்றொரு நிகழ்ச்சி. பள்ளியில் படித்துக் கொண்டே அந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்றேன். இளைஞர் மன்றத்தில் இருக்கும் சமயத்திலேயே பெரியவர்கள் நடிக்கக்கூடிய நாடகங்கள், உரைச் சித்திரங்களில் கலந்துகொள்ளும் எனது குரல் கனமாக இருந்ததன் காரணமாக நிலையக் கலைஞனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டேன். அந்த இளம் வயதிலேயே எனக்குக் கைநிறைய வருமானம் கிடைத்தது.

என்னுடைய மூத்த அறிவிப்பாளரின் ஆலோசனையின்படி பகுதிநேர அறிவிப்பாளராகவும் விண்ணப்பித்தேன். அதன் நேர்முகத் தேர்வுக்கு கட்டைக் கழிசானோடு போன என்னை அவர்கள் ஏற இறங்கப் பார்த்தார்கள். 'எங்கே நான் வழிதவறி வந்துவிட்டேனோ' என்றுகூட அவர்கள் நினைத்திருக்கலாம். என்றாலும், அறிவிப்பாளராக நியமனம் ஆனேன். வானொலியில் இளம் வயதில் அறிவிப்பாளர் ஆனவன் என்ற பெருமை எனக்குண்டு.



Apsaras
Music Group
546, Prince of Wales Avenue Colombo 14, Sri Lanka.
Tel: 423061. Fax: 94 1 501841.

M. Mohanraj
(Music Director)

என்றும் என் மதிப்பிற்குரியவர்...

நம்மவர் B.H. அப்துல் ஹமீத் அண்ணனுக்கு லண்டனில் பாராட்டுவிழா. இதை நினைக்கும் பொழுது எங்கள் உள்ளங்களில் ஏற்படும் உணர்வலைகளை வார்த்தையில் சொல்லிவிட முடியாது. அத்தனை மகிழ்ச்சி எங்கள் உள்ளங்களெங்கும் பரவுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஹமீத் அண்ணன் பற்றிய என் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள பாராட்டுவிழா நிகழ்ச்சி அமைப்பாளர் வழங்கிய இந்தச் சந்தர்ப்பத்தைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

என் தலைமையில் இயங்கும் "அப்சராஸ்" இசைக்குழுவைப் பற்றி இன்று உலகெங்கும் பரந்துவாழும் தமிழ் மக்களில் பெரும்பாலானர்களுக்குத் தெரியும். ஆனால் அன்று கொழும்பு வாழ் மக்களுக்கு மட்டுமே தெரிந்திருந்த எங்கள் "அப்சராஸ்" இசைக்குழுவை இலங்கை மக்கள் அனைவருக்கும் ஏன்... உலகத்தமிழ் மக்களுக்கும் அறிமுகப்படுத்தி வைத்த பெருமை ஹமீத் அண்ணனையே சாரும்.

"பாட்டுக்குப் பாட்டு" இந்த நிகழ்ச்சி பற்றித் தெரியாதவர்கள் இல்லை. அதன் தரம் அறியாதவர்களும் இல்லை. (இன்று அந்த நிகழ்ச்சி படும்பாடு வேறு விடயம்) இந்த "பாட்டுக்குப் பாட்டு" நிகழ்ச்சி சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தக சேவையில் முதன் முதலாக ஒலிபரப்பானது. எஸ். ராம்தாஸ், கே. சந்திரசேகரன் போன்ற கலைஞர்களின் ஒத்துழைப்புடன் ஹமீத் அண்ணன் இந்த நிகழ்ச்சியை சிறப்புற நடாத்தி வந்தார்கள். இந்தப் "பாட்டுக்குப் பாட்டு" நிகழ்ச்சி பற்றி நாங்கள் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுது சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிறது "பாட்டுக்குப் பாட்டு" நிகழ்ச்சி. மேடையில் எத்தனை இசைக்கலைஞர்கள் இசை வழங்குகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆனால் "பாட்டுக்குப் பாட்டு" நிகழ்ச்சி இலங்கையில் ஆரம்பித்த நாள், அன்று போல் இன்றும் பசுமையாக என் மனதில் பதிந்திருக்கிறது. ஹமீத் அண்ணன் தொகுத்து வழங்க இலங்கை வானொலி நிலையத்தின் ஆறாம் இலக்கக் கலையகத்தின் அன்றைய முன்னணிப் பாடகர்கள் சிலருடன் முதல் நிகழ்ச்சி அரங்கேறியது. அன்றைய நிகழ்ச்சிக்கு இசை வழங்கியது எனது தந்தையாராகிய ஆர். முத்துசாமி அவர்களுடன் இணைந்து பணிபுரிந்த ராசையா அண்ணன் (ஆர். வரதராஜா). அதன் பின்னர் நிகழ்ச்சிகளில் தொடர்ந்து எஸ். ரங்கன், மொஹமட் ஹுசேன் ஆகியோர் என்னுடன் இணைந்து கொண்டார்கள். நாங்கள் மூவர் மட்டுமே தொடர்ந்து இந்த "பாட்டுக்குப் பாட்டு" நிகழ்ச்சிக்க இசை வழங்கி வந்தோம். அந்த நாட்களில் இந்த நிகழ்ச்சி பற்றிய விமர்சனம் என்ன தெரியுமா? எத்தனையோ இசைக்கலைஞர்கள் வாங்கிய இசையை இவர்கள் மூவர் மட்டுமே வழங்குகிறார்களே! அதுதான் இலங்கை மக்களின் ஆச்சரியம். எங்களுக்குள் ஒரு திறமை இருந்தது. இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆனால் அதையெல்லாம் சரியான முறையில் வெளிக்கொண்டு வந்த பெருமை இன்று உங்கள் முன்னால் பாராட்டி கௌரவிக்கப்படும் ஹமீத் அண்ணனையே சாரும். யாரிடமாவது கொஞ்சம் திறமை இருக்கிறது என்று அவருக்குத் தெரிந்துவிட்டால், அந்தத் திறமையை வெளிக்கொண்டு வந்து பிரபலப்படுத்துவதில் அவருக்கு நிகர் அவர்தான். எந்த மாகாணத்தைச் சேர்ந்தவர், எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்ற வேறுபாடு இல்லை. திறமைதான் அவருக்கு முக்கியம்.

பிரபல பாடகர் S.P. பாலசுப்பிரமணியம் முதன் முதலாக இலங்கை வந்திருந்த சமயத்தில் நான் இசை வழங்கிய "பொன்னை விரும்பும் பூமியிலே..." என்ற பாடலைக் கேட்டிருக்கிறார். அந்தப் பாடலுக்கு இசை வாங்கியது யார்? அவரை நான் பார்க்க வேண்டும் என்று ஹமீத் அண்ணனிடம் கூறியிருக்கிறார். ஹமீத் அண்ணன் S.P. பாலசுப்பிரமணியம் பங்குபற்றிய இசை நிகழ்ச்சியின் இடைவேளையில் என்னை அவருக்கு அறிமுகப்படத்தி வைத்தார். S.P.பாலசுப்பிரமணியம் என்னை வெகுவாகப் பாராட்டினார். குறிப்பிட்ட அந்தப் பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்ட

பூபாளராகங்கள் ஆண்டுதோறும் நடைபெறுகின்றது. பாடசாலைக்கு உதவும் பணியில் ஒத்துழைப்பு வழங்க விரும்புவோர் கீழுள்ள முகவரிக்குத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

யாழ்/கம்பர்மலை வித்தியாலயம் — கொம்மந்தறை
பழைய மாணவர் சங்கம் — ஐக்கிய இராச்சியம்
வழங்கும்

பூபாளராகங்கள் 2004

14 — 08 — 2004
சனிக்கிழமை மாலை 5 மணிக்கு



KAMPARMALAI VIDYALAYAM ALUMNI ASSOCIATION
35, SYCAMORE GARDEN
MITCHAM
SURREY CR4 3QP, UK

வானொலியில் வெறும் அறிவிப்பாளனாக இல்லாமல், ஒலிபரப்பின் பல்வேறு துறைகளையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. அதற்கான வாய்ப்புக்களும் தானாகவே என்னைத் தேடி வந்தன. அந்த வகையில், நேர்முக வர்ணனையாளனாக, செய்தி வாசிப்பவனாக, நாடகங்களைத் தயாரிப்பவனாக, பல்வேறு சஞ்சிகை நிகழ்ச்சிகளை உருவாக்குபவனாக நான் பல்வேறு அவதாரங்களை எடுக்க முடிந்தது. இந்தச் சமயத்தில், இலங்கை வானொலி பற்றிய சில பெருமைக்குரிய தகவல்களையும் நான் குறிப்பிட வேண்டும்.

கலையகத்தில் "பியானோ" மட்டுமே இருந்தது. "பொன்னை விரும்பும் பூமியிலே..." எனும் திரைப்படப் பாடலை நீங்கள் கேட்டிருப்பீர்கள். பாடலின் இடையிசையை பியானோவில் இசைப்பது மிகவும் கடினம். பியானோவின் ஒலி எப்பொழுதும் தொடராக வராது. ஆனால் அந்தப் பாடலுக்கான இடையிசையை பியானோவின் மூலம் நான் வழங்கியது, வழங்கியமறை S.P. பாலசுப்பிரமணியம் அவர்களைக் கவர்ந்திருக்கிறது. அதுமட்டுமல்ல என்னை நேரில் சந்தித்துப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதே... அதை என்னவென்று சொல்வது. S.P. பாலசுப்பிரமணியம் ஒரு இமயம்... நாங்கள் எங்கே. எங்கள் இருவருக்கும் இடையில் நல்லதொரு நட்பை உருவாக்கி வைத்த பெருமை ஹமீத் அண்ணனையே சாரும்.



1989ம் ஆண்டு S.K. ராஜெனின் ஏற்பாட்டில் பிரான்ஸில் நடைபெற்ற கலையமுதம் நிகழ்ச்சியில் அறிவிப்பாளர் ஹமீத் அண்ணாதான். அவர் அங்கு இப்படிக் குறிப்பிட்டார். இதுவரை மோகன்ராஜக்கே தெரியாத ஒரு விசயத்தை இந்த மேடையில் தெரிவிக்கப்போகிறேன். தம்பி மோகன்ராஜ் இசையமைத்த சில பாடல் மெட்டுக்களைக் கேட்ட S.P.பாலசுப்பிரமணியம் இப்படிக் கூறினார். அதை அப்படியே கூறுகிறேன். இந்தியாவில் இருக்கக்கூடிய "கீபோர்ட்" பிளேயர்களுக்குள் மூன்று நான்கு பேர்தான் வெகுசிறப்பாக வாசிக்கக்கூடியவர்கள் என்று சொல்ல முடியும். அந்த வரிசையில் மோகன்ராஜைச் சேர்க்கலாம். அத்தனை லாவகமாக வாசிக்கிறார். மோகன்ராஜ் இசையமைத்த மெட்டுக்கு நான் பாடவேண்டும் என்று கூறியதாக பகிரங்கமாக அறிவித்தார். புலம்பெயர்ந்து வாழும் எம்மக்கள் மத்தியில் எங்களுக்குத் தனியானதோர் அந்தஸ்த்தைப் பெற்றுத்தந்தார் ஹமீத் அண்ணன். பார்த்தீர்களா பாராட்டுக்களை பகிரங்கமாக அறிவித்து கலைஞர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவிப்பதில் ஹமீத் அண்ணனுக்கு நிகர் அவரேதான்.

"பாட்டுக்குப் பாட்டு" நிகழ்ச்சிப் போட்டியாளர் எந்தப் பாடலைப் பாடினாலும் அந்தப் பாடலுக்கு நாங்கள் உடன் இசை வழங்கவேண்டும். அப்படியே இசை வழங்கினாலும் அத்தனை பாடல்களும் ஏற்கனவே இசையமைக்கப்பட்ட திரையிசைப் பாடல்கள். ஆனால் ஹமீத் அண்ணன் "இசைக்கோலம்" எனும் ஒரு நிகழ்ச்சியை வானொலியில் தயாரித்து வழங்கினார். அந்த நிகழ்ச்சிக்கும் இசை நாங்கள்தான். அந்த நாட்களில் ஹமீத் அண்ணனின் ஆஸ்தான இசைக்குழு என்று தான் எங்களை எல்லோரும் சொல்வார்கள். ஆம், அவர் நடத்தும் இலங்கைக் கலைஞர்கள் பங்குபற்றம் எந்த இசை நிகழ்ச்சியாக இருந்தாலும் இசை நாங்கள்தான். இந்த "இசைக்கோலம்" நிகழ்ச்சியில் புதிய புதிய முயற்சிகளை நாம் மேற்கொண்டோம். புதிய முயற்சிகள் என்று சொல்லும் பொழுது அது சாதாரணமல்ல... சாதனைகள் என்று தான் சொல்ல வேண்டும். பாரதியாரின் பாடல்கள், சில்லையூர் செல்வராஜன் போன்ற இலங்கைக் கவிஞர்களின் பாடல்கள் என எத்தனையோ பாடல்களுக்கு நாங்கள் இசையமைத்துள்ளோம். அதில் குறிப்பாக பாரதியாரின் மழைப்பாடலுக்கு நாங்கள்

தமிழ் உச்சரிப்பால்
தமிழ் நாதமாய் விளங்கும்
அன்பு அறிவிப்பாளர்
அப்துல்ஹமீத்துக்கு வாழ்த்துக்கள்

சிவயோகம்

திருமண வைபவங்கள்
நூல் வெளியீடுகள்
பொதுக் கூட்டங்கள்
நடாத்திட நல்லதோர் மண்டபம்

வசதிகள் பலவுண்டு
விசாரித்து விபரங்கள் அறிந்திட

020 8767 9881

சிவயோகம்
திருமண மண்டபம்

180-186 UPPER TOOTING ROAD,
TOOTING
LONDON SW17 7EJ
email:info@sivayogam.plus.com
web:www.sivayogam.co.uk

வானொலி கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து வருடங்களுக்குள்ளேயே, இலங்கையில் வானொலிச் சேவை ஆரம்பமாகி விட்டது. வர்த்தக ஒலிபரப்பு என்கிற அம்சத்திற்கு நதி மூலமாக, முன்னோடியாக அமைந்ததும் இலங்கை வானொலிதான். எவரெஸ்ட் சிகரத்திலே கூட கேட்கக்கூடிய ஒரே ஒரு வானொலி என்று கின்னஸ் புத்தகத்தில் இலங்கை வானொலி பற்றிப் பதிவு செய்திருக்கிறார்கள்.

எங்கள் வானொலி வழங்கிய பல்வேறு ஒலிபரப்புக்களில் நாங்கள் அறிமுகப்படுத்தின நிகழ்ச்சிகள்தான் தமிழகத் தொலைக்காட்சிகளில் புகழ் பெற்று விளங்கிய நிகழ்ச்சிகளுக்கு ஆதாரமாக அமைந்தன. பாட்டுக்குப் பாட்டு, வார்த்தை விளையாட்டு போன்ற நிகழ்ச்சிகளை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். டாப் 10 என்ற பெயரில் பாடல்களை வரிசைப்படுத்துகிற நிகழ்ச் சியை, 30 ஆண்டுகளுக்கு முன்னரே 'இசை அணித் தேர்வு' என்ற பெயரில் நாம்தான் அறிமுகப்படுத்தினோம்.

இசையமைத்ததைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இந்தப் பாடலுக்கு இசை மிகப்பிரமாதமாக அமைந்தது. மழைக் காட்சியைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தியது. ஹமீத் அண்ணன் எங்கள் திறமைக்கு இலங்கை மக்களின் அங்கீகாரத்தையும் பேரபிமானத்தையும் பெற்றுத் தந்தார்.

அதுமட்டுமல்ல இன்னொரு சந்தர்ப்பத்தில் கவியரசு கண்ணதாசனின் ஒரு கவிதையை என்னிடம் தந்து "இது ஒரு பழைய பாடல். இசைத்தட்டு உடைந்துவிட்டது. மெட்டு எப்படி என்று தெரியாது. இந்தப் பாடலை இசையமைத்துப் பாடுங்கள்" என்று ஹமீத் அண்ணன் என்னிடம் சொன்னார். நானும் இசையமைத்துப் பாடினேன். பாடல் நன்றாக அமைந்தது. "இசைக்குயில்" சுசீலா அம்மா பாடிய "நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி..." எனும் பாடலின் கவிதை வரிகள்தான் அது என்பது எனக்கு அப்புறம்தான் தெரியவந்தது. பார்த்தீர்களா ஹமீத் அண்ணன் எங்கள் திறமைப் பசிக்குத் தீனி போட்ட அழகை. இது மட்டுமல்ல இன்னும் எத்தனையோ சந்தர்ப்பங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஒவ்வொரு ஒலிபரப்பின் போதும் (ஆம்... அது நேரடியாக ஒலிபரப்பான நிகழ்ச்சிதான்) பரீட்சை மண்டபத்திற்குள் நுழையும் மாணவனின் நிலையில் தான் நான் இருப்பேன். அவர் என்ன சிந்தனையோடு வருவார், என்ன சொல்லுவார், எந்த முறையில் நிகழ்ச்சி அமையவேண்டும் என்று சொல்லுவார். அவரது கற்பனைகளை இசைக்கோலங்களாக வடிக்கவேண்டும். அதுவும் எங்களுக்குத் தரப்படும் நேரம் மிகச் சொற்பமே. அவசரமாகப் போட்டாலும் அத்தனையும் சிறப்பான இசைக்கோலங்களே. இந்த இசைக்கோலங்கள் சிறப்பாக அமைவதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அந்த நிகழ்ச்சியின் ஒலிப்பதிவாளர் (ஒலிக்கட்டுப்பாட்டாளர்). அவர் வேறு யாருமல்ல, ஹமீத் அண்ணன் தான். இலங்கை வானொலி நிலையத்தில் இருந்த பழங்கால ஒலிப்பதிவுக் கருவிகளைக் கொண்டு சிறப்பான முறையில் இசை நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்வார். எத்தனையோ மெல்லிசைப் பாடகர்கள் தங்கள் பாடல்களின் ஒலிப்பதிவுகளுக்கு ஹமீத் அண்ணன் தான் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்ட சந்தர்ப்பங்கள் எத்தனையோ உண்டு.

நாங்கள் பாடல்களுக்கு இசையமைக்கும் எத்தனையோ சந்தர்ப்பங்களில் "இப்படிச் செய்தால் நன்றாக இருக்கும்" என்று சொல்லுவார். உண்மையில் அவர் சொன்ன திருத்தங்களைச் செய்த பின்னர் அந்தப் பாடல்கள் இன்னும் மெருகேறும். அத்தனை நுணுக்கமான திருத்தங்களைச் சொல்வார். நேர்த்தியான இசையமைப்பாளருக்குக் கூட இல்லாத திறமை என்றுதான் சொல்ல வேண்டும்.

அதிகமானோர் ஹமீத் அண்ணனை ஒரு அறிவிப்பாளராக மட்டுமே அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர் ஒரு நல்ல பாடலாசிரியர். "இறைதாஸன்" எனும் புனைபெயருக்குள் மறைந்துகொண்டு அவர் இயற்றிய பாடல்கள் எத்தனையோ. அவற்றுள் நான் இசையமைத்துப் பாடிய

"ஓ... வசந்தமே...வா இசைந்து வா..."

"தள்ளாடும் மேகம் ஒன்று திண்டாடும் வானில் நின்று..."

"தள்ளாடும் மேகம்..." எனும் பாடலைப் பற்றிச் சொல்லியே ஆகவேண்டும். நான் இசையமைத்த சிங்களத் திரைப்படத்தின் பாடலொன்றைக் கேட்ட ஹமீத் அண்ணன், அந்த மெட்டுக்குத் தான் எழுதித் தரும் தமிழ்ப் பாடலைப் பாடவேண்டும் என்ற அன்புக் கட்டளையிட்டார். கரும்பு தின்னக் கூலியா வேண்டும். அந்த மெட்டுக்கு அவரது பாடலைப் பாடினேன்... பாடிக்கொண்டேயிருக்கிறேன். ஆம், ஐரோப்பிய நாடுகளில் கூட எல்லா மேடைகளிலும், இந்தப் பாடல்களைப் பாடி மக்களின் அபரிமிதமான பாராட்டுக்களைப் பெற்றுள்ளேன்.

ஹமீத் அண்ணன் நல்ல தாள ஞானம் மிக்கவர், ஸ்ருதி பேதம் தெரிந்தவர். நன்றாகப் பாடக்கூடிய ஆற்றல் மிக்கவர். ஒருமுறை "இசைக்கோலம்" நிகழ்ச்சியில் அவரை வற்புறுத்திப் பாடவைத்தோம். J.P. சந்திரபாபுவின் "பிறக்கும் போதும் அழுகின்றான். இறக்கும் போதும் அழுகின்றான்..." எனும் பாடலைப் பாடினார். நன்றாகவே பாடினார்கள். எத்தனை சிறப்புமிக்க இசைக்கோலங்களின் பதிவுகள் எத்தனையோ இன்று இல்லை. அது காலத்தின் கோலம்.

எங்கள் நாட்டைச் சேர்ந்த எங்கள் சொத்தான ஹமீத் அண்ணன் இன்று பாரதத்தின் சொத்தாக மாறிக்கொண்டிருக்கிறார். ஒரு கலைஞனை ரசிகர்கள் போற்றிப் பாராட்டுவது சாதாரணமாக நிகழக்கூடியது. ஆனால் இலட்சக்கணக்கான மக்களின் அபிமானம் வென்ற தமிழ்நாட்டுக் கலைஞர்களின் அபிமானம் வென்றவர் நமது ஹமீத் அண்ணன்.

ஹமீத் அண்ணன் நடிகராக, கவிஞராக, நாடகத் தயாரிப்பாளராக இன்னும் எத்தனை அவதாரங்கள் எடுத்தாலும் அறிவிப்பாளர் எனும் அவதாரமே அவருக்கு மகோன்னதப் புகழைப் பெற்றுத் தந்திருக்கிறது. இன்று இந்தியாவில் எத்தனையோ தொலைக்காட்சிச் சேவைகள் (ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் தொலைக்காட்சிகள் உட்பட) அவரது குரலை அவரது தமிழைப் பயன்படுத்திக் கொள்ளப் போட்டி போடுகின்றன. இது இலங்கைத் தமிழ் மக்களுக்கு மாத்திரம் பெருமை இல்லை உலகெங்கெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமைதான். உலகத்தமிழர்களின் அபிமானம் வென்ற என்றும் என் மதிப்பிற்குரிய ஹமீத் அண்ணன் பாராட்டப்படும் இவ்வேளையில் இன்றுபோல் என்றும் உலகத்தமிழர்களின் அபிமானம் வென்ற தமிழனாய் பன்னெடுங்காலம் வாழ வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பத்மஸ்ரீ விருது அறிவிக்கப் பட்டதற்காக சமீபத்தில் வைரமுத்து அவர்களை வாழ்த்தினேன். வாழ்த்திய உடனேயே 'உங்களைப் போன்ற வர்களுக்கும் இந்த வெற்றியில் பங்குண்டு' என்றார் அவர். நான் நடத்திய இசை அணித் தேர்வு என்ற நிகழ்ச்சியில் தான், அவரது முதல் பாடலான 'பொன்மாலைப் பொழுது' தொடர்ந்து 52 வாரங்கள் முதல் நிலையில் நீடித்ததோடு அந்த ஆண்டின் சிறந்த பாடலாகவும் ஒலித்து, ஒரு புதிய கலைஞனுக்கு வெளிச்சத்தைத் தந்தது' என்று அவர் குறிப்பிட்டபோது, மகிழ்ச்சியாக இருந்தது.

எங்கள் வானொலியில் புதிய புதிய நிகழ்ச்சி வடிவங்களை உருவாக்குமாறு தூண்டிக்கொண்டே இருப்பார்கள். அந்தத் தூண்டுதலால், பல வித்தியாச மான, பரீட்சார்த்த முயற்சிகளைச் செய்துபார்க்க முடிந்தது.

பிரியத்துக்குரிய
அன்பு அறிவிப்பாளர்
பீ. எச். அப்துல்ஹமீத் அவர்களுக்கு
எமது வாழ்த்துக்கள்

பிறைன்டன் வீடியோ விஷன்

பிரியமான நடிக நடிகைகளின்
திரைப்படங்களின், தொலைக்காட்சி
நாடகங்களின்
சிறப்பான பிரதிகள்
வாகைக்கும் – விற்பனைக்கும்
இருக்கும் இடம்

தரமான DVD,VCD, AUDIO CD, AUDIO CASSETTE
TV, VCR உதிரிப்பாகங்கள், திருத்தவேலைகள்
அனைத்திற்கும் உகந்த இடம்.

BRINDEN VIDEO VISION

76, Hoe street, Walthamstow,
London e17 4pg
Tel: 020 8520 5403 Mobile: 07733 353 218
CONTACT : BRINDEN BEN

வைபவங்களின்
வீடியோ படப்பிடிப்பு ஒலியமைப்பு
"DJ & SOUND SERVICE"
ஏழு நாட்களும் சேவை வழங்குவோர்

ஈழத்து மெல்லிசை வளர்ச்சியில் பங்காற்றியவர் பீ.எச். அப்துல் ஹமீத்

க.பாலேந்திரா ஆனந்தராணி பாலேந்திரா

உலகெங்கும் வாழும் தமிழர்கள் மத்தியில், இலங்கைத் தமிழர்களுக்கு பெருமை சேர்ப்பவர், 'கலைஞானிதன்' பீ.எச். அப்துல் ஹமீத் அவர்கள். ஒலிபரப்புத் துறையில் - அறிவிப்புத் துறையில் இவரது பாணி ஒரு தனி. இவரை மானசீகக் குருவாகக் கொண்டு பின்பற்றுபவர்கள் சிலர். இவரைப் பிரதி செய்பவர்கள் பலர். இருந்தும், பல தசாப்தங்களாக இலங்கையிலும், தமிழகத்திலும், மற்றும் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான நேயர்களின் அபிமானத்துக்குரிய அறிவிப்பாளராக இன்றும் திகழ்பவர் அப்துல் ஹமீத் அவர்கள்.

குரல்வளம் மட்டுமல்லாது, ஒலிபரப்புக்கலை பற்றிய துல்லியமான அறிவு, தமிழறிவு, நுண்ணறிவு, இசைஞானம், அபார ஞாபகசக்தி, சாமர்த்தியம், நகைச்சுவை உணர்வு, கடும் உழைப்பு, செய்நேர்த்தி ஆகிய அனைத்து நல்ல குணாம்சங்களும் ஒருங்கிணையப்பெற்ற தனித்துவமான கலைஞர் இவர். இளம் கலைஞர்களைத் தட்டிக்கொடுத்து ஊக்குவிப்பவர். இலங்கை வானொலியில் ஈழத்துக் கலைஞர்களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்குபவர். ஈழத்து மெல்லிசை வளர்ச்சியில் பங்காற்றியவர்.

எழுபதுகளில், இலங்கை வானொலியில் அப்துல் ஹமீத் அவர்களுடன் பணியாற்றிய காலங்கள் 'கோமாளிகள்' திரைப்படத்தில் இவருடன் இணைந்து நடித்த பொழுதுகள் மகிழ்ச்சிகரமானவை. பழகுவதற்கு மிகவும் இனிமை யானவர். நல்ல பண்பாளர்.

இவரது பணி பல்லாண்டுகள் தொடர எமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகிறோம்.



குறிப்பாக, நாடகத் துறையிலே எனக்கு மிகுந்த ஈடுபாடிருந்தது. நடிப்பு என்பது மூச்சாகவே இருந்தது எனலாம். அறிவிப்பாளனாக மட்டுமின்றி, வானொலி நடிகனாகவும் நான் இருந்தேன். நாடகத்தில் இருந்த ஆர்வத்தினால், பல புதுமையான விஷயங்களை அத் துறையில் முயற்சி செய்துபார்க்க முடிந்தது.

இசையிலும் மிக இளம் வயதிலிருந்தே எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. கர்நாடக இசையையும் ஓரளவுக்குக் கற்றேன். ஆனால், ஸ்ருதியோடு என்னால் பாடமுடிய வில்லையே என்கிற மனக்குறை எப்போதும் இருந்தது. தாழ்வு மனப்பான்மை என்றுகூடச் சொல்லலாம். என்றாலும் மற்றவர்கள் பாடுவதை அதிகமாக ரசிப்பேன். அந்த ரசனையின் காரணமாகத்தான் பாடத் தெரிந்தவர் களை ஊக்கப்படுத்தும் பொருட்டு, பல இசை நிகழ்ச்சிகளை நடத்தினோம். இசைக் கோலங்கள், இசையும் கதையும் போன்ற வித்தியாசான நிகழ்ச்சிகளைத் தயாரித்தோம். இலங்கை வானொலியில் நாங்கள் அறிமுகப்படுத்திய 'தமிழ் பாப் இசை' அப்போது இலங்கையையும் தாண்டி, தமிழகத்திலும் மிகப் பிரபலமாக இருந்தது. 'சின்ன மாமியே, உன் செல்ல மகள் எங்கே?', 'கள்ளுக் கடைப்பக்கம் போகாதே' போன்ற பாடல்களெல்லாம் பைலா இசைப்பாணியில் இளைஞர் களை வெகுவாக விரைவில் கவர்ந்திழுத்துவிட்டன.

அன்பிற்கினிய அறிவிப்பாளர்
அப்துல் ஹமீத் அவர்களுக்கு
அன்பு நிறைந்த வாழ்த்துக்கள்

அபிரா

சுப்பர் மார்க்கெற்

அனைத்து மளிகைப்பொருட்கள்
அருந்த உகந்த பானங்கள்
அன்றாடம் ருசிக்க கடல் உணவுகள்
அனைவரும் விரும்பும் மரக்கறிகள்
அன்றாடம் ஊரோடு உறவாட
அனைத்துவகை தொலைபேசி அட்டைகள்

ABIRAA SUPER MARKET
39, Palmerston Road,
WALTHAMSTOW
Tel: 020 8520 5011

ஹமீதுக்கு எங்கள் வாழ்த்துக்கள்

1966ம் ஆண்டு பங்குனி 21ம் திகதி இலங்கை வானொலி வர்த்தக சேவையில் கடமை புரிய தெரிவு செய்யப்பட்ட முதல் தமிழ் பெண் பகுதி நேர அறிவிப்பாளர்களில் நானும் ஒருத்தி. மற்றவர் சகோதரி புவனா. அந்த நேரம் நான்கே நான்கு ஆண் அறிவிப்பாளர்கள் மட்டுமே வர்த்தக சேவையில் கடமை புரிந்து கொண்டு இருந்தார்கள்.

திரு.எஸ்.பி. மயில்வாகனம், தி.எஸ்.கே. பரராஜசிங்கம், திரு. ராஜகுருசேனாதிபதி கனகரட்னம், திரு, சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் ஆகியோரே. எம்மோடு இணைந்த ஆண் பகுதி நேர அறிவிப்பாளர்கள் திரு. கே.எஸ் சிவகுமாரன், திரு.கே.எஸ். ராஜா ஆகியோர். பின் அடுத்தடுத்த ஆண்டுகளில் வர்த்தகசேவையில் பணியாற்ற தெரிவு செய்யப்பட்டார்கள். திரு. பீ.எச். அப்துல் ஹமீத், நடராஜசிங்கம், ராஜேஸ்வரி சண்முகம், ஆகியோர். பீ.எச். அப்துல் ஹமீத் வர்த்தக சேவை அறிவிப்பில் இணைய முன் முஸ்லீம் நிகழ்ச்சி நாடகங்கள், கல்விச்சேவை நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வந்தார்.

ஆம் சுரங்கச் சொல்லப் போனால் பீ.எச். அப்துல் ஹமீததை இன்று நேற்று அல்ல 35 ஆண்டுகளுக்கு மேலாகத் தெரியும். அவரின் கணீரென்ற குரலும், இடைவிடாத ஊக்கமும், பண்பான பழக்க வழக்கங்களுமே இன்று அவரை சிறந்த அறிவிப்பாளராக ஆக்கியுள்ளது. ஹமீத்துக்கு உலகளாவிய ரீதியில் கிடைத்த பெருமை இலங்கை வானொலி தமிழ்ச்சேவைக்கும், ஈழத்தமிழருக்கும் கிடைத்த பெருமை என்றே சொல்ல வேண்டும்.

அவருக்கு சகல விதத்திலும் உறுதுணை வழங்கும் அவரின் பண்பான மனைவி சசிக்கும் எங்கள் அன்பை தெரிவிக்க விரும்பும் இவ்வேளையில், அப்துல் ஹமீத் இன்று போல் என்றும் சுகமோடு வாழ மனதார வாழ்த்துகிறோம்

அன்புடன்

யோகா தில்லைநாதன்



நாடகங்கள், சஞ்சிகை நிகழ்ச்சி களுக்கு மத்தியில் என்னை ஆசுவாசப் படுத்திக் கொள்ளத்தான், பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியை வடிவமைத்தேன். மூன்று மாதங்கள் மட்டும் நடத்து வதாகத்தான் திட்டமிட்டிருந்தோம். ஆனால், 28 வருடங்களைக் கடந்து, இன்றும் வெற்றிகரமாக இந்நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியில் 'அந்தாக்ஷரி' ஆரம்பிக்கப் பட்டதற்கு மூலகாரணமாக அமைந்ததும் 'பாட்டுக்குப் பாட்டு' நிகழ்ச்சி என்பது பலருக்குத் தெரியாது. இந்நிகழ்ச்சியின் வெற்றிக்குக் காரணம், இதன் மூலம் வெளிச்சத்திற்கு வந்த திறமையாளர்கள்.

தமிழ்க் கலைஞர்களின் புகழை
தரணியெங்கும் உரைக்கும்
தமிழ்ச் சிங்கமே சிம்மக் குரலோனே
தமிழ் வாழும்வரை தங்கள் புகழ் வாழ
தமிழ் பிறசெறியின் நல்வாழ்த்துக்கள்!

**தமிழ் உணவு வகைகள் அனைத்தும்
தரமான சுவையில்,
குடும்பத்தோடு சுவைக்கவும்
தாங்கள் விரும்பும் சிற்றுண்டி, குளிர்பானம்
தமிழ் மணம் கமழும்
தேநீர் — கோப்பி அருந்திடவும்
தங்களின்
திருமண — பிறந்தநாள் — பூப்புனிதநீராட்டு
விழாக்களுக்கு
தரம்மிக்க உணவுவகைகள்
தயாரித்துப் பரிமாறிடவும்**

Tamil Brassiere

அனுபவம் மிகுந்த சமையலாளர்களின் கைவண்ணத்தில்
தினமும் தயாராகும் உணவு வகைகள் கிடைக்குமிடம்

247, Northolt Road,
South Harrow, Middlesex HA2 8HR.

**ஓடர்கள் தொலைபேசியில் வழங்கிடலாம்
அழுத்துங்கள்**

020 8864 6598

நானிலத்தில் இவன் தனி

கந்தையா இராஜமனோகரன் சசிகலா இராஜமனோகரன்

எல்லோர்க்கும் பொதுவான இறைவன் என்றே
எல்லோர் மனதையும் கட்டிடுவான் இவன்
சொல்லேற்கும் படியென்றும் சுவைக்கச் சொல்வான்
தூய தமிழ் வல்லான் சுவை நா வுள்ளான்!

இலங்கையிற் சுவைத்தான் இனி இல்லை யென்று
ஏங்கியோர் தமக்காய் உலகை வலம் வந்தான்
துலங்கினான் என்றும் தூய செந்தமிழ் பேசித்
தூக்கினான் ஈழத் தமிழரின் தமிழை!

நாற்பதைக் கடந்து நடைபோடும் தமிழ்ப் பணி
நல்ல தமிழ் வாழும் நானிலத்தில் இவன் தனி
நாற்றிசை பரவிய நற்றமிழின் புகழ் அணி
நமது அப்துல் ஹமீதிற்கு நாளும் இவை மணி!

வானொலி வானொளி வரும் அலை யெல்லாம்
தேனொலி யாகத் தெள்ளிய தமிழ் மொழி
மேனிலை அடைய விளங்கினான் அப்துல்
தானிலை உணர்ந்ததைத் தரணிக்கும் அளித்தான்.

பயிற்சியே வளர்க்கும் பாரில் ஊடகத்தை
உயர்ச்சியை அளிக்கும் என்பதை உணர்ந்து
பயிற்சிப் பட்டறை பல வைத்துத் தமிழர்
பயிற்சியிற் சிறக்கப் பணிபல செய்வோன்.

இவனிடம் கற்க இளையவர் தமக்கும்
இன்றைய ஊடகத் துறையினர் தமக்கும்
தவமெனக் கண்டவை பற்பல உண்டே
தானெனும் ஆணவம் தவிர்த்துமே பயில்க.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை
ஆளா இல்லை அருந்தமிழர் ஊடகத்தைக்
கோலமுற அமைப்பதற்குக் கொள்க இவர் பட்டறையே
கொண்டால்(த்) தமிழ் வாழும் கொண்டவர் புகழ் உயரும்.

மலையளவு உயர்ந்தோன் மடுவிலே நின்று
நிலை குலைந் திடாமல் நீட்டினாற் கையை
வலையெனப் பற்றி வானிலே ஒளிர
நிலை செய்திடுவான் நீள்புகழ் கண்டோன்.

வீட்டுக்கு வீடு வாசற் படி - இதை
விளங்கிய குடும்ப மோர் ஏணிப் படி
வேட்டுக்கு வேட்டு என்ற படி - இன்று
விரைந்திடும் உலகம் வீழும் படி

நாட்டுக்கு நாடு ஏறிப் படி - இவன்
நல்ல தமிழ் மகள் வாழும் படி
பாட்டுக்குப் பாட்டு என்றா னடி - என்றும்
பாட்டாலே எம்மை இணைத்தா னடி

என்றும் எங்கும் எழில் தமிழ் வாழ
நன்றே உழைத்திடும் நமதன்பின் அப்துல் ஹமீத்
இன்னும் பல்லாண்டு இனிதே நீ வாழ
எல்லோர்க்கும் பொதுவான இறைவன் அருள் புரிவான்!

இனிய நல்வாழ்த்துக்கள்!

மீனவர்களின் வாழ்க்கையைப் பதிவு செய்த 'மீனவ நண்பன்', 'கிராமத்தின் இதயம்' போன்ற நிகழ்ச்சிகள் மிகுந்த மனநிறைவைத் தந்தன.

ஒலிபரப்பில் பல்வேறு துறைகளை அறிமுகப்படுத்தும் 'General Radio Course' என்ற சிறப்புப் பயிற்சிக்கான வாய்ப்பு, 85–ம் ஆண்டு என்னைத்தேடி வந்தது. ஒரு வானொலி நிலையத்தையே தலைமையேற்று நடத்தக் கூடிய முழுமையான பயிற்சி அது. அந்தப் பயிற்சிக்காக, நெதர்லாந்து வானொலி நிலையத்திற்குப் பயணப்பட்ட போது, 'நாம்தான் பதினேழு ஆண்டுகள் ஒலிபரப்புத் துறையில் இருக்கிறோமே, புதிதாக என்ன கற்றுக் கொள்ளப் போகிறோம்?' என்ற உணர்வுதான் இருந்தது. ஆனால், அங்கே சென்ற பிறகு கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் ஆயிற்று. கல்விக்கு கரையில்லை என்பார்களே, அதை அப்போதுதான் முழுமையாக உணர்ந்தேன்.

எங்கெல்லாம் தமிழ் நிகழ்ச்சிகள் நடைபெறுகிறதோ
அங்கெல்லாம் அமுதத் தமிழ் முழங்கும்
அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அவர்களுக்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

EVEREST CURRY KING

BREAKFAST - LUNCH - DINNER

எவ்வகை உணவானாலும்
ஏற்ற முறையில் தயார்செய்து
எப்பொழுதும் பரிமாறுவோர்

நண்பர்கள் விருந்தினர்கள் சகிதம்
நாள்தோறும் நாடிடலாம்

திருமணம் — பிறந்தநாள் மற்றும்
கொண்டாட்டங்களுக்கு வேண்டிய
உணவு வகைகள் உரிய நேரத்தில்
தயாரித்துத் தருவோர்

தாயக — தமிழக உணவுகள்
நித்தமும் சுவைத்திட

EVEREST CURRY KING

24, LOAMPIT HILL,
LEWISHAM SE13 7SW.
TEL: 020 8691 2233
SEA FOOD & VEGETARIAN SPECIALIST

Kamalini Selvarajan
(B.A.Hons. 1st Class, Mass Communications, Fine Arts, Languages)
M 3/4, Anderson Flats, Park Road, Colombo-05. Phone: 583969

வான் அலைகளை வசம் செய்த வல்லவர் வாழ்க!

தான் தேர்ந்தெடுத்த துறையின் சிகரத்தில் ஏறும் கலை சிலருக்குத்தான் கைவரும். 'உங்கள் அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத்' - அண்ணா- அத்தகு கலைவல்லாளர். என் உடன்பிறவா அண்ணர்.

எனக்கு 'செஸ்' விளையாட்டில் நிறைய ஆசை. ஆனால் விளையாடத் தெரியாது. மறைந்த என் கணவர் சில்லையூர் செல்வராசன் நன்றாக விளையாடுவார். மணித்தியாலக் கணக்காக நீளும் விளையாட்டு. சலிப்பதில்லை. ஒவ்வொரு அசைவும் நிதானமாக - யோசித்து - வரக்கூடிய எதிர்ப்பக்கத் தடைகளை உணர்ந்து பாதுகாப்பாக, விழுந்துவிடாமல், தரிக்காமல் நிதானமாக வெற்றிக்காக முன்னேறும் விளையாட்டு. இந்த விளையாட்டுப் போல, ஒலிபரப்புத் துறையில் ஹமீத் அண்ணா முன்னேறியது இப்படித்தான். நிதான முன்னேற்றம். எதிர்ப்பக்கம் தரும் தடைகளைக் கவனமாகக் களைந்தபடி சென்ற முன்னேற்றம்.

ஹமீத் அண்ணாவை முதலில் நான் கண்டபோது எனக்குப் பன்னிரண்டு வயது. நானும் எனது தம்பி 'திரு'வும் ஒரு 'டொபி' விளம்பரத்துக்குக் குரல் கொடுக்கச் 'சில்லையூர் மாமா'வோடு போயிருந்தோம். ஒரு கையால் காதைக் பொத்திக் கொண்டு குரல் கொடுத்த ஹமீத் அண்ணா எனக்கு அதேவிதமாக இன்னும் ஞாபகத்தில் இருக்கிறார். 'சில்லையூர் மாமா'வோடு கதைத்து விட்டுப் போய்விட்டார். 'ம் பெரிய பெருமைக்காரர்' என்று அப்போது நினைத்துக் கொண்டேன்.

'சில்லையூர் மாமா' என் கணவராகிய பின் நடந்த ஒரு சம்பவம் என் மனதில் இன்னும் பசுமையாக இருக்கிறது. 'சில்லையூர் அத்தான்' - கவிஞர். ஆனால், எதையாவது எழுதவைக்க யாராவது உசுப்ப வேண்டும்.

ஷேக்ஸ்பியரின் 420 ஆண்டுத் தொடர் நிறைவு விழாவுக்காக 'உங்கள் அன்பு அறிவிப்பாளர் ஹமீட்' விசேஷ நிகழ்ச்சி செய்யும்படி பொறுப்பை வழங்கியது இலங்கை வானொலி. தான்தோன்றிக் கவிராயர் சில்லையூர் செல்வராசனிடம் 'ரோமியோ ஜூலியற்' நாடகத்தை நாடகமாக்கப் பணித்தார் ஹமீத் அண்ணா.

ஒலிப்பதிவு நடக்க வேண்டிய காலையில் கூட கவிஞர் எழுத ஆரம்பிக்கவில்லை. தொலைபேசியில் ஹமீத் அண்ணா 'எழுதுங்கள் வாத்தி' என்று பதறாமல் சொன்னார். அப்புறமென்ன, ஷேக்ஸ்பியரின் ஆங்கில நூலை எடுத்து வைத்துக்கொண்டு - தமிழில் ரோமியோ ஜூலியற் காவியத்தை டைப்ரைட்டர் தட்டச்சு இயந்திரத்தில் காவியக் கதையாய்க் கவிஞர் தட்டச்சுச் செய்ய, ஹமீத் அண்ணா 1/2 மணிக்கு ஒருதடவை, ஸ்கூட்டரில் எங்கள் வீடு வந்து, கவிதை நாடகப் பிரதியை எடுத்துச் சென்று வானொலி நிலையத்தில் பிரதிகளை எடுக்க - இப்படி ஒரு பத்துப் பதினைந்து தடவைகள் எங்கள் வீட்டுக்கும் வானொலி நிலையத்துக்கும் பறந்து ஓடினார் - வியர்க்க விறுவிறுக்க. கடைசி இரண்டு பக்கங்களை நானும் சில்லையூரும் ஜூலியற் - ரோமியோவாக நடிக்கக் கலையகத்துக்குச் செல்லும்போது, கொண்டு சென்றோம். அவை சுடச்சுட 'ரோனியோ' பண்ணப்பட்டுக் கலையகத்துக்கு வந்தன. பழம்பெரும் நடிகர்களும் என்னைப்போல கற்றுக்குட்டிகளும் சேர்ந்து நடித்து மிக அருமையாக ஹமீத் அண்ணாவின் நெறிப்படுத்தலிலும் தயாரிப்பிலும் உயிர்பெற்று ஒலிபரப்பாகியது. பல ரசிகர்களின் வேண்டுகோளுக்காக மீண்டும் இரண்டு தடவைகள் ஒலிபரப்பாகியது.

ஆனால், இதை நான் குறிப்பிடக் காரணம் உண்டு. 'செஸ்' விளையாட்டின் நிதானத்தைப் போலவே, எடுத்த காரியத்தைத் தொடர்ந்த செயலை இறுதியில் கட்டுக்கோப்பாக நிறைவு செய்து முடிக்கும் அண்ணாவின் குணத்தைப் பற்றிச் சொல்லத்தான்.

ஆனால் அவருடைய அவ்வளவு உழைப்பினால் பரிணமித்த 'ரோமியோ ஜூலியற்' வானொலிக் கவிதை நாடகம்' இலங்கை வானொலிச் சேமிப்பு அகத்தில் வைக்கப்பட்டாலும் அது இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது - இன்றும் மனதை உலுக்கும் துன்பம்.

அருமையான கவிதை நாடகம் - எத்தனை பழம்பெரும் கலைஞர்களின் உருக்கமான நடிப்புக் குரல்கள். எம்.எஸ். இரத்தினம், தாசன் பெர்னாண்டோ, ரீ. இராஜேஸ்வரன், இராஜேஸ்வரி சண்முகம், கே.ஏ. ஜவாஹர், நடராஜசிவம், சில்லையூர் செல்வராசன், இப்படிப் பல கலைஞர்களின் குரல்கள். ம்ம்!!

இப்படியான நிலைகளையும் நிதானமாகத் தாண்டிச் சிகரத்தில் ஏறும் என் அண்ணாவுக்கு என் அன்பான, பணிவான வாழ்த்துக்கள்!

- கமலினி செல்வராசன்

ஆறுமாதங்கள் நடைபெற்ற அந்தப் பயிற்சியின், இறுதித் தேர்வில் எட்டுமணிநேர ஒலிபரப்பை நாமே நடத்தவேண்டும். அதற்கொரு தலை வரையும் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தப் பயிற்சியில் மொத்தம் 24 நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டார்கள். அனைவருமே அவரவர் நாட்டு வானொலியில் மிக உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்கள். ஆனாலும், அவர்கள் அனைவரும் ஒருமனதாக, என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத் ததை நான் மிகப் பெருமையாகக் கருதுகிறேன். அந்தப் பயிற்சியில், த்ரீ ஸ்டார்ஸ் என்கிற மிக அபூர்வமான அங்கீகாரம் பெற்று, மனநிறைவோடு திரும்பினேன்.

நாம் வானொலி கேட்கத் தொடங்கிய காலம் முதல்
எம்மை தன் இனிமைக் குரலால் மகிழ்வித்துவரும்
அன்பு அறிவிப்பாளர் பீ.எச்.அப்துல்ஹமீத் அவர்களே
நிறைவான வாழ்த்துக்கள்

லக்கி ரெக்ஸ்ற்

சிங்கப்பூர் உடைகள் – நகைகள்
சிறப்பான தெரிவுகள்

எல்லா வயதினருக்கும்
இருபாலாருக்கும்
எல்லாவித உடைகளும்
எப்பொழுதும் தெரிவு செய்யலாம்
அழகிய கைக்கடிகாரங்கள்
அன்பளிப்புக்கள் அழகு சாதனங்கள்
அத்தனைக்கும் ஒரே இடம்

LUCKY TEXT

TEXTILES & JEWELLERY
165, UPPER TOOTING ROAD,
TOOTING, LONDON SW17 7TJ
TEL: 020 8682 3958
FAX: 020 8767 0309

றோமியோ ஜூலியட்

இந்த றோமியோ ஜூலியட் நாடகம் பிறந்ததும் இப்படி ஓர் உசும்பல் சம்பவத்தால்தான். சுடர் விளக்காயினும் நன்றாய் எரிந்திடத் தூண்டுகோல் ஒன்று வேண்டும் என்பார்கள் அல்லவா? இந்தச் சம்பவத்தில் அந்தத் தூண்டுகோலாக முறறு முழுக்க அமைந்தவர் நண்பர் பீ.எச்.அப்துல் ஹமீத் தான். ஆமாம்! தமிழ் வானொலித் துறையில் பல வகையிலும் உலகெங்கும் புகழ்க் கொடி நாட்டி ஒளிரும் உங்கள் அன்பு அறிவிப்பாளர் ஹமீத் தான்.

மகாகவி ஷேக்ஸ்பியரின் 420-ம் ஆண்டுத் தொடர் நிறைவு விழாவை முன்னிட்டு இலங்கை வானொலியில் விசே' நிகழ்ச்சி ஒன்றைத் தயாரித்து ஒலிபரப்பும் பொறுப்பு அவர் மீது விழுந்தது. எப்போதும் போல் அர்த்தநாரீஸ்வர கோலமாகத் தான்தோன்றிக் கவிராயனும் நானும் ஒன்றாய்க் குடியிருந்த வீட்டில் ஹமீத் அவரைச் சந்தித்தார். றோமியோ-ஜூலியட்டை, மூலத்தை போற் கவிதையிலேயே சுருக்கி இரண்டரை நாழிகை நாடகமாக எழுதி ஒலிபரப்ப யோசனைப் பட்டார்கள். இளம் திறன் கலைஞர்களோடு, ஓய்ந்திருந்த பழம் பெரும் கலைஞர்களையும் சேர்த்துக்கொண்டு, பெரிதாக ஏதோ வெட்டிச் சாய்க்கப்போவதாக நெடும் கனவு வனைத்தார்கள்.

கவிராயனுக்கும் இளமைக் கால நினைவுகள் வந்தன போலும். ஒரு காலத்தில் தமிழ்ச் சிறுகதை ஜாம்பவான்களில் ஒருவனாகக் கருதப்பட்டு, இன்று மற்றோர் இலக்கியச் சோம்பேறியாகிவிட்ட காவலூர் ராசதுரையும் கவிராயனும் நானும் ஒருசாலை மாணாக்கர். ஊர்காவற்றுறை சந்த அந்தோணியார் கல்லூரியில் அதிபராக இருந்த பிதா நிக்கலஸ் என்னும் மறைத் திரு. அருள்நேசன் அடிகளாரிடம் சிரேஷ்ட வகுப்புகளில் ஷேக்ஸ்பியரைச் சிலாகித்துக் கற்றவர்கள். கவிராயனோ, அவரைப்போல் மறைத் திரு., லத்தீன் மொழி கற்க நேர்ந்ததால், ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் நாடக நூலை லத்தீன் பாஷையிலேயே பாடமாகப் படிக்கிற கட்டாயப் பட்டவன்.

கவிராயனுக்கு இந்த உரோமப் புளகித மூதலிப்பெல்லாம் வந்ததென்ன? பாவம் ஹமீத்! தான்தோன்றியின் சோம்பேறித்தனம் அவரைப் படாதபாடு படுத்தி விட்டது. ஒலிப்பதிவுத் தினத்தன்று காலைவரை படுபாவிக் கவிஞன் ஒரு வரி கூட எழுதவில்லை. ஆனால் ஹமீத் தடுமாறவில்லை. கவிராயன் மீது அபார நம்பிக்கை. ஒரு வித குரு பக்தி. நாசூக்காகத் துறட்டியை முடுக்கினார்.

பிறகென்ன? கவிராயர் இயந்திர வேகத்தில் உழுது தள்ள, பகுதி பகுதியாக அவற்றை வானொலி நிலையத்துக்குப் பிரதிகள் எடுக்க வாகனத்தில் கொண்டோடுவதும் திரும்புவதுமாக, ஹமீத் பத்துப் பதினைந்து தடவைகள் பறந்தடித்தார். கடைசி இரண்டு பக்கங்கள், ஒலிப்பதிவுக்குக் கால் மணி நேரம் இருக்கும்போது தான் போய்ச் சேர்ந்து பிரதிகள் எடுக்கப்பட்டன.

நாடகம் வெற்றி தான். அனுபவத்தாலும் ஆற்றலாலும் பக்குவப்பட்ட கலைஞர்கள் ஆயிற்றே! ஜமாய்த்து விட்டார்கள். இரண்டு மூன்று வாரங்களுள் நாடகம் இரு தடவைகள் மறு ஒலிபரப்புமாகி நேயர்களின் பாராட்டைப் பெற்ற பிறகுதான், ஹமீத் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருப்பார் என்று நினைக்கிறேன்.

அந்த நாடகப் பிரதியே பின்னர் நூலாகப் பிரசுரமாகியது.

98–ம் ஆண்டு வரை வானொலியில் நிரந்தரப் பதவியில் இருந்தேன். ஒலிபரப்புத் துறையில் Super Grade என்கிற மிக உயர்ந்த நிலை எனக்கு வழங்கப்பட்டிருந்தது. வயதிலும், அனுபவத்திலும், தகுதியிலும் மூத்தவன் என்ற அடிப்படையில், படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்தக்கூடிய துறையிலிருந்து முற்றிலும் வித்தியாசமான நிர்வாகத் துறைக்குப் பொறுப்பேற்க வேண்டிய சூழல் வந்தது. ஒரு கலைஞன் நிர்வாகத்துக்குப் பொருத்தமில்லாதவன் என்பது என் கருத்து. நான் அந்தப் பொறுப்பை ஏற்காவிட்டால், என்னைவிட எல்லா விதத்திலும் குறைந்த ஒரு அதிகாரியின் கீழ் பணிபுரிய வேண்டியிருக்கும். மனம் சற்றுக் குழம்பினாலும் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, சுதந்திரப் பறவையாக வெளியே வந்தேன். அடுத்து நான் என்ன செய்யப் போகிறேன் என்று எனக்கு எந்தத் திட்டமும் இருக்கவில்லை. நான் பதவியை ராஜினாமா செய்த அன்றே 'கதே பசிபிக்' விமான நிறுவனத்திலிருந்து எனக்கு போன். கனடாவிலிருந்து பங்காக், ஹாங்காங் வழியாக கொழும்பு போகும் விமானச் சேவையில் கம்யூட்டர் முறையில் அறிவிப்புக்களைச் செய்ய எனது குரலைத் தேர்ந்தெடுத்திருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. 'ஒரு வாசல் மூடி, மறுவாசல் திறப்பான் இறைவன்' என்பது என் வாழ்வில் உண்மையாக நடந்தது.

அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத்
அவர்களுக்கு இனிய நல்வாழ்த்துக்கள்!

AYNGARAN
FOOD & WINE

அறுசுவை உணவுவகைகள்
அத்தனையும் உங்கள் இல்லத்தில் தயாரிக்க
அனைத்துவிதமான மளிகைப் பொருட்கள்

அன்றாட சமையலுக்கேற்ற மரக்கறிவகைகள்
அத்தனையும் மலிவாக வாங்கிட ஓரிடம்

அனைத்துத் தேசங்களுக்கும்
அழைக்க உகந்த தொலைபேசி அட்டைகள்

AYNGARAN
FOOD & WINE

80, Burlington Road,
New Malden, Surrey.

TEL: 020 8949 5640

வானலையை அரசோச்சும் வசீகரக் குரலோன் வானுயர வளர்ந்தோங்கி வான்புகழ வாழட்டும்!

எல்லோருக்கும் பொதுவான இறைவனால், எல்லோருக்கும் பொதுவான வானலையில் வண்ணத் தமிழை அழகுபடுத்தி அதிலமர்ந்து அரசோச்சவெனப் படைக்கப்பட்டவர் நண்பர் பி.எச். அப்துல் ஹமீத்.

இல்லையென்றால், இத்தனை காலம் தொடர்ச்சியாக வானலையை வளைத்து வசீகரித்து அதில் தன்னிகரில்லாத் தலைவனாக அவரால் வலம்வந்து கொண்டிருக்க முடியாது.

ஒரு மனிதனின் சிந்தனை எதுவாக இருக்கின்றதோ அதுவே அவனது வார்த்தைகளில் ஒலிக்கும். அதுவே அவனது செயல்களாகக் காட்சி வழங்கும். காலக்கிரமத்தில் அந்தச் செயலே அவனது குணாம்சமாகிவிடும். அந்தக் குணாம்சமே பின்னர் அவனது பழக்கதோஷமாகிவிடும். அந்தப் பழக்கதோஷமே அவனது ஆளுமையாகிவிடும். பின்னர், அதுவே அவனது வாழ்வின் செல்நெறிப் பாதையாகிவிடும் என்பர் அறிஞர்.

என்னினிய நண்பர் அப்துல் ஹமீத் அவர்களின் வாழ்வினை அருகிருந்து பார்த்தால் இதன் உண்மை புரியும்.

மேடை - வானொலி நடிகராக, திரைக் கலைஞராக, பேச்சாளராக, நிகழ்ச்சித் தொகுப்பாளராக, கலைஞர் குழாமின் அதிபதியாக, இளங்கலைஞர்களின் மேய்ப்பராக, தரத்திலுயர் அறிவிப்பாளராக என்று பல்துறைச் சிறப்பாளராக உலகவலம் வரும் நண்பரால் தமிழ் வளர்ந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது தவறில்லை.

காலஞ்சென்ற ஒலிபரப்பாளர் மயில்வாகனம் அவர்களுக்குப் பின்னர் தமிழ்நாட்டில் இலங்கையின் பெயரைத் தமது குரல் வளத்தால் நிலைநாட்டியவர் இவர். 'பாட்டுக்குப் பாட்டு' என்பது இவர் தமிழ்க் கலையுலகுக்குத் தந்த சீதனம். தமது ஆகர்ஷக் குரலால் சர்வதேச வான்பரப்பில் ஒப்பாரும் மிக்காருமின்றிப் பவனிவரும் நண்பர் அப்துல் ஹமீத் அவர்களுக்கு இங்கிலாந்தின் தலைநகரான இலண்டன் மாநகரில் எடுக்கப்படும் பெருவிழாவில், அருகிருந்து பாராட்ட முடியவில்லையே என்ற வேதனையைக் களைய, எனது வாழ்த்தினை எழுத்தில் வடிக்கச் சந்தர்ப்பமளித்த நண்பர் எஸ்.கே. ராஜென் அவர்களுக்கு ஆத்மார்த்த நன்றிகள்!

'கலைஞர்களையும், எழுத்தாளர்களையும், அறிஞர்களையும் வாழும்போதே கௌரவிக்கப் பழகுவோம்' என்னும் சிந்தனையுடன் செயற்பட்டு வரும் நான், நண்பர் அப்துல் ஹமீத் அவர்களைக் கௌரவிக்க விழா எடுக்கப்படுவதையிட்டு உண்மையிலேயே மகிழ்வடைகின்றேன்.

வானலையில் முடிசூடா மன்னராகப் பவனிவரும் நண்பரின் புகழ், வானுயர வளர்ந்தோங்க வாயார மனமார வாழ்த்துகின்றேன்.

திரு. எஸ். திருச்செல்வம்

பிரதம ஆசிரியர்

'தமிழர் தகவல்' - கனடா



அதன்பிறகு சிங்கப்பூர், லண்டன், மலேசியா, இந்தியா போன்ற நாடுகளிலுள்ள தொலைக்காட்சிகளில், எனது பங்களிப்பு ஆரம்பித்தது. இன்றைக்கும் உலகத் தமிழர்களுக்காக எனது குரல் வானொலியிலும், தொலைக்காட்சிகளிலும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் மிக இளம் வயதிலேயே பெற்றோர்களை இழந்துவிட்டேன். அவர்களின் பூர்வீகம் தஞ்சாவூரோ அல்லது கோயம்புத்தூரோ, எனக்குச் சரியாக நினைவில் இல்லை. நான் பிறந்தது கொழும்பில் தான். பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், தமிழ் உணர்வு மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டுதல் வாய்த்தது. எனவே, தமிழில் எனக்கு ஈடுபாடு அதிகம். இங்கே இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது போல, 'சிங்கள மொழியைக் கற்க மாட்டோம்' என்று திரண்ட கூட்டத்தில், முதல்வனாக நிற்கும் அளவுக்குத் தமிழ் வெறியனாக இருந்தேன்.



மூத்த ஒலிபரப்பாளர் V.A.கபூர் அவர்களின் வாழ்த்துரை



விளையும் பயிரை முளையிலே தெரியும் என்ற முதுமொழி, தம்பி B.H.அப்துல் ஹமீதைப் பொறுத்தவரை இளவயதிலேயே நன்கு நிரூபணமாகிவிட்டது. நான்,அன்று, ஒரு தமிழ் அறிவிப்பாளனாக இருந்த ஆரம்பகாலத்தில் நடத்திய சிறுவர்நிகழ்ச்சியில் அவர் கட்டைக்களிசான் அணிந்த ஒரு சிறுவனாகப் பங்குபற்றியபோதே, அந்த உண்மை வெள்ளிடை மலையாகவே எனக்குத் தென்பட்டது. சிறுவயதில் தூங்கிக்கிடக்கும் திறமைகள், வயது செல்லச் செல்லக் கிளர்ந்து வெளிப்பட்டு, பின்னைய காலகட்டங்களில் அசுர வளர்ச்சியடைகின்றது என்பதற்கு, அவரின் வாழ்வு ஒரு நல்ல உதாரணம்.

தமிழை வளர்ப்பதில், வானொலிக்கும் ஒரு கணிசமான பங்கு உண்டு. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்ன? சிறுவர் நிகழ்ச்சிகள், தமிழ்ச்சொற்களின் உச்சரிப்புகளுக்கு, அன்று கூடுதலான கவனம் செலுத்தி வந்தன. ஒரு சந்தர்ப்பத்தில், தான் ஒரு எழுத்தைப் பிழையாக உச்சரித்ததற்காக, நான் அவரைப், பின்னைய நிகழ்ச்சிகள் சிலவற்றில் பங்குபற்றாதவாறு இடைநிறுத்தியதாக, ஒருமேடைநிகழ்ச்சியில் பகிரங்கமாகக் குறிப்பிட்டு, தன்வளர்ச்சிக்கு அந்தத் □தண்டனையும்□ ஓர் உறுதியான பங்களிப்புச் செய்தது, என்று அவர் மனம் விட்டுக் கூறியபோது, நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இனிமையான தமிழ் உச்சரிப்புக்கு, அப்துல்ஹமீத் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. இன்று, பேரோடும் புகழோடும் உலவிவரும் அப்துல் ஹமீத், கடந்து வந்தபாதை மிகவும் கரடுமுரடானது என்பதை, நான் நன்கு அறிவேன். இடையூறுகள் பலவும், அடியறுப்பும்,மலிந்துள்ள ஊடகத்துறையில், அத்தகைய அனைத்தையும் வென்று வாகை சூடுவது, இலகுவான காரியம் அல்லவே! தன் கையே, தனக்கு உதவி, என்று, தன்சொந்தக்காலில் நின்று, தன் குரலையே மூலதனமாகக் கொண்டு, தன் ஆளுமையை வளர்த்துக்கொண்ட அவர், இன்று தம் எதிரிகளாலேயே புகழப்படுகின்றார் என்றால், அது அவரின் இடைவிடாத முயற்சிக்கும், தொழில் சார்ந்த முழுமையான ஈடுபாட்டுக்கும் கிடைத்த மாபெரும் பரிசேயாகும்.

ஊடகத்துறையில், அதிலும் குறிப்பாக, இலத்திரனியல் பிரிவில், அவர் ஈட்டிய சாதனைகள் அளப்பரியன. தமிழ் ஒலி, ஒளிபரப்புகள் இடம்பெற்றுவரும் நாடுகளில், அப்துல் ஹமீதின் குரல் ஒலிக்காதது எதுவுமேயில்லை. அந்த அளவுக்கு அவரது கீர்த்தி மேலோங்கியுள்ளது.

இலங்கை வானொலியில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அவர் பிரகாசிக்காத துறை என்று எதுவமேயில்லை. நாடகம், உரைச்சித்திரம், சஞ்சிகை, இசைநிகழ்ச்சிகள், செய்தி, நேர்முகவர்ணனை, அரங்க நிகழ்ச்சிகள், போட்டி நிகழ்ச்சிகள், என தொட்டதுறைகளில் எல்லாம் அவரும் துலங்கினார். அவரால் அவையும் துலங்கின.

இலத்திரனியலை உள்ளடக்கிய, ஒலி-ஒளி ஊடகத்துறையில், நெதர்லாந்தில் சிறப்புப் பயிற்சிபெற்ற, B.H இறுதிப் பரீட்சையில் முதல்தரத் தேர்வுபெற்ற தகுதியின் காரணமாக, இலங்கை உட்பட சிங்கப்பூர் போன்ற கடல்கடந்த நாடுகள் பலவற்றிலும் இத்துறையில் பயிற்சி அளிப்பதற்கென

'இன்னொரு மொழியைக் கற்றுக் கொள்ளும் போதுதான் நமது அறிவு விசாலமாகிறது. மனிதநேயம் வளர்கிறது, என்கிற தெளிவு பின்னர்தான் தெரியவந்தது.

இன்றுவரை நான் பாதை தடுமாறாமல் இருக்கக் காரணம், என் அன்னை என்மீது வைத்திருந்த நம்பிக்கைதான். உறவினர்களிடமும், அயலார்களிடமும் என்னைப் பற்றிச் சொல்லும்போது, என் மகன் மது, சூது, புகைப்பிடித்தல் இல்லாதவன் என்பதைத் தான் மிகப் பெருமையாகக் குறிப்பிடு வார்கள். வானொலியில் நான் புகழ் பெற்ற கலைஞனாக இருந்ததைப் பற்றிக்கூட அவர்கள் பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை. நெதர்லாந்தில் மதுக்கோப்பைகளோடு திரிந்த பல்வேறு நாட்டவர்களுக்கு மத்தியில், நான் ஒரு நாட்டுப்புறத்தான் போலவே தாழ்வு மனப்பான்மையோடு இருந்தேன். ஆனால், என் மனதில் ஒரு சங்கல்பம். என் அன்னையின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்றால், அவர்களின் மனதில் என்னைப் பற்றி என்ன உருவகம் இருந்ததோ, அதை இறுதிவரை காப்பாற்ற வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன்.

எல்லோரையும் இனிமைக்குரலால்
மகிழ்விக்கும் மதுரக் குரலோன்
பி.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு
எங்கள் இனிய வாழ்த்துக்கள்!

TSK Entertainment

வீட்டில் இருந்து விரும்பிய படங்கள்
விரும்பும் நேரத்தில்
விருந்தினரோடு பார்த்திடலாம்

DVD-Video
Tamil - English - Hindi
Rent & Sale

வேண்டிய பாடல்கள்
விரும்பிக் கேட்டிடலாம்
Audio CD

ஒருமுறை விஜயம் செய்யுங்கள் TSK

Transfer
VHS to DVD - VHS to VHS - DVD to DVD
எல்லாவகையான சர்வதேச தொலைபேசி
அட்டைகளும் மலிவு விலையில்

TSK Entertainment

Tel: 020 8868 1172

E-mail: tsk4u@hotmail.com

அழைக்கப்படுகிறார். இது அவரின் திறமைகளுக்கு அளிக்கப்பட்ட கௌரவம் மட்டுமல்ல இலங்கை வானொலிக்கும் கிடைத்த பெருமையாகும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர,முதலாந்தர,அதி-உயர்தர அறிப்பாளர் எனப் படிப்படியாக உயர்ந்த அவர், ஈழத்து மெல்லிசை, மற்றும் தமிழ் பொப்பிசை, மற்றும் அவை போன்ற தனித்துவமான துறைகளில் ஆற்றியுள்ள பணிகள் கோடிகாட்டப்பட வேண்டியவையே.

ஒலிபரப்புத்துறையில் ஆற்றிய பங்களிப்புகளுக்காக, அப்துல் ஹமீதுக்கு, தாயகம் உட்பட உலகின் பல்வேறு ஊடகத்துறை நிலையங்களும், நிறுவனங்களும், பாராட்டுப் பட்டங்களும், விருதுகளும், வழங்கியுள்ளதையிட்டு நாம் அனைவரும் பெருமைகொள்ள முடியும்.

தமிழகத்துத் திரைஉலகிலும். அவரை அறியாதார் இலர். மறைந்த நடிகர்திலகம் சிவாஜிகணேசன் மற்றும், கலைஞர் கமலஹாசன் உட்பட அநேக திரைக்கலைஞர்கள் அவரது நண்பர்கள்,விசிறிகள்.

அதுமட்டுமல்ல, திரைப்டத்துறையில் அவருக்குள்ள மதிப்பும் அலாதியானது. இசைத்துறையில் ஏ.ஆர்.ரகுமான், விஸ்வநாதன்-ராமமூர்த்தி,இளையராஜா போன்ற ஜாம்பவான்களும், மற்றும் முன்னணித் தயாரிப்பாளர்கள் உட்பட, ஏனைய துறை சார்ந்த கலைஞர் பலரும் அப்துல் ஹமீதின் நெருங்கிய நண்பர்களே.

இவற்றிற்கு எல்லாம் மூலகாரணம், அவரின் எளிமை, நேர்மை, அடக்கம்,பணிவு, போன்ற எடுத்துக்காட்டான நற்பண்புகள்தாம். இவையெல்லாம் B.H.ன், உறுதியான வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

அறிவிப்புத்துறையில், அதிலும் குறிப்பாக, விளம்பரத்துறையில், மிகுந்த பிரயாசத்தோடு அவர் புகுத்திய, புதுமைகளும், கையாண்ட நுட்பங்களும், அனைத்திற்கும் மேலாக, ஏற்படுத்திய நம்பகத்தன்மையும் அவர் அடிக்கடி மேற்கொள்ளும் வெளிநாட்டுப்பயணங்களிலில் இருந்து நாடு திரும்பும் வரை, விளம்பரதாரர்களை கியூ வரிசையில் அவரது குரல் பங்களிப்புக்காக காத்திருக்க வைத்துள்ளன. இது, அப்துல் ஹமீதின் திறமைக்கு மற்றுமோர் சான்று.

பாட்டுக்குப் பாட்டு, முதல், இன்று பல்வேறுபட்ட, ஜனரஞ்சகமான மேடைநிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதன் மூலம், அப்துல் ஹமீத், பலருக்கு முன்மாதிரியாகவும். வழிகாட்டியாகவும் விளங்கிவருவது, குறிப்பிடத்தக்கது.

காற்றில் கலைபடைக்கும் கலைஞர்கள், காற்றோடு கலந்துவரும் புகழைக் கட்டிக்காப்பது சிரமமே. அந்தவகையில், அப்துல் ஹமீத் ஈட்டியுள்ள புகழ், நீடித்து நிலைக்கும் ஒரு சாதனையே.

இத்தகைய ஒருமேதாவியின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் எனது சிறு பங்களிப்பும் உதவியுள்ளதை எண்ணிப் பெருமைப்படுகின்றேன்.

அத்தோடு அவர், மென்மேலும் வளர்ச்சிகண்டு, நம்மவர்க்கெல்லாம் இனியவராக, உரியவராக, நீடு நிலைக்கவேண்டும் என, எல்லாம் வல்ல இறைவனை இதயபூர்வமாக இறைஞ்சி, வாழ்த்துகிறேன்.

V.Abdul Ghafoor

மூத்த தமிழ் ஒலிபரப்பாளர்.

முஸ்லிம்சேவையின் முதல் பணிப்பாளர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தான ஆலோசகர்-பயிற்றுவிப்பாளர்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



அன்னைக்குப் பிறகு, எனக்கு ஆதரவளித்தது என் நண்பர்கள். முழுக்க முழுக்க கலையை சுவாசித்த, வேறு சபலங்களுக்கு இடம் கொடுக்காத நல்ல நண்பர்கள் எனக்குக் கிடைத்தார்கள். அந்த இளம் வயதிலேயே ஒரு Celebrity என்ற நிலையில் வைத்துத் தான் என்னைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டிருப்பார்கள். என்னை நேசித்த ஒருவரைத்தான் நான் திருமணம் செய்து கெண்டேன். எங்களுடைய காதல் திருமணம், கலப்புத் திருமணம். என் மனைவியின் வீட்டில், என்னை அவர்களின் மகனாகவே ஏற்றுக் கொண்டார்கள். மனைவி, மகன், குடும்பம் என வாழ்க்கை நிறைவாகவே இருக்கிறது.

இதுவரையில் எதையும் நான் திட்டமிட்டுச் செய்ததில்லை. அடுத்த மாதம் என்ன நடக்குமென்றுகூட எனக்குத் தெரியாது. மலேசியா, கனடா என்று வரிசையாக நிகழ்ச்சிகள் இருக்கின்றன. வாரம் ஒரு நகரம் என்பதாகத்தான் எனது வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது.

அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத்
அவர்களே !
உங்கள் கலைப்பணிக்கு எங்கள்
வாழ்த்துக்கள்.

ஜே. கே. மிதுன்
ஜுவல்லறி

பார்த்தால் பரவசமூட்டும்
பளிச்சிடும் தங்க நகைகள்
அசல் 22 கரட்டில்

ஓடர் நகைகள்
குறித்த நேரத்தில்
தயாரித்துத் தருவோர்

திருமண நகைகள் அனைத்தையும்
திறம்படத் தெரிவுசெய்ய உகந்த இடம்

JK MITHUN JEWELLERY
15, Ealing Road,
WEMBLEY,
MIDDLESEX, HA0 4AA
Tel: 020 8902 6304
Fax: 020 8900 9990

அஸ்டாவதானி அப்துல் ஹமீத்



அன்பான நண்பர், சகோதரர், ஆலோசகர் என்று பல கோணங்களில் என்னை ஆக்கிரமித்த அப்துல் ஹமீத் அவர்களுக்கு லண்டனில் பாராட்டு விழா என்று நண்பர் எஸ். கே. ராஜென் என்னிடம் சொன்ன போது, நான் பெருமகிழ்ச்சியடைந்தேன். மூன்று தசாப்பங்களுக்கு முன்னால், என் மனக்குலத்தில் நிழலாடும் அந்த நினைவுகளை மீண்டும் ஒருமுறை மீட்டிப்பார்க்க ஒரு சந்தர்பம். அந்த நாள் நினைவுகள் மிகவும் சிலாகிக்கக் கூடியவை. நயந்து, வியந்து, மகிழ்ந்து, நெகிழ்ந்து போகக் கூடியவை.

இலங்கை வானொலி (Radio Ceylon) தமிழ்ச்சேவையில் அறிவிப்பாளர்களாக கோலோச்சிக் கொண்டிருந்த சிலரின் மத்தியில் அதிரடியாய்ப் பிரவேசிக்காமல் ஆற அமர அடியேடுத்துவைத்து வானொலி ரசிகர்களின் அன்பு அறிவிப்பாளராக தன்னை அடையாளம் காட்டிக் கொண்ட ஒரு அன்பு நெஞ்சனுடன் பதினைந்து வருடங்கள் ஓரே கூரையின் கீழ் பணிபுரிந்தவன் என்ற வகையில், இன்று தமிழ் கூறும் நல்லுலகில் பலதரப்பட்ட மக்களாலும் நேசிக்கப்படுகின்ற எனது மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய நண்பர் அப்துல் ஹமீத் அவர்களுக்கு, அவர் வாழும்போதே நடக்கின்ற இந்தப் பாராட்டுவிழாவில், அவரோடு சேர்ந்து பணிபுரிந்த காலப்பகுதிகளின் சுவடுகளை தடவிப் பார்ப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

1970 களிலிருந்து 1983 ஜூலைக் கலவரம் வரைதான் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழச்சேவைக்கு ஒரு பொற்காலப் பகுதியென்று சொல்லவேண்டும். தமிழ்ச்சேவையின் நிகழ்ச்சிகளில் ஒரு பரிணமவளர்ச்சி எழுச்சி பெற்றிருந்தது. முத்தமிழும் முறைப்போடு முன்னேறியபோது வானொலி நேயர்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூறுகின்றேன். தாயகத்தில் மட்டுமல்ல, தமிழ் நாட்டடிலும் மகா வரவேற்புக் கிடைத்திருந்தது. இந்தக் காலப்பகுதியில் மூன்று துறைகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு முத்திரை பதித்தவர்தான் அன்புக்குரிய நண்பர் அப்துல் ஹமீத் அவர்கள்.

புதியயுக்திகள், மதிநுட்பமான அணுகுமுறைகள், எதையுமே நிறைவாக நேர்த்தியாகச் செய்யும் திறன், நிதானத்துடன் கூடிய ஆற்றல், பிறர்மனம் நோகாமல் நடக்கும் பாங்கு, மனித நேயத்துடன் கூடிய மனோபாவம் போன்ற நல்லபல அம்சங்களின் மொத்த உருவமாகவே, அன்புக்குரிய அப்துல் ஹமீத் அவர்கள் அன்றும் என் கணிப்பில் இருந்தவர். இன்றும் அவ்வாறே இருக்கிறார். அதனால் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவரின் அற்புதமான வசீகரக் குரலினால், வானொலி நேயர்களை மட்டுமல்ல, வானொலிநிலையத்தாரையும் வசியப்படுத்திக் கொள்ளும் வல்லமையை இறைவன் அவருக்கு கொடுத்திருந்தார். போட்டியும் பொறாமையும், எரிச்சலும், புகைச்சலும், முகஸ்துதியும், முதுகுக்குப் பின்னால் பேசுதலும் நிறைந்திருந்த தமிழ்ச்சேவைக்குள் தனித்துவமான ஒருவராக திகழ்ந்தவர். மூவின மக்களும் பணிபுரியக் கூடிய ஒரு நிலையமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இருந்ததால் அனைவரினதும் அன்பையும் பெற்றிருந்தார். இது அவரது கண்ணியத்திற்கு கட்டியம் கூறி நின்றது என்று கருதுகின்றேன்.

வானொலியில் ஈழத்துப்பாடல்கள் நிகழ்ச்சி சோரம் போய்க் கொண்டிருந்த பொழுது, மெல்லிசைப் பாடல்கள் என்று அதற்கு மெருகூட்டி இவர் இசைக்கோலங்களை வானலைகளில் தவழவிட்டபோது அதற்கு மகா வரவேற்புக் கிடைத்தது. ஈழத்து புதிய இசையமைப்பாளர்களின் வளர்ச்சியில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டு, அவர்களை நாடறியச் செய்த நல்லிதயம் கொண்ட நண்பர் பீ. எச். அப்துல் ஹமீத் அவர்களை மனம் திறந்து பாராட்டுகின்றேன். இந்தக்

- கோவிலூர் செல்வராஜன் -

ஒலிபரப்பு வாழ்க்கையிலும் சரி, தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, என்னால் மறக்கமுடியாத ஒரே நிகழ்ச்சி, எனது அன்னையின் மறைவுதான். அப்போது 'சக்கரங்கள்' என்ற நாடகத் தொடரை நாங்கள் நேரடி ஒலிப்பதிவில் வழங்கிக் கொண்டிருந்தோம். முன்னரே பதிவு செய்து ஒலிபரப்பும் முறை அன்றைக்கு இல்லை. அந்த நாடகத்தை அஸ்ரப்கான் என்பவர் எழுதியிருந்தார். வாழ்க்கை ஒரு நாடகம் என்பார்களே, அதுபோல, நாடகத்தில் நடப்பதாகச் சித்தரிக்கப்பட்ட சில சம்பவங்கள் அதில் நடித்தவர்களின் நிஜ வாழ்க்கையிலும் நடக்க ஆரம்பித்தது.

அந்தச் சமயத்தில் எனது அன்னையை கடுமையான சுகவீனத்தின் காரணமாக வைத்தியசாலையில் வைத்திருந்தோம். இரண்டு வாரங் களுக்குப் பிறகு, வைத்தியர் என்னை அழைத்து, 'வீட்டுக்குக் கூட்டிட்டுப் போங்க' என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஒருவேளை குணமடைந்து விட்டார்கள் என்றெண்ணி, வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டேன். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, வானொலி நிலையம் வந்துவிட்டேன். 'சக்கரங்கள்' நாடகத்தின் நேரடி ஒலிபரப்பு. அன்று போயாக வேண்டும். அன்றைய நாடகத்தில் என் தாய் இறந்து போய் விடுவதாகவும், நான் கதறி அழுவதாகவும் காட்சி. ஒத்திகையில் என்னால் சரிவரச் செய்ய முடியவில்லை. அன்னையின் நிலையை எண்ணி மனம் மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது. எப்படியோ நாடகத்தில் நடித்து முடித்துவிட்டு வெளியே வந்த பிறகுதான் தெரிந்தது, நாடகத்தில் நான் நடித்துக் கொண்டிருந்த போதே என் அன்னை இறந்துவிட்டார் என்று.

இன்றுவரை இந்தச் சம்பவம் எனக்கு அதிர்ச்சியாகவே இருக்கிறது!"

அன்பு அறிவிப்பாளர்

பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களே!

எமது நல்வாழ்த்துக்கள்!

SKY WINGS

020 8672 9111

விமானப் பயணம்
மேற்கொள்வதற்கு முன்னர்
நீங்கள் முதலில்
செல்ல வேண்டிய இடம்

உலகின் எந்த இடத்துக்கும்
உரிய நேரத்தில் விமான ரிக்கற்றுக்களை
உங்களுக்கு மலிவாக வழங்குவோர்

SKY WINGS

காலப்பகுதியில் தான், நானும் மெல்லிசைப் பாடலாசிரியராகவும், பாடகராகவும் பிரவேசித்தபொழுது, என்னை தட்டிக்கொடுத்து, தகுந்த ஆலோசனைகளும் தந்தவர் என்பதை இங்கு நினைவு கூருகின்றேன்.

பல சமயங்களில் நான் எனது பாடல்களை ஒலிப்பதிவு செய்துவிட்டு, கலையகத்தில் இவருக்குப் போட்டுக் காட்டி அபிப்பிராயம் கேட்பதுண்டு. மிகவும் அவதானமாக அதை உள்வாங்கிக்கொண்டு அதில் அடங்கிய குறை, நிறைகளை எடுத்துச் சொல்லி, அடுத்த முறை செய்யும் பொழுது கவனமெடுங்கள் கோவிலூர் என்று ஊக்கப்படுத்துவார். எனக்கு இன்றும் நினைவிருக்கிறது ஒரு பாடல்□□

"பாடியே அழைக்குதம்மா பல்லவி இழந்த பாடல், கூடியே வாழ்ந்த நெஞ்சில் வந்ததே இந்த ஊடல்" என்று தொடங்கும் ஒரு பாடலை நானே எழுதி, இசையமைத்துப் பாடி விட்டு, இவருக்கு போட்டுக்காட்டியபோது. □பாட்டு நன்றாக இருக்கிறது. ஆனால் குரலி கூடிய சோகம் தேவையில்லை. ஏனென்றால் பாடல் வரிகளிலேயே சோகம் இருக்கிறது. அதனால் மிதமான சோகத்தை குரலிலே சேர்த்தாலே போதுமானது□ என்று சொன்னார். அவர் சொன்னபடி மீண்டும் அந்தப்பாடலை நான் ஒலிப்பதிவு செய்தபோது உண்மை தெரிந்தது. இப்படி பல சந்தர்ப்பங்களில் எனக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

இசைக்குப் பாட்டெழுதுவது என்ற ஒரு நிலை வந்தபோது, நான் பல ஈழத்து இசையமைப்பாளர்களின் இசைக்கும் பாடல்கள் எழுதியுள்ளேன். குறிப்பாக ஹமீத் அவர்கள் கொடுத்த ஒத்துழைப்பாலும், உற்சாகத்தாலும் முன்னிக்கு வந்த அப்சராஸ் மோகன் - ரங்கன் அவர்களுக்கே நிறையப்பாடல்கள் எழுதியிருக்கின்றேன். அவர்கள் போடும் மெட்டுகளுக்கு பலர் பாடல்கள் எழுதினாலும், சில மெட்டுக்களைக் கேட்டு விட்டு, கோவிலுரையே கூப்பிட்டு எழுதுங்கள் என்று சொல்லி விடுவார் அன்புக்குரிய ஹமீத் அவர்கள். இவ்வளவுக்கும், இறைதாசன் என்ற பெயரில் இவரே பல பாடல்கள் எழுதிய கவிஞர் என்பது பலருக்குத் தெரியாது. அப்படி அவர் சொல்லி நான் எழுதிய ஒரு பாடல்:

நம்ம நாடு நல்ல நாடுதான் யாருமிங்கே
ஒன்று சேர்ந்து வாழலாமடா பசும்
பொன்னுதான் இங்கே நல்ல
மண்ணுதான் இங்கே அட
என்னவேணும், எல்லாம் உண்டு
என்று பாடு, ஒன்று கூடு

என்று எழுதிய பாடல் வானொலி, தொலைக்காட்சி என்று மிகவும் வரவேற்பு பெற்றது. நண்பர் பொன். சுபாஸ் சந்திரனுக்கு ஒரு இசைத்தட்டு வெளியிடவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டபோது, எந்தவித மறுப்பும் சொல்லாமல் முழுமனதுடன முன்வந்து, மோகன் அவர்களின் மெட்டுகளை என்னிடம் தந்து, பாடல்களை எழுதச் சொன்னவர். என் மனசு பாடுது என்ற இசைத்தட்டு புலம் பெயர் வாழ் தமிழ் மக்களிடையே பெரும் வரவேற்பைப்பெற்றது. அந்த இசைத்தட்டில், இவரும் ஒரு பாடல் எழுதியிருந்தார். கவிப்பேரரசு வைரமுத்து அவர்களிடமும் இருந்து ஒரு பாடல் பெற்றுதந்தார். இப்படி, பல வழிகளிலும், ஆக்கமும், ஊக்கமும் தரும் ஒரு அன்பு நெஞ்சன் அன்புக்குரிய அப்துல் ஹமீத் அவர்கள்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில், அன்று பகுதிநேர அறிவிப்பாளர்களாகப் பணிபுரிந்த பலர், இன்று புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில், இயங்கும் வானொலிச் சேவைகளில் சிறப்பாக செல்படுகின்றார்கள் என்றால், அதற்கு அத்திவாரம் இட்டவர் அப்துல் ஹமீத் அவர்களே என்பதை இங்கு ஆணித்தரமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். பயிற்சியின் போது, அவர் கற்றுத் தந்த பல விடயங்கள் ஒலிபரப்புத்துறையில் வெகுவாக உதவியிருக்கிறது. செய்தி வாசிக்கும் பொழுது குரல் எப்படி இருக்கவேண்டும்? விளம்பர அறிவித்தல்கள் செய்வதில் எப்படி வாசிக்க வேண்டும்? ஒலிவாங்கியை எப்படிக் கையாள வேண்டும் என்று அவர் கொடுத்த பயிற்சிகள் வியந்துரைக்கக் கூடியவை.

அறிவிப்புத்துறை மட்டுமல்லாமல், ஒலிப்பதிவு செய்வதிலும், மிகவும் ஆர்வமாக இருப்பார். பாடல்கள் ஒலிப்பதிவின் போது மிகவும் அக்கறையுடன் செயல்பட்டு, எந்தெந்த வாத்தியங்களுக்கு எப்படி ஒலிவாங்கிகளை வைக்க வேண்டும் என்ற நுணுக்கங்களைச் சொல்லித் தருவார். அத்தோடு இசையைச் சமச்சீர் செய்வதில் கைதேர்ந்தவர். பாடும் போதும், பேசும்போதும் □பொப்□ அடிக்காமல் எப்படி ஒலிவாங்கியைக் கையாள வேண்டும் என்று கற்றுக் கொண்டது இவரிடமிருந்துதான் என்று சொல்லலாம்.

எல்லா அறிவிப்பாளர்களாலும், மேடை அறிவிப்புச் செய்ய முடியாது. அதற்கென்று தனித்துவமான திறமை வேண்டும். கலையகத்திலிருந்து எழுதிக்கொடுப்பதை அறிவிப்புச் செய்வது வேறு. மேடையில் மக்கள் மத்தியில் அவர்களது எதிர்ப்புகளுக்கு ஈடுகொடுத்து ஒரு அறிவிப்பாளன் தனது கட்டுப்பாடுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பது வேறு. இந்தக் கலையை மிகவும் நன்றாகக் கையாண்டு தமிழ் பேசும் மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பிடித்தவர் அப்துல் ஹமீத் அவர்கள். ஒரே வார்த்தையில் சொல்வதானால் ஒலிபரப்புத்துறையில் அவர் அஸ்டாவதானி.

1983 ஜூலைக் கலவரத்தின் போது, நான் நிலையத்திலேயே இருந்து பதினொரு நாட்கள் பணிபுரிய வேண்டியதாயிற்று. ஜூலை 23ம் நாள், உ2 கலையகத்தில் ஒலிபரப்புச் செய்து கொண்டிருந்தோம். அப்பொழுது ஒரு அதிர்ச்சியான ஒரு செய்தி எங்களுக்கு கிடைத்தது. இன வெறி பிடித்த காடையர்களின் தாக்குதலுக்கு ஆளாகி



ஒலிபரப்புத்துறைக்கே தன்னை
ஒப்படைத்துவிட்ட
ஒலிபரப்பாளர் அப்துல் ஹமீத்துக்கு
வாழ்த்துக்கள்!

புதினம்

இலவச பத்திரிகை

மாதத்தில்
இருதடவை
வெளிவரும்
புதினப் பத்திரிகை

புதினத்தில்
விளம்பரம் செய்து
உங்கள் வியாபாரத்தைப்
பெருக்கிக் கொள்ளுங்கள்

புதினத்தின் மாதாந்த வெளியீடு
மனசு பேசுகிறது

புதினம்
ஆசிரியர் ஈ.கே. ராஜகோபால்

தொலைபேசி: 020 8767 8004
தொலைமடல்: 020 8767 7866
E-mail: raj@ekrpublishers.freeserve.co.uk

அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அவர்கள் பலியானார் என்ற செய்தி பேரிடியாக வந்து விழுகிறது. அப்பொழுது கடமையிலிருந்த தமிழ் உத்தியோகஸ்தர்கள் என்னோடு சேர்ந்து நான்கு பேர் மட்டுமே. நாங்கள் அனைவரும் அதிர்ச்சிக்குள்ளாகி செய்திப் பிரிவு பாலேந்திராவைக் கூப்பிட்டு கேட்டபொழுது தான் அது வதந்தி என்று தெரிய வந்தது. இந்த வதந்தி காட்டுத் தீ போல் பரவி, தமிழ் மக்களை கலங்கச் செய்து விட்டது. பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும், தேஸ்டன் கல்லூரியிலும் தஞ்சமடைந்திருந்த எங்கள் வானொலிக் குடும்பத்தினருக்கும் செய்தி கிடைத்து, அவர்களும் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டார்கள் என்ற செய்தி எங்களுக்குக் கிடைத்தது. இந்தத் தகவல்களை எப்படியோ இவர் காதில் போட்ட பொழுது, தன் உயிரையும் பொருட்படுத்தாமல் தமிழ்மேல் கொண்ட பற்றால், தானாகவே வந்து எங்கள் முன் நின்றார் நண்பர் ஹமீத் அவர்கள். பின்பு கலையகத்திலிருந்து நண்பகல் செய்தியை தானே வாசித்துவிட்டு, தான் இன்னும் உயிருடன் தான் இருக்கின்றேன் என்று நாட்டு தமிழ் பேசும் மக்கள் அனைவரின் நெஞ்சங்களிலும் பால் வார்த்தவர் அன்புக்குரிய நண்பர் ஹமீத் அவர்கள். இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு நடந்த இந்த நிகழ்வு இன்னும் என் நெஞ்சை நெருடுகிறது.

கொழும்பு பிறட்டன் ஹோட்டலில் தங்கியிருந்த அமரர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களை கலாவல்லி சஞ்சிகைக்காக நான் செவ்வி கண்டபொழுது, "நான் உங்க அப்துல் ஹமீதின் ரசிகனப்பா, அவர் வானொலியில் நடிக்கும் நாடகத்தை தவறாமல் கேட்டு வர்ரன்" என்று மனம் திறந்து பாராட்டிய நடிகர்திலகம் அவர்கள், ஹமீத் அவர்களின் தமிழில் மயங்கியவர்தான். பிற்காலத்தில், சிவாஜி அவர்களின் பல நிகழ்ச்சிகளில் சென்னை, சிங்கப்பூர் என்று தனது தேன் மதுரக்குரலால் தித்திப்பு ஊட்டியவர். அவர் மறைந்தபின்பும் அவரது நினைவு நிகழ்வுகளிலும் தன் பங்களிப்பைச் செய்து, சிவாஜி குடும்பத்தாருக்கு நெருக்கமாக இருந்திருக்கிறார். "பாட்டுக்குப் பாட்டு" நிகழ்ச்சியை வானொலியில் ஆரம்பித்து சண் தொலைக்காட்சி வரை எடுத்துச் சென்று உலகமெல்லாம் சென்றடைய வழி செய்தவர். தமிழகத்தில் ஒரு சுப்பர் ஸ்டாருக்கு இருக்கும் ரசிகர்கள் போல் நண்பர் ஹமீத் அவர்களுக்கும் உண்டு என்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்.

சண் தொலைக்காட்சியை விட்டு வெளியேறும்போது, "என்னை சண் தொலைக்காட்சி வளர்க்கவில்லை, என்னை வளர்த்துவிட்டது இலங்கை வானொலியே" என்று சொன்னாரே அது அவரது பெருந்தன்மையையும், நன்றிமறவாத குணத்தையும் நன்கு புலப்படுத்துகிறது அல்லவா.

ஒரே குடும்பத்தில் வாழ்ந்த எங்களுக்குள் ஏராளமான சம்பவங்கள் மனதை விட்டு அகலாத நினைவுகள் நிறைய இருக்கின்றன. அவற்றையெல்லாம் சொல்லிவிட இந்த பாராட்டு மலர் போதுமா? தனியாகப் புத்தகம் போட்டால் தான் முடியும். ஆகவே உலகத் தமிழ் கலையகம் வழங்கும் பீ. எச். அப்துல் ஹமீத் அவர்களின் பாராட்டுவிழாவில் ஒரு சில சம்பவங்களை நினைவு கூர்ந்ததில் மகிழ்வுறுகின்றேன், நண்பரும் - சகோதரருமான அருமைக்குரிய அப்துல் ஹமீத் அவர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து, தமிழ் நெஞ்சங்களுடன் மகிழ்ந்து இன்புற்று இருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



பாட்டுக்குப் பாட்டு பாரீஸில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு பாடிய நாட்டுக்கூத்துக் கலைஞர் அமரர் இரகரி தங்கராஜா.



எம்போன்ற கலைஞர்களுக்குத்
தாங்கள் தரும் உற்சாகத்துக்கு
நன்றி கூறி
அன்பு அறிவிப்பாளர் அவர்களே
உங்களை வாழ்த்திக்கொள்கின்றோம்.

SPECTRUM

களியாட்ட விழாக்கள்
கல்யாண வைபவங்கள்
பாடசாலை ஆண்டுவிழாக்கள்
அனைத்திலும் இசை நிகழ்ச்சி மூலம்
அனைவர் இதயங்களையும்
கவர்ந்திருப்போம்

இளம் பாடகர்கள் இசைக்கலைஞர்கள்
இணைந்து செயற்படுகின்றனர்

இன்றைய அன்றைய பாடல்களை
அப்படியே மீட்டுவதில் புகழ்பெற்றவர்கள்

SPECTRUM

A UNIQUE ELECTRONIC TAMIL ORCHESTRA

MANAGER & ORGANISER
MR. T. SUREN
MOB: 079 7514 4106

MUSIC CO-ORDINATOR
DR. MUZAFER
MOB: 078 7968 2121

அப்துல் ஹமீத்! நீர் எங்களில் ஒருவர்!

அகிலமெங்கும் பரந்து வாழும் தமிழ் வானொலி நேயர் மனங்களில் எப்போதும் நிறைந்திருக்கும் அப்துல் ஹமீதுக்கு தேம்ஸ் நதி தவழுகின்ற லண்டன் மாநகரில் பாராட்டு விழா.

உலகத் தமிழ் கலையகத்தாரின் உன்னதமான நிகழ்வு. எஸ்.கே. ராஜென் - சுந்தரம் ஸ்ரீ ஏற்பாடுகள் வெற்றிகரமாய் அமையட்டும்.

அப்துல் ஹமீத்! நீர் எங்களில் ஒருவர். உமக்கான விழா இனிதே நிறைவேற வாழ்த்து மலர்களை அள்ளிச் சொரிகின்றோம்.

இலங்கை வானொலியில் Relief Announcer BL Superior தரம்வரை மேம்பாடு கண்ட நீர் - பாட்டுக்குப் பாட்டு நடத்துவதாலோ, தென்னிந்தியக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளை நேர்த்தியாகத் தொகுப்பதாலோ மட்டும் நேர் மனங்களில் இடம்பிடிக்கவில்லை.

ஒரு நல்ல அறிவிப்பாளருக்குத் தேவையான அடிப்படைத் திறமைகளை முறைப்படி வளர்த்து வந்ததாலேயே புகழின் உச்சிக்கு உம்மால் செல்ல முடிந்திருக்கிறது.

எல்லோருடனும் பவ்வியமான முறையிலே திவ்வியமாகப் பேசும் திறன் உமக்கே உரித்தானது. தொடர்பாடலில் வெற்றி பெறுவதற்கு இயல்பாகவே வாய்த்த இந்தத் தன்மையும் உமக்குக் கைகொடுத்திருக்கிறது.

ஹமீத்! ஞாபகம் வருகிறதா? எழுபதுகளின் முற்பகுதியில் ஒலிபரப்பு நண்பர்கள் பலர் சேர்ந்து சென்ற சிவனொளிபாதமலை யாத்திரை. அமர்க்களமான பயணம் - ஆனால் ரயில் தான் மலையகம் நோக்கி ஆறுதலாக ஓடிக்கொண்டிருக்கிறது. எனக்கோ கால்வலி தொடங்குகிறது. "காலைத் தூக்க முடியவில்லையே என நான் முனகியபோது எனது வலதுகாலை இருகரங்களாலும் தூக்கி மடியில் வைத்துக் கொண்டீரே! காலை நான் எடுக்க முற்பட்ட வேளையில் - அப்படியே வைத்திருங்கள் மதி" எனக் கடைசி ரயில் நிலையம்வரை மடி தந்த ஹமீத் உமது பண்பினை எப்போதும் நான் மறந்ததில்லை.

ஒலிபரப்புப் பாதையின் உத்தியோகபூர்வமான போக்குகளில் சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்ட போதிலும் என் கால்கள் ஹற்றன் பாதையை மறந்ததில்லை. அதுபோல உமது நேசக்கரமும் என்னை விட்டு நீங்கியதில்லை.

தமிழகத்தில் இலங்கைக் கலைஞர்களுக்கு போதுமான அங்கீகாரம் தரப்படுவதில்லையென நீண்டகாலமாக ஒரு ஆதங்கம் எம்மவர்க்கு இருந்துவந்தது. ஆனால் அதை ஓரளவுக்குப் போக்கி வைத்தது காலஞ்சென்ற ஈழத்துத் தவில் மேதை லயஞான குபேரபூபதி வி. தட்சணாமூர்த்திக்கு அங்கு அன்று கிடைத்த வரவேற்பு.

இன்று உமக்குக் கிடைக்கும் ஜனரஞ்சகமான வரவேற்பு அதைவிட இரட்டிப்பாகி விட்டதாகவே நான் கருதுகிறேன். திறமை உள்ளவர்களுக்கு எங்கும் எப்போதும் வரவேற்பு உண்டு என்பதை யார் தான் மறுப்பர்.

இலங்கைத் தமிழுக்கும், எம் தமிழைக் கையாளும் அறிவிப்பாளர்களுக்கும் கிடைக்கும் மதிப்பினைத் தொடர்ந்து பேணி வர இளம் ஒலிபரப்பாளர்கள் உம்மை ஏகலைவனாகக் கொண்டால் என்ன?

தேம்ஸ் நதி பாராட்டுவிழா மட்டுமல்ல, தேமதுரத் தமிழோசை எங்கெல்லாம் கேட்கிறதோ அங்கெல்லாம் ஆண்டுதோறும் உமக்குப் பாராட்டுவிழா நடைபெற வேண்டும். அப்படியான ஒரு பாராட்டு விழாவில் நானும், எனது துணைவியாரும் பார்வையாளர்களாக அமரும் வாய்ப்பு வரவேண்டும் என எல்லோருக்கும் பொதுவான இறைவனை வேண்டி விடைபெறுகிறேன்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

"செஞ்சொற் செல்வர்" வி.என். மதிஅழகன்

அகில இலங்கை சமாதான நீதிவான்,

முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ரொறன்ரோ மாநகர், கனடா.

ஆனந்தம் ஏற்படுத்தி
மக்களை மகிழ்விக்கும்
அன்பு அறிவிப்பாளர் அவர்களே
வாழ்த்துக்கள்!

ஆனந்த மஹால்

திருமணம்
பிறந்தநாள்
நூல் வெளியீடு
கூட்டம்

இவை அனைத்தும்
நடாத்தச்
சிறந்த இடம்

ANANTHA MAHAL

020 8543 7239

Wimbledon



RTM Brothers International

President:	Secretary:	Treasurer:
Mr. R. Sritharan	Mr. K.J. Paskaranathan	Mr. R. Rajakaran
9, rue Cail	23 place Jeanc Charcot	79, bld. Pasteur
75010 Paris	95200 Sarcelles	3200 La Courneuve

Tel: 01 40 05 18 71 Fax: 01 42 05 46 36

உலகத் தமிழ் வானொலிக்கெல்லாம் உதாரண புருஷர் பீ.எச். அப்துல் ஹமீத்

இலங்கை வானொலிக்குப் பெருமை சேர்த்து, உலகத் தமிழர் மத்தியில் ஒலிபரப்புத் துறையில் உலக நாயகனாகத் திகழும் கலைஞானிதன் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு லண்டன் மாநகரில் பாராட்டுவிழா என்றதும் உள்ளம் மகிழ்ந்தது. காரணம் ஈழத்து தமிழ் கலைஞர்களை அழைத்து நிகழ்ச்சிகளை நடத்த முடியும் என்ற நம்பிக்கையோடு முதன் முதலாக பாரிசிலிருந்து ஐரோப்பிய தமிழ் கலையக இயக்குனர் எஸ்.கே. ராஜென், பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களை அழைத்து வெற்றிகண்டு, பின் பல ஈழத்துக் கலைஞர்களை அழைத்து நிகழ்ச்சிகளை நடாத்தி வெற்றிகண்ட அவரே மீண்டும் அவருக்குப் பாராட்டு விழா எடுப்பதில் இரட்டிப்பு மகிழ்வு. அவருக்கு பக்கத் துணையாக இருந்து ஈழத்துக் கலைப் படைப்புக்களுக்கு ஆதரவு வழங்கும் அன்பு நண்பர் சுந்தரம் ஸ்ரீ அவர்களையும் நினைத்துப் பெருமை கொள்கிறேன்.

கலைஞானிதன் மூலம் நம்மவர்க்கெல்லாம் பெருமை. அவரின் பெருமையை உலகமே அறியும். அவர் ஒரு நவீன கணணி என்று சொன்னால் மிகையாகாது. ஒலிபரப்பாளனாய், நடிகனாய், கவிஞனாய், தயாரிப்பாளனாய் பலமுகம் கொண்ட அவரைப் பாராட்டாதவரே கிடையாது. நடிப்பின் இமயம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களே இலங்கை வானொலியில் வாரந்தோறும் அவர் நடித்துவந்த நாடகத்தைத் தவறாது கேட்டு வாழ்த்துக் கூறியவர். உலக நடிகன் கமல்ஹாசன் தெனாலி மூலம் பாராட்டியவர். அப்படிப்பட்டவருக்கு நடைபெறும் பாராட்டு விழாவில் நாமும் அவரை மனநிறைவோடு பாராட்டி, தொடர்ந்து அவர் குரல் உலகம் எங்கும் முழங்க வாழ்த்துகிறோம்.

அன்பு அறிவிப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களை வாழ்த்தி நடைபெறும் 'கலையமுதம்' விழாவில் நானும் எனது சகதோழமைக் கலைஞர்கள் ரி. தயாநிதி, சுதா ஆகியோருடன், மூத்த கலைஞர் அப்புக்குட்டி ரி. இராஜகோபால் அண்ணருடனும் பங்குபற்றிக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆர். பிறதர்ஸ் இன்டர்நஷனல் சார்பில்,
அன்பன்
இரா. குணபாலன்



தமிழ்க்கலைகளுக்கு மகுடமாக விளங்கும்
தனிப்பெரும் ஒலிபரப்பாளர் அப்துல் ஹமீத்
அவர்களுக்கு அன்பு நிறைந்த வாழ்த்துக்கள்!

தாயகம்

பூட் அன்ட் வைன்

தமிழ் மக்களின் கலாசார உணவுவகைகள்
தயாரிக்க உகந்த அனைத்துப் பொருட்களும்
தாராளமாகக் கிடைக்குமிடம்

மரக்கறி - மீன் வகைகள் எப்பொழுதம்
பெற்றுக்கொள்ளலாம்.

THAYAGAM FOOD & WINE
Off Licence

532, Uxbridge Road,
Hays, Middx UB4 0SA.
Tel/Fax: 020 8848 7576

வாகனத் தரிப்பிட வசதி உண்டு.





வாழ்த்துச்செய்தி

'தீபம்' தொலைக்காட்சியின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் நெருக்கமான ஈடுபாடுகொண்ட பீ.எச். அப்துல ஹமீத் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் தீபம் பெருமகிழ்ச்சியடைகிறது.

தீபம் தொலைக்காட்சி தொடங்குவதற்கு முன்பிருந்தே ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் தொடர்ந்து வழங்கி தீபம் குடும்பத்தின் ஒருவராகவே அப்துல் ஹமீத் திகழ்ந்து வருகிறார்.

தமிழ்த் தொலைக்காட்சிகளில் தீபம் இன்று பெற்றிருக்கும் உன்னத இடத்திறகு அயராது பாடுபட்டு வந்திருக்கும் அப்துல் ஹமீத் அவர்களுக்கு தீபம் பெரும் நன்றிக்கடன்பட்டிருக்கிறது.

தீபத்திற்காக அவர் நடத்திய நிகழ்ச்சிகள் தீபம் நேயர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தன.தீபம் கலையகத்தில் வளரும் ஒலிபரப்பாளர்களுக்கான பயிற்சிப்பட்டறையையும் அவரே முன்நின்று நடத்தி உதவியுள்ளார். தான் செல்லும் நாடுகளுக்கெல்லாம் தீபத்தின் செய்தியினையும் சுமந்து சென்ற தூதுவராக அவர் செயற்பட்டிருக்கிறார்.

தீபத்தின் வளர்ச்சியில் ஆழ்ந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்ட அப்துல் ஹமீத் அவர்கள் மென்மேலும் புகழ்பெற்று சிறக்க தீபம் தனது நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறது

தீபம் தொலைக்காட்சி



எங்கெல்லாம் தமிழ் நிகழ்ச்சிகள்
நடைபெறுகிறதோ
அங்கெல்லாம் அமுதத் தமிழ் முழங்கும்
அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத்
அவர்களுக்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

Everest Curry King

Breakfast - Lunch - Dinner

எவ்வகை உணவானாலும்
ஏற்ற முறையில் தயார்செய்து
எப்பொழுதும் பரிமாறுவோர்

நண்பர்கள் விருந்தினர்கள் சகிதம்
நாள்தோறும் நாடிடலாம்
திருமணம் - பிறந்தநாள் மற்றும்
கொண்டாட்டங்களுக்கு வேண்டிய
உணவு வகைகள் உரிய நேரத்தில்
தயாரித்துத் தருவோர்

தாயக - தமிழக உணவுகள்
நித்தமும் சுவைத்திட

Everest Curry King
24, Loampit Hill,
Lewisham SE13 7SW.
Tel: 020 8691 2233

Sea food & Vegetarian Specialist



என் அன்புக்குரிய நண்பர் பி.எச். அப்துல் ஹமீத்

ஒரு கலைஞன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருப்பவர் அன்பு நண்பர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்கள். நான் ஒரு வானொலிப் பாடகனாக மக்களால் அறியப்பட்டேன், அவர்களின் அபிமானத்துக்கு உள்ளானேன் என்றால் அதற்கு அதிக அளவில் பங்களிப்புச் செய்தவர் அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத்.

அவர் ஒரு சாதாரண அறிவிப்பாளர், அதிகாரியல்ல, பொறுப்புக்கள் சுமத்தப்பட்ட கட்டுப்பாட்டாளருமல்ல. ஆனால், கலை என்று வந்துவிட்டால் சகல அதிகாரமும், கட்டுப்பாடும் அவரிடமே இருப்பது போல அனைத்து விடயங்களிலும் கவனம் செலுத்திக் கொள்வார். கட்டுப்படுத்திக் கொள்வார். அவர் கடமையில் இருக்கிறாரோ இல்லையோ என்பதெல்லாம் பிரச்சினையில்லை. ஈழத்துப் பாடல் ஒலிப்பதிவு என்றதும் பாடல்வரிகள், இசையமைப்பு, மெட்டு, பாடும் தன்மை என எல்லாவற்றிலும் ஹமீத் அவர்கள் அக்கறையுடன் கவனம் செலுத்திக் கொண்டதை இன்று நான் நினைத்துப் பார்க்கிறேன். எனது பாடலுக்கு ஏன் இவ்வளவு கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்? அவர் என் பாட்டுக்கு மட்டுமல்ல எவர் பாடினாலும் ஹமீத் அப்படித்தான் செயற்பட்டிருக்கின்றார். நாம் பாடிய ஈழத்துப் பாடல்களுக்கு உரிய முறையில் அறிமுகம் கொடுத்து அவற்றை வானலையில் ஒலிபரப்பாக்கியதையும் அவற்றால் எமக்குக் கிடைத்த நேயர்களின் பாராட்டுக்களையும் நினைத்துப் பார்க்கின்றேன். சந்தோஷமாக இருக்கின்றது.

ஈழத்திருநாட்டில் இருந்த காலம்வரை ஹமீத் உடனான தொடர்பு தொடர்ந்தது. நான் ஜேர்மனி நாட்டுக்கு வந்ததின் பின்னர் 1989ல் முதன் முதலில் நண்பர் ஹமீத்தைச் சந்திப்பதற்காக சகோதரன் எஸ்.கே. ராஜெனின் பிரான்ஸ் இல்லத்திற்குச் சென்றிருந்தேன். ஹமீத் எங்கே இருக்கிறார் என்று கேட்டேன். அங்கே... என்று கூறி அடுத்த வார்த்தைகளை அவர்கள் கூறினாலும் அவை எதுவும் என் காதில் விழவில்லை. அறைக்குள் நுழைந்து, படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்த ஹமீத்தைக் கட்டியணைத்து வணக்கம் தெரிவித்தேன். பின்னர்தான் தெரிந்தது அவரது துணைவியாரும் அருகில் தூங்கிக்கொண்டிருந்தார். எனக்கு மனதுக்கு ஒருமாதிரியாக இருந்தது. ஆனால், நண்பர் ஹமீத் அவர்கள் அன்றிரவு கலையரங்கிலே நிகழ்ச்சி நடைபெற்றபோது என்னை மேடைக்கு அழைக்கும் வேளை "நான் என் மனைவியோடு தூங்கிக் கொண்டிருந்த போது என்னைப் படுக்கையிலேயே கட்டியணைத்து அன்புகாட்டிய பாலச்சந்திரன்" என அறிமுகம் செய்தார். கலைஞன் என்பவன் எப்படியிருக்க வேண்டும் என்பதை மீண்டும் ஒருமுறை உணர்த்தினார். அன்பு என்பது எவ்வளவு அளவுகடந்தது. உண்மையிலேயே என்மீது அவர் கோபம் கொண்டிருப்பார் என்று தான் எண்ணினேன். ஆனால், அப்துல் ஹமீத் அவர்கள் நட்பை எவ்வாறு பேணுகின்றார் என்பதற்கு உதாரணமாக அந்தச் சம்பவம் அமைந்திருந்தது.

1990ம் ஆண்டில் ஈழத்துக் கலைஞர் குழுவிலே என்னையும் அங்கம் பெறவைத்து பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க், நோர்வே பிரித்தானியா என எல்லா நாடுகளிலும் எஸ்.கே. ராஜென் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்துவிட்டார். எனக்கு எல்லா நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுச் சீட்டு இல்லை. விசா பெற்றே செல்ல வேண்டும். எப்படியோ பிரித்தானியா தவிர்ந்த மற்றெல்லா நாடுகளின் விசாக்கள் பெற ராஜெனின் முயற்சிகள் உதவின. நோர்வே சென்றுவிட்டோம். பிரித்தானியா செல்ல விசா பெறுவதற்காக நோர்வேயிலுள்ள பிரித்தானியத் தூதரகத்துக்கு நண்பர் ஹமீத்தும், ராஜெனும் எத்தனை தடவைகள் சென்றார்கள். எண்ணிக்கை இல்லை. அப்படி ஒரு அலைச்சல் அலைந்தார்கள். நிகழ்ச்சிக்கு ஒரே ஒரு நாள் இருக்கிறது. விசா வழங்க அதிகாரிகள் இணக்கம் காட்டுகிறார்கள். ஆனால், ஒரே ஒரு நிபந்தனை எனது கடவுச் சீட்டைக் காட்டி இவருக்கு விசா வழங்க முடியாது, மற்றவர்களுக்கெல்லாம் தரலாம் என விசா வழங்கும் அதிகாரி கூறினார். ஹமீத்தின் முகத்தைப் பார்க்கவே முடியாது போய்விட்டது. நாங்கள் இவ்வளவு பேரும் போவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. இவர் இல்லாமல் (நான்) நிகழ்ச்சி நடாத்தவே முடியாது என்று கூறிவிட்டார். உள்ளே சென்ற அதிகாரி, மீண்டும் வந்து எதுவுமே கூறாமல் ஒவ்வொருவருடைய கடவுச் சீட்டிலும் விசா பதித்து வழங்கினார். எனது கடவுச் சீட்டைத் தவிர மற்றெல்லாவற்றையும் தந்துவிட்ட பின், எனது கடவுச் சீட்டை எடுத்துக்கொண்ட அதிகாரி ஹமீத்தைப் பார்த்து "நீங்கள் கூறிய விடயத்தைக் கவனத்தில் எடுத்து இவருக்கு விசா தருகின்றேன். நன்றாக நிகழ்ச்சியை நடாத்திக் கொள்ளுங்கள்" என வாழ்த்திக் கொண்டார். இவற்றை எஸ்.கே. ராஜென் தான் என்னிடம் தெரிவித்தார். நான் தூதரகத்துக்குக் கூடச் செல்லவில்லை. இப்படியொரு விடயத்தை பிரித்தானிய தூதரகத்தில் சந்திக்க முடியாது. ஹமீத்தின் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. எல்லோருக்கும் சந்தோஷம். அப்போது எம்மோடு கலைப்பயணத்தில் இணைந்திருந்த அமரர் மேஜர் சுந்தரராஜனும் ஆனந்தப்பட்டார். பிரித்தானியாவில் வெஸ்மினிஸ்ரர் மண்டபத்தில் முதன்முதலாக நான் மேடையில் பாடினேன்.

என்னால் என்றும் மறக்கமுடியாத நிகழ்வு இது. என் அன்பு நண்பருக்கு அதே பிரித்தானிய தேசத்தில் பாராட்டுவிழா நடைபெறுகிறது. இந்த விழாவிலே அவரைப் பாராட்ட எத்தனையோ விடயங்களை ஒவ்வொருவரும் நினைவில் தாங்கி வருவார்கள். நானும் ஹமீத்தும் சம்பந்தப்பட்ட எத்தனையோ விடயங்கள் அதிலே சிலவற்றை எழுத்திலே பதித்துக் கொண்டேன். நண்பர் ஹமீத்தின் கலைப்பயணம் தொடரட்டும், கலைஞர்களுக்கு உற்சாக மாத்திரையாக விளங்கும் அவர் பணி மென்மேலும் தொடர எனது நல்வாழ்த்துக்கள்!

அன்போடு

கே.எஸ். பாலச்சந்திரன்

(பாடகர்)

கேட்போரை வசீகரிக்கும்
தேமதுரக் குரலோன் அன்பு அறிவிப்பாளர்
பீ. எச். அப்துல்ஹமீத் அவர்களே!
உங்கள் கலைச்சேவை
உலகெங்கும் தொடரட்டும்
இனிமையான வாழ்த்துக்கள்

கே.எஸ்.பி. சுப்பர் பூட்ஸ்

ஆசிய, ஆபிரிக்க நாட்டு உணவுப்பொருட்கள்
அதிசயிக்கும் வகையில் மலிவு விலைகளில்

வாரந்தேறும் வரவழைக்கப்படும்
மரக்கறிவகைகள் – கடலுணவுகள்
அருந்திட உகந்த குளிர்பானங்கள்

அனைத்து இடங்களுக்கும் பேசக்கூடிய
தொலைபேசி அட்டைகள் யாவும்
ஒரே இடத்தில்

K.S.P.SUPER FOODS
& OFF LICENCE

318, HIGH STREET NORTH,
MANOR PARK, LONDON E12 6PS

TEL: 020 8471 7806
MOBILE: 07989 441 069





MUSIC PRODUCER
(MEMBER OF I.P.R.S)
PANCHATHAN RECORD-INN

தொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

I am very happy to hear about the felicitation and tribute given to Mr. B.H.Abdhul Hameed. He has been a close friend and has been associated with me for more than a decade. I pray to God for his long and healthy life so that he can inspire more people to spread the perfume of Tamil language and culture. We thank Universal Tamil Art Culture for honouring Mr.Abdhul Hameed in this regard.

Wishing him all success

A.R.Rahman

மீண்டும் மீண்டும் எம்மை வானொலியுடன்
மூழ்கவைத்திட்ட அன்பு அறிவிப்பாளரே
வாழ்த்துக்கள்!

MIAMMY HOME
ACCOUNT

மிக அதிக நேரம் தடையற்ற தொடர்பில்
தெளிவான தொலைபேசி
உரையாடல்களுக்கு என்றும்
உகந்தது

MIAMMY HOME
ACCOUNT

மீண்டும் மீண்டும் கதைக்க
ஒரு முறை உபயோகியுங்கள்

**MIAMMY HOME
ACCOUNT**

வாடிக்கையாளராகுங்கள்

MIAMMY HOME ACCOUNT
Mike: 078 79 88 06 36



திரு. பீ.எச்.அப்துல் ஹமீத் பற்றி சில வார்த்தைகள்

மாணிக்கம் சத்தியமூர்த்தி



எழுபதுகளின் முற்பகுதி என நினைக்கிறேன். வீட்டில் வானொலி கேட்பதற்கு வசதிகள் கிடைத்த காலம் அது அந்தநேரம் விரும்பிக் கேட்கின்ற நிகழ்ச்சி இசையும் கதையும் ஒரு ஆண்குரலும் ஒரு பெண்குரலும் என்னைப் பல தடனவகள் புல்லரிக வைத்திருக்கின்றன. அந்தக் குரலுக்குரியவர்கள. ஹமீத்தும் ஆமனா பேகமும் தான். கதையின் உணாவுச் சூழலுடனம், கதா பாத்திரங்களுடனும் ஒன்றாகி இருந்த இந்தக் குரல்கள் இப்போதும் இனிய நினைவாகவே உள்ளன. ஆர்ப்பாட்டமற்ற, அமைதியான ஹமீத்தின் அறிவிப்புத் திறமைக்கு நான் அபிமானியாகி விட்டேன். சொற்தெளிவு, குரல்கட்டுப்பாடு, சொல்லாட்சி, தேடலின் பயனாகக் கிடைத் அறிவு, என்பன இவரை முன்னணி அறிவிப்பாள்ராயும், இவ் அறிவிப்புத்துறையில் முடி சூடா மன்னனாகவும் ஆக்கிவிட்டது. ஆம், திரையில் சிவாஜி கணேசனுக்கு கொடுத்த மதிப்பை வானொலியில் இவருக்கு கொடுத்திருக்கிறேன். இவரை ஒரு முறை சந்தித்துப் பேசிவிட வேண்டும் என்று மனம் உந்திக் கொண்டிருந்த காலப்பகுதியில்தான் இலங்கை வானொலியில் மெல்லிசை கலைஞரக தேர்வு செய்யப்பட்டு பாட ஆரம்பித்தேன். ஈழத்து மெல்லிசையிலும் ஈழத்துக் கலைஞர்களின் வளர்ச்சியிலும் அர்வம் கொண்டு பணியாற்றி வரும் அப்துல் ஹமீத் அவர்களை கௌரவிக்கும் இங்நேரத்தில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈழத்துக் கலைகளுக்கு
வானலையில் முடிசூட்டிய
ஈழக்கலைகளின் நாயகனே!
எமது வாழ்த்துக்கள்!

ஈழம் சொப்

ஈழத்து - இந்திய உணவுப் பொருட்கள்
ஈழத்துக்கும் ஏனைய நாடுகளுக்கும்
பேசக்கூடிய தொலைபேசி அட்டைகள்

ஈழத்தவர்களின்
இதயம் கவர்ந்த நிறுவனம்

கடல் உணவுகள், மரக்கறிவகைகள்
Audio CD - Cassette
DVD - VCD
அனைத்தும் கிடைக்கின்றன

EELAM SHOP

399, Lewisham High Street,
Lewisham,
London SE13 6NZ.
Tel: 020 8690 6545



ஐக்கிய இராச்சியத்தில் விழா காணும் அன்பு அறிவிப்பாளருக்கு...

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

"செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே..."
சிந்தனைச் சிற்பியாம் பாரதி மொழிந்ததை
செவியுணரச் செய்தது நின் குரலே
பன்னிரு வயதினிலே இலங்கை வானொலியாம்
பல்கலைக்கழகத்தில் நீ நுழைந்தாய்
பாங்குற நற்றமிழை பலகாலம் பேசியே
பல்லாயிரம் அகங்களை நீ கவர்ந்தாய்
தன்னரும் தமிழோடு உன் உயர் பண்பாலே
தளர்வின்றி ஒலிக்கலைக்கு மேன்மைதந்தாய்
தரணிமிசை தமிழ்பொழியும் வானொலிக்கெல்லாம்
தாயுமானவராய் நித்தம் துணைபுரிந்தாய்
ஈழத்து மெல்லிசைத் துறை செழிக்க நீயே
இறைதாஸனாகி இசைக்கவி புனைந்தாய்
தாயகத்து கலைஞர் திறன் உலகறிய
தவறாமல் அரங்குதோறும் பரிந்துரைத்தாய்
நேயமுடன் ஒலி - ஒளி சிகரமாகி
நினைவெல்லாம் நிலைத்தவனே கலைஞானிநீ
ஓய்வறியா அலைகடலாய் உன் கலைவாழ்வு
ஒப்பிலா வெற்றிகண்டு வாழியவே!
இதய நிறைவுடன்



கார்மேகம் நந்தா

இயக்குனர் ஒளவை தமிழ்க்கலைக் கல்லூரி

ஒஸ்லோ, நோர்வே.

எல்லோரையும் இனிமைக்குரலால்
மகிழ்விக்கும் மதுரக் குரலோன்
பி.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு
எங்கள் இனிய வாழ்த்துக்கள்!

TSK ENTERTAINMENT

வீட்டில் இருந்து விரும்பிய படங்கள்
விரும்பும் நேரத்தில்
விருந்தினரோடு பார்த்திடலாம்

DVD-Video
Tamil - English - Hindi
Rent & Sale

வேண்டிய பாடல்கள்
விரும்பிக் கேட்டிடலாம்
Audio CD

ஒருமுறை விஜயம் செய்யுங்கள் TSK
Transfer
VHS to DVD VHS to VHS DVD to DVD

எல்லாவகையான சர்வதேச தொலைபேசி
அட்டைகளும் மலிவு விலையில்

TSK ENTERTAINMENT

Tel: 020 8868 1172
E-mail: tsk4u@hotmail.com



Canadian Thamilosai Radio Inc
கனடா தமிழோசை வானொலி
30, Loggerhead Grove, Scarborough, Ontario, Mix1 T7.
Tel: 416-292-2262 Fax: 416-297-OSAI (6724)
Toll free Tel: 1-800-316-9193
E-mail: sri@cthamilosai.ca

Born with silver tongue

இலங்கைத் தமிழர்கள் பேர் சொல்லிப் பெருமைப்படுவதற்கு ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு துறையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பலர் இருந்திருக்கிறார்கள். இதில் ஒலிபரப்புத்துறை விதிவிலக்கல்ல. இலங்கைத் தமிழும் ஒலிபரப்பும் நிலைத்திருக்கும் வரை நிலைத்திருக்கக்கூடிய ஒரு பெயரும் விதிவிலக்கானதல்ல.

அந்தப் பெயர் - திரு. B.H. அப்துல் ஹமீத்

செல்வத்துடன் பிறந்து செல்வத்தில் செழிப்பவர்களை ஆங்கிலத்தில் Born with the silver spoon என்று கூறுவார்கள். ஒலிபரப்புத்துறையில் திரு. B.H. அப்துல் ஹமீத்தை Born with silver tongue என்று சொல்லலாம். அந்த அளவுக்கு அவரது வெங்கலக் குரல் ஒலிக்காத நாடில்லை. பேசப்படாத மேடையில்லை.

வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், மேடைநிகழ்ச்சி என்று கூடுவிட்டு கூடு பாய்ந்துகொண்டிருக்கும் இந்தக் கம்பீரக் குரல் கடல்கடந்து கனடாவில் தமிழோசை வானொலியில் ஒலிக்கின்றது என்பதில் எங்களுக்கு அளவிடமுடியாத அளவில் பெருமை. திரு. B.H. அப்துல் ஹமீத் கனடாவில் தொகுத்து வழங்கிய 3 மேடை நிகழ்ச்சிகள் தமிழோசை வானொலியால் ஏற்பாடு செய்யப்பட்டவை. இந்த வருட இறுதிக்குள் மேலும் இரு மேடை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் தமிழோசை வானொலியின் மேடை நிகழ்ச்சிகளுக்கு திரு. B.H. அப்துல் ஹமீத் முதல் மரியாதைக்குரிய மன்னர் போல. ஒலிவாங்கிக்கு முன்னால் அவரது நாவசைந்தால் தான் நிகழ்ச்சி தொடங்க மேடைத்திரை விலகும்.

எங்கள் திரு. B.H. அப்துல் ஹமீத் அவர்களுக்கு லண்டன் மாநகரில் பாராட்டு விழா நடைபெறுவதில் எங்களைவிட அதிக சந்தோசப் படுபவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள்.

தமிழோசை வானொலி

ரொரன்ரோ, கனடா.





கானக்குரலோன் எங்கள் உள்ளம் கவர்ந்த
அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத்
அவர்களுக்கு இனிய நல்வாழ்த்துக்கள்!

Ganapathy Cash & Carry

உலகின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்து
உங்களுக்காகத் தருவிக்கப்படும் தரமான
உணவுப் பொருட்கள் அத்தனையும்
ஓரிடத்தில்

உடலுக்கு ஆரோக்கியம் தரும்
பசுமையான மரக்கறிகள்
ஊட்டச்சத்துள்ள கடல் உணவுகள்

உள்நாட்டு வெளிநாட்டு மதுபான வகைகள்
உலகெங்கும் பேசிடத் தொலைபேசி அட்டைகள்

GANAPATHY CASH & CARRY

34--38, EALING ROAD, WEMBLEY, MIDDX HA0 4TL

TEL: 020 8795 4627
FAX: 020 8903 3185

அகிலமெங்கும் அப்துல் ஹமீத் அவர்களின் குரல் ஒலிக்க வேண்டும்!

ரேலங்கி செல்வராஜா
அறிவிப்பாளர் - ரூபவாஹினி

தமிழுக்கு இயல், இசை, நாடகம் என்கின்ற மூன்று கூறுகள் இருப்பது அனைவரும் அறிந்ததே. அந்த ஒவ்வொரு கூறும் அந்தந்தத் துறையில் ஆளுமை பெற்ற வல்லுனர்களால் உச்சம் பெற்று, தமிழினத்தை அகில உலகமும் சங்கைப்படுத்தும் உச்ச நிலைக்கு உயர்த்தியுள்ளது. அந்தவகையில் அறிவிப்புத் துறையும் இன்று மேம்பட்டுள்ளது. இந்தத் துறையில் இமயத்தைத் தொட்டவர்தான் பி.எச். அப்துல் ஹமீத் அவர்கள்.

இனிய சுபாவம், கோபம் வரமாட்டாதோ என்று வியக்கவைக்கும் வகையிலான பண்பு. கடமைகளை செயலார்வத்துடன் பொறுப்போடு நிறைவேற்றும் தன்மை, நேரம் தவறாமை, இவை அனைத்தும் இவரிடம் இருக்கும் சிறப்பம்சங்கள். இந்தச் சிறப்புக்களை நாமும் அவரிடமிருந்து கற்றுள்ளோம்.

புதிய அறிவிப்பாளர்களுக்கு அவர் பயிற்சியளிக்கும்போது, அவர்களிடத்திலுள்ள பயத்தைப் போக்கி, நம்பிக்கையூட்டும் விதத்தில் அறிவிப்புப் பயிற்சியை வழங்குவார். அந்தவகையில் நான் பயிற்சி அறிவிப்பாளராகக் கடமை புரிந்த காலத்தில், வர்த்தக சேவையில் காலையில் நடைபெறும் பொங்கும் பூம்புனல் என்ற நிகழ்ச்சியை, அவர் விடுமுறையில் நிற்கும் நாளில் என்னைச் செய்யுமாறு கூறி எனக்குத் துணிவூட்டியவர். இதனை என்றும் என்னால் மறக்க முடியாது.

இவ்வாறு, பல அறிவிப்பாளர்களை வளர்த்த அந்த அறிவிப்புச் சிகரத்துக்கு எமது தாய்நாட்டில் மட்டுமல்ல, உலகநாடுகளிலும் பல பாராட்டுக்கள் கிடைத்துள்ளன.

இப்போது பிரித்தானியாவில், உலகத் தமிழ்க் கலையகம் அவருக்குப் பாராட்டுவிழா நடாத்துகிறது. அது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. என்றும் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களின் குரல் இலங்கையில் மட்டுமல்லாது உலகமெல்லாம் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.





என்றும் எமது அபிமானத்துக்குரிய அன்பு
அறிவிப்பாளர்
பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு
இனிய நல்வாழ்த்துக்கள்!

SKM TELE WORLD

சர்வதேச தொலைபேசி அட்டைகள்
மொத்தமாகவும் - சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

இலண்டனில் 20 பவுண்ட்ஸ்
SKM ல் கொடுத்தால்
தமிழ் நாட்டில் உள்ள உங்கள் இல்லத்தில்
4 ½kg சொக்லேற் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு

SHEIK ISMAIL
07944 013 880

உச்ச நிலையை அடைந்த போதும் தன்னை மாற்றாத கலைஞர் பீ.எச். அப்துல் ஹமீத்

இலங்கைத் தமிழர்களுக்கு ஓர் அடையாளத்தைத் தருபவைகளுள் ஒலிபரப்புக் கலையும் ஒன்று. அந்தக் கலையில் சிறுவயதுமுதல் ஈடுபாடு காட்டி பின் அதையே தன் தொழிலாகக் கொண்டு உச்ச நிலையை அடைந்தவர் பீ..எச். அப்துல் ஹமீத்.

1970 ஆம் ஆண்டு ஒரு பகுதிநேர அறிவிப்பாளராக அவரை நான் பார்த்தபோது எப்படி இருந்தாரோ, இன்று முப்பத்தைந்து ஆண்டுகள் கழித்து மிக உச்ச நிலையை அடைந்த அறிவிப்பாளராக அவரைப் பார்க்கும்போது அப்படியே தன் துறைமீது மாறாத ஆர்வம் காட்டும் அவரது குணம்தான் அவரது வெற்றிக்குக் காரணம் என்று கூறலாம்.

தன் துறைசார்ந்த தொழில்நுட்பம் உட்பட சகலவற்றிலும் ஒரு தேடல் பீ.எச். அப்துல் ஹமீத்திடம் உண்டு. இசையில் மிக நுட்பமான இரசனை அவருக்கு இருக்கிறது. அறிவிப்புத் துறையில் பிரவேசிக்க விரும்பும் இளைஞர்கள் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களை முன் மாதிரியாகக் கொள்ளுதல் நன்று. அவர் ஒலி, ஒளிபரப்புத்துறைகளில் ஆற்றிய சேவைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் உலகத் தமிழ்க் கலைஞர்களுடன் இணைந்து நானும் எனது அன்பையும் பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

பி. விக்னேஸ்வரன்
ஒலி, ஒளிபரப்பாளர்





கிழக்கில் சூரியன்
உதயமாவதற்கு முன்னரே
வானலையில் எம்மைத்
துயிலெழுப்பிய குரலுக்குரியவர்
அன்பு அறிவிப்பாளர்
பீ.எச். அப்துல் ஹமீத்
அவரின் பாராட்டுவிழா சிறக்க
வாழ்த்துகின்றோம்!

KIRUS TEXTILES

நாகரீக உடைகளின் கூடம்
நங்கையர் - ஆடவர் - சிறுவர்
அனைவருக்குமேற்ற
அனைத்து விதமான
உடைகளுக்கு

KIRUS TEXTILES

Lewisham SE13 7SN

Tel: 020 8692 9686

என் இசைப்பயணத்தில் அப்துல் ஹமீத் அவர்கள்

ஈழத்துக் கலையுலகில் அப்துல் ஹமீத் அவர்கள் ஒரு சாதனைச் சக்கரவர்த்தி. அவரின் சாதனைகள் ஒவ்வொன்றும் மற்றைய கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலமாகவே நிகழ்த்தப்பட்டுள்ளன.

முதன்முதலாக பி.எச். அப்துல் ஹமீத் அவர்களை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 1978ல் சந்தித்தேன். பாட்டுக்குப் பாட்டு வழங்கவந்திருந்தார். நான் அவரோடு நெருங்கிப் பழகியது புலம்பெயர்ந்த மண்ணிலேயே நீண்டகாலமாகத் தொடர்ந்தது. 1988ம் ஆண்டு முதல் இலங்கையிலிருந்து கலைஞர்களை அன்பு நண்பர் எஸ்.கே. ராஜென் அழைப்பார். அந்தக் கலைஞர் குழுவுக்கு தலைமை தாங்கும் பொறுப்பு அன்புக்குரிய அப்துல் ஹமீத் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுவிடும். அவர் புறப்படுவதற்கு முன்னரே பாடல் நிரல், தேவையான இசைக்கருவிகள், ஒலியமைப்புக்கு வேண்டியவை என ஒரு பட்டியல் அனுப்புவார். ராஜென் என்னிடம் அதனைக் காட்டுவார். அப்பொழுது நான் வியந்திருக்கிறேன். ஒரு அறிவிப்பாளர் இத்தனை விடயங்களைக் கவனிக்கிறாரே என்று.

ஐரோப்பிய நாடுகளில் 1988 முதல் பி.எச். அப்துல் ஹமீத் அவர்கள் தலைமையிலே எஸ்.கே. ராஜென் நிகழ்ச்சிகளை நடாத்திவந்தார். அந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் என்னைப் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என அப்துல் ஹமீத் அவர்கள் அன்புக் கட்டளையிடுவார். நானும் அவரின் கட்டளைக்குப் பணிந்து ஐரோப்பாவில் கலைப்பயணம் புரிந்திருக்கின்றேன்.

என்னைத் தனக்கருகிலேயே அமர்த்திக் கொள்வார். எனது கதைகளைக் கேட்டுச் சிரிப்பார். அவரும் பல கதைகள் கூறுவார்.



எனது இசையமைப்பிலே பாடல்கள் உருவாகவேண்டும் என ஆலோசனை கூறியதுடன் மட்டுமல்லாது, அவரே பாடலும் எழுதிக் கொடுத்து இந்தியாவிலே ஒலிப்பதிவிலும் உடனிருந்து உதவிக் கொண்டார்.

மேடை நிகழ்ச்சிகள் நடைபெறும் போது அவரிடமிருந்து கலைஞர்கள் பலவிடயங்களைக் கற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு நான் பலவிடயங்களை அவரிடமிருந்து அறிந்து கொண்டேன்.

என்னை மேடையில் அவர் அறிமுகம் செய்வதே ஒரு தனிப்பாணி. அவர் ஒவ்வொரு தடவை என் பெயரைச் சொல்லும் போதும் என் உள்ளம் ஆனந்தத்தில் தத்தளிக்கும்.

உலகெங்கும் வாழும் தமிழ் நெஞ்சங்களைத் தன் இனிமைக் குரலால், பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் ஊடாகத் தாலாட்டிவரும் எனது அன்பிற்கினிய நண்பர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு நடைபெறும் பாராட்டுவிழா, ஈழத்துக் கலையுலகத்துக்கே நடாத்தப்படும் ஒரு விழா. அந்த விழாவில் நானும் நின்று பங்குபற்றி அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அவர்களை வாழ்த்திக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அன்புடன்

எஸ்.கே. பஞ்ச்

கரங்கள் பலதாங்கி
கண்கள் பல்லாயிரம் படிப்பது

அன்பு அறிவிப்பாளர்
பீ.எச்.அப்துல் ஹமீத்
அவர்களுக்கு எமது
இனிய நல்வாழ்த்துக்கள்

45B CRUSOE ROAD
MITCHAM
SURREY CR4 3LJ

ஒரு பேப்பர்
ORU PAPER



எனது அன்புக்குரிய நண்பர் பீ.எச்.அப்துல் ஹமீத்திற்கு வாழ்த்துக்கள்

நீண்ட கால நண்பரான அறிவிப்பாளர் திலகம அப்துல் ஹமீத் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வரைவதில் பெருமகிழ்வடைசின்றேன். பீ.எச். என்று அன்பாக வானொலி நிலையத்திலும் அழைக்கப்பட்ட அவருடன், ராஜேஸ்வரி சண்முகம், நடராஜசிவம், ஜோக்கிம் பெர்ணண்டோ மற்றும் அடியேனும் ஒரே குழவில் அறிவிப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெற்றோம். எமது சக அறிவிப்பாளரான நண்பர் இன்று தமிழ் பேசும் உவகெல்லாம் புகழ் பெற்றிருப்பது எமக்கெல்லாம் மகிழ்வையும் பெருமையையும் அளிக்கின்றது.

இலங்கை வானெலியின் வளர்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் வித்திட்டவர்களான எஸ்.பி.மயில்வாகனன், எஸ்.கே.பரரபஜசிங்கம், ஆர்.எஸ்.கனகரத்தினம், கே.எஸ்.நடாராஜா, சானா, விவியன் நமசிவாயம் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் யோகா தில்லைநாதன், புவன லோஜினி ஆகியேரின் ஒத்தாசையுடன் பயிற்றப்பட்ட பீ.எச். இளவயதிலேயே புகழ்பெற்ற அறிவிப்பானனாக வரக்கூடிய திறமைகளைப் பெற்றிருள்தார்.

தோற்றில் புகழொடு தோன்றுக என்பது பீ.எச்.அவர்கனின் மட்டில் எவ்விதம் பொருத்தமானது என்பதற்கு ஒரு சம்பவம். நடிகர் திலகத்துக்கு சிங்கப்பூரில் விழாவெடுத்தபோது ஆயிரக்கணக்காக அறிவிப்பாளர்கள் தமிழ் நாட்டில் இருந்த போதும் அறிவிப்பாளர் திலகத்தைத்தான் அழைத்திருந்தார்கள். நடிகர் திலகம் தனது பிரத்தியேகமான பாராட்டுக்களை பீ.எச். அவர்களுக்கு வழங்கியிருந்தார். கவிஞர் வைரமுத்து அவர்கள் பீ.எச். இன் நாவில் தங்கமுலாம் உண்டென்று வர்ணித்திருந்தார்.

செய்வன திருந்தச் செய் எனும் கூற்றுக்கும் இவர் சிறிய வயதிலேயே உதாரணமாகக் திகழ்ந்திருக்கினர். பயிற்சிக் காலத்தின்போது இசைத்தட்டு நூலகத்தில் இரவு பகலாக இருந்து இசையப்பாளக்கன், பாடகர்கள் ஆகியோது பிண்ணைச் சரித்திரங்களை அறிந்து, இசைத்தட்டு தகவல்களத் தாங்கி நடமாடும் பல்கலைக்கழகமாக் விளங்கிவந்தார்.

இப்பொழுது எனக்கு சங்தேகங்கள் எழுந்தால் பீ.எச். அவர்கனைத் தொடர்பு கொன்ளத் தவறுவதில்லை.

சமய அறிவும் நிரம்பியவர் என்பதை அவருடன் உரையாரும்போது கண்டு கொள்ளலம் எல்யேரது சமயங்கனையும் மதித்து எல்லோர்க்கும் பொதுவான இறைவன் என்று தனது உரையில் சேர்த்துக் கொள்வர்.

அந்த எல்லோர்க்கும் பொதுவான எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு எல்லா வளங்களையும் வழங்கி அடுத்துவரும் தலைமுறைக்கும் தனது அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள வழிவகுக்கவேண்டும் என இறைஞ்சுவோம்.



ஜோக்கிம் இருதயானந்தன்

அறிவிப்பாளர்



மெல்லிசை மன்னருடன்

விருப்பத்துக்குரிய அன்பு அறிவிப்பாளர் அவர்களே!

வில்சன் எஸ்ரேட் ஏஜென்ட்டின்

வாழ்த்துக்கள்!

WILSON ESTATE AGENT

வீடு வாங்க விரும்புகிறீர்களா?
வீட்டிற்குரிய MOTGAGE ஐ முதலில் பெறுங்கள்

விரைவான MOTGAGE ஒழுங்குகளை மேற்கொள்வதில்
வீடு வாங்கும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கை
பெற்றவர்கள்

வீடு வாங்க - விற்க - வாடகைக்குவிட
விரும்பும் ஒழுங்குகள் அனைத்தையும் செய்து தருவோர்

WILSON ESTATE AGENT

ஒருமுறை வாருங்கள் உண்மை அறிவீர்கள்!

383, NORTHOLT ROAD
SOUTH HARROW
TEL: 020 8426 7500

96, MITCHAM ROAD,9,
TOOTING
020 8682 9199

NORTH ROAD,
SOUTHALL
020 8867 9696

விரைவில் WILSON ESTATE AGENT - CROYDON ல்...

வானொலிக் கலைஞர்களில்யாருக்கும் கிட்டாத பெரும் புகழைச் சம்பாதித்தவர் பீ.எச். அப்துல் ஹமீத்

ஈழத்தமிழரின் வெகுசனப் பண்பாட்டு வரலாற்றில் வானொலி கொடிகட்டிப் பறந்த ஒரு காலமிருந்தது. பத்திரிகையும் வானொலியுமே முக்கிய வெகுசன ஊடகங்களாகத் திகழ்ந்தபோது சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால்நூற்றாண்டுக் காலப்பகுதியில் இலங்கை வானொலியே பிரபல்யம் மிகப் பெற்றிருந்தது. அரசாங்க வர்த்தமானிகளை வானலைகளில் ஒலிக்கும் கைங்கரியத்தையே அவை செய்தனவாயினும் பெருமைப்படத்தக்க ஒலிபரப்பாளர்களை இலங்கை வானொலி உருவாக்கித் தந்துள்ளது.

அறிஞர் சோ. சிவபாதசுந்தரம் பிள்ளையார் சுழிபோட்டுத் தொடக்கிய இலங்கை வானொலி எஸ்.பி. மயில்வாகனன், வி.என். பாலசுப்பிரமணியம், கபூர், சுந்தா, ஜோர்ஜ் சந்திரசேகரன், சற்சொரூபவதி நாதன், சில்லையூர் செல்வராசன், கே.எஸ். ராஜா, இராஜேஸ்வரி சண்முகம், புவனலோஜினி, நடராஜசிவம், பீ.எச். அப்துல் ஹமீத், என்று நீளும் ஆற்றல் மிக்க ஒலிபரப்பாளர்களைத் தன் பயிற்சிப் பட்டறையில் பட்டை தீட்டியிருக்கிறது.

உலகெங்கும் வாழும் தமிழர்களின் மத்தியில் அறியப்பட்ட ஒலிபரப்பாளராக தன்னை நிலைநிறுத்திய சாதுரியம் பீ.எச். அப்துல் ஹமீத்துக்கு உரியது. தனது கம்பீரமான குரலால், பிசிறில்லாத செட்டான வசன ஓட்டத்தால் நேயர்களின் நெஞ்சில் வசீகரமான இடத்தை அவர் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்.

எழுபது ஆண்டுகாலத் திரை இசைத் துறையில் அவருக்குள்ள ஞானம் என்னை வியப்படைய வைத்திருக்கிறது. வானொலித் துறையிலே பிரகாசித்த பீ.எச். அப்துல் ஹமீத் தொலைக்காட்சியிலும் கீர்த்தி பெற அவரது தமிழ்த்திரை இசை அறிவு பெரிதும் கைகொடுத்திருக்கிறது. வானொலிக் கலைஞர்களில் யாருக்கும் கிட்டாத பெரும் புகழைச் சம்பாதித்தவராக பீ.எச். அப்துல் ஹமீத் திகழ்கிறார்.

இந்த ஆற்றல் மிகுந்த கலைஞன் தன் கலைப்பணியில் மேலும் மேலும் மகுடங்கள் சூட என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

மு. நித்தியானந்தன்

தலைவர், செய்திப் பிரிவு,

தீபம் தொலைக்காட்சி.



வைரமுத்து கவிதைகள் சிறப்புப் பிரதியை கலைஞர் மு. கருணாநிதியிடமிருந்து பெறுகிறார் பி. எச். அப்துல் ஹமீத். நடுவில் வலம்புரிஜான்.



தேனாலி படப்பிடிப்பில்

கலை நிகழ்வுகளில்
கலைஞர்கள் ஒன்றாகிட
கலைத்துறை சார்ந்த நண்பர்களே
உங்கள் விபரங்களை
கலையகத்துக்கு அறியத்தாருங்கள்

பெயர்
முகவரி
தொலைபேசி இலக்கம்
ஈடுபாடுகொண்டுள்ள துறை

போன்ற விபரங்களை
எமக்கு அனுப்பி வையுங்கள்

உலகத் தமிழ் கலையகம்
Universal Tamil Art Centre

39, Tintern Road
Carshalton, Surrey SM5 1QF

e-mail: unitac@hotmail.com

தமிழ் ஒலிபரப்புத் துறையின்
தலைமகன் பீ.எச். அப்துல் ஹமீத்

தமிழ் ஒலிபரப்புக்கு அர்ப்பணிப்புடன் ஒருவர் பணியாற்றுகின்றார் என்றால் அவர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களாகவே இருக்கும் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது.
தமிழிலே ஒலிபரப்புச் சார்ந்த நுணுக்கங்களை நன்கு அறிந்து கொண்டவராகவும், நாள்தோறும் வெளியாகும் ஒலிபரப்புச் சார்ந்த விடயங்களை அறிந்து கொள்பவராகவும் இவர் விளங்கிவருகின்றார்.
தமிழைச் சுத்தமாக உச்சரித்துப் பேசுவதன் நிமித்தமே இன்று அப்துல் ஹமீத் அவர்கள் உலகெங்கும் புகழ்பெற்றிருக்கின்றார்.
தமிழைத் தமிழாகப் பேசவேண்டும் என்பதில் அப்துல் ஹமீத் மிக உறுதியாக இருப்பதை அவரது நிகழ்ச்சிகள் மூலமாக அறிந்துகொள்ளக் கூடியதாக இருப்பதுடன், இந்த விடயத்தில் மிகுந்த கவனம் செலுத்தி பத்திரிகை, சஞ்சிகைகளுக்குச் செவ்வியளித்து வருவதையும் நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.
தமிழ் ஒலிபரப்பாளர்கள் அப்துல் ஹமீத் அவர்களை முன்னோடியாகக் கொண்டு தமது பணியாற்றுவார்களேயானால் தமிழுக்கும், தமிழ் ஒலிபரப்புக்கும் மிகப்பெரும் சேவையாற்றியவர்களாகக் கருதப்படுவதற்கு வாய்ப்புண்டு.
தமிழ் ஒலிபரப்புக்கள் இன்று புலம்பெயர்ந்து தமிழ் மக்கள் வாழும் மேலைநாடுகள் எங்கும் நடைபெறுகின்றது. அங்கெல்லாம் அப்துல் ஹமீத் அவர்களின் குரல் ஒலிக்கின்றது. அவரினால் பயிற்றப்பட்டவர்கள் பணியாற்றுகின்றார்கள். அவரை மானசீகமாக மனதில் கொண்டு பணிபுரிகின்றார்கள் என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது.
தமிழ் ஒலிபரப்புத் துறையில் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களின் பெயர் தனித்துவமாகவே இடம்பெற்றிருக்கும்.
தமிழ் ஒலிபரப்பாளர்களுக்கு எல்லாம் தலைமகனாக விளங்கும் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு நாமும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ் தொலைக்காட்சி இணையம்
ttn தமிழ் ஒளி





தேனிசைத் தென்றல் தேவாவுடன்

நாதக் குரலோன் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு
நாமும் இதயம் கனிந்த
வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாதன் கடை

எந்த வேளையிலும் தமிழ்க் கலை
நிகழ்ச்சிகளுக்கு உயிரூட்டும்
அழுதக்குரலோனே உங்கள்
கலைப்பணி மென்மேலும்
தொடரட்டும்.

நாதன் கடை

SK TRADING

GASOMETER STR 31
8005 ZURRCH SWITZERLAND
TEL : 0041-1-2724330

நடிப்பால் எனைக் கவர்ந்தவர் அப்துல் ஹமீத்

- காசிலிங்கம் -

அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அவர்களை எனது பத்திரிகைத்துறை வாழ்க்கையில் மறக்கமுடியாது.
ஒரு இரவா, இரு இரவா? பல இரவுகள் அவர் நடித்த நாடகங்களைத்தான் நான் அதிகமாக கேட்டிருக்கிறேன். நாடகத்தில் அப்துல் ஹமீத் தத்ரூபமாக நடிப்பார். எந்தப் பாத்திரத்தில் அவர் நடித்தாலும், அந்தப் பாத்திரமாகவே அவர் மாறிவிடுவார். அத்துல் ஹமீத் நாடகத்தைக் கேட்பதற்காகவே நான் இரவு வேளைப் பணியைத் தொடர்ந்து வந்தேன் என்றுகூடச் சொல்லாம்.

முக்கிய செய்திகளைப் பெறுவதில் கூட அப்துல் ஹமீத் என்னை தாமதப் படுத்தியிருக்கிறார்.

வானொலி என்பது எவ்வளவு சக்தி மிக்கது என்பதை அதில் வல்மை கொண்டவர்கள் பணிசெய்யும்போதுதான் அறிந்துகொள்ள முடிகிறது.

அப்துல் ஹமீத் செய்தி வாசித்தால் அத்தனை அச்சரங்களும் விளங்கும். நாம் செய்தியைப் பத்திரிகைக்கு எழுதுவதற்கும் இலகுவாகவும் இருக்கும்.

மிகக் சிறுவயதிலேயே அறிவிப்பாளராகச் செயற்பட ஆரம்பித்த அப்துல் ஹமீத், ஈடுபடாத துறைகள் இல்லை. அவர் வழங்கிய வேரடி வர்ணனைகள் பல கேட்டிருக்கிறேன். அதனை நான் கட்டுரையாளனாகவும், 'ஈழநாடு' பத்திரிகையில் வரைந்திருக்கிறேன்.

அவரை தாயகத்தி நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆனால், பாரீஸ் நகரிலே 1997ம் ஆண்டு அன்பர் எஸ். கே. ராஜன் ஏற்பாடு செய்த 'கலையமுதம்' நிகழ்ச்சி எல். எஸ். சி. மண்டபத்திலே பிரமாண்டமாக நடைபெற்றது. அதிலே அப்துல் ஹமீதை வாழ்த்திப்பேசும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது அவர் ஜப்பான் பல்கலைக் கழகத்தினால் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டிருந்தார். அன்றுதான் நேரில் சந்தித்தேன், வாழ்த்தினேன். பின்னர் இருவரும் பேசிக்கோண்டோம். இப்போது பிவித்தானியாவில் அவருக்குப் பாராட்டு விழா நடைபெறுகிறது.
பீ. எச். அப்துல் ஹமீத் இன்னும் பல சாதனைகள் படைக்கவேண்டும் என வாழ்த்திக்கொள்கிறேன்.





மனோவுடன்

ஐ.பி.சி.தமிழ் வழங்கும்

இன்னிசைக் குரல் 2004

இரண்டாவது ஆண்டில்

Walthamstow Town Hall ல்

மூன்று சுற்றுக்களாக
நடைபெறும்
இன்னிசைக் குரல் 2004
இளம் இன்னிசைக் குரல் 2004

இம்முறை நடைபெறுகிறது
முழுவிபரங்களுக்கு IBCயுடன்
தொடர்பு கொள்ளுங்கள்

020 81 00 00 12

என்னைக் கவர்ந்த அப்துல் ஹமீத்

அம்மா எங்களை கொஞ்ச நேரத்துக்குக் குழப்பக் கூடாது. இப்படி நாங்கள் சொன்னோமென்றால் வானலையில் எதனோடோ ஐக்கியமாகப் போகிறோம் என்பது அம்மாவுக்குத் தெரியும்.

ஓய்வு ஒழிச்சலின்றி எங்கள் வீட்டு வானொலி எட்டு வீடு எடுபடக் கத்திக் கொண்டே இருந்தாலும், சில நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு நாங்கள் வானொலியின் அருகிலேயே அமர்ந்து விடுவோம். அவைகளில் திரு.அப்துல் ஹமீத் அவர்கள் தயாரித்து வழங்கும் பாட்டுக்குப் பாட்டு, ஒரு நிமிடம், ஆம் இல்லை, தேனிசை மழை, ஏழு கேள்விகள்.. போன்ற நிகழ்ச்சிகளும் இவைகளோடு இசைக்கோலம் மீனவநண்பன்.... போன்ற தொடர்களும் முக்கிய இடத்தை வகித்தன.

அப்போதெல்லாம் பெரும்பாலான சனி ஞாயிறுகளில் நாங்கள் வானொலியை விட்டு அகலுவதேயில்லை. வானொலிக்குள் புகுந்து விடாத குறை மட்டுந்தான். மற்றும் படி வானொலியே தவம் என்று கிடப்போம். அம்மாவுக்கு நாங்கள் சொல்லும், கொஞ்ச நேரத்துக்கான அர்த்தமே அன்று வேறாக இருக்கும். அப்துல் ஹமீத் அவர்களின் நிகழ்ச்சிகளுடன்தான் நாங்கள் ஐக்கியமாகப் போகிறோம் என்பது அம்மாவுக்கும் தெரியுமென்பதால் அம்மாவும் நிகழ்ச்சிகள் முடியும் வரை எங்களைக் குழப்புவதில்லை.

சில அறிவிப்பாளர்களிடம் நேயர்களைக் கவரும் பிரத்தியேகத் தன்மை உண்டு. அந்த வரிசையில் இலங்கை வானொலியில் கே.எஸ்.ராஜா அவர்களும், அப்துல் ஹமீத் அவர்களும் குறிப்பிடத்தக்க தனித்துவமான இடத்தைப் பெற்றிருந்தார்கள்.

நாங்கள் காலம் நேரம் பாராது இவர்களின் நிகழ்ச்சிகள் எதையும் தவற விடாது கேட்போம். அதனாலோ என்னவோ அந்தக் காலத்தில் இன்னும் முன்னோங்கி நின்ற அப்துல் ஹமீத் அவர்களும், அவரது குரலும் எம்மோடு மிகவும் ஐக்கியமாகி விட்டிருந்தன.

1981 இல் நான் கொழும்புக்குப் போயிருந்த சமயம் அப்துல்ஹமீத் அவர்களின் பாட்டுக்குபாட்டு நிகழ்ச்சியொன்று சரஸ்வதி மண்டபத்தில் நடப்பதறிந்து அதை நேரே பார்க்கும் ஆவலில் சரஸ்வதி மண்டபத்துக்குச் சென்றிருந்தேன். மிகவும் லாவகமாக அப்துல் ஹமீத் அவர்கள் மேடையில் முழங்கிக் கொண்டிருந்தார்.

நூற்றுக்கணக்கான அவரது அபிமான ரசிகர்களின் மத்தியில் அமர்ந்திருந்த என்னை அவர் அறிந்திருக்க மாட்டார். ஆனால் நான் அவரது லாவகமான, அழகிய அறிவிப்பில் லயித்திருந்தேன். நிகழ்ச்சி முடியும் தறுவாயில்தான் எதிர் பாராத ஒரு விடயத்தை அறிவித்தார்கள். அது ரம்ழான் நேரம். அப்துல் ஹமீத் அவர்கள் அன்று நோன்பில் இருந்தார்.

கேட்டதுமே மனதுக்கு மிகவும் கஸ்டமாகப் போய் விட்டது. நோன்பின் போது எச்சிலைக் கூட விழுங்கக் கூடாது என்பது இஸ்லாம் விதிமுறை. அப்படியிருக்க நிகழ்ச்சி நன்றாக நடைபெற வேண்டுமென்ற ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தன் கஸ்டத்தையும் பொருட்படுத்தாது, பார்வையாளருக்கும் தன் களைப்பையோ, இயலாமையையோ தெரிய விடாது அத்தனை அழகாக நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கியிருந்தார். அவரது அந்த - எடுத்துக் கொண்ட விடயத்தைத் தன்னதாக நினைத்து செவ்வனே நடாத்தி முடிக்கும் - தன்மை நிறைந்த, கலையோடு கூடிய கடமையுணர்வு என்னை வியக்க வைத்தது. அதன் பின் அப்துல் ஹமீத் அவர்கள் எனக்குள்ளே இன்னும் சற்று உயர்ந்திருந்தார்.

புலம் பெயர்ந்த பின் நீண்ட காலங்களாக அவரின் குரலைக் கேட்கவோ அவரது அழகிய லாவகமான அறிவிப்பில் லயிக்கவோ எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஏறக்குறைய பத்தாண்டுகளுக்குப் பின் 26.9.1999 அன்று அவர் ஐபிசிக்கு வருகை தந்து சுமதியும், கணேசும் இணைந்து தயாரித்து வழங்கிய காப்பரிதி நிகழ்ச்சியினூடு குரல் தரிசனம் தந்து எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

இதை விட ஆச்சரியமான விடயம் என்னவென்றால் ஈழத்துப் பாடல்களில் இயற்கையின் ஒவ்வொரு அசைவும் கண்ணுக்கு மட்டும் அழகைத் தராமல், அதனால் எழும் ஓசைகள் சுதியும், லயமும் கலந்த இனிய இசையாகி மனங்களை எப்படி மகிழ்விக்கின்றது என்பதைச் சொல்லும் - இசையின் மழையில் நனைந்திடும் நேரம் இதயங்கள் யாவும் இணைந்தொன்று சேரும்... என்ற பாடலை நான் மிகவும் ரசித்துக் கேட்பேன். எனக்குத் தெரிந்த வரையில் இப்பாடலுக்கு பயாஸ் இரட்டணம், இருவரும் இணைந்து இசையமைக்கப் பொன் சுபாஸ் சந்திரன் அவர்கள் தனது அருமையான குரலைக் கொடுத்திருந்தார்.

பாஷை, நிறம், மதம், சாதி, உயர்வு, தாழ்வு.. என்று எல்லாமே மண்டியிட்டு அமர்ந்து விட, எந்த பேதமுமின்றி மனங்களை இணைக்கும் இப்பாடலை எழுதிய இறைதாசன் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. பாடல் வரிகளில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்களை மட்டும் அடிக்கடி எண்ணிப் பார்த்திருக்கிறேன்.

இது விடயத்தில் மிகவும் தன்னடக்கமாக இருந்த இறைதாசன் என்ற கவிஞர் எனது அபிமான அறிவிப்பாளர்களில் ஒருவரான அப்துல் ஹமீத்தான் என்பதை திரு.எஸ்.கே.ராஜென் அவர்கள் ஐபிசியின் ஒரு நிகழ்ச்சியில் அறிமுகப் படுத்திய போது இப்படியொரு திறமையும் அவரிடம் உண்டா என நினைந்து உண்மையிலேயே நான் வியந்து போனேன்.

சந்திரவதனா

யேர்மனி



'இசைப்பயணம்' படப்பிடிப்பில்

:Voice Telecom

international calling cards...



...for Asia
<<< and other parts of the world



<<< Europe and U.S.A. ...



<<< for all parts of Africa ...



<<< Middle East...



<<< Eastern Europe ...

and for Sri Lanka >>>





QUICK access...
CLEAR lines...
BETTER rates.....

SALES ENQUIRY

CANADA 416 285 9758	NORWAY 800 58 180
DENMARK 80 70 17 67	PORTUGAL (0034) 91 291 0096
FRANCE 08 05 30 05 20	SPAIN 901 666 052
GERMANY 069 2400 7860	SWEDEN 020 1401 162
NETHERLANDS 0800 020 1631	UK 0800 635 6 635

www.voicetelecom.com

....your link to the world

NO line rental.... NO hidden charges.... NO calling cards

:VOICE-DIRECT HOME ACCOUNT



...the convenient option
for calling anywhere you want...
from your home...
or where ever you are
with....

to open an account
just DIAL....

0800 519 4 519

OR 0207 177 22 00

YOU CAN ALSO OPEN AN ACCOUNT ONLINE BY VISITING OUR WEBSITE:

www.voice-direct.com

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

B.H. Abdul Hameed: A Broadcaster Par excellance for the Thamil Speaking World

As an ardent electronic meida fan of B.H. Abdul Hameed, I feel proud that a son of my soil has been acclaimed as one of the best broadcasters in the world in the Thamil Language.

His modulated voice quality, his - expression of his inner self through subtle and warm phrasing and enunciation, his wide knowledge on men (women too) and matters, and above all his mastery of the Thamil language have all earned him the respect and admiration from discerning fans all over the world.

I am delighted to wish him warmly for his continued success over the airwaves of radio and the television transmissions right round the globe.

Congratulations B.H.!

K.S. Sivakumaran
(Broadcaster / TV Presenter /
Writer and Critic in both English and Thamil)



மெல்லிசை மன்னர்களுடன்



பாரதிராஜாவின் பொன்னாடை

மதுரக்குரலோனே உங்களுக்கு
மகிழ்வான வாழ்த்துக்கள்

மாலா மளிகை

மக்கள் மனம் நிறைந்த
மாபெரும் கலைஞனே
பாரீஸ் வரும் ஒவ்வொருவேளை
மறக்காமல் சந்தித்து
மகிழ்ச்சிப் படுத்தும் தங்களுக்கு
மென்மேலம் சிறப்புக்கள்சேர
வாழ்த்துகின்றோம்

மாலா
மலிவுக்கு மறுப்பெயர் மாலா
20 வருடத்திற்கு மேற்பட்ட சேவை
MALA
இலங்கை இந்திய ஆசிய நாட்டு உணவுப்பொருட்களின்
இறக்குமதியாளர்களும் ஏற்றுமதியாளர்களும்
M : Marcadet Poissonniers
TEL: 01 42 62 01 23
FAX: 01 42 57 94 03
22, Rue Labat
75018 PARIS

S.P. Balasubrahmanyam

16, Kamdar Nagar,
Chennai - 600 034.
Phone : (91-44) 28172757
Fax : (91-44) 28173111



My acquaintance with Thiru. Abdul Hameed is almost since 30 years. When I first went to Colombo for a concert tour with my orchestra, he was comperer for all the shows. Since then he must have been on the stage with me in India and various places abroad hundreds of times. His knowledge of music and literature is amazing. The retention is extra –ordinary. He is a moving library. Through various shows he brought lot of upcoming singers and instrumental players into lime-light.

I have seen lots of amateur singers imitating lots of popular singers but it is the first time I am seeing lots of announcers imitating and trying to be like Thiru Hameed. I remember listeners glue to radio sets not for the sake of the programme but for listening to Hameed's Voice. With these qualities put together he is great human being and humility personified.

I pray lord almighty to give him long and healthy life.

I congratulate Universal Tamil Centre, U.K. for the noble deed of felicitating Thiru. Abdul Hameed.

I wish the function a thumping success.

S.P.Balasubramaniam.



அன்புள்ளங்களே!

நாம் வாழும் இந்த நாடு பாதுகாப்பானது. வசதிகள் நிறைந்தது. வாய்ப்புகளும் அதிகம். எம் தேசத்தை ஒருமுறை நினைப்போம். அங்கே எவ்வாறோ வாழ்க்கையை நடாத்திச் செல்கின்றார்கள் மக்கள்.

ஆனால்,
தங்கள் அங்கங்களை இழந்தவர்கள் நடந்து, ஓடித்திரிந்து தங்கள் கடமைகளைச் செய்ய முடியாமல் வாடுகிறார்கள், வருந்துகின்றார்கள்.

நாம் எது எதுக்கோவெல்லாம் எமது பணத்தைச் செலவு செய்கின்றோம்.
அது எங்கள் மகிழ்வுக்காக.

எமது உறவுகள் எழுந்து நடக்க எம்மால் இயன்ற ஒரு பங்களிப்பை இந்த நேரத்திலே வழங்குவோம்.

வெண்புறா

உறவுகளுக்கு உதவுவதால்
உள்ளம் மகிழ்வடையும்



சிவாஜியின் மாலை மரியாதை

IN HONOUR OF A BROADCASTING LEGEND

I feel honoured and privileged to be asked to be part of an event honouring an outstanding broadcaster of our times.

As a child, I, with several of my contemporaries, used to sit glued to the radio whenever Abdul Hameed came on the air; our favourite programme being his own brainchild "Paadduku Paaddu", which took thousands by storm in the seventies.

As broadcasters we all have our own idols, heroes and gurus whom we follow, in our quest to make a mark as successful broadcasters and I have no doubt that almost everyone of us would have Abdul Hameed in their hearts as their idol, hero and guru.

Abdul Hameed is not just a great broadcaster; he is also an all-round actor, writer, poet and above all, a legend in Tamil broadcasting. Gone are the SLBC days of shackles and gags; he is now a free ambassador going where he wants to go and doing what he is best at!

At a time when anyone who grabs a microphone claims to be a "broadcaster", I stand humbled at the foot of this Great Ambassador of Broadcasting, and join the hundreds, gathered here this evening, to give him his due, which has been long overdue.

You may wonder why a newsreader in English would admire a broadcaster in Tamil. I am proud to tell you that my first passion was, and always has been Tamil broadcasting, in addition to our arts and culture. I am passionate about Tamil radio, TV, music and drama, as some of you may already know.

I have great pleasure in joining you this evening to honour his longstanding service as an inimitable voice. May the booming voice of Abdul Hameed continue to travel far and wide, giving Tamils the world over, a fine blend of serious broadcasting and entertainment.

Peter Jesuthas

Dip-in- English, LL.B (Hons) London,

Barrister

IBC Thamil





கலைமாமணி வி.கே.ரி. பாலன்

விரைவில்....

உங்கள் கரங்களில் தாய்முகம்

இறுவட்டு

வாத்திய விஷாரத் சாரங்கன் ஸ்ரீ ரங்கநாதன் இசையில்....

இனிய கானங்கள்

கே.எஸ்.பாலச்சந்திரன்,சாரங்கன் ஸ்ரீ ரங்கநாதன், ஜக்ஷன், பொஸ்கோ, தர்ஷினி (கனடா), சி.ஜி.நந்தகுமார் ஆகியோர் குரல்களில்

சில்லையூர் செல்வராஜன் - தீரன் - கார்மேகம் நந்தா

சி.ஜி.நந்தகுமார் ஆகியோரின் வரிகள்

தாய்முகம்

தொடர்புக்குக்கு

உலகத் தமிழ்க் கலையகம்

மதுரா டிராவல் சர்வீஸ் (பி) லிட்.
madura travel service (P) Ltd.
मदुरा ट्रेवल सर्वीस (प्रै) लिट.

கனவை நனவாக்கிய கலைஞர்
பீ.எச்.அப்துல் ஹமீத்

கலைஞன் கனவுகாண்பவன். அவனது கனவுகள் கலையோடு உலாவருபவை. மகாகவி பாரதி அன்று கண்ட கனவு தான் இன்று உலகெங்கும் தமிழ் ஒலிக்கிறது, தமிழ் வாழ்கின்றது.

இந்த வகையில் தமிழ் உலகில் தான் ஒரு தனியிடம் பெறவேண்டும் என்ற கனவோடு அறுபதுகளில், அந்தச் சிறுபருவத்தில் கட்டைக்காற்சட்டையுடன், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் என இன்று வழங்கப்படும் அன்றைய றேடியோ சிலோனுக்குள் காலடி எடுத்து வைத்திருப்பாரோ அன்புச் சகோதரர் பீ.எச். அப்துல் ஹமீத் என எண்ணத்தோன்றுகிறது. அவ்வாறெனில் அவரின் அன்றைய கனவு நனவாகி உலகத்தமிழினம் இன்று அவரை தங்கள் உள்ளத்தில் நிலை நிறுத்தி வைத்திருக்கின்றது.

நானும் பல கனவு கண்டவன், அவற்றை வேறு ஒரு சந்தர்ப்பத்திலே கூறுவேன். தமிழகத்துக்கு வந்த பாருங்கள், திரைப்பட நட்சத்திரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அந்தஸ்துக்கு மேலாக அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நட்சத்திரங்களின் போஸ்ரர்கள் போன்று இவரது நிழல் படங்களும் போஸ்ரர்களில் இடம் பிடித்துள்ளன. இலங்கைக்கலைஞன் ஒருவரால் இவ்வளவு தூரம் சாதிக்க முடிந்திருக்கின்றது எனபது உண்மையிலேயே இது ஒரு பிரமிப்புக் கலந்த மகிழ்ச்சி.

தமிழகம், சிங்கப்பூர், மலேசியா, மத்தியகிழக்கு, ஒஸ்ரேலியா, கனடா, ஐரோப்பா என எங்கு நட்சத்திரவிழா நடைபெற்றாலும் அங்கே Master of Ceremony யாக அன்புச் சகோதரர் அப்துல் ஹமீத் காட்சியளிப்பது மட்டற்ற மகிழ்வை ஏற்படுத்துகின்றது. மதுராவின் இசைவிழாவில் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்கள் கலந்து கொண்டு அந்த நிகழ்ச்சியைத் தனது நிகழ்ச்சியாகவே நின்று நடாத்தித் தொகுத்து வழங்கிக் கொண்டார். இன்று பல இசைவிழாக்களில் அவர் நடு நாயமாகத் திகழ்கின்றார்.

எவ்வளவு புகழ், எத்தனையோ பிரமுகர்கள், முன்னிலையாளர்களின் தொடர்பு இன்று அவருக்கு. ஆனாலும், அன்று போலவே அப்துல் ஹமீத் அவர்கள் இன்றும் இருக்கின்றார். அதே அன்பு, அதே பரிவு, அதே பாலன் என்ற அழைப்பு..... இதுவே அவரை இந்த நிலைக்கு உயர்த்தியிருக்கின்றது. அப்துல் ஹமீத், உலகில் உயர் நிலை பெற்ற தமிழ் அறிவிப்பாளர். அவருக்கு பாராட்டுவிழா எடுக்கும் உலகத்தமிழ் கலையகத்தின் எனது பாலிய நண்பர் எஸ்.கே.ராஜென் மற்றும் கலைஞர் சுந்தரம் சிறி ஆகியோர்க்கு நன்றி கூறுவதுடன், அறிவிப்புத்துறையின் இமயம் அன்புச் சகோதரர் அப்துல் ஹமீத் அவர்கள் கலையுலகில் இன்னும் பல இமயங்களைத் தொட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

தமிழின் சுவையை உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கும் ஒங்கார ஒலியின் சொந்தக்காரர் அப்துல் ஹமீத் தமிழன்னையே தன் செவிகளைத் திறந்து வைத்துக் கொண்டிருப்பது இவர் குரல் கேட்க மாத்திரமே

மதுரா டிராவல் சர்வீஸ் 1992-ல் நடத்திய மாபெரும் இசைவிழாவினை தொகுத்தளிக்க, தாய் தமிழகத்தில் அடியெடுத்து வைத்த அவர், உலக அரங்குகள் அனைத்திலும் மதுராவின் பெயரை உயர்த்தியவர் அவர் வாழும் காலத்தில் அவரோடு நெருங்கி வாழ்ந்தவன் எனும் ஓர் பெருமை போதும் அதுவே என் வாழ்நாள் வரம் ஆகும், என் வாரிசுகளுக்கு நான் சேர்த்து வைத்திருக்கும் மாபெரும் சரித்திர சாட்சியம் அவருக்கு எல்லாருக்கும் பொதுவான இறைவன் நல்ல ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் தருமாறு வேண்டி நிற்கின்றேன். இறைவனது கொடையில் பற்றாக்குறை ஏதும் இருந்தால், மிஞ்சியுள்ளன எனது ஆரோக்கியத்தையும், எனது ஆயுளையும் அவருக்கே அருளுமாறு வேண்டி நிற்கின்றேன்.

Achiever
Limca Book of Record

"கலைமாமணி" வி.கே.டி.பாலன்
தலைவர், மதுரா டிராவல் சர்வீஸ் (பி) லிட்.

Established 1986

11-3, Gandhi Irwin Road, Opp. Egmore Railway Station, Chennai - 600 008, Tamilnadu, India
Ph - 91 44 28192970 28193858 28192002 Fax - 91 44 28191813 Email - india@maduratravel.com Website - www.maduratravel.com



தேனாலி (டப்பிங்) ஒலிப்பதிவில்

இனிமைக் குரலோன்
பீ. எச். அப்துல்ஹமீத் அவர்களுக்கு
எமது வாழ்த்துக்கள்

யாழ் றீகல் வீடியோ மூவிஸ்

வெள்ளி விழா ஆண்டில்
வெற்றிநடை
பல ஒளிப்பதிவுக் கருவிகளுடன்
படப்பிடிப்பு
என்றும் பார்க்கும் வகையில் பதிவு

சிறப்பான நிழல் படப்பிடிப்பு

அல்பத்தில் படங்கள் ஒழுங்கு

Yarl Regal Video

020 8478 2205
07880 5205 558

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையை அறிந்திராத தமிழ் வானொலி நேயர்கள் இருப்பார்கள் என்பது சந்தேகம்தான். நட்பாக இருந்த அந்தசேவை பின் வானொலி நேயர்கள் பலராலும் வெறுக்கத்தக்க வில்லத்தனங்களை புரிந்ததும் மறப்பதற்கில்லை. அதனால் பிபிசியின் தமிழோசையையும் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ச்சேவையும் நம்பியிருந்தது நம் துயர்மிகு காலத்தின் பதிவுகள்.

70களில் இறுதிப்பகுதியில் தமிழ்நாடு சென்றிருந்தபோது அங்கே இலங்கை வானொலியின் அபரிதமான நேயர்களை காணநேர்ந்தது. தமிழ்நாட்டு தமிழர் சிலோன் ரேடியோ என அதனை அழைத்து புளகாங்கிதம் கொண்டதை நான் நேரில் கண்டும் கேட்டுமிருக்கின்றேன்.

ஆகாஷவாணியும் விவிதபாரதியும் சென்னை திருச்சி நிலையங்களினூடாக பார்ப்பனியத்தை திருப்தி செய்ய இலங்கை வானொலி மக்களின் அவாவை எதிரொலித்தது. அதனால் இலங்கை வானொலி அறிவிப்பாளர்கள் அங்கே நாயகர்களாக கொள்ளப்பட்டதுடன் அந்த அறிவிப்பாளர்களின் குரல்வளமும் அறிவிப்பு முறைமையும் அவர்களால் மாதிரியாக கொண்டாடப்பட்டதையும் அறிவேன். அந்த வகையில் அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அவர்களும் அந்த நேசிக்கபட்டவர்களில் ஒருவாராக இருந்தார்.

அதுவே பின்னாட்களில் தமிழகத்தின் ஊடகங்களில் அவர் வலம்வர வழிவகுத்தது. ஊடகத்தத்துறையில் தனது பணியை தொடர்ந்துகொண்டிருக்கும் அவரை பாராட்டுவதும் கௌரவிப்பதும் சாலப் பொருத்தமாகும். அவரை பாராட்டி கௌரவிப்பவர்களுடன் அப்பால்-தமிழும் இணைந்து கொள்வதில் மகிழ்சியடைகின்றது.

கி.பி.அரவிந்தன்

தளநெறியாளர் அப்பால்-தமிழ்





ஆளவந்தானுடன்

உள்ளமதைக் கொள்ளை கொள்ளும்
அன்பு அறிவிப்பாளர் பீ.எச்.அப்துல் ஹமீத்
அவர்களுக்கு
நிறைவான வாழ்த்துக்கள்

PRINTONE

பிரின்ரிங் வேலைகள் எதுவோ
பிரின்ரோனிடம் ஒப்படைத்துவிடுங்கள்

திருமண வாழ்த்துக்கள்
தயாரித்துச் சட்ட மிட்டுத்தருவோர்

விழாக்களுக்கு வித்தியாசமான் 'பனர்கள்'
சிறப்பாகத் தயாரித்து வழங்குவோர்

PRINTONE

CALL AMALAN

54, Russel Road, London, E17 6QY
Tel: 020 85 20 37 02 Fax: 020 85 200 00 37
Mob: 079 56 37 55 26

E-mail: print@printtone.co.uk
Web: www.printtone.co.uk

மேல்நாட்டு வலம்வந்த உள்நாட்டுத் தமிழ்க் கலைஞர்கள்

ஒரு வரன்முறைக் குறிப்பீடு

- பல்கலைவேந்தர் சில்லையூர் செல்வராசன் -

மூன்றாவது தடவையாக மேல்நாடுகளுக்குச் சென்று, இலங்கைத் தமிழ்க் கலைஞர்களின் புகழை நிலைநாட்டித் திரும்பியுள்ள கலைக்குழுவினர்க்குப் பாராட்டுவிழா எடுக்கும் உள்ளங்களை நினைக்கப் பெருமிதமாய் இருக்கிறது "நண்பர்கள் கலைக்கழகம்" என்று இந்த உள்ளங்கள் தங்களுக்குச் சூட்டிக் கொண்டிருக்கிற பெயரே இதமாய் ஒலிக்கிறது.

இக்கழகத் தலைவர் கே. குமாரவேள் உட்பட, மேல்நாடு சென்று, வென்று வந்த கலைச் செல்வர்கள் குழுவின் முக்கிய உறுப்பினர்கள் பலரும், என்னை "வாத்தியார்" என்று வாஞ்சையோடு அழைப்பார்கள். அந்த விளிப்பை ஆரம்பித்து வைத்தவர் மரிக்கார் எஸ். ராமதாஸ். மற்றவர்கள் தொடர்ந்தார்கள்.

உண்மையில் அத்தனை பேருக்கும், ஏன், ஒருவருக்கும் நான் "வாத்தியார்" அல்லன். எல்லோரும் தத்தம் கையை ஊன்றிக் கரணம் அடித்துக் கலை உலகில் சாதனை நிலைநாட்டியவர்கள். சிலருக்கு மட்டும் நான் பக்கத்துணையாக நின்றிருக்கக் கூடும் போலும்! ஏனென்றால், யாரும் யாரையும் உருவாக்கிவிட முடியாது. ஞான்றுகளாகத் தொடர்ந்து வரும் ஞான இயல்பினர்க்குத் தூண்டுகோல், ஊன்றுகோலாக மட்டும், சிலவேளை சிலர் வந்தமையக் கூடும்!

அப்படி வந்து அமைந்ததால், அவர்களை வாழ்த்துகின்ற முன் உரிமையை எடுத்துக் கொள்கிறேன்.

அன்பு அறிவிப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத்

தமிழ் கூறும் நல் உலகெங்கும், "உங்கள் அன்பு அறிவிப்பாளர்" என்ற வார்த்தைகள் வானொலியில் கேட்டதும், சட்டென்று எவரும், செவிகளில் "செந்தமிழ்த் தேன்வந்து பாயப்" போகிறது என்று காதுகளைக் கூர்மைப்படுத்திக் கொள்ளவைக்கும் மணிக் குரலுக்குரிய பீ.எச். அப்துல் ஹமீத் என்னும் பாவா ஹாசன் அப்துல் ஹமீத், வானொலிக் கலைத்துறையில் இன்று ஒரு தனிப்பெரும் சாதனையாளராகத் திகழ்கிறார்.

திருவாட்டி மோனி எலியாஸ் என்னும் பெருமாட்டி, இலங்கை வானொலிக் கல்விச் சேவையில் பணிப்பாளராக இருந்தபோது, சிறுவர் நாடக வரிசை ஒன்றை எழுதும்படி என்னைப் பணித்தார். அவை அனைத்திலும் கதாநாயகனாக நடித்தார் ஹமீத். அப்போது அவர் பள்ளி மாணவர். இன்றோ, தன் கலைப் பணி வாழ்க்கையில் வெள்ளி விழாக் கொண்டாடும் பருவம் வந்துவிட்ட ஹமீத், பன்முகத் திறமைகள் வாய்ந்த பண்பட்ட தமிழ்க்கலைஞராகத் திகழ்கிறார்.

அவரை, வானொலி அறிவிப்பாளர், நேர்முக வர்ணனையாளர், செய்தி வாசிப்பவர், அரங்க நிகழ்ச்சித் தொகுப்பாளர், பேட்டியாளர், சஞ்சிகை நிகழ்ச்சி, இசை நிகழ்ச்சி, விவரணச் சித்திரம், நாடகம் போன்றவற்றின் தயாரிப்பாளர், என்ற வகையில் மட்டுமல்ல; வானொலி, மேடை, திரைப்பட நடிகராகவும்,

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



பின்னணிப் பாடகி ஜிக்கியுடன்



வான் புகழ் கலைஞர்
பீ.எச்.அப்துல் ஹமீத் அவர்களுக்கு
வாழ்த்துக்கள்

வடலி

VADALEE

லண்டனில் வெளிவரும் இலவச
செய்திப்பத்திரிகை

Tel: 020 86 94 7412
e-mail:vadalee@lycos.co.uk

இசைப்பாடல் ஆசிரியராகவும், பல புதுமையான கலை நிகழ்ச்சிகளையும் கலைஞர்களையும் தமிழ் அரங்கியல் துறைக்கு அறிமுகம் செய்து வைத்த முன்னோடியாகவும், தமிழுலகம் நன்கறியும்.

"பொப்" இசையை நம் நாட்டில் அறிமுகப்படுத்தி, "பொப்பிசைப் புயல்" என்ற மேடை நிகழ்ச்சி மூலம், அந்த "மக்கள் இசை"க்கு வெகுஜனங்கள் மத்தியில் அமோக ஆதரவைத் தேடித்தந்தவர். பல "மக்கள் இசை"க் கலைஞர்கள் அவரால் அறிமுகமானவர்கள்.

"பாட்டுக்குப் பாட்டு" என்ற அவரின் புதுமை நிகழ்ச்சி மூலம், இன்றைய பல மெல்லிசைப் பாடகர்கள் இலங்கையில் தோன்றினார்கள்; இசைக்குழுக்கள் பிரசித்தமாயின.

"நவரசக்கோவை", "இசைக்கோவை" போன்ற அவரின் வானொலி நிகழ்ச்சிகள், பரீட்சார்த்தமான பல அம்சங்களை உள்ளடக்கி, இசைத்துறையின் புதிய பரிமாணங்களை வெளிப்படுத்தின.

"இறைதாசன்" என்ற பெயரில் அவர் எழுதிய இசைப்பாடல்கள், வானொலி, மேடை, தொலைக்காட்சி, திரைப்படங்களில் ஒலித்து வருகின்றன.

இவற்றுக்கு எல்லாம் மேலாக, ஐரோப்பிய நாடுகளில் இலங்கைத் தமிழ்க் கலைஞர்களின் நிகழ்ச்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்த முதற் சாதனை அவருடையது. 1988-ல் தனிக் கலைஞராக முதன் முதலில் ஐரோப்பிய நாடுகளுக்குக் கலை விஜயம் செய்து, தொடர்ந்து ஒவ்வோராண்டும் நம் நாட்டுக் கலைஞர் குழுக்களைத் தன் முன் முயற்சியால் தலைமை வகித்து அந்நாடுகளுக்கு அழைத்துச் சென்று, சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்திய சாதனையாளர் ஹமீத்.



19 வயதில் வானொலி அறிவிப்பாளராகப் பணியாற்றத் தொடங்கி, மூன்றே ஆண்டுகளில் மிகச் சிறந்த ஐந்து செய்தி வாசிப்பாளர்களில் ஒருவராகத் தெரிவு பெற்று, ஆறு ஆண்டுகளின் முன் நெதர்லாந்து நாட்டில் வானொலி சம்பந்தமான புலமைப் பரிசில் பெற்றுச் சென்று, ஐந்து மாதப் பயிற்சி முடிவில் ஆகக்கூடிய புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்த அப்துல் ஹமீத், வானொலிக் கலையில் தொடாத அம்சம் இல்லை; தொட்டுத் துலங்காத அம்சமும் இல்லை.

மகாராணியின் இலங்கை விஜயமா, மகாவலி ஆரம்ப விழாவா, வெளிநாட்டுத் தலைவர்களின் விஜயங்களா, சார்க் மகாநாடா, சாவ் விளையாட்டு விழாவா? - நேர்முக வர்ணனைக்கு கூப்பிடு அப்துல் ஹமீதை!

சிவாஜி கணேசன் வியந்து பாராட்டிய "ஒரு வீடு கோயிலாகிறது" நாடகமா? என்னுடைய புகழ்பெற்ற "றோமியோ - ஜூலியட்" போன்ற ஒரு மணி நேரச் சிறப்பு நாடகங்களா? - தயாரிப்பாளர் அப்துல் ஹமீத்!

அரசாங்க விழாக்கள், கலாசார விழாக்கள், திரைப்பட விழாக்களா? - நிகழ்ச்சித் தொகுப்பு பீ.எச். அப்துல் ஹமீத்!

பல கலைத் துறைகளில் அப்துல் ஹமீத் ஒரு சாதனையாளர்; வானொலிக் கலையிலோ ஒரு சகாப்தம்!



இலங்கேஸ்வரன்
ஆர். எஸ். மனோகருடன்

உங்கள் அன்பு அறிவிப்பாளர்
பீ.எச்.அப்துல் ஹமீத்
அவர்களின்
பாராட்டு விழா
DVD
உங்கள் கரங்களில் கிடைக்க
பெயர்
முகவரி
தொலைபேசி இலக்கம்
போன்ற விபரங்களை எழுதி
கீழுள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்
நாம் உங்களுடன் தொடர்பு கொள்கிறோம்

உலகத் தமிழ்க் கலையகம்
Universal
Tamil Art Centre
S.Sriskantharajah S.K.Rajen

39, Tintern Road Carshalton,
Surrey SM5 1QF
e-mail: unitac@hotmail.com

K.S. Nadarajah, M.A., PH.D.
Retired Director, Sri Lanka Broadcasting Corporation,
Ex. Director, National Film Corporation of Sri Lanka.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் பணிப்பாளர் சபை அங்கத்தவரும் தமிழ்ச்சேவைப் பணிப்பாளருமான

வித்துவகலாநிதி க.செ. நடராஜா அவர்களின் ஆசி உரை

ஒருநாட்டு மக்களின் கலை, கலாசாரப் பண்புகளைத் துலக்கி, அவர்களுக்கு வேண்டிய அறிவினைப் புகட்டி, ஊக்கமும், ஆக்கமும், தென்பும், தெளிவும், மகிழ்வும் தருவது அந்நாட்டு வெகுசனத் தொடர்ப ,சாதனங்களின் கடனாம். வெகுசனத் தொடர்பு சாதனங்களுள் வானொலிச்சேவை மிக்க சக்தி வாய்ந்த சாதனமாகும். ஒரு வானொலிச் சேவையின் முகம், அதன் அறிவிப்பாளர்களே. ஏனைய இயக்குநர்களும், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களும் பின்னணியில் நிற்க, பொதுமக்களோடு பேசிப் பழகித் தொடர்பு கொள்பவர்கள் அறிவிப்பாளர்களே. அவர்கள் ஆற்றலிலேதான் ஒரு வானொலி நிலையத்தின் பேரும் புகழும் தங்கி நிற்கும்.

இலங்கை வானொலி நிலையத் தமிழ்ச்சேவை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற கீழைத்தேச நாடுகளிலும், இங்கிலாந்து, கனடா, ஐரோப்பா போன்ற மேலைநாடுகளிலும் பேர் பெறுவதற்கு, அதன் அறிவிப்பாளர்களே மூல காரணராயிருந்தனர் என்பது மிகையாகாது. இலங்கை வானொலித் தமிழ் அறிவிப்பாளர் ஒருவரே ஆ.ஆ.இ. வானொலி நிலையத்தில் முதலிலே 'தமிழ் ஓசை' என்ற வெளிநாட்டுத் தமிழ் ஒலிபரப்பினை ஆரம்பித்து வைத்தார். அதன்பின் இலங்கை வானொலித் தமிழ் அறிவிப்பாளர்கள் பலர் அங்கு கடமையாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அந்த வரிசையிலே இலங்கை வானொலியில் இப்பொழுது சிறந்து விளங்கும் தமிழ் அறிவிப்பாளர்களுள் ஒருவராய் அப்துல் ஹமீத் அவர்கள் இலங்கையில் மட்டுமன்றி இங்கிலாந்து ஐரோப்பா, கனடா போன்ற வெளிநாடுகளிலும் பேர்பெற்று விளங்குகிறார் என்று அறிய உள்ளம் பூரிக்கிறது. அவர் வானொலி அறிவிப்பாளராக வருவதற்குக் காரணனாக இருந்தேன் என்பதனால், அவரின் வானொலி நிகழ்ச்சிப் புகழில் நானும் பெருமையடைகிறேன். ஹமீத் அவர்கள் அறிவிப்பாளராக மட்டும் இருந்துவிடாது, வானொலியில் பல்வேறு துறைகளிலும் புகுந்து செய்தி வாசிப்பாளராகவும், விவரணச் சித்திரம், நாடகம் ஆகியவற்றின் தயாரிப்பாளராகவும், நடிகராகவும் திகழ்ந்து விளங்கியிருக்கிறார். ஜனரஞ்சக நிகழ்ச்சிகளாய் 'பொப்' இசைப் பாடல், பாட்டுக்குப் பாட்டு, இசையுங் கதையும் போன்ற நிகழ்ச்சிகளிலும் அவர் தன் கைவண்ணத்தைக் காட்டி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறார்.

இவ்வரிய சாதனைகளை நாட்டி இலங்கை வானொலிக்குப் புகழீட்டித் தந்த அப்துல் அவர்களின் 25 ஆண்டு வானொலிச் சேவையைப் பாராட்டி, கனடாவின் ரொறன்ரோ நகரில் நடக்கும் தமிழ் ஒலிபரப்புச் சேவைகளுள் ஒன்றாய 'சங்கமம்' வானொலியாளர் இன்று விழா எடுத்து அவரைக் கௌரவிக்கிறார்கள். ஹமீத் அவர்களைக் கனடாவுக்கு அழைத்து அவருக்குச் செய்யப்படும் இச்சிறப்பு அவர் புகழ் கடல் கடந்து எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது என்பதற்கு ஏற்ற சான்றாகும்.

B.H. அப்துல் ஹமீத் அவர்கள் மேலும் வானொலிப் புகழ் பெற்றோங்கி தமிழ்ப் பண்பும் சால்பும் உலகமெல்லாம் பரவும் வகை உதவ வாழ்த்துகிறோம்.

வித்துவகலாநிதி க.செ. நடராஜா

வித்துவகலாநிதி க.செ. நடராஜாஅவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும்போதேவழங்கிய வாழ்த்து - 1992
நன்றி சங்கமம்

CERTIFICATE

INTERNATIONAL UNIVERSITY FOR MARTIAL ARTS

(J.S.K & U.T.K.F)

新国際空手道連盟総本部

Affiliated to:- New International Karate Organization - Japan

(Approved By The Ministry of Sports)

The Distinguished ROYAL ORDER of DOCTOR Award for HIS SEVICE EXCELLENCE

Issued Under Patronage And Authority of

INTERNATIONAL UNIVERSITY FOR MARTIAL ARTS (J.S.K & U.T.K.F)

Committee by ORDER OF THE ACT OF

The Grand Order of DOCTOR Confered On

B.H.ABDULHAMEED

THE TITTLE OF DOCTOR OF THIS ORDER INTERNATIONAL RECOGNITION

with profound esteem and best wishes for further success and contributions for peace, universal Goodwill and in appreciation of the integrity and leadership, cooperation and solidarity to benefit all humanity

We honour this meritorious work by conferring upon holder the title of Doctor

WITH OUR COMPLIMENTS



Date : 27-10-1996

Place : COLOMBO

No. : 532-09

DR. V. THANARAJAH, J.P.
(BLACK BELT 9th DAN - INT'L)
Executive President, Founder &
Chairman of Selection Committee
I.U.M.A (J.S.K. & U.T.K.F)

Sensei. S. V. SWARNARAJA
(BLACK BELT 9th DAN - INT'L)
Chief Instructor , Founder &
Chief Examiner
I.U.M.A (J.S.K. & U.T.K.F)

LKKothalawala
Sports Officer
I.U.M.A. (J.S.K. & U.T.K.F)

Signature of Holder

The above name is outhorized to use the title DOCTOR in all relevant corresspondence as laid our in I.U.M.A (J.S.K & U.T.K.F) Colombo a copy of this certificate be filed in the Head Quarters of I.U.M.A (J.S.K & T.K.F) for purposes of historicle records.

நிறை குடங்கள் தளும்புவதில்லை

முப்பது ஆண்டுகளாக இவரது வளர்ச்சியை மன நிறைவுடன் அவதானித்து வந்திருக்கின்றேன். வீ.ஏ. கபூரின் வளமான செய்தி அறிக்கைகளை ரசித்த எனது மனதில், இன்னொரு மைல் கல்லாகப் பதிந்த ஒலிபரப்புத் துறையைச் சேர்ந்த இஸ்லாமியச் சகோதரர் தான் ஹமீத்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழக ரசிசர்கள் நன்கு அறிந்திருந்த இலங்கைத் தமிழ் அறிவிப்பாளர் □உங்களிடம் வணக்கம் சொல்லி விடை பெறுவது மயில்வாகனன் தான். இன்றோ தமிழகம் கலைஞர்கள் - ரசிகர்கள் மத்தியில் அதைவிடப் பன்மடங்கு பெயர் பெற்று விளங்குகின்றார் சகோதரர் ஹமீத்.

ஹமீதினுடைய வெற்றிக்குக் காரணம் என்ன? இதற்கான பதில் எனது கண்ணோட்டத்தில் எப்படித் தெரிகிறதோ, அதை இங்கே தருகிறேன்.

ஒலிபரப்புத் துறையில் பரந்துபட்ட திறமை ஹமீத்துக்கு உள்ளது. எனினும் தனது மிகக் கூரிய திறமை எப்பிரிவைச் சார்ந்தது என்பதை அவர் நுணுக்கமாக உணர்ந்து, அத் துறையிலே அத்திறமைகளை மேலும் விருத்தி செய்ய, மேலும் மெருகூட்ட உழைத்திருக்கிறார். வைரத்தைத் தீட்டத் தீட்ட அதன் ஒளிரும் தன்மை எவ்வாறு அதிகரிக்கிறதோ, அது போல ஹமீததும் ஒரு விண்மீனாக உயர்ந்தார். என்றுமே அகலக் கால் வைத்த அறியாதவர் ஹமீத்.

ஒலிபரப்புத்துறையில் தனது அனுபவங்களை, தனது வெற்றிப் படிகளை தான் எவ்வாறு அமைத்துக் கொண்டார் என்ற அறிவுரைகளை அவர் ஒரு நூலாக எழுதினால் அது இளைய சமுகத்துக்கு அவர் செய்யும் ஒரு உயரிய சேவையாக அமையும் என்பதனை இங்கே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஹமீத் அவர்களை ஒரு உயர்ந்த அறிவிப்பாளராக மட்டும் நான் பார்க்கவில்லை. அவரை நற்குணங்கள் படைத்த, அடக்கமான, நிதானமான ஒரு கனவானாக நான் பார்க்கின்றேன். ஹமீத் எவரையும் புறஞ் சொன்னதை நான் கண்டதில்லை. ஹமீத் எவரையும் மனம் நோகப் பேசி நான் கேட்டதில்லை.

ஹமீத் ஒரு நிறைகுடம். நிறைகுடங்கள் தளும்புவதில்லை.

இலங்கைத் தமிழ் ஒலிபரப்புத் துறைக்கு இலட்சுமீகரத்தை அள்ளித் தந்த ஹமீத், இன்று பரிணமித்து உள்ள உலகத் தமிழ் ஒலிபரப்புத் துறைக்கும் இலட்சுமீகரத்தை அள்ளித் தரவேண்டும் என்று ஆத்மார்த்தமாக வாழ்த்துகிறேன்.

அன்புடன்

டாக்டர் க. இந்திரகுமார்

மனநலநோய் நிபுணர்

எழுத்தாளர் நூலாசிரியர்





பிரதேச அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF REGIONAL DEVELOPMENT

செம்மொழிச் செல்வன்

திரு. டீ. எச். அப்துல் ஹமீட் அவர்களுக்கு

செம்மொழிச் செல்வன்

என்னும் விருது

இத்தால் வழங்கப் படுகிறது

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

பிரதேச அபிவிருத்தி அமைச்சுச்
செயலாளர்

03 - 01 - 1987.

வாழ்த்து!

உன் தோள்மீது கைபோட்டு
உன் சக தோழனாய் நடக்க
ஆசை எனக்கு...
வயதில்லை!

வாழ்த்துகின்ற சாட்டில்
'நீ', 'வா', 'போ' போட்டு
உன் பக்கத்தில் நடக்கிறேன்!

தேவை இல்லாத தருணங்களில் கூட
'ஹமீதை எனக்குத் தெரியும்' என்று
சொல்லியிருக்கிறேன், பிறரிடம்!
அப்போதெல்லாம் உள்ளே ஒரு குழந்தையின்
குதூகலம்! கர்வம்!

மூத்தவனே! உன்னை வாழ்த்த
உன்னிடமே கடன் வாங்குகிறேன்.
நம் எல்லோருக்கும் பொதுவான
இறைவனை வேண்டுகிறேன்.

இன்றொரு ஹமீத் வேண்டாம்!
இந்த ஹமீத் இன்னும்
பல்லாண்டு பல்லாண்டு
வேண்டும் இறைவா!

அ. முகம்மது அலி
தலைவர், வசந்தம்,
சென்ட்ரல் தொலைக்காட்சி நிலையம்,
சிங்கப்பூர்.



ROHINI IMPORTS
www.rohiniimports.com
rohiniimports@hotmail.com
Phone/Fax: 47 22 32 32 70

தமிழ்ஞானி பி. எச். அப்துல் ஹமீத்

22 வருடங்களுக்கும் மேலாக கேள்விப்பட்டு வரும் ஒரு மாபெரும் கலைஞரை இன்று சனிக்கிழமை 27-04-2002 நேரில் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தமிழன்னைக்கு முதல் வணக்கம்!

இனம் மதம் மொழி இவைகளைக் கடந்து ஒருவர் பணியாற்றுகிறார் என்றால் அவர் ஞானியாவார். இவர் தமிழுக்கு தொண்டாற்றி வருவதால் தமிழ்ஞானியாவார்.

இலங்கை வானொலியில் தவழ்ந்து வந்த குழந்தைக்கு, தென்னிந்திய வீடியோவில் வளரும் காலம் வந்தபோது கைகொடுத்துதவியது மதுராவின் 1991 பொங்கல் நிகழ்ச்சி.

40 லட்சம் இலங்கைத் தமிழருக்கு அறிமுகமாகி, 7 கோடி இந்தியத் தமிழரை தம்வசப்படுத்தி, யாழ்ப்பாணத்தமிழை அகில உலகத்தமிழருக்கு அறிமுகப்படுத்தியது நடிகர் கமலஹாசனின் 2000 தெனாலி திரைப்படம்.

மனிதன் படிப்படியாகத்தான் முன்னேற வேண்டும் என்பதற்கு முன் உதாரணமாகத் திகழ்பவர் தமிழ்ஞானி பி. எச். அப்துல் ஹமீத் அவர்கள்.

பொதுவாக ஒரு பல்கலைக்கழகமோ அல்லது ஒரு பத்திரிகை நிறுவனமோ ஏதாவதொரு அமைப்போ செய்யவேண்டிய கடமையை ஒரு தனிமனிதன் செய்கிறாரென்றால் அதற்கு இறைவன் ஒருவனே சாட்சி!

இந்த வகையில் கலைஞர் பி. எச். அப்துல் ஹமீத் அவர்கட்கு இறைவன் சார்பாக " தமிழ்ஞானி " எனும் பட்டத்தை வழங்கி கௌரவிக்கிறோம்.

தர்மத்துடன்

இணுவையூர் வாரியார்

REGD NO 983 441 971
THIRUMENY RAVEENDRAN
LUTVANN VEIEN 25
0676 OSLO
NORWAY

ASSOCIATE
ASTRA BUSINESS SYSTEMS
20 PERIYAR ROAD, T. NAGAR
CHENNAI - 600 017, TAMILNADU
INDIA

அப்துலுக்கு - ஹமீதுக்கு - அப்துல் ஹமீதுக்குப் பாராட்டுவிழா

- கே. சந்திரசேகரன் -
மூத்தத வானொலிக் கலைஞர்
அகில இலங்கைக்குமான சமாதான நீதவான்

இலண்டன் மாநகரில் அப்துல் ஹமீதுக்குப் பாராட்டுவிழா, இல்லை அப்துல் ஹமீத்துக்குப் பாராட்டுவிழா இல்லை, இல்லை ஹமீத்துக்குப் பாராட்டுவிழா. ரொம்பவும் குழப்புகிறேனோ? இல்லை. அப்துல் என்று அரபு மொழியில் சொன்னால் அடிமை என்று அர்த்தம். அப்துல் ஹமீத் என்றால் புகழுக்குரியவனின் அடிமை என்று அர்த்தம். ஆனால், ஹமீத் என்று தனியே சொன்னால் புகழுக்குரியவன் என்று அர்த்தம். எனவே, அகிலமெங்கும் பரந்துவாழும் தமிழ் மக்களின் பேரபிமானம் வென்ற ஹமீத்துக்கு, புகழுக்குரியவனுக்கு பாராட்டுவிழா நடாத்தும் உலகத்தமிழ் கலையகத்தைச் சேர்ந்த எஸ்.கே.ராஜென், சிறி ஆகிய இருவருக்கும் முதற்கண் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அறிவிப்பாளர் ஹமீதின் நண்பர்கள், அபிமானிகள், அவரால் பயிற்சி அளிக்கப்பட்டு உருவாக்கப்பட்டவர்கள் என பலர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கலாம். இன்று பலரது அபிமானம் வென்ற அறிவிப்பாளனாக உருவாகியுள்ள என் அன்புக்குரிய அப்துல்லைப் பற்றி என் எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகின்றேன். அடிச்சுவடிமுதல் பலபடிகள் அடியெடுத்து வைத்து அப்துலோடு நீண்ட பயணம் வந்திருக்கின்றேன். நடந்து வந்த பாதையை, கடந்துவந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கிறேன். புள்ளியில் படித்த நாட்களில் எங்களின் ஆசிரியர் எஸ். பொன்னுத்துரை அவர்கள் எழுதி இயக்கிய நாடகம் ஜான்சிராணி. அந்த நாடகத்தில் வெள்ளைக்காரன் கிரோஸாக நான் நடிக்க, ஜான்ஸிராணியாக நடித்தது வேறுயாருமல்ல அப்துல் தான்.

தமிழ்க்கலையுலகில் ஒரு நம்பிகை. முதன்முதலில் பெண் பாத்திரமேற்று நடிப்பவர்கள் பிற்காலத்தில் பெரும் புகழ் அடைவார்கள் என்று. அப்துலும் அதற்கு விதிவிலக்கல்ல. அதன் பிரதிபலன் தான் இன்றைய ஹமீத், புகழுக்குரியவன். பள்ளி வாழ்க்கையில் தொடங்கிய எங்கள் இருவரினதும் கலையுலகத் தொடர்பு.

வானொலியில் ஒலிபரப்பாகும் சிறுவர்மலர் நிகழ்ச்சியில் இருவரும் ஒன்றாகவே பங்கேற்றினோம். அதனைத் தொடர்ந்து வி. ராசையா மாஸ்டர் தயாரித்து வழங்கிய இளைஞர் மன்றம் நிகழ்ச்சியில் எங்களது திறமைகளை மென்மேலும் வளர்த்துக்கொண்டோம். பள்ளியை விட்டதும் எங்கள் பாதைகள் மாறவில்லை. மேடை நாடகங்களில் நடித்தோம். இராசத்துரோகி என்னும் சரித்திர நாடகமொன்றை அப்துல் இயக்க நாங்கள் நடித்தோம். அந்த நாடகம் அவருக்கு நல்ல பெயரைப் பெற்றுக் கொடுத்தது அன்றே எனக்குத் தெரியும். இப்படியொரு நிலைக்கு அப்துல் வருவான் என்று. என் நண்பன் அப்துலுக்கு அப்துல் ஹமீத் என்று பெயரை வைத்த அவரது பெற்றோரைப் பற்றி நினைத்துப் பார்க்கின்றேன், புரியவில்லை. தங்கள் மகன் அப்துல் ஹமீத் ஒரு நாளில் உலகளாவிய ரீதியல் புகழுக்குரியவன் என்று அவர்களுக்கு அப்பொழுதே தெரிந்திருக்கிறதுபோலும். இப்படியானதொரு புதல்வனை தமிழ் உலகுக்குத் தந்த அந்தத் தாய் தந்தையான ஆசியா உம்மா, பாவாஹசன் இருவரையும் சிரந்தாழ்த்தி வணங்குகிறேன்.

ஹமீத் மிக இளம் வயதிலேயே தன் தந்தையை இழந்தவன். அவரது தாயார் மிகவும் பாசம் மிக்கவர். இஸ்லாமியர்கள் அனுட்டிக்கும் நோன்புக் காலங்களில் முப்பது நாட்களும் நோன்பு திறக்கும் வேளையில் நான் அவர்கள் வீட்டிற்குச் சமூகமளிக்க வேண்டும். அப்படி நான் போகவில்லை என்றால், அவர் என்னைத் தேடி வந்துவிடுவார். அத்தனை பாசம்மிக்க தாய் விஞ்ஞானரீதியாகச் சிந்தித்துப் பார்த்தார். ஒரு தாய் நான்கு மாத இடைவெளியில் இரண்டு குழந்தைகளைப் பெற முடியாது.

அதனால்தான் நீங்களும், ஹமீத்தும் இரண்டு தாய்மார் வயிற்றில் பிறந்திருக்கின்றீர்கள். கடைசிவரைக்கும் இப்பொழுதுபோல் என்றும் இணைபிரியாதிருக்க வேண்டும் என்று என்னிடம் அந்தத்தாய் ஒருமுறை சொல்லியி ருக்கின்றார். இது இன்றுவரை ஹமீத்துக்குக் கூடத் தெரியாது. அந்தத்தாயின் அன்புக்கட்டளைக்கு ஏற்ப, நாங்கள் இதுவரை கலையுலக வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் நண்பர்களாகவே இருந்து வருகின்றோம். அப்துல் ஹமீத்துடன் பள்ளி வாழ்க்கையிலும், கலையுலக வாழ்க்கையிலும் இணைந்து தொடர்ந்து பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்ததிற்கு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் நாங்கள் நடித்த ஒருவீடு கோவிலாகிறது என்ற நாடகம் இலங்கை வானொலியில் ஒலிபரப்பானது. ஹமீத் எங்களுடன் நடித்ததோடு, அந்த நாடகத்தை அவரே தயாரித்தும் வழங்கினார். நடிப்புலகமேதை, நடிகர் திலகம் சிவாஜிகணேசன் இந்த நாடகத்தைத் தொடர்ந்து கேட்டு வந்திருக்கின்றார். "நான் நாடகத்தைத் தொடர்ந்து கேட்டு வந்திருக்கின்றேன். எல்லோரும் நன்றாக நடிக்கின்றார்கள். 'நீங்கள்' ஹமீத் மிகவும் சிறப்பாகநடித்திருக்கின்றீர்கள். நான் உங்கள் ரசிகன்" என்று, வானொலிக்களித்த பேட்டியொன்றில் பகிரங்கமாகவே நடிகர்திலகம் பாராட்டியிருக்கிறார். நடிகர் திலகம் மட்டுமல்ல தமிழகத்தைச் சேர்ந்த பல கலைஞர்கள் ஹமீத்தை இன்றும் பாராட்டிக் கௌரவிக்கின்றார்கள். இவரது திறமைக்குக் கிடைத்த அங்கீகாரங்களில் ஒரு சில துளிகள் இவை.

கமல்ஹாசனின் திரைப்படமான தெனாலியில் பெரும்



பங்காற்றக் கிடைத்த வாய்ப்பு, அந்தத் திரைப்படத்தில் நடித்துள்ளார். இல்லை. அறிவிப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத்தாகவே வருகின்றார். மணிரத்தினத்தின் கன்னத்தில் முத்தமிட்டால் திரைப்படத்தில் இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மானின் இசையில் பாடல் எழுதக் கிடைத்த வாய்ப்பு. இது மட்டுமா? இந்தியத் தொலைக்காட்சிகள், ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் தொலைக்காட்சிகள் கூட அவரது சேவையைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றன. இப்படி பலரது பேரபிமானத்தையும் நன்மதிப்பையும் வென்றவரான என் நண்பர், என் சகோதரன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறேன். அவருக்கு இன்று நடைபெறும் பாராட்டுவிழா என்னை பேருவகை கொள்ளவைக்கின்றது.

அந்த நாட்களில் இலங்கை வானொலி முஸ்லீம் சேவையில் ஒலிபரப்பான நாடகங்கள் ஒட்டுமொத்தத் தமிழினத்தின் பேரபிமானத்தையும் பெற்றிருந்தது என்றால் அது மிகையாகாது. முஸ்லீம் நாடகக் கலைஞராக அப்துல் ஹமீத் தெரிவாகி ஒரு வருடம் வரை நடித்திருப்பார். அதன் பின்னர் தயாரிப்பாளர் எம்.எஸ். குத்தூஸ் அவர்கள் ஒலிப்பதிவு நேரத்தில் இருப்பதே இல்லை. முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொண்டவர் என் நண்பர் அப்துல். முஸ்லீம் நாடகங்கள் மட்டுமல்ல, தமிழ்ச்சேவையில் ஒலிபரப்பாகிய எத்தனையோ இலக்கிய நாடகங்கள், சரித்திர நாடகங்கள், சமூக நாடகங்கள் என அவர் நடித்த நாடங்கள் பற்பல. அத்தனையும் சிறப்புப் பெற்றது அப்துல் ஹமீத்தின் நடிப்பால். அவரது அந்தத் திறமையை அப்போது தமிழ் நிகழ்ச்சி அதிபராகவிருந்த திருமதி பொன்மணிகுலசிங்கம் அப்துல் ஹமீத்துக்கு ஒரு பெரும் பொறுப்பைக் கொடுத்தார்.

இலங்கை வானொலி வர்த்தக சேவையில் அறிவிப்பாளராகவிருந்த பீ.எச். அப்துல் ஹமீத், தேசிய சேவையில் மாதமொருமுறை ஒலிபரப்பாகும் ஒரு மணித்தியால நாடகங்களுக்கு சிறப்புத் தயாரிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் நாடகங்களைத் தயாரித்து வழங்கிய அந்த மூன்று வருடகாலங்களில் ஒலிபரப்பான நாடகங்களை இன்று நினைத்தாலும் காது குளிரும், நெஞ்சுருகும். பற்பல சுவைகளில் ஒலிபரப்பான ஒப்பிடமுடியா நாடகங்கள் அவை எங்கள் அன்புக்குரிய சில்லையூர் செல்லராஜன் போன்ற எத்தனையோ எழுத்தாளர்கள் எழுதிய நாடகங்கள். அந்த நாடகங்களை இன்று ஒலிபரப்பினாலும் இன்றைய இளம் உள்ளங்களையும் கவரும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பவள விழாவில் வெளியிடப்பட்ட இறுவட்டில் பீ.எச். அப்துல் ஹமீத் தயாரித்து நெறிப்படுத்தி நடித்த கவிஞர் அம்பியின் யாழ்பாடி என்னும் நாடகம் இடம் பெற்றது. அது அவரது திறமைக்குக் கிடைத்த அங்கீகாரம். வருங்கால சந்ததி அறிந்து கொள்ள அது ஒரு பதிவு.

நடிகனாக, கவிஞனாக, நாடகத் தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக, பயற்றுவிப்பாளராக அவர் கலையுலகில் ஆற்றிய, ஆற்றும் பணிகள் ஏராளம்.

மிகச் சிறுவயதில் நெதர்லாந்தில் வானொலித் துறையில் பயிற்சிபெற்றவர். சிங்கப்பூர் வானொலி நிலையத்தினர்க்கு அவர்களின் அழைப்பை ஏற்றுச் சென்று பயிற்சியளித்தவர். அப்துல் ஹமீத்தைக் குருவாக நினைத்துக்கொண்டு அறிவிப்பாளரான ஏகலைவர்கள் உலகெங்கும் நிறைய இருக்கின்றார்கள்.

அப்துல் ஹமீத் அறிமுகப்படுத்திய ஊக்கப்படுத்திய, மக்களுக்கு நல்லமுறையில் அறிமுகப்படுத்திவைத்த இசைக்குழுக்கள், பாடகர்கள், நடிகர்கள், எழுத்தாளர்கள், அறிவிப்பாளர்கள் என எத்தனையோபேர்.

இலங்கையில், இந்தியாவில் ஏன் உலகெங்கும் பரந்துவாழ்கின்றார்கள், அவர்கள் இதயங்களின் ஹமீத் வாழ்வார் என்று எதிர்பார்ப்போம். அப்துல் ஹமீத் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருந்து விலகக்காரணமாக இருந்தவர்கள் அவர் விலகியதும் காணாமல் போய்விடுவார் என்றுதான் நினைத்தார்கள். ஆனால், அதன்பின்னர் இந்தியா, ஐரோப்பிய நாடுகள் என சர்வதேசக்கதவுகள். அவரதுவருகைக்குச் செங்கம் பளம் விரித்துவரவேற்றன.

இன்று, தமிழகத்தில் ஹமீத்தின் செய்திவெளியிடாத பத்திரிகைகள் இல்லை என்றே சொல்லலாம். இத்தனை சிறப்புமிக்க என் அப்துல் ஹமீத்துக்கு அகில உலகக் கலைஞர்களும், வித்துவான்களும் பாராட்டிக் கௌரவிக்கும் சந்தர்ப்பத்தில் அவரது தாயார் உடனிருந்தால் எத்தனை மகிழ்ச்சியடைந்திருப்பாரோ அத்தனைமகிழ்ச்சியை நானடைகிறேன்.

ஹமீத் எனக்கு நண்பனாய் சகோதரனாய், ஆலோசகனாய் அதைப்போல் ஹமீத்க்கு நான் நண்பனாய், சகோதரனாய், ஆலோசகனாய் இருத்திருக்கிறோம், இனிமேலும் இருப்போம்.

இன்று அப்துல் ஹமீத்துக்கு உலகளாவியரீதியில் இத்தனை பாராட்டுக்கள் குவிகிறது என்றால் அதற்கு அவரது திறமைகள் மட்டு மல்ல நட்பண்புகளும், நல்லபழக்க வழக்கங்களும் நேற்றைய நிகழ்வுகளைமறக்காத தன்மைகளும் தான் காரணம். இத்தனை சிறப்புக்கள் மிக்க ஹமீத் பாராட்டிக் கொரவிக்கப்படுவது சாலப்பொருத்தம். அவரது புகழ் தமிழ் மொழி உள்ளவரை தரணியில் நிலைத்திருக்கும்.

ஹமீதின் வாழ்க்கையில் அவருக்குக் கிடைத்த செல்வங்கள் பெயரும் புகழும் மட்டுமல்ல. அவரை நன்கு புரிந்து கொண்டு நல்ல துணையாக இருந்து கலையுலகத் தொடர்புகளுக்குப் பேருதவிபுரியும் அவரது துணைவியார் ஷாமிளா அவரது மகன் சிராஜ் ஆகியோரே இத்தனைசிறப்புக்களும் இன்று போல் என்றும் நிலைத்திருக்க நானும் என் குடும்பத்தாரும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

- கே. சந்திரசேகரன் -



இசைப்புயல் ஏ. ஆர். ரகுமானின் திருமண வைபவத்தில்



வானொலித் தமிழுக்கு வசீகரம் வழங்கிய குரல் பீ.எச்.அப்துல் ஹமீத்

- இரவி.அருணச்சலம் -

நாம் அறிந்த நான்காவது தமிழ் வானொலித் தமிழ். எனவே முத்தமிழ்கள் எவையென்று நாமறிவோம். நான்காவது தமிழை உயர்தமிழாக, இலக்கியத் தமிழாக, யாவரையும் சென்றடையக் கூடிய தமிழாக ஆக்கியது. ஒன்று உண்டென்றால், அது இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை. அது அப்போது வர்த்தக சேவை, தேசிய சேவை என்று இரண்டாக இருந்தது. அதுவே பின்னர் தமிழ்ச் சேவை ஒன்று, தமிழ்ச் சேவை இரண்டு என்று பெயர் மாற்றம் பெற்றது.

1970ல் இலங்கைத் தமிழுக்கு இன்னல்கள் நேர்ந்த காலம் எல்லாவகையாலும் நாம் பட்ட துயரம் அதிகம். பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு என்கின்ற பாரதிதாசனின் வரிகளை ஒலிபரப்ப முடியாது என்று சொன்னதைக் கூட ஓரளவு புரிந்து கொள்ளமுடியும். ஆனால் தங்கைக்காக திரைப்படத்தில் ஏ.எல். ராகவன் குழுவினர் பாடிய தமிழ் படிக்கும் எங்களுக்கு தமிழேதான் பக்தி அதை தடுக்க வந்தால் திரண்டு எழும் மாணவர்கள் சக்தி என்கின்ற பாடலைக் கூட ஒலிபரப்ப முடியாமல் இருந்தது இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவைக்கு. தமிழ், தமிழர் என்கின்ற சொற்கள் வருகின்ற எந்தப்பாடலும் ஒலிபரப்ப முடியாமல் தான் இருந்தது.

ஆயினும், வானொலித் தமிழை வளர்த்ததில், இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவைக்கு பெரும் பங்குண்டு. தமிழுக்கு முதன்மையான வானொலி என்று கூட அதனைத் தான் சொல்ல முடியும். அந்தப் பங்கை வழங்கியவர்களில் மதிப்புக்குரிய பீ. எச். அப்துல் ஹமீத் அவர்கள் முதன்மையானவர்.

இப்படி நிகழும் என்று நான் அப்போது நம்பியே இருக்கவில்லை. அப்துல் ஹமீத் அவர்களுக்கு நான் வாழ்த்துச்செய்தி வழங்குகின்றேனா? நான் பிரகித்துப் பார்த்த சிலரில் அப்துல் ஹமீத் ஒருவர். எனது பதினைந்து வயதுப் பருவம் அது. சற்று முன்னாக இருக்கலாம். அப்துல் ஹமீத் என்கின்ற பெயர் எங்கள் காதுகளில் தேனாகப் பாய்ந்த காலம்.







ரி.எம்.எஸ் உடன் மதுரா இசை விழாவில்

இலங்கை வானொலிதான் எங்கள் வாழ்வு. காலையில் எழுந்த பிறகு ஏழுபதினைந்திற்கு அல்லது ஏழு மணிக்கு தொடங்குகின்ற பொங்கும் பூம்புனலுடன் எங்கள் பொழுதும் வாழத் தொடங்கும். பிறகு ஒரு படப் பாடல் வரும், வானவில் வரும். உங்கள் விருப்பம் வரும். பத்து மணிக்கு தற்காலிக ஓய்வு பெறும். அதுதான் எங்கள் காலைச் சாப்பாட்டு நேரம்.

பன்னிரண்டு மணிக்கு பறைமேளச்சத்தம். பிறகு பாடல் தொடங்கும். சித்திரகானமாக இருக்கும். விவசாய நேயர் விருப்பமாக இருக்கும். மகளீர் விருப்பமாக இருக்கும். நெஞ்சில் நிறைந்தவையாக இருக்கும். எதுவென்றாலும் பாடல் இனிக்கும். பன்னிரண்டு நாற்பத்தைந்துக்குச் செய்தி வரும். அதுதான் உவப்பில்லாத விசயம். அப்படித் தான் ஒவ்வொரு மணிக்கும் செய்திச் சுருக்கம் வரும். அதுவும் பிடிக்காது.

ஒரு மணிக்கு அறிவித்தல் முடிய பாடல்கள் தொடங்கும். பிறகு ஹிந்தித் திரைப்படப்பாடல்கள். மூன்று மணிக்கு பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி தில்லானா மோகனாம்பாள் திரைப்படத் தவில் அடி தொடங்கி, நாதஸ்வரம் செருகும். கூடவே ராஜேஸ்வரி சண்முகத்தின் குரலுடன், வேறு வேறு நிகழ்சிச்சிகளும் அதனுள் வருவதுண்டு. ஆடவர் அரங்கு, வாலிப வட்டம் இப்படி. விளையாட்டுச் செய்தியும் இவற்றுள் உண்டு.

நான்கு மணிச் செய்திச் சுருக்கத்ததைத் தொடர்ந்து குதூகல இசை தொடங்கும். இசைக்களஞ்சியம் என்று இனிய குரல் வரும். குதூகலமான பாடல்கள் பின்நேரத்தை நிறைக்கும். பிறகு இன்றைய நேயர், பிறந்த நாள் வாழ்த்து, என்றெல்லாம் பின்னேரப் பொழுது ஓடியும், பொழுது பட ஆறு மணிக்கு அது ஓடும். அதன் பிறகு அது தேசிய சேவை, அல்லது தமிழ்ச் சேவை ஒன்று. இடையிடையில் நிகழ்ச்சிகள் பலதரப்பட்டவை. ஜோடி மாற்றம், மலர்ந்தும், மலராதவை, என் விருப்பம், ஜோடிக்குரல், இன்றைய நட்சத்திரம், இன்றைய இசையமைப்பாளர், இருவர் பாடியது என்றெல்லாம் இருக்கும்.

இவற்றையெல்லாம் ஏன் சொல்லுகின்றேனென்றால், இவற்றை அப்துல் ஹமீத் அவர்கள் தொகுத்து வழங்க வருகின்றார் என்றால், வானொலியை விட்டு நாம் அசையவே முடியாது. அத்தனை திறமாக நிகழ்ச்சிகள் இருக்கும். மிகுந்த ஈடுபாட்டுடன் (Involvement) அவர் தொகுத்துத் தருவார். அவர் தெரிவு செய்யும் பாடல்களும் மிக்க இனியன.

சனி, ஞாயிறு என்றால் நிகழ்ச்சியின் தரத்தைச் சொல்லவே வேண்டாம். வானொலியை விட்டு ஒரு நிமிடமும் அரக்க முடியாதிருக்கும். அத்தனை திறம் நிகழ்ச்சிகள். பொதிகைத் தென்றல் என்று தமிழின் வளத்தைச் சொல்ல ஒன்று. இதயரஞ்சனி என்று தமிழ்க் கலை பண்பாட்டுக் கோலம் சொல்ல ஒன்று. திரை விருந்து என்று திரைப்பட விளம்பர நிகழ்ச்சி இன்னொன்று. கோமாளிகள் கும்மாளம் என்று மகிழ்தெறி (comedy) நாடகத் தொடர் முடிந்து தனியாத தாகம் என்று அவலச்சுவை (Tragedy) நாடகம் தொடங்கிற்று. ஞாயிறு பின்நேரம் ஐந்து முப்பதுக்கு, அத்தானே அத்தானே, எந்தன் ஆசை அத்தானே, கேள்வி ஒன்று கேட்கலாமா உன்னைத்தானே என்று பாடல் தொடங்கும். தோழமை மிகுந்த வணக்கத்துடன் சில்லையூர் செல்வராஜன் தொடங்குவார். எங்கள் வீடுகளில் ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் அழுகையாகவே இருக்கும்.

அந்த நாட்களில் சனிக்கிழமை மத்தியானம் சாப்பிட்டதற்கு சற்று நேரம் பின்பு, அல்லது கிரிக்கெட் விளையாட போவதற்கு சற்று முன்பு ஒலி மஞ்சரியின் அடுத்த பக்கத்தில்.... என்று ஒரு குரல் கேட்கும். இப்போதும் அது கணீரென காதில் ஒலிக்கிறது. அந்தக்குரலுக்குரியவர் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்கள். ஒலி மஞ்சரி என்கின்ற வானொலி சஞ்சிகையினை அவர் நடத்தும் விதம் அற்புதம் என்பேன்.

பொதிகைத் தென்றல் நடாத்துகின்ற இராஜகுரு சேனாதிபதி கனகரத்தினத்தின், தாலாட்டும் குரல், இதயரஞ்சனி நடாத்துகின்ற எஸ்.கே. பரராஜசிங்கத்தின் அமைதிக் குரல், திரைவிருந்து நடாத்துகின்ற கே. எஸ். ராஜாவின் எகிறிப்பாயும் குரல், சில்லையூர் செல்வராஜனின் தோழமைக்குரல், மயில்வாகனம் சர்வானந்தாவின் நட்புக்குரல் இவற்றின் இடையே அப்துல் ஹமீதின் குரல்! இது என்ன குரல்? எல்லாம் கலந்த வசீகரக் குரல்! ஒரு சொல்லை அதன் உணர்வு தளும்பாது, ஒலி குன்றாது, மொழி சிதையாது தருகின்ற அப்துல் ஹமீத்தின் வல்லமை இருக்கின்றதே! தமிழ் அவருக்குத் தலை வணக்கம் செய்தல் தகும்.

அந்த வயதில் நண்பர்கள் எங்களிடையே ஒரு போட்டி கூட இருந்தது. சிவாஜி, எம். ஜி. ஆர் என்று கட்சி பிரிப்பது போல, அப்துல் ஹமீத்தா, கே. எஸ். ராஜாவா என்று கட்சி பிரித்து வரவும் செய்வோம். அப்போது எல்லாவற்றிலும் வல்லமை நிறைந்தவர் அப்துல் ஹமீத்தாக இருந்தார்.

ஒரு முறை பண்டைத்தரிப்பில் நடந்த பொப் இசை நிகழ்ச்சிக்கு ஏ. ஈ. மனோகரன், எம். எல். பெர்ணாண்டோ, நித்தி கனகரத்தினம், அமுதன் அண்ணாமலை என்று பெரும் பாடகர்கள் வந்திருந்தனர். அதற்காக அந்த நிகழ்ச்சியை நான் பார்க்கப் போவில்லை, அந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க, பீ. எச். அப்துல் ஹமீத், கே. எஸ். ராஜா இருவரும் வந்திருந்தனர். அதற்காகத் தான் போனேன். அளவெட்டியிலிருந்து நடைகட்டிப் போனேன். அப்போது தான் பீ. எச். அப்துல் ஹமீத்தை நேரடியாகப் பார்க்கவும், அவர் குரல் கேட்டு மகிழவும், அவர் சிரிப்புக் கண்டு ரசிக்கவும் ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. சந்தோசமான சந்தர்ப்பம்.



கோமாளிகள் நாடகத்தில் முரடன் முத்துவாகஅப்புக்குட்டி, மரிக்கார் மற்றும் உபாலியுடன்



இயக்குனர் சிகரம் கே. எஸ். பாலச்சந்தருடன்

யாரும் பீ. எச். அப்துல் ஹமீத் என்றால் பாட்டுக்குப் பாட்டு என்பார்கள். அதன் வடிவமைப்பை, அதனுள் பொதிந்த கற்பனை வீச்சை யாரும் கண்டிலர். ஒரு நிகழ்ச்சியை வடிவமைப்பது என்பது. அவ்வாறான ஒன்றினைக் கற்பனை செய்வது லேசான காரியம் அல்ல. ஒரு நிகழ்ச்சியை அடியொற்றி, சிற்சில மாற்றம் செய்து இன்னொரு நிகழ்ச்சி தயாரிக்கலாம். அல்லது அப்படியே பிரதி செய்தும் விடலாம். ஆனால் புதிதாக ஒன்றைக் கற்பனை செய்தல் கைகூடும் காரியம் அல்ல. பீ. எச். அப்துல் ஹமீத்தின் பாட்டுக்குப் பாட்டு அப்படியான ஒன்று. அது அப்துல் ஹமீத்தின் சொந்தக் கற்பனை. சுயமான சிந்தனை. ஒரு கற்பனை வீச்சு. தன் அதி திறமையால் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி மின்னல் போல் மிளிர்ந்தது. அம்பிகாவின் பாட்டுக்குப் பாட்டு என்றுதான் அப்போது வந்தது. ஆனால் அது பீ. எச். அப்துல் ஹமீத்தின் பாட்டுக்குப் பாட்டு.

இது வானொலியில் ஒலிபரப்பாகிறபோது எங்கள் காதுகளை வானொலிக்குள் வைத்து விடுவோம். ஒருமுறை ஒருவர், பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் "தூங்காதே தம்பி தூங்காதே..." பாடலின் மெட்டில் திருடாதே பாப்பா திருடாதே பாடலைப் பாடி விட்டார். சரிதானே என்று நாங்களும் கேட்டுக் கொண்டிருந்தோம். குறுக்கிட்டு அப்துல் ஹமீத்தின் சிரிப்பு வந்தது. சிரித்துக்கொண்டு பிழை இன்னது என்று சுட்டிக் காட்டினார். பாடியவரும் அப்போது தான் பிழையை உணர்ந்தார். கேட்டவர்களும் அப்போதுதான் உணர்ந்தோம். நுணுக்கமான இத்தனை கண்டு பிடிப்பா, அதி திறமை அப்துல் ஹமீத்துக்கு உரியது.

அந்தக் கதையின் தலைப்பு இப்பொழுது ஞாபகமில்லை. என்றாலும் சொல்வேன். அந்த இசையும் கதையும் மூன்று முறையாவது ஒலிபரப்பப்பட்டது. நிகழ்ச்சிப் பஞ்சத்தால் அல்ல. அந்தக் கதையின் வலிமையினால் என்றும் நான் சொல்லமாட்டேன். நேயர்கள் மீண்டும் மீண்டும் அந்தக் கதையினை ஒலிபரப்பும்படி வலியுறுத்தியிருந்தார்கள். காரணம் அப்துல் ஹமீத் அவர்களின் உணர்வு மற்றும் உணர்ச்சி மிக்க குரல் அந்தக் கதை தந்த உணர்ச்சியிலும் பார்க்க மிக வலிதாக வெளிப்படுத்தியிருந்தது. அது ஒலிபரப்பப்பட்டு கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேற்பட்டு விட்டது. ஆயினும் அப்துல் ஹமீத் ஒவ்வொரு சொல்லையும், உணர்வு ததும்பி நிற்க ருசித்து, ருசித்து சப்பிச் சப்பி, வெளிப்படுத்திய விதம் இன்னமும் தான் மறக்கவில்லை.

ஆயிற்று - காலமும், அரசியலும் எம்மை வேறெங்கோ தள்ளிக் கொண்டு போயிற்று. இலங்கை வானொலிக்கும், எமக்கும் இடைவெளி பெருகிற்று. இடைவெளி தொடங்கிய காலம் 1983 யூலை இனப்படு கொலை நிகழ்ந்த காலம். அப்போது இலங்கை வானொலி ஆசிய சேவை நடத்தியிருந்தது. இரவு எட்டு மணி என்று நம்புகின்றேன் நிகழ்ச்சிகள் தொடங்கும். பத்து முப்பதிற்கு இரவின் தாலாட்டுடன் நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

ஞாபகமிருக்கின்றது அந்த நாட்கள். இனப்படுகொலை நிகழ்ந்த நாட்கள். இலங்கை வானொலியில் வேறு தமிழ் அறிவிப்பாளர்களின் குரல் கேட்கவில்லை. அப்துல் ஹமீத்தின் குரல் மாத்திரம் இரவின் தாலாட்டில் ஒலிக்கும். தமிழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். "காதல் நிலவே கண்மணி ராஜா கவலையில்லாமல் தூங்கு" என்று அப்துல் ஹமீத் இரவின் தாலாட்டில் பாடலைச் சுழல விடுவார். அந்தக் காலத்துயருக்கு பாடல் ஏதோ சேதி சொல்லும். அப்துல் ஹமீத் அவர்களும் இரவின் தாலாட்டை முடித்து, நிகழ்ச்சியையும் நிறைவு செய்து வைக்கிறபோது, "நாளைய பொழுது நல்ல பொழுதாக விடியும் என்ற நம்பிக்கையுடன் உறக்கத்துக்குச் செல்வோம்" என்பார். நோப்பட்ட மனதுக்கு ஆறுதலாயிருக்கும் அது. அந்த நாட்களில் அப்துல் ஹமீத் அவர்களும் என்னென்ன இக்கட்டுக்குள் நின்று இந்தச் சேவையை செய்தாரோ?

சோகம் பெயர்ந்த அந்த நாட்கள்தான் இலங்கை வானொலிக்கும் எமக்கும் இடையிலான உறவின் இறுதி நாட்கள்.

அதன் பின் 1987 டிசம்பர் இறுதிப் பகுதி அல்லது 1983 ஜனவரி முதற் பகுதி, பல்கலைக்கழக வாழ்வு முடிந்து வேலை தேடி கொழும்புத் தெருக்களில் உலைகின்றேன். வேலை தேடி இலங்கை வானொலியையும் எட்டிப் பார்க்கின்றேன். தமிழ்ப்பணிப்பாளரைச் சந்திக்க வேண்டும். வாசலில் போய் நிற்கின்றேன். அங்கும், இங்கும் ஏமலாந்துகிறேன். அப்துல் ஹமீத் என்னைக் காண்கிறார். அவருக்கு என்னைத் தெரியாது. வந்து ஏதேனும் உதவி தேவையா என்று வினவுகின்றார். நான் வேலை தேடி வந்த விசயத்தைச் சொல்கின்றேன். என்னை பணிப்பாளரின் அறைக்குள் கூட்டிக் கொண்டு போய் அறிமுகப்படுத்தி விட்டு விலகிச் செல்கின்றார். எனக்கு ஆச்சரியம். இத்தனை பெரும் புகழ் வாய்ந்தவர். எவர் என்று தெரியாத ஒருவருக்கு இத்தனை உதவி செய்கிறாரே?

அதற்கான என் நன்றி எப்போதும் என் நெஞ்சில் இருக்கிறது. சென்ற வருடம் அப்துல் ஹமீத் அவர்களை கொழும்பு மஜெஸ்றிக் சிற்றியில் கண்ட பொழுது, "காலம் ஆகி வந்த கதை" என்று நான் எழுதிய புத்தகத்தை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தேன். என்றாலும், அவருக்கான என் நன்றி இப்போதும் என் நெஞ்சில் இருக்கின்றது. வானொலித் தமிழுக்கு வசீகரம் வழங்கிய குரல்களில் நான் அறிய உச்சாரக் கொப்பில் ஏறி கூவிய குயில், குரல் பீ. எச். அப்துல் ஹமீத் அவர்களின் உடையதே! அதற்காக எம் வணக்கமும், மகிழ்வும், வாழ்த்தும் அவருக்கே



மேற்கு ஆபிரிக்காவின் பெனின் நாட்டில் ஒலிபரப்புத்துறைப் பயிற்சிப்பட்டறையில்



மலேசிய நாட்டில் அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு, நாகேஷ், மனோரமா ஆகியோருடன்

எங்கள் மெல்லிசைக்கு மாலைசூட்டிய எனது அருமை நண்பர் அப்துல் ஹமீத்

ஆண்டுகள் பல கடந்தோடிவிட்டன, ஆனால் கடல்கடந்து நான் ஜேர்மனி நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது கூட அப்துல் ஹமீத் அவர்கள் எம்மை மறக்கவில்லை.

தாயகத்தில், அன்று ஒருநாள் நான் பாடசாலை முடிந்து வீடு வந்து வானொலியைக் கேட்டேன். புதிய குரல், யார் இவர் அறிய மாலை 6 மணிவரை வானொலிப் பெட்டிக்கு அருகிலேயே இருந்தேன். விடைபெறும் போது பீ.எச். அப்துல் ஹமீத் எனக் கூறினார். அன்று முதல் அவர் குரலில் எனக்குக் காதல் ஏற்பட்டது.

பின்னாளில் நாம் பரமேஸ் - கோணேஸ் என இசைக்குழு அமைத்து அதன் மூலமாக 1966ல் முதன்முதலாக மெல்லிசை இசைத்தட்டு ஒன்றை வெளியிட்டோம். பல பாடல்களை இலங்கை வானொலிக்காகவும் நான் பாடியிருந்தேன்.

இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் எத்தனையோ அறிவிப்பாளர்கள் இருந்தார்கள். எல்லோரும் ஈழத்துப் பாடல்களை ஒலிபரப்பினார்கள். ஆனால் அப்துல் ஹமீத் ஈழத்துப் பாடல்களை ஒலிபரப்பியபோது அதிலே அவருடைய ஈடுபாடு தெரிந்தது. அதனால், தொடர்ந்து நாம் ஈழத்துப் பாடல்களைப் பாடத் தூண்டியது. எம்மை ஈழத்துக் கலைஞர்கள் என இன்றும் நிலைநிறுத்த அப்துல் ஹமீத் அவர்களின் அறிவிப்பும், உற்சாகமும் உறுதுணையாக இருக்கின்றது. "உனக்குத் தெரியுமா..." என நான் பாடிய ஈழத்துப் பாடல் தென்னிந்தியாவிலும் என்னை அறிமுகப்படுத்தியது, அங்கீகரிக்கச் செய்தது. அதிலே, அப்துல் ஹமீத்தின் ஒலிபரப்புத்துறை பங்களிப்பு அதிகம் இருந்துள்ளது.

பெருமை பேசாத என் நண்பன், இலங்கையில் என் காலத்துக் கலைஞன், நான் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டிற்கு வந்து கலைவிருந்து படைத்தார். 1997 ஆம் ஆண்டு ஹம் நகரத்தில் ஜவ்னா ஸ்ரோர்ஸ் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியிலே என்னையும், எனது புதல்வியை மேடைக்கு அழைத்துப் பாடவைத்தார். பொன்னாடை போர்த்தி கௌரவம் பெறவும் வைத்தார்.

சுந்தரத் தமிழ் சிகரம் அப்துல் ஹமீத், எமது நாட்டிலிருந்து தென்னிந்திய தொலைக்காட்சியிலும் ஈழத்து மணம் பரப்புகின்றார். இவர் தமிழ் கேட்க தென்னிந்தியாவில் தமிழ் அறிஞர்களும் கலையரங்கங்களில் கூடுவதை அறிந்து மகிழ்கின்றேன்.

முத்துத் தமிழ்க் குரலோனே! நல் நண்பன் பீ.எச். அப்துல் ஹமீதே! காலம் பல காலம் வாழ்க! உங்கள் காலத்தில், உங்களுடன் மொட்டாகி, மலராகி, காயாகி, கனியான கலைஞன் கனிவோடு வாழ்த்துகின்றேன்.

- எம்.பி. பரமேஸ்



அந்த நாள் ஞாபகம் நடிகர் திலகத்துடன்



"பூபாள ராகங்கள் விழா" அமைப்பாளர் பார்வையில்...

லண்டன் மாநகரில் நடைபெறும் பாராட்டுவிழா பற்றிச் சில மாதங்களுக்கு முன் அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். உலகின் பல பாகங்களிலும் பல தமிழ் விழாக்கள், பாராட்டு விழாக்கள் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன. அவற்றையெல்லாம் அறிந்தபோது இருந்த சந்தோசத்தை விட, இவ்விழா பற்றி அறிந்தபோது இரட்டிப்பு மகிழ்ச்சி. காரணம், உலகத் தமிழ் மக்களின் அன்பு அறிவிப்பாளராய், உலகத் தமிழர்கள் யாவரும் நேசிக்கும் மனிதனாய், குறிப்பாக எனது அன்புக்குரிய அறிவிப்பாளராய், இன்று நம் மத்தியில் வாழ்ந்துவரும் அன்புக்குரிய அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு லண்டன் மாநகரில் உலகத் தமிழ்க் கலையகம் விழா எடுப்பது உண்மையில் பெருமை கொள்ள வேண்டிய, அனைவரும் மனமாரப் பாராட்ட வேண்டிய விடயம் என்றுதான் திடமாக நான் சொல்வேன்.

எனது சிறுபிராயம் முதல் இவரது குரலால் ஈர்க்கப்பட்டவன் நான். இவரது "பாட்டுக்குப் பாட்டு" நிகழ்ச்சியே என்னை இவர்மீது மிகுந்த பற்றினை வைக்கத் தூண்டியது. இவரை நினைக்கும் போதெல்லாம் எனது கிராமத்துத் தோட்டங்களில் மின்சாரமில்லா வானொலிகள் மூலம் (பற்றரியில் இயங்கும்) விவசாயிகள் பலர் "பாட்டுக்குப் பாட்டு" நிகழ்ச்சியைக் கேட்டவண்ணம் விவசாயத்தில் ஈடுபடும் காட்சிதான் மனக்கண்ணில் தோன்றும். அந்தளவுக்கு இவரது குரல் அந்தக் காலத்திலேயே பட்டி தொட்டியெல்லாம் ஒலித்தது. குரலால் மட்டுமே இவரைக் கண்ட நான், பின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இவரது உருவத்தையும், நிகழ்வுகளையும் கண்டு மகிழ்ந்தேன். அப்போதெல்லாம், இத்திறமைசாலியை நேரில் காணவேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்படும். ஆனால், அதற்கான சந்தர்ப்பங்கள் அப்போது கிடைக்கவில்லை.

ஆனாலும், நான் கற்ற கம்பர்மலை வித்தியாலயம் இவரை நேரில் காணும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததை என் வாழ்நாளில் நான் மறக்கமாட்டேன். 1998ல் இலண்டன் வந்த நான், எனது பாடசாலை பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையினால் 2000ஆம் ஆண்டு முதல் லண்டன் மாநகரில் சிறப்பாக நடாத்தப்படும் "பூபாள ராகங்கள்" நிகழ்வுக்கு அமைப்பாளராய் இருந்து ஒவ்வோர் ஆண்டும் விழாவுக்கு அமைப்பாளராய் இருந்து ஒவ்வோர் ஆண்டும் விழாவுக்கு முந்திய விளம்பரங்களுக்கு இவரது குரலைப் பயன்படுத்தினேன். சிறந்த முறையில் விளம்பரத்தை அமைத்துத் தந்து, விழா சிறக்க வேண்டும் என்றும் வாழ்த்தும் ஹமீத் அண்ணாவின் வாழ்த்துக்களும், லண்டன் மாநகரில் "பூபாள ராகங்கள்" இன்று சிறந்த ஒரு பெருவிழாவாக மாறியமைக்கான காரணங்களுள் ஒன்று.

அவ்வகையில் கடந்த "பூபாள ராகங்கள் - 2003" நிகழ்வுக்கு இவரைச் சிறப்பு விருந்தினராகவும், அதே நேரம் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் நாம் அழைத்திருந்தோம். அப்பொழுது தான் இவரை நேரில் வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அப்பொழுது இவரது திறமைக்குப் பின்னால், நல்ல பண்பு, பெருமையில்லாத மனம், சாந்தமான முகம் போன்ற குணாம்சங்கள் இருப்பதை உணர்ந்து கொண்டேன். இவையெல்லாம் இவரது உயர்ச்சிக்குப் பக்கபலமானவை என்பதையும் புரிந்துகொண்டேன். எமது "பூபாள ராகங்கள்" நிகழ்வில் இவர் கலந்துகொண்டமையும், இவ்வருடம் கலந்துகொள்ளவுள்ளமையும் "பூபாள ராகங்கள்" நிகழ்வுக்கே சிறப்பு.

உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்கள் அறிந்த தமிழ் அறிவிப்பாளராய் இருக்கும் பெரு மதிப்பிற்குரிய பி.எச். அப்துல் ஹமீத் அவர்களின் பாராட்டுவிழா மிகவும் சிறப்புற நடைபெறவும், இவரது சேவை தமிழுலகத்திற்கு இன்னும் பல்லாண்டு சிறந்த முறையில் தொடரவும், என் சார்பிலும், எமது கம்பர்மலை வித்தியாலயம் - கொம்மந்தறை பழைய மாணவர் சங்கம் - ஐக்கிய இராச்சியம் சார்பிலும் மனதார வாழ்த்துகிறேன்.

நன்றி!

அன்புடன்

மகாலிங்கம் சுதாகரன்

சர்வதேச ஒருங்கிணைப்பாளர்

பழைய மாணவர் சங்கம்

Post Box 3355
MADRAS-600 035

நூலகம்

Phone : 458686

"முயற்சியும் பயிற்சியும்"

"எண்எழுத்துக் கருத்து நல் வாழ்த்துப்பாடல்"

"Gaana Kalaa Saarva Bhowma"

"கலைமாமணி" DR. P. B. SREENIVOS
B.Com., Hindi Visharad
CINE MULTI-LINGUAL PLAY-BACK ARTISTE. POET & MUSIC DIRECTOR
"SHREE MANDIR" DOOR NO. 2, PLOT 310-A, 2nd CROSS STREET, WEST C. I. T. NAGAR, MADRAS-600 035.

சென்னை
8-9-1996

இறைவனைநம் பிய முயற்சியும் வெல்லும்
இதயங்கள் எடுக்கும் பயிற்சியும் வெல்லும்!!
நிதம் முழுமூச் சுடன் தொடரும் உழைப்பு
நிச்சயமாய் அடைந்திடும் வளர் செழிப்பு!!
தன்னைப் பூஜிப் பவரைக் காத்திடும்
தலைவனவன் துதிப்பாடலைக் கேட்டதும்
மகிழ்ந்து எல்லா வரங்களும் கொடுப்பான்!
மனத்தின் தாஹத்தின் தவிப்பைத் தீர்ப்பான்!!
பக்திவீணையை மீட்டிப்பாடிடும்
பாடல் தெய்வத்தின் அருளை நாடிடும்
சாதனமாகிட வெளிச்சம் வீசிடும்
சாதனைகளினால் புகழ் வளம் ஓங்கிடும்!!
தலையில் தான் கடவுள் காட்சியளிப்பான்!
சிலைகளிலும் வேண்டிய வடிவெடுப்பான்!!!

இயற்றிச் சமர்ப்பித்த இன்னிசைக் கவிக் கலைத்
தொண்டன்! மதுவண்டு என்னும்
டா. பி. பி. ஸ்ரீனிவாசன் சென்னை



அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அவர்களின் கலைப்பணிக்கு தோள்கொடுப்போம்

- ஜெயஸ்ரீ -
பத்திரிகையாளர்

இரண்டாம் உலகயுத்தத்திற்கு பின்னர் ஊடகத்துறைகள் மேற்கு கிழக்கு என பேதமின்றி பெரும்பாலான உலக நாடுகளில் அவற்றின் செயற்பாடுகள்அரசவுடமையாக்கப்பட்டன. அரசவுடமையாக்கப்பட்டதன் விளைவு

ஊடகத்துறைகளுக்கான தனித்துவ சுதந்திர செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டன. அதன்பிற்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக அதில் பங்காற்றும் ஊடகவியலாளர்கள் மட்டுப்படுத்தப்பட்ட தமது அதிகாரத்துக்குள்ளே தமது சேவையை தொடர வேண்டிய கட்டாயநிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையிலேயே தேசிய சேவை வர்த்தகசேவை என இரு சேவைகளாக உலகளாவியரீதியில் ஊடகத்துறைகள் வகுக்கப்பட்டன. பொதுவாக கலை என்பது மக்களின் அரசியல் அறிவியல் சமூக மேன்மைக்கு உதவ வேண்டும். அதிலும் சிறப்பாக தேசிய வானொலிச் சேவைகளே இக்கடமைகளைப் புரிய உருவாக்கப்பட்டனவையாக இருந்தன. ஆனால் விளம்பரசேவையோடு கூடிய வர்த்தக சேவையில் வழங்கப்படும் கடமை நேரங்களுக்குள் மக்களின் அறிவு சமூக மேம்பாட்டுக்காக அளிக்கப்படும் குறுகிய நேரத்திற்குள் மிகச் சிறப்பான சேவையை அளித்த பெருமை திருவாளர் பீ.எச்.அப்துல் ஹமீத் அவர்களையே சாரும். வெறுமனே அறிவிப்பாளராக மட்டுமே மக்களால் அறியப்பட்டவர் அல்ல அவர். சகலமட்டங்களிலும் சகல தரப்பினர் மத்தியிலும் அவர் பிரபல்யமானதற்கு காரணம் சகல கலைத்துறைகளிலும் அவர் அளித்த பங்களிப்பே. தொலைக்காட்சி வானொலி மேடை அறிவிப்புத்துறை, ஈழத்து, தென்னிந்திய திரைப்படத்துறை, மெல்லிசைத்துறை, தமிழ், இஸ்லாமிய வானொலி நாடகத்துறை போன்ற இன்னோரன்ன துறைகளுள் அவர் ஆற்றிய பங்கு அளப்பரியது.

வானொலி அறிவிப்புத்துறைக்கு இலக்கணம் வகுத்தவர். புதிய உத்வேகத்தை அத்துறைக்கு அளித்தவர். தனக்கென ஒரு சிறப்பான பாணியை வகுத்துக் கொண்டவர். அவருக்கு பிற்பட்ட காலத்தில் அறிவிப்புத்துறையில் ஈடுபடுபவர்களிடம் அவருடையதாக்கம் இழையோடியிருப்பதை நாம் வெளிப்படையாகவே அறியக்கூடியதாக இருக்கின்றது. வானொலி, மேடை அறிவிப்புத்துறை எனின் ஹமீத் அவர்களை தவிர்த்து எதிர்காலத்தில யாருமே உரையாட முடியாதளவிற்கு ஆழமாக தான் சார்ந்த துறையில் முத்திரை பதித்திருக்கின்றார் பதித்தும் வருகின்றார்.

ஊடகவியலாளனைப் பொறுத்தவரையில் அவன் பலதுறை சார்ந்த அடிப்படை அறிவை பெற்றிருத்தல் அவசியம். அவ்வகையில் ஹமீத்துக்கு அடிப்படையில் பல துறை சார்ந்த அறிவைப் பெற்றிருந்திருக்கின்றார் என்பதனை அவருடைய பல செயற்பாடுகளில் பல சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டிருந்ததை நாம் அறிந்திருக்கின்றோம். அவ்வாற்றலே அவர் தயாரித்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் திறம்பட மிளிர வைத்தன என்றால் அது மிகையாகாது. இதற்கு பல நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். பல துறை சார்ந்தவர்களையும் செவ்வி காணும்போது இத்திறமையை அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

தென்னிந்திய கலைப் படைப்புக்களில் மட்டுமே மயங்கி கிடந்த ஈழத்து மக்களை அதற்கு ஈடாக உள்நாட்டுக் கலைஞர்களின் திறமைகளை



தெனாலி படத்துக்கான பங்களிப்புக்கு நன்றி செலுத்தும் விளம்பரம்

வெளிக்கொணர்ந்து அவற்றை மேம்படுத்திய பெருமையும் அவரைச் சாரும். இசையும் கதையும் என்ற நிகழ்ச்சியில் ஒரு சிறுகதையை வாசித்து முடித்தது போன்ற உணர்வை தோற்றுவிப்பதற்கு காரணம், அவர் அந்தக் கதைக்கு உயிர் கொடுத்து உயிரோட்டமாக கதை சொல்லும் திறமைக்கு ஈடு இணையே கிடையாது. இன்றும் எனது மனதை விட்டகலாத, எனது பக்கத்து ஊரைச் சேர்ந்த எழுத்தாளர் சனகமகள் சிவஞானம் அவர்கள் எழுதிய ஒரு இசையும் கதையும் இரண்டு தடவை வானொலி நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒலிபரப்பப்பட்டது. இன்றும் அந்நிகழ்வு என் நெஞ்சில் பசு மரத்து ஆணிபோல் பதிந்திருக்கின்றது. அதற்கு காரணம் எழுத்தாளரின் எழுத்துத் திறமை மட்டுமல்ல அக்கதைக்கு உயிர் கொடுத்த அப்துல் ஹமீத் அவர்களுடையகதை சொல்லும் பாங்கே எனின் மிகையில்லை.

ஒரு கலைஞன் எளிதில் உணர்ச்சிவசப்படுபவன் அல்லது மெல்லிய உணர்வுகள் படைத்தவன் என்பது பொது வழக்கு. அக்கலைஞனுக்கே மனிதனின் மெல்லிய நுண்ணுணர்வுகளை உணரவும், வெளிப்படுத்தவும் முடியும்.

ஒலிமஞ்சரி என்ற சஞ்சிகை நிகழ்ச்சியில் ஒரு சிறுகதை இடம்பெறுவது வழக்காக இருந்தது. நுவரேலியாவைச் சேர்ந்த ஒரு பெண் எழுத்தாளர் எழுதிய சிறுகதை, அதன் சாராம்சம் மலையக பெண் தோட்டத் தொழிலாளி, ஒரு கங்காணியால் எப்படித் தொழிலுக்காக சுரண்டப்படுகிறாள் என்பதேயாகும். அக்கதையானது இன்றுவரை என் மனதைவிட்டு அகலாததற்கு காரணம் அக்கதையை அப்துல் ஹமீத் அவர்கள் வழங்கிய விதமா? அல்லது கதையின் கருவா? இன்றுவரை என்னால் விடை-காண முடியவில்லை. இப்படியாகவிளிம்புநிலை மக்களின் பிரச்சனைகளை தெரிவு செய்து தொடர்ந்து வந்த காலங்களில் அந்நிகழ்ச்சிகளினுடாக மக்களுக்கு அளித்திருந்தார். அதற்கு காரணம் அவர் மனதில் எங்கோ ஒரு மூலையில் பதுங்கி கிடந்த பொதுவுடமை அல்லது சமத்துவ கொள்கைகளே காரணம் எனின் அது மிகையில்லை. தனக்களிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்திற்குள் மிகச் சிறப்பான விழிப்புணர்வுக் கதைகளை அவர் தெரிவு செய்தது அசாத்தியம். அவர் பாணியிலேயே அதைச் சொல்வதானால் அருமை அருமை அருமையிலும் அருமை.

ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகளிலும் அறிவுபூர்வமான கருத்துக்களை புகுத்துவதன் மூலம் அந்நிகழ்ச்சிகளை முழுமைப்படுத்தியிருந்தார்.

எடுத்துக்காட்டாக ஏழு கேள்விகள் என்ற ஒரு பிரபல்யமான ஜனரஞ்சகமான போட்டி நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். மணிகணக்காக நேரத்தை செலவழிக்கும் உரைவழியான அறிவுறுத்தல்களை செவிமடுக்க எக்காலத்திலும் மக்கள் தயாரில்லை. ஒரு மனிதனின் மூளை கூட ஒரு குறிப்பிட்டளவு நிமிடங்களுக்கு தகவல்களை சேகரித்த பின்பு சோர்வடைந்துவிடும். குறுகிய நேரத்தில் நடாத்தப்படும் இப்படியான போட்டி நிகழ்ச்சிகளில் கூறப்படும் அறிவுறுத்தல்கள் மக்களை இலகுவாகவும் ஆழமாகவும் சென்றடைகின்றன. எனது பாடசாலை காலத்தில் அப்துல் ஹமீத் அவர்களால் நடாத்தப்பட்ட சில போட்டி நிகழ்ச்சிகளில் கூறப்பட்ட சில அறிவுசார்ந்த கருத்துக்கள் இன்றும் எனது மனதில் ஆழமாகப் பதிந்துள்ளன.

எல்லாவற்றிற்கும் மகுடம் வைப்பதுபோல இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தை மக்கள் மயமாக்கிய பெருமையும் அவரையே சாரும். குறிப்பிட்ட ரசிகர்களின் மற்றும் கலைஞர்களின் ஏகச் சொத்தாக முடக்கப்பட்டிருந்த ஒலிபரப்புத்துறையில் பாமரமக்களையும் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளித்த பெருமைக்குரிய வல்லாளர் அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அவர்களே.

ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பதுபோல பாட்டுக்குப் பாட்டு என்ற பிரபல்யமான மிகவும் ஜனரஞ்சகமான நிகழ்ச்சியின் மூலம் ஈழத்தின் மற்றும் தென்னிந்திய மூலை முடுக்குகளில் இலை மறை காயாகவிருந்த பல கலைஞர்களை வெளியில் கொண்டுவந்ததோடு பாமரனின் குரலையும் வானலையில் ஒலிக்கவிட்ட பெருமை அவருக்கு மட்டுமே உரியது. ஒவ்வொரு மனிதனும் இயற்கையிலேயே ரசனை என்ற உணர்வையுடையவன் அவனுடைய ரசனையை மேம்படுத்துவது ஒவ்வொரு கலைஞனுடையதுமான கடமையாகும்.

அக்கடமையை சிறப்பாகவழங்கியபெருமை அப்துல் ஹமீத் அவர்களுக்கு உரியது. குறிப்பாக ஈழத்துக்கலைகளை, திரைப்படப்பாடல்களை, மக்களுக்கு ரசிக்கக்கற்றுக்கொடுத்தவர், ரசிக்கத்தூண்டியவர், ரசனையை மேம்படுத்தியவர் அப்துல் ஹமீத் அவர்களே. பாரம்பரியமான ஈழத்துக் கலை வடிவங்களுடன் ஏனைய நாட்டினரின் சிறப்பான நவீன கலைவடிவங்களை புகுத்தியதன் மூலம் தமிழ்கலைவடிவங்களுக்கு ஓர் அகலத்தன்மையையும் சர்வதேசியத்தன்மையையும் ஏற்படுத்தியிருக்கின்றார்.

முத்தாய்ப்பாய்க்கூறுவதானால் அப்துல் ஹமீத் அவர்களுடைய புகழுக்கு புகழ்பாடுவது கட்டாந்தரையில் நீந்துவதற்கு சமன். முடிந்தவரையில் நீந்தியிருக்கின்றேன். இலங்கையில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக சொத்துக்கள் தொடக்கம் விலைமதிக்கமுடியாத பல உயிர்களை பறிகொடுத்திருக்கின்றோம். அதே போன்று விலைமதிக்கமுடியாத அக்கலைஞனின் முழுஆற்றலையும் ஈழத்துக்கலையுலகம் பெறமுடியாமல் போனது தமிழ் கலையுலகத்திற்கு ஓர் பின்னடைவேயானாலும் தொடரும் அவர் கலைப்பணிக்கு தோள்கொடுப்போமாக.



சிறந்த அறிவிப்பாளருக்கான ஜனாதிபதி விருது

உலகத் தமிழர்கள் அனைவருக்கும் தெரிந்த அப்துல் ஹமீத்

அது ஒரு கலைக்காலம். இலங்கை வானொலி உலகமெல்லாம் தன் இனிய குரலால் இசை நிறைத்துக் கொண்டிருந்த வசந்தகாலம்.

அமரர் எஸ்.பி. மயில்வாகனம் அவர்களைத் தொடர்ந்து, இரட்டைக்குழல் துப்பாக்கியாக இரு இளைஞர்கள். உலகத் தமிழர்களை நல்ல தமிழைச் செவிமடுக்க வைத்த காலம்.

பீ.எச். அப்துல் ஹமீத் - அமரர் கே.எஸ். ராஜா. எனக்குச் சில நேரங்களில் சில சந்தேகங்கள் இப்போ எழுகின்றன. இலங்கையில் நடந்த இந்தத் தமிழ்ச் சாதனைகள் உண்மைதானா?

அன்று உலகத் தமிழனைத் தன் கம்பீரமான குரலால், சொற்சுத்தத்தால் அறிவிப்பாளனின் முதற் தகுதியாகிய விரைவுடன், தெளிவுடன் மிளிர்ந்த அதே அப்துல் ஹமீத், இன்றும் தன் சாதனைகளை, வானொலியில் - தொலைக்காட்சியில் - மேடைகளில் - திரைப்படத்தில் அதே உற்சாகத்துடன் - அதே தரத்துடனும் தொடர்கின்றார். அவருக்கு அவர் துறையில் ஒப்பாருமிக்காருமில்லா போட்டியாளர் ஒருவர் மட்டும்தான் இருக்கின்றார். அவர்தான் பீ.எச். அப்துல் ஹமீத்.

ஆம், அவருக்கு நிகர் அவர்தான். அவர் கட்டைக் களிசான் போட்டு பகுதிநேர அறிவிப்பாளராக முளைத்த பருவத்திலிருந்து அவரை அறிந்தவன் நான்.

அதே மலர்ந்த பிரகாசமான சிரிப்பு. நேசமுடனும், பாசமுடனும் அழைக்கும் பண்பு. தீய பழக்கங்களைக் கற்றுக்கொள்ளாத ஒழுக்கம், சீரிய வாழ்க்கை.

உலகம் ஒரு நெருங்கிய கிராமமாகிவிட்டது என்பதை நிரூபிக்கும் அவர் ஓர் உலகம் சுற்றும் வாலிபன். உலகமெல்லாம் வாழும் ஈழத்தமிழர்களுக்கு அப்புக்குட்டி ராஜகோபாலைத் தெரியும். உலகத் தமிழர் அனைவருக்கும் தெரிந்தவர் அப்துல் ஹமீத் என்றால் அது மிகையல்ல. ஆனால், அவரை முழுமையாகத் தெரிந்தவர்கள் மிகச்சிலரே. அவர் ஒரு கவிஞர், எழுத்தாளர், நடிகர், நாடகநெறியாளர், அறிவிப்பாளர், தொழில்நுட்பவியலாளர், நல்ல நண்பர். இப்படிப் பன்முகம் கொண்ட ஒருவரைப் பாராட்டி - வாழ்த்தி மகிழ மற்றொரு தலைசிறந்த அறிவிப்பாளர் எஸ்.கே. ராஜென் முன்வந்தது மிகப்பெரும் பாராட்டுக்குரிய செயல். பரஸ்பரம் கலைஞர்கள் மற்றவர் திறமையை மதித்து, பாராட்டி மகிழ்ந்து, சிறக்கும் இப்பண்பு பாராட்டப்படவேண்டிய - மகிழவேண்டிய - தொடரவேண்டிய ஒன்றாகும். எங்கள் ஆசான் கலையரசு சொர்ணலிங்கம் ஐயா கூறுவார், 'நல்லது எங்கு கண்டாலும் அதை ரசிக்கப் பழகு, மனந்திறந்து பாராட்டு, அப்பொழுது அந்தத் திறமையை நீயும் கற்றுக் கொண்டாய் என்று அர்த்தம்' என்பார்.

அப்படி அப்துல் ஹமீத்தின் பரமரசிகனாகிய நான் - உலகெலாம் வாழும் நற்றமிழ் இதயங்கள் சார்பில், அப்துல் ஹமீத்தையும், அவரைப் பாராட்டி மகிழும் நான் பெற்றெடுக்காத என் அன்பு மகன் ராஜெனையும் வாழ்த்துவதில் பேருவகை கொள்கின்றேன்.

வாழ்க வளமுடன்!

தமிழாள் கூத்தவை
என்றும் அன்பன்

பாரிஸ்
ஏ. ரகுநாதன்






23
MRCC

ஞாயிறு தினக்குரல்
தினக்குரல் THINAKKURAL

இசைகேட்டால் மட்டுமல்ல இவர் குரல் கேட்டாலும் புவி அசைந்தாடும்

சுருதியோடு சுந்தரத்தமிழ் பேசும் சுந்தரத் தமிழ் அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் பிரித்தானிய மண்ணில் வைத்துக் கௌரவிக்கப்படுகின்றார்.

அப்துல் ஹமீத் இல்லாமல் ஒரு தமிழ் நிகழ்ச்சி நடைபெறுவது சாத்தியமில்லை என்கின்ற நிலை தோன்றியுள்ளது.

இலங்கை, இந்தியா தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகள் என எங்கும் எங்கள் அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் நிகழ்ச்சிகளுக்குத் தொகுப்பாளராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு வருகின்றார்.

அப்துல் ஹமீத் அவர்களின் தமிழ் அறிவிப்பு ஆளுமை என்பது பலரை அவர் முன்னால் கட்டிப் போட்டுவிடுகின்து.

இலங்கை வானொலியூடாக இந்தியாவில் அறியப்பட்டவர். இன்று இந்திய தமிழ் ஊடகங்களில் தமிழ், தமிழாக இல்லாமல் அலங்கோலமாவதைக் கண்டு கண்ணீர் வடிப்பவராக மட்டுமல்லாமல், கண்டனங்களை ஊடகங்கள் வழியாக வெளிப்படுத்தியும் வருபவராக அப்துல் ஹமீத் விளங்குகின்றார்.

அறுபதுகளில் சிறுபராயத்தில் வானொலி நிலையம் சென்றதாக அறிகின்றோம். அப்படியென்றால் நான்கு தசாப்த கால அனுபவங்களைக் கொண்டிருக்கும் எங்கள் தேசத்தின் பழுத்த ஒலிபரப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்கள் தாயக மண்ணில் ஒரு திறந்த வானொலிக் கலைஞர் பயிற்சிப்பட்டறையை நடாத்த வேண்டும்.

இன்று ஊடகங்களில் தமிழ் தமிழாக ஒலிக்கவும், ஒளிவிடவும் அப்துல் ஹமீத் பங்களிப்புச் செய்தாக வேண்டும். இதன் மூலம் இன்றும் தாம் தெரிந்தது தான் அறிவிப்பு எனக் கருதும் இளஞ்சந்ததியினர் நேர் வழி சென்று நல்ல தமிழ் பேசவும், நல்ல தமிழ் நிகழ்ச்சிகள் வழங்கவும் வாய்ப்பளிக்கும் என நம்புகின்றோம்.

இசைக் கேட்டால் புவி அசைந்தாடும் என்றால், அப்துல் ஹமீத் தமிழ் கேட்டாலும் புவி அசைந்தாடும் எனத் 'தினக்குரல்' தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறது.

தமிழ்க் கலைஞனாக வலம் வரும் அப்துல் ஹமீத் தரணியெங்கும் மேன்மையுற புகழ் பெற்று விளங்க வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்
தினக்குரல்



மலேசிய நாட்டில் அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு, நாகேஷ், மனோரமா ஆகியோருடன்



இணையத்தளத்தை உருவாக்கியவர்களின் வாழ்த்து

எமது மண்ணின் மைந்தர் ஒருவர், இன்று உலகம் முழுவதும் வாழும் தமிழ்நெஞ்சங்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமானவராகத் திகழ்வது, எமக்குப் பெருமை தரும் விடயம்.

நான் இந்துக் கல்லூரியின் மாணவனாக கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே, திரு அப்துல்ஹமீத் அவர்கள் மீது அபிமானம்கொண்ட ஆயிரமாயிரம் ரசிகர்களில் ஒருவனாகத்தான் இருந்தேன். அவரை நேரில் சந்திக்கக் கூட வாய்ப்புக் கிடைத்ததில்லை. ஆனால், இத்தனை ஆண்டுகள் கழித்து கனேடிய மண்ணில் ஒரு தொழிலதிபராக மாறிய பின்னர் அவர் கனடாவுக்கு வரும்போதெல்லாம், நெருங்கிப்பழக வாய்ப்புக் கிடைத்தது. ஒலிபரப்புத்துறையில், 37 ஆண்டுகளாக அவர் ஆற்றிய பங்களிப்புகள் வெறும் காற்றிலே கரைந்துபோன கலைப்படைப்புகளாய் மறைந்து மறந்துபோய்விடாமல், அவை ஆவணப்படுத்தப்பட வேண்டும் எனும் ஆதங்கத்தை தெரிவித்தேன். அவரது அனுபவங்களையும், ஒலிபரப்பு நுணுக்கங்களையும் பின்வரும் தலைமுறைக்குப் பயன்படும் வழிகாட்டி நூலாக வடித்தாலும் கூட, இன்றைய அவசர யுகத்திலே அது,



ஒருசிலரது கைளுக்கு மட்டுமே கிடைக்கும். ஆனால் இணையத்தளத்திலே அவற்றைப் பதியம் போட்டால் அதன்பலனை உலகமுழுவதும் உள்ள தமிழர் அனுபவிக்கலாமே, என ஆலோசனை தெரிவித்ததோடு அதனை ஆரம்பித்து வைக்கும் உரிமைய எனக்குத் தருமாறு வேண்டினேன். ஹமீத் அவர்கள் அன்போடு இசைந்தார். ஒரு சில நிமிடங்களிலேயே எனது நிறுவனத்தின் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, இணையத்தளத்தைப் பதிவு செய்தோம். இன்று அந்த இணையத்தளத்தின், வெள்ளோட்ட அறிமுகம், லண்டன் மாநகரிலே, அதிலும் ஹமீத் அவர்களின் பாராட்டு விழாவிலே நடைபெறப்போவதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

உலகத் தமிழர்களின் அன்புக்குப் பாத்திரமான ஒருவரை வாழும்காலத்திலேயே வாழ்த்தும் உலகத்தமிழ் கலையகத்தினருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் ஊடகத்துறைக்கு திரு. அப்துல் ஹமீத், தொடர்ந்தும் அரிய பலபணிகளைச் செய்திட, இந்த விழா ஒரு உந்துசக்தியாய் அமைந்திட வாழ்த்துகிறேன்.

அன்புடன்
ரவி சிவா

Computer Link
Canada

என் இசைப்பயணத்தில் என் இனிய நண்பர் ஹமீத்

சின்னமாமியே.... நாடுதிருந்தவென்றால்..... கள்ளுக்கடை பக்கம் போகாதே.... எனது பொப்பிசைப் பாடல்கள் ஜனரஞ்சக அந்தஸ்துப்பெற வைத்தவர் எனது நண்பர் அப்துல் ஹமீத். மக்கள் திலகம் எம்.ஜி. ஆர். அவர்களின் காதுகளில் கள்ளுக்கடைப் பக்கம் போகாதே என்ற எனது பாடல் கேட்டது என்றால் அது அப்துல் ஹமீத் அந்தப் பாடலை வானொலியில் ஒலிபரப்பியதால் தான்.

1967ம் ஆண்டுமுதல் எனது கலைப் பயணத்தில் பெரும் பங்கு வகிப்பவர். கடந்த 37 வருடங்களாக எனது நண்பராகச், சகோதரராக விளங்கி கலைத்துறை சார்ந்த உபதேசங்களை வழங்கி வருபவர்.

எனது இசைத்துறையின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்துக்கு அவ்வப்பொழுது அறிவுரைகள் கூறி வருபவர்.

1970ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற முதலாவது தமிழ் பொப்பிசை நிகழ்ச்சியின் அமைப்பாளராக இருந்து எமது சரித்திரத்தில் சாதனை படைத்தவர். கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் என ஈழத்தின் மூலை முடுக்கெங்கும் நடைபெற்ற பொப்பிசை நிகழ்ச்சிகளில் அப்துல் ஹமீத்துக்கு அதிக பங்குண்டு.

சினிமா மோகத்துக்குள் அடிபட்டுச் சென்று விடாமல், ஈழத்தின் தனித்துவமான இசை வடிவங்களுக்குள் என்னை வலம் வர வைத்திருப்பவர் நண்பர் ஹமீத்.

ஈழத்துப் பொப்பிசைப்பாடல்கள் என்று ஒரு தனிநிகழ்ச்சியை இலங்கை வானொலியில் நடாத்தி எம்மைப் பெருமைப் படுத்தியவர். பல விளம்பரதாரர்கள் எமது பாடல்களை ஒலிபரப்பி தமது விசேட நிகழ்ச்சிகளை வானொலியில் நடாத்த அப்துல் ஹமீத் வழிவகுத்தார்.

ஈழத்து இசை, நாடகம் என அப்துல் ஹமீத் தனது ஒலிபரப்புத்துறை வரலாற்றில் எவ்வளவோ செய்திருக்கின்றார். ஆனால், அவரை இப்போது எல்லோரும் "பாட்டுக்குப் பாட்டு" ஊடாக பார்ப்பது தான் வேதனையளிக்கின்றது.

இன்று, எத்தனையோ ஈழத்துக்கலைஞர்களின் புகழுக்கும் காரணமாக விளங்கும் என் இனிய நண்பர் அப்துல் ஹமீத்துக்கு லண்டனில் நடைபெறும் பாராட்டுவிழா மிகச் சிறப்பாக அமைய வேண்டும்.

எம்மைப் போன்ற பல கலைஞர்களின் புகழுக்கு பின்னால் பயணித்துக் கொண்டிருக்கும் அப்துல் ஹமீத்துடன் ஐரோப்பிய நாடுகளிலும், கனடாவிலும் கலைச் சுற்றுலா சென்றிருக்கின்றேன். அப்போதெல்லாம் அவரின் உள்ளக்கிடக்கை என்ன என்பதை அறிந்திருக்கின்றேன்.

அவர் எண்ணங்கள் ஈடேற வேண்டும். ஈழத்துக்கலையுலகில் இன்னும் பல கருமங்களை அவர் ஆற்ற வேண்டும். தமிழ் ஒலிபரப்புப்பணியில் தலை சிறந்து மென்மேலும் சாதனைகள் புரிய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

பொப்பிசைப்பிதா என பட்டமளித்து என்னை மேடைகள் தோறும் கௌரவித்த அன்பு நண்பர் அப்துல் ஹமீத்துக்கு நல் வாழ்த்துக்கள்.

நித்தி கனகரட்ணம்

ஒஸ்ரேலியா

தமிழில் ஊடகங்கள்



கார்த்திகேசு சிவத்தம்பி
தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்

ஊடகம் என்பது (meidum/meida) வெகுசனத் தொடர்பாடலிற் பயன்படும் சாதனங்களுக்கான இன்றைய மொழிபெயர்ப்பாகும். சமகால உலகில் தொடர்பாடல் (Communication) நடைபெறும் முறைமை பற்றிய ஆய்வில் வெகுசனத் தொடர்புக்கு (Mass Communication) முக்கிய இடமுண்டு. வெகுசனத் தொடர்பாடல் அதன் தன்மை (கேட்போர் "திரள" ஆக இருப்பதன்) காரணமாக, ஊடகம்; (Meidum) வழியாகவே நடைபெறுகின்றது. இன்றைய நிலையில் இந்த ஊடகங்களை .

1. அச்சு ஊடகங்கள் (Print Media)

2. மின்னியல் ஊடகங்கள் (Electronic Media)

என இரு பெரு நிலைப்பட வகுப்பர். ஒவ்வொரு வகைப்பாட்டுக்குள்ளும் பல்வேறு ஊடகங்கள் இடம்பெறும்.

(அச்சு - புத்தகம், சஞ்சிகை, புதினப்பத்திரிகை)

(மின்னியல் - வானொலி, சினிமா, தொலைக்காட்சி)

இவை இல்லாது சமகால உலகில் அரசியல், சமூக, பொருளாதார நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறா. இவை ஒவ்வொன்றும் தத்தம் இயல்புக்கேற்ப தனித்தன்மைகள் கொண்டனவாகும்.

ஒவ்வொன்றும் தொடர்பாடலை ஒவ்வொரு "முறைவழி"யில் நடத்தும். இவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினுள் அல்லது சாகியத்தினுள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதை அறிவதன் மூலம் அவை தொழிற்படும். சமூகம் (Society) சாகியம் (Community) பற்றி அறிந்து கொள்ளலாம் என்பதும் பொதுவான சமூகவியல் உண்மையாகும். ஊடக சமூகவியல் (Media Sociology) எனத் தனியே ஒரு துறையே உண்டு. அது இவ்விடயங்கள் பற்றி மிக நுண்ணியதாக ஆராயும்.

அத்தகையதொரு நோக்கு, தமிழ் சமூகம் பற்றியும் பல உண்மைகள் வெளிக்கொணரும். எனவே தமிழ்ச் சூழலில் ஊடகங்கள் எவ்வாறு தொழிற்படுகின்றன என நோக்குவது தமிழ்ச் சமூகத்தின் அசைவியக்கம், தொழிற்பாடு அமைந்த - அமையும் முறைமை பற்றி அறிவதற்குப் பெரிதும் உதவும். அத்தகைய ஒரு ஊடக வரலாறு மூலம் நவீன தொழில்நுட்பங்கள் பயிலும் இக்காலத்தினை அறிந்து கொள்வதற்கு மாத்திரமல்லாது காலம், காலமாகத் தமிழ் நாட்டில் சமூகத் தொடர்பாடல் எவ்வாறு நிகழ்ந்து வந்துள்ளது என்பதனையும் அறிந்து கொள்வதற்கு உதவும்.

அத்தகையதொரு ஊடக வரலாறு நவீன காலத்திற்கு முற்பட்ட (Pre-Modern) தமிழ்ச் சமூகத்தில் "தொடர்பியல்" நிலைமைகள் எவ்வாறு இருந்தன என்பதைத் தெளிவுபடுத்தும். ஏனெனில் எந்த ஒரு சமூகத்தின் அசைவியக்கத்திற்கும் சமூகத் தொடர்பாடல் அத்தியாவசியமாகும். இது எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பது பற்றிய அறிவு அச்சமூகம் பற்றிய அறிக்கைக்கு முக்கியமான ஒன்றாகும்.

நாயக்க ஆட்சியும் அதன் அடிநிலைக் கூறான, பாளையக்காரர் ஆட்சியும் வருவதற்கு முன்னர் தமிழகத்தின் சமூகத் தொடர்பாடலின் திரள் நிலைப்பட்ட சனக் குழுமத் தொடர்பு முறைமை இருந்திருக்கக் கூடுமென எதிர்பார்த்தல் முடியாது. கி.பி. 600-1300 காலப் பகுதியினை நோக்கும் பொழுதும், இக்காலப் பகுதிக்குரிய சமகாலச் சான்றுகளை நோக்கும் பொழுது, சமூக நிலைத் தொடர்பாடல் என்பது அரசவை, கோயில், உள்ளூராட்சி அலகுகள் என்ற மட்டத்திலேயே பெரும்பாலும் நிகழ்ந்திருத்தல் வேண்டுமென ஊகிக்கலாம். இவற்றைவிட பௌத்த, சமணப் பள்ளிகளும், மடங்களும் முக்கிய மையங்களாக விளங்கின எனக் கொள்ளலாம். தொடர்பியல் நிலையினின்று கூறுவதானால் இவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கான தொடர்பாடல். (Point to point communication)

அரசு நிலைப்பட்ட அறிவித்தல்கள் இவ்வாறு சென்றன எனக் கொள்ளலாம்.

இதற்குக் கடிதமுறைமை (ஓலை) தூதுவர், மூலமாகவும், புறாக்கள் மூலமாகவும் தொழிற் பட்டிருக்கலாம்.

கல்வெட்டுக்கல் என்பவை ஆணைகள் அறிவித்தல் களைத் தெரிவிக்கவேண்டிய இடத்தில் வைத்துத் தெரிவிப்பனவாகவே அமைந்தன.

இந்த "இடத்துக்கிடம்" முறைமையினுள்ளும் தொடர்பு உண்மையில்

(அ) நேர்முகமாகவும் (Face to Face)

(ஆ) ஆகக்கூடினால் ஒரு கணிசமான குழுவுக்கானவையாகவுமே (Sizeable group) இருந்திருத்தல் வேண்டும்.

கல்வியைப் பொறுத்தமட்டில் தான் கற்றலும் (கல்-வி) பிறர் வாயால் கேட்டலுமே (கேள்வி) முக்கியமாகின. "கல்வி"யில் (தான் கற்றலில்) ஓதுதலே முக்கியமாயிற்று.

தொடர்பியல் வளர்ச்சியில் வரும் முக்கிய கட்டமான "எழுத்து" (writing) வளர்ச்சி நிலை கண்டது. அந்த எழுத்துக்கான "ஊடகமாக" ஓலை (பனையோலை) அமைந்தது.

இதனால் எழுதப்பட்டனவற்றையும், எழுதியனுப் பப்பட்டனவற்றையும் "ஓலை" எனும் ஆகுபெயர் வடிவம் சுட்டியது எனலாம்.

இந்த நிலை நன்கு நிறுவனமயப்படுத்தப்பட்ட மட்டங்களிலேயே காணப்பட்டது எனலாம்.

(அரசு, பள்ளி)

மற்றைய தொடர்பாடல்களின் மட்டத்தில்

2. "நேர்முகமானதாக" (Face to Face) தொடர்பாடலே முக்கியப்பட்டது எனலாம்.

அயல் சமூகம் போன்ற குழுமத் தொடர்புகள் பெரும்பாலும் நேர்முகமானவையே.

சங்ககாலத்தின் (கி.மு. 300-கி.பி.250) வன்மையான தொடர்பாடல் முறைமை இந்த நேர்முக முறைமையாகவே இருந்திருத்தல் வேண்டும். சங்கப் பாடல்கள் நேர்முகமாக, சிறு குழும நிலையில் தோன்றியவையாகவே உள்ளன. (Face to Face, small group)

நாயக்கர் காலம் முதல், பிரித்தானிய ஆட்சியின் தொடக்க காலம் வரை தமிழ்நாட்டில் ஓர் அரசியல் பன்முகப்பாடும், குழுமநிலைத் தொழிற்பாடும் (Activisation of Community groups) நிலவின என்று வரலாற்றாசிரியர் கூறுவர். இக்காலத்தில் அடிநிலைச் சமூகங்களின் செயற்பாட்டில் முன்னர் கேள்விப்பட்டதற்கு மேலான (கூடுதலான) ஒரு துடிதுடிப்பு இருந்தது எனத் தெரியவருகின்றது. இது அம்மட்டத்து இலக்கியங்களின் பெருக்கத்திலும்

(உ-ம்: கதைப்பாடல்கள்) அவற்றுள் சிலவற்றின் உயர்வாக்கத்திலும் (பள்ளு, குறவஞ்சி) இருந்தது எனத் தெரியவருகின்றது.

நவீன காலத்துக்கு முந்திய காலத்துத் தமிழ் தொடர்பாடல் பற்றி முகவுரைப் பாங்காக இதுவரை கூறியனவற்றைக் கொண்டு, மேலே நவீன காலத்துத் தாழ்நிலைத் தொடர்பாடலுக்கு வருவோம்.

தமிழர் சமூக ஊடாட்டங்களில் முன்னர் காணப்படாத பெரும் மாற்றங்கள் ஏற்படுவது, மேனாட்டவரின் சமூக, அரசியல் உறவுத் தொடக்கத்துடனேயே. இதுபற்றிய நீண்டதொரு வரலாற்றுக் குறிப்புக்குச் செல்லாது தொடர்பியல் நிலையில் இந்த "வருகை" ஏற்படுத்தும் மாற்றங்களை நோக்குவோம்.

மேனாட்டார் வருகையும், தொடர்புறவும் இருநிலைகளில் வன்மையான செயற்பாடுகளுக்கு இடமளிக்கின்றது.

(1) மிசனரிமார்களின் கிறிஸ்தவ மதப்பரம்பல் தொழிற்பாடுகள்.

இது சம்பந்தமாக, றோமன் கத்தோலிக்கத் தாக்கத்திற்கும், புரட்டஸ்தாந் தொழிற்பாட்டுக்கும் வேறுபாடு உண்டு. றோமன் கத்தோலிக்கத் தொடர்பு அச்சினை தமிழுக்கு அறிமுகப்படுத்துகின்றதெனினும் (1577) அச்சுச் சாதனத்தின் சமூக நிலைப்பட்ட பெரும் தாக்கம் புரட்டஸ்தாந்த மிசனரிகளின் வருகையுடனேயே தொடங்குகின்றன (ஏறத்தாழ 18ம் நூற்றாண்டின் முற்பகுதி)

இஸ்லாத்தின் வருகை தமிழில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது ஒரு சுவாரசியமான வினாவாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இஸ்லாம் வெகுசன மதமாற்றத்தைச் செய்யவில்லை. இவ்விடயத்திலே கிறிஸ்தவர்கள் தொழிற்பட்டது போன்று முஸ்லீம்கள் தொழிற்படவில்லை. அதேவேளையில் இஸ்லாமியர்களாக

மாறியவர்களின் மதத்தனித்துவத்தைப் பேணுவதிலும், அவர்களை ஒரு சாகியமாக்கிக் (Comunity) கொள்வதிலும் நிறைந்த அக்கறை காட்டினர். அவர்களின் மதநெறி அரபு மொழியை முதன்மைப்படுத்திற்று. மத விடயங்கள் பற்றிய தங்களிடையேயான உள்ளகக் குழுமத் தொடர்புக்கு (intra-group Communication) "அரபுத் தமிழ்" என்ற ஒரு மொழி இலக்கிய வழக்கை ஏற்படுத்திக் கொண்டது. இஸ்லாமிய மதப்பண்பாடு ஸ்த்திரப்பட்ட தன் பின்னரே அரபுத் தமிழ் பற்றிய அழுத்தம் குறைந்தது.

(2) அரசியல் அரச நிலைத் தொழிற்பாடுகள் பிரித்தானிய ஆட்சி ஏற்பட்டதன் பின்னர் ஏற்பட்ட ஆளும் முறைமை (governance) மாற்றங்கள்.

இந்நிலைப்பட்ட விளக்கங்கள் மிகுந்த நிதானத்துடன் செய்யப்படல் வேண்டும். வந்த ஆட்சி காலனித்துவ ஆட்சியெனினும், அதன் காரணமாக அது சுதேச பண்பாட்டையும், நடைமுறைகளையும், அறிவுப்பேறுகளையும் புறக்கணித்த ஒதுக்கியதெனினும், இந்திய சமூகத்தில் (தமிழ் சமூகத்தில்) முன்னர் நிலவாத, முன்னர் கருத்தில் கொள்ளப்படாத ஒரு முக்கியமான அரசியல் எடுகோளை அடிப்படையாகக் கொண்டு தொழிற்பட்டு வந்த சமூக, அரசியல் எடுகோள் "சட்டத்தின் முன் யாவரும் (ஆட்சிக்கு உட்பட்டவர்கள்) சமம்" என்பதாகும்.

சாதியமைப்பினை ஒரு முறைமையாக (as a system) கொண்டிருந்த சமூகத்தில் இது புரட்சிகரமான மாற்றமாகும். இது தமது ஆட்சிக்குள் வந்த தமிழர்கள் எல்லோரையும் சாதி, மத பேதமின்றி ஒரு குழுமமாகக் கருதியது. அவ்வாறு கருதி தமது தொழிற்பாடுகளின் "பெறுநர்" கூட்டமாக இவர்களைக் கொண்டது. இதனால் தமிழர் என்ற மொழியடையாளத்திற்கு ஒரு வன்மையும், அழுத்தமும் ஏற்பட்டது. மொழி நிலையில் இது அம்மொழியைப் பேசுவோர், வாசிப்போரிடையே ஒரு "பொதுமையை" ஏற்படுத்திற்று. இது தமிழ் நாட்டில் முன்னர் நிலவாத, முன்னர் முனைப்புப்படுத்தப்படாத ஒரு செயற்பாடாகும்.

அதன் காரணமாக "தமிழர்" என்பது அம்மொழியைப் பேசும் மக்களிடையே நிலவிய உள்ளக வேறுபாடுகளைக் கடந்த ஒரு குழும அடையாளமாகிற்று. இது "தமிழன்" என்ற ஒட்டுமொத்த அரசியல் அடையாளத்திற்கு இட்டுச் செல்லும் ஒன்றாக அமைந்தது எனலாம்.

கிறிஸ்தவக் கோட்பாட்டு நிலையில் சாதியமைப்பை ஏற்காதிருந்தமையால் (ஆனால் சமூகநிலையில் சாதியமைப்பை ஏற்றுக் கொண்டது) கிறிஸ்தவத்தின் தாக்கம் ஒருபுறமாகவும், ஆளுகை எடுகோள் மறுபுறமாகவும் முன்னர் நிலவாத சமூக சமத்துவத்துக்கு குறிப்பாக சமத்துவ உணர்வுக்கு இடமளித்தது.

இத்தகையதொரு பின்புலத்திலேதான் ஆங்கில ஆட்சி "எழுத்தறிவு" என்ற கொள்நெறியை (principle) முன்னெடுக்கின்றது.

"எழுத்தறிவு" என்னும் எண்ணக்கரு சகலருக்கும் எழுத்து, வாசிப்பு அறிவை அத்தியாவசியமாக்குகிறது. உள்ளூர்ப் பண்பாடு, பொருளாதார நிலைமைகள் இதனை சரிவர நடைமுறைப்படுத்த இடமளிக்கவில்லை. இருப்பினும் இது ஆளுகையின் பொது எடுகோள் ஆனது. மிக முக்கியமாக இதனை இலக்காகக் கொண்ட ஒரு கல்வி முறைமை உருவாக்கப்பட்டது. இதற்கு முன்னர் இந்தியாவில் தமிழகத்தில் இவ்வாறு சகலருக்கும் பொதுவான சமத்துவமான ஒரு கற்பித்தல் முறைமை இருக்கவில்லை (இந்திய சமூக முறையில் சாதி வாழ்வை நிர்ணயிக்கவே, கல்வியும் அதற்குள் நின்றது. கற்கை என்பது பெரும்பாலும் சாதித் தொழிலைக் கற்பதையே குறித்தது. தொழில்நுட்ப சாதிக் குழுக்கள் தத்தம் தொழினுட்ப அறிவைச் சாதிக்குள் கையளித்த வந்தன. வைத்தியம் குடும்பத்தினுள் கையளிக்கப்பட்டது.)

இந்த பரந்த எழுத்தறிவு ஊடகங்களின் வருகையை தவிர்க்கப்பட முடியாத ஒன்றாயிற்று. அந்த முறையில் தமிழரிடையே வந்த முதற் பெரும் ஊடகம் அச்சு ஊடகமாகும். 1835 வரை அரச, திருச்சபைத் தனியுரிமையாக இருந்த அச்சு ஊடகம், 1835ல் பொதுமைப்படுத்தப்படுகின்றது. இந்தக்காலம் முதல் தமிழில் அச்சு நிகழ்காலத்தை விளக்குவதற்கும், இந்தக்காலப் பண்பாடு பேறுகளை குறிப்பாக இலக்கியத்தை மீட்டெடுப்பதற்கு, எதிர்காலத்துக்கான இலட்சியங்களுக்குப் போராடுவதற்குமான ஒரு சாதனம் அல்லது கருவியாயிற்று.

அச்சுச்சாதனம் தமிழ் வாசகர்களை ஒரு மொழிக் குழுமமாய்ப் பார்க்கும் மரபை ஊர்ஜிதப்படுத்திற்று எனலாம்.

தமிழில் அச்சு சாதனத்தின் தாக்கம் பற்றிய எந்த ஒரு பார்வையும் இரு நிலைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

(1) தமிழ் சமூகத்தில் அது ஏற்படுத்திய மாற்றம்.

(2) தமிழ் மொழியில் அது ஏற்படுத்திய மாற்றம்.

இந்த இரண்டு நிலைகளும் ஒன்றுடன் மற்றது சம்பந்தப்பட்டதே. இவ்விடயம் பற்றிய விரிவான தரவு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் பல உள்ளன.

மிகச் சுருக்கமாகவும், பொதுப்படையாகவும் எடுத்துக் கூறுவதானால் தமிழில் ஊடகத்தின் வளர்ச்சி என்பது இரு முக்கிய சமூக, அரசியல், பொருளாதார அரசியல் நடைமுறை வழிகளுடன் தொடர்புற்று நிற்பதைக் காணலாம்.

(அ) நவீன மயப்பாடு

(ஆ) சனநாயகமயவாக்கம்

இந்த இரண்டினது தாக்கங்களையும், சமூக மாற்றங்களிலும், மொழிமாற்றங்களிலும் காணலாம்.

(இந்த இரு நடைமுறைகள் பற்றி நாம் பல்கலைக்கழக

புகுமுக வகுப்புக்களிலும், சில வேளைகளில் பல்கலைக்கழக வகுப்புக்களிலும் கூட "மேனாட்டார் தமிழுக்காற்றிய தொண்டு" என்றும், "உரைநடையின் வளர்ச்சி" என்றும் பயிற்றி வந்துள்ளோம்.)

தமிழ் சமூகத்தினதும் தமிழ் மொழியினதும், சனநாயகமயப்பாடும், நவீனமயப்பாடும் தமிழன் சமூக வரலாற்றில் மிக முக்கியமானவையாகும். தமிழர், தமிழ்ப் பொதுமக்கள் (பாரதி கூறியது போன்று) எல்லோருக்கும் விளங்குவதான எளிய பதம், எளிய நடை என்பனவும் அந்த எளிய மக்களின் வாழ்க்கையை இலக்கியப் பேசும் பொருளாகக் கொள்வதுவும் முக்கியமாகின்றன.

தமிழ்நாட்டின் சனநாயகமயப்பாடும், நவீனமயப்பாடும் நிகழ்காலத்திற்கு வேண்டிய பொதுமையையும், எளிமையையும் வற்புறுத்திய அதே வேளையில் "தமிழர்" பற்றிய மீள் கண்டுபிடிப்பும் நடைபெற்றது. இந்த மீள் கண்டுபிடிப்புத் தமிழ் இலக்கிய வளத்தையும், வரலாற்றுச் செழுமையையும் மக்கள் நிலைப்படுத்திற்று.

"தமிழ் உணர்வு" என்பது இவற்றின் பெறுபேறுதான்.

உண்மையில் தமிழில் சனநாயகமயப்பாடு எவ்வாறு வளர்ந்தது என்பதும், எவ்வாறு அந்த எண்ணக்கரு ஆழப்படுத்தப்பட்டது என்பதும் 18, 19, 20 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகத் துல்லியமாகத் தெரிகிறது. தமிழ் என்பதற்கு கிறிஸ்தவ மிசனரிமார் கொடுத்த விளக்கங்களும், அதற்கு ஆறுமுகநாவலர் கொடுத்த விளக்கமும், மறைமலை அடிகள் கொடுத்த விளக்கமும், பெரியார், அண்ணாத்துரை கொண்டிருந்த விளக்கமும் உண்மையில் இந்த வரலாற்றின் படிக்கற்களாக அமைவனவே.

இந்த கட்ட வேறுபாடுகளை தமிழ் எழுதப்பட்ட நடுநிலை நின்று அறிந்துகொள்ளலாம்.

சீகன்பாகு - வீரமாமுனிவர் நடை

நாவலர் நடை

ராஜம் ஐயர் நடை - மாதவையர் நடை

மறைமலையடிகள் நடை

திரு. வி.க. வின் நடை

கல்கியின் நடை

அண்ணாத்துரையின் நடை

தினத்தந்தி நடை

என்பன வெறுமனே இலக்கிய நிலைப்பட்டவையன்று. இவை தமிழின் சனநாயகமயப்பாட்டின் பல்வேறு பரிமாணங்களைக் காட்டுபவை.

அச்சு ஊடகங்கள் முதற் சின்னமாக அமையும். சமூகமாற்றங்கள் பின்புலத்திலே, மற்றைய ஊடகங்கள் பிரதானமாக - மின்னியல் ஊடகங்கள் வருகின்றன.

வானொலியின் வருகை மிக முக்கியமான ஒன்றாகும். இலங்கையில் தமிழ் ஒலிபரப்பு 1925ல் ஆரம்பமாகிறது. இந்தியாவில் ஒழுங்கமைக்கப்பட்ட வானொலிச் சேவை 1927 முதல் வருகின்றது. (அதற்கு முன்னர் சில நேரங்களில் தனியார் ஒலிபரப்பு நிலவிற்று. சென்னைக்கு 1927லேயே வருகின்றது.)

வானொலியின் முக்கிய பெறுபேறுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(1) வானொலி, அறிவை எழுத்தறிவு மட்டத்துக்கு அப்பாலும் கொண்டு செல்கிறது.

வானொலி கேட்பதற்கு வாசிப்புத்திறன் அவசியமில்லை. இப்பண்பு தமிழரின் எளிமைப்பாட்டுக்கு மேலும் உதவியது.

(2) வானொலி உண்மையான சமூக சமத்துவத்தை மேலும் வலுப்படுத்தியது.

குறிப்பாக 1950 முதல் இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பின் வருகையுடன் வானொலி என்பது தமிழ்ச் சமூகத்தின் அடிமுதல் முடிவரை முக்கிய சாதனமாயிற்று. ஏறத்தாழ அக்காலத்தில் ஏற்பட்ட டிரான்சிஸ்டர் மயப்படுத்துகை வானொலியைக் கொண்டு திரியக்கூடிய பொருளாக்கிற்று.

உண்மையில் தமிழில் சனரஞ்சகப் பண்பாடு (Popular culture) வளர்வதற்கு வானொலி குறிப்பாக வர்த்தக ஒலிபரப்பு முக்கிய சக்தியாயிற்று.

அகில இந்திய வானொலி குறிப்பாக, திருச்சி நிலையம் நடத்திய விவசாயிகளின் நிகழ்ச்சிகள் வானொலியைத் தமிழ் விவசாயிகளுக்கான அத்தியாவசியமான தரவுச் சாதனமாயிற்று.

பண்பாட்டுப் பேணுகைகளில் தமிழ் வானொலிகளுக்கு முக்கிய இடம் உண்டு.

கர்நாடக இசைப் பாரம்பரியத்தைப் பொதுச் சொத்தாக்கியதில் வானொலிக்கு முக்கிய இடம் உண்டு. மேலும் நாடகத்துறை வளர்ச்சியில் வானொலி நாடகம் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்திற்று. உலகின் பொதுவான இவ்விஸ்தரிப்புத் தமிழ் நாடகத்தையும் செழுமையாக்கியது.

தமிழ்ப் பண்பாட்டில் மிக முக்கியமானது, முன்னர் காணப்படாததுமாகிய மாற்றத்தை ஏற்படுத்தியது சினிமாவே. (திரைப்படம் என்ற பதத்தின் பின்னுள்ள புலப்பதிவை (Preception) நோக்குக.

தமிழ் மொழிக்குச் சினிமா வந்தது 1921ல். அது தமிழ் பேசத் தொடங்கியது 1931ல் ஆகும். (கீசக வதம்).

தமிழர் சமூக வரலாற்றில் சினிமாவுக்கு மிக முக்கிய இடமுண்டு. அதாவது சகல தமிழ் மக்களும் ஒரு கூரையின் கீழ் இருந்து தங்கள் கொள்வனவு சக்திக்கேற்ப உட்கார்ந்து ஒரு மகிழ்வளிப்பைப் (entertainment) பார்ப்பது என்பது சினிமாக் கொட்டகையிலேயே நடந்தேறியது. இது மிகப்பெரியதொரு புரட்சியாகும். முற்றிலும் சந்தைத் தயாரிப்பில் ஈடுபட்ட இக்கைத்தொழில் தமிழ் மரபின்

"வீரன்" பற்றிய புலப்பதிவுகளை மாற்றிற்று. தாழ்நிலையில் இருந்தவனின் உயர்ச்சியும், உயர் நிலையில் இருந்தவனின் அனுதாப அகற்சியும் சினிமாவுக்கு முக்கிய இடத்தை ஏற்படுத்திக் கொடுத்தன. தமிழ்நாட்டில் மக்கள் நிலைத் தொன்மங்களின் நவீன வடிவங்களாக கதாநாயகர்கள் சினிமாவின் சனரஞ்சகத் தன்மைக்கு அச்சாணித் தேவையாகினர். அந்தத் தொன்மக்களை மாத்திரமல்லாமல் (மதுரை வீரன், காத்தவராயன், ரிஷ்யசிருங்கர், ஜகதஸ்பிரதாபன் போன்றோர்) அந்தத் தொன்மை வடிவங்களில் அமைந்த கதாபாத்திரங்களை (மீனவன், ரிக்ஷாக்காரன், மாட்டுக்கார வேலன்) தமிழ்ச்சினிமா சித்தரித்தது.

அப்பாத்திரங்களைச் சித்தரித்தவர்களே அப்பாத்திரமாகக் கொள்ளப்பட்டு, அரசியல் முக்கியத்துவமுடையவர்கள் ஆனார் (எம்.ஜி.ஆர்.)

எம்.ஜி.ஆர். வருகைக்குச் சற்று முன்னர் அண்ணாத்துரையும், கருணாநிதியும் தமிழ் சினிமாவின் மொழியை மாற்றியமைத்தனர். அந்த மொழிநடை அரசியலையும் பாதித்தது. சினிமாவையும் மாற்றியது. தமிழ் சினிமா தமிழ் சமூகத்தை தன் மாற்றத்துக்கு உட்படுத்தியது. அந்த மழையின் தூவானம் தமிழக அரசியலில் 1967 முதல் இன்று வரை விடாமல் உள்ளது.

தமிழ் சினிமா மற்றைய ஊடகங்களைப் பெரிதும் பாதித்துள்ளது. அச்சுச் சாதனங்களும் வானொலியும் பெருமளவிற்குச் சினிமா மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது மறுக்க முடியா உண்மையாகும்.

தமிழ் சினிமாவினது தாக்க வீச்சின் பின்புலத்திலேயே தொலைக்காட்சியும் பார்க்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது. தொலைக்காட்சி தமிழ்நாட்டுக்கு 1975லும், இலங்கைக்கு 1979/1982லும் வந்து சேர்ந்தது.

தொலைக்காட்சி அதன் ஊடகத் தன்மை காரணமாக (அதற்கான காட்சிப் பெட்டி அவசியம்) தமிழ் நாட்டில் இன்னும் கிராமப்புறங்களுக்கு முற்றுமுழுதாகச் செல்லவில்லை. இலங்கையில் தமிழ் பிரதேசங்களில் தொலைக்காட்சி போர் காரணமாக பரவலாகச் செல்லவில்லை.

தொலைக்காட்சியை "சின்னத்திரை" என அழைப்பதிலேயே தமிழ் சினிமாவின் தாக்கம் நன்கு தெரிகிறது. தமிழகத்துத் தொலைக்காட்சி நிலையங்கள் தம்மைப் பிரபலப்படுத்திக் கொள்வதற்கு முதலில் சினிமாப் படங்களையே பயன்படுத்தினர். இப்போது தொலைக்காட்சி பல வழிகளில் தமிழ் சினிமாவையே நம்பியுள்ளது. பாடல்கள் திரைப்படங்களில் வருவனவே. ஒவ்வொரு நிலையமும் ஒரு நாளைக்கு இரண்டு திரைப்படங்களைக் காட்டுகின்றன.

ஆனால், இப்பொழுது படிப்படியாக தொடர் நாடகங்கள் முக்கியமாகின்றன. இன்றைய நிலையில் தமிழில் சனரஞ்சகப் பண்பாடு வளர்வதற்கு வானொலியும், தொலைக்காட்சியும் முக்கிய சாதனங்களாகின்றன.

தமிழ் ஊடகங்கள் தமிழை மிகப் பெரிய முறையில் மாற்றியுள்ளன என்று சொல்வதிலும் பார்க்க மிகப் பெரிய மாற்றங்களுக்குள்ளாகி வரும் தமிழகத்தை இந்த ஊடகங்கள் எடுத்துக்காட்டுகின்ற எனலாம்.

தமிழின் இருபதாம் நூற்றாண்டு வரலாற்றில் ஊடகங்களுக்கு மிக முக்கியமான இடம் உண்டு.



நான் கண்ட அப்துல் ஹமீட் அண்ணா!

நாடகத்துறையில் என் ஆசான் தாஸீஸியஸ் மாஸ்டருடன் லண்டனில் அரங்க செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தவேளையில்தான் 1997ம் ஆண்டில் அனைத்துலக ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தமிழ், (ஐ.பி.சி) ஆரம்பிக்கப்பட்டது. அப்போது என்னிடம் முகாமைத்துவப் பொறுப்பை தாஸீஸியஸ் மாஸ்டர் ஒப்படைத்திருந்தார்.

அந்தக் காலகட்டத்தில்தான் அப்துல் ஹமீத் அண்ணாவை நேருக்கு நேர் சந்தித்தேன். எஸ்.கே. ராஜென் அவர்கள் ஐ.பி.சி.க்கு அவரை அழைத்து வந்தார். அன்று ஐ.பி.சி.க்கு வருகை தந்த ஹமீத் அண்ணாவுடன் பேசக்கிடைத்த ஒரு சில நிமிட நேரங்களுக்குள் பல விடயங்களை எமக்கு விளக்கிக் கொண்டார். ஐ.பி.சி. ஆரம்ப நிலையில் இருந்ததால் அவரின் ஆலோசனை எமக்குப் பெரும் உதவ-ியாக இருந்தது. எமது புதிய அறிவிப்பாளர்களுக்குப் பயிற்சிப்பட்டறை ஒன்றையும் நடாத்தியிருந்தார்.

அன்று ஆண்குரல்களில் மட்டுமே செய்திகள் வாசிக்கப்பட்டு வந்தன. ஹமீத் அண்ணாவின் பயிற்சியின் பின்னர் செய்தி வாசிப்புக்கெனத் தெரிவு செய்யப்பட்டவர் சகோதரி யசோதா மித்திரதாஸ் அவர்கள். அப்பொழுதிலிருந்து ஹமீத் அண்ணா லண்டன் வரும் சந்தர்ப்பங்களிலெல்லாம் ஐ.பி.சி.க்கு வந்து நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தும், ஆலோசனைகள் வழங்கிக் கொண்டதை என்றும் மறக்க முடியாது.

அப்துல் ஹமீத் அண்ணாவுக்கு பாராட்டுவிழா நடாத்துவதில் நானும் பங்கெடுத்துக் கொண்டதில் எனக்கும் சந்தோசம்.

அன்போடு

எஸ்.சிறிஸ்கந்தராஜா.



வானின் ஒலி எல்லாம் வானொலி ஆகுமா? வானொலி எல்லாமே வாய்மை ஒலிகளா?

- சுதுமலை கந்தையா இர்ராஜமனோகரன்

'காசி நகர்ப் புலவர் பேசும் உரை தான் காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' என்று உலக மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (1882-1921) பாடியதை அறியாத தமிழர்கள் மிகச் சிலர் என்று துணிந்து கூறலாம். ஏறத்தாழ அவருடைய காலத்திலேயே, மேற்கிலே வானொலிக்குரிய பலவிதமான ஆய்வுகளும் அடிப்படைக் கண்டுபிடிப்புகளும் நடைபெற்றன. இன்றுவரை தொடர்கின்ற ஆய்வுகளின் மூலம் எத்தனையோ விதமான புதிய கருவிகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் நாம் அனுபவித்து வருகின்றோம். உண்மை உழைப்பாற் கண்டுபிடிக்கப்படும் இக் கருவிகளைப் பயன்படுத்தி, மக்கட் கூட்டங்களும் முக்கியமாக அரசவியந்திரங்களும் பொய்யையே கூடுதலாகப் பரப்பிவருகின்றன. உண்மையைக் கூறும் வாய்மை வானொலிகள் உலகிலே மிகக் குறைவானவை. உண்மையோ பொய்யோ ஊறுகளை அனுபவிப்பது நாம் தானே. அதுமட்டுமா? நல்ல தமிழ் பரப்பவென்று உருவாகி அல்லன புகட்டும் அலைவரிசைகள் மலிந்த காலமல்லவா! எவை எவ்வாறானவை எனினும், வானலைக-ளின் தொழில்நுட்பம் பற்றிய விஞ்ஞான உண்மைகளைச் சிறிதளவிலாவது அறிந்து கொள்ள முயல்வது அறிவுத் தேவையாகும்.

எண்ண அலைகளிலே ஏங்கும் தமிழர் என்று பார்த்தாலென்ன, அகிலமெங்கும் அகதியாய் அலையும் தமிழர் என்றாலென்ன அல்லது சொந்த மண்ணிலேயே ஏதிலியாக அலைகின்ற தமிழர் என்றாலென்ன, எவராகவிருப்பினும் அலை என்ற சொல்லை நன்கு அறிந்திருப்பர். இன்று இவ்வாறான எம் எல்லோரையும் இணைக்கும் ஒரு பாலமாக விளங்குவதும் இந்த அலைகளே. பார-தியாரின் 'நீலக்கடலலையே உனது நெஞ்சின் அலைகளடீ' என்ற பாடல் வரிகள் கூட இரு காதல் மனங்களுக்கு இடையேயான அலைப் பாலத்தையே குறிக்கின்றது.

அலைகளின் தன்மைகள்

அலைகளைக் கண்ணாலே பார்த்து விஞ்ஞானமுறையிலே விளங்கிக் கொள்வதற்குப் பெரிதும் பயனுள்ளது. சலனமற்ற குளத்து நீரிலே கல்லொன்றை எறிகின்ற சாதாரண நிகழ்ச்சி. கல் விழுந்த இடத்தைச் சுற்றி வட்டமாக அலைகள் பரவுவதை நாம் கண்டிருக்கின்றோம். அலைகள் கிடையாக வெளியே பரவுவதாகத் தோற்றினும், நீர் மூலக்கூறுகள் நிலைக்குத்தாக மேல் கீழ் நோக்கியே அமைந்திருக்கும். அதாவது மூலக்கூறுகள் அசையுந்திசை அலையின் திசைக்குச் செங்குத்தாகும். நீரிலே மிதந்து கொண்டிருக்கும் இலைகள் போன்றவற்றை நோக்கினால் இவ்வுண்மை புலப்படும். இவை குறுக்கலைகள் (transverse waves) எனப்படும்.



அலைகள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் சக்தியைக் கடத்துவன. அதிகமான அலைகள் பரவுவதற்கு ஊடகம் தேவை. ஆனால் ஊடகத்திற்குரிய அலைகளான மின்காந்த அலைகள் பரவுவதற்கு ஊடகம் தேவையில்லை. வெற்றிடத்தினூடு வெகு சுலபமாக இவை பரவவல்லன. (இதனாற் போலும் வெற்றுச் செய்திகள் வேகமாகமாவும் இலகுவாகவும் பரவிவிடுகின்றன?)

சாதாரண அலையொன்றின் தன்மைகளைச் சற்று விஞ்ஞான முறையிலே பார்ப்பது அவசியம். கீழேயுள்ள படம் அதனை விளக்கி நிற்கும்.

சுற்று : ஒரு முழு அலையின் ஊசல்.



அலைநீளம், L : ஒரு முழு ஊசலின் தூரம் (மீற்றர்).
வீச்சம் : ஊசலின் போதான அதிகூடிய நேர் அல்லது எதிர்ப் பெயர்வு (மீற்றர்).
அதிர்வெண், f : செக்கன் ஒன்றிலே அமையும் சுற்றுக்களின் எண்ணிக்கை (Hz).
வேகம், V : ஒரு செக்கனில் அலை சென்ற தூரம் (மீற்றர் ∴ செக்கன்), v = f x L

மின்காந்த அலைகள்

கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் கிளார்க் மக்ஸ்வெல் (1831-1879) என்பவர் சில முக்கியமான அலைகள் பற்றித் தான் கண்டுபிடித்த கருத்துகளை 1867 ஆம் ஆண்டிலே முதன்முதலாக வெளியிட்டார். இவ்வலைகளின் வேகமும் சோதனைகளிலிருந்து பெறப்பட்ட ஒளியின் வேகத்தின் அளவும் கணிக்கப்பட்ட வேகத்திற்கு ஏறத்தாழச் சமமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இது ஒளியும் மின்காந்த அலையே என்கின்ற கொள்கையைத் தந்து நிற்கின்றது. இவற்றைவிட வேறு வகையான அலைகள் சில, ஜேர்மனி ஹம்பேர்க்கைச் சேர்ந்த ஹைன்றிக் றுடோவ் ஹேர்ட்ஸ் (1857-1894) அவர்கள் கண்டுபிடித்த வானொலி அலைகளை ஒத்து இருந்தன. மின் காந்த அலைகளின் முழு நீளங்களும் கொண்ட மின்காந்த அலை மாலை (electromagnetic spectrum) கீழே உள்ளது:



ஒலியலைகள்

ஒலி அலைகள் நீரிலே ஏற்படும் அலைகள் போலே குறுக்கலைகள் அல்லாமல் நீளலைகள் (longitudinal) ஆகும். நீளலைகளிலே ஊடகமூலக்கூறுகளின் அதிர்வு அலையின் திசையிலேயே அமைந்திருக்கும். இது அமுக்கப் பகுதி, விரிவாக்கப் பகுதி எனப் பரவும். அதாவது, மூலக்கூறுகள் இருபுறமும் ஆடிவிட்டு நின்றுவிடும். அவ்வாறு அசையும் வேளை, நெருங்கும் போது அமுக்கப்பகுதியும் விலகும்போது விரிவாக்கப்பகுதியும் ஏற்படுகின்றன. ஒலி அலைகள் மிகச்சிறிய தூரத்திற்கே பரவ வல்லன. வானொலி



அடிப்படை வானொலி அமைப்பிலே பரப்பி (transmitter)> வாங்கி (receiver) என இரண்டு பகுதிகள் உள்ளன. பரப்பி என்னும்போது பின்வரும் செயன்முறைகளும் கருவிகளும் முக்கியமானவை:

ஒலிவாங்கி (microphone) - இது ஒலியலைகளை மின்னோட்டமாக மாற்றுவது. இவ்வாடலோட்ட மின்னோட்டத்தின் அதிர்வெண் மூலவொலியலையின் அதிர்வெண்ணோடு தொடர்புடைத்து. இவை வழமையாக ஒலியதிர்வெண் சமிக்ஞைகள் எனப்படும்.

ஆட்டி (oscillator) - இது ஆடலோட்ட மின்னோட்ட சமிக்ஞையை வானொலி அதிர்வெண் சமிக்ஞை ஆக்குவது. ஒலியதிர்வெண்ணிலும் அளவிலே கூடிய இவ்வதிர்வெண்ணே சமிக்ஞைகள் கடத்தப்படும் வடிவம் ஆகும்.

மாற்றி (modulator) - இது ஒலியதிர்வெண்ணை நிலையான அதிர்வெண் சமிக்ஞை ஆக்குவது. மாற்றப்பட்ட சமிக்ஞையானது வானலைச் செலுத்தியிலே ஆடலோட்டமாகச் செலுத்தப்படுவதற்கு முன்னர் வானொலி அதிர்வெண் பெரிதாக்கியிலே பெரிதாக்கப்படும்.

வானலைச் செலுத்தி (aerial) - இது மின்காந்த அலைகளை வெளியே செலுத்தும் கருவி.

பரப்பி (transmitter)



வாங்கி என்னும்போது பின்வரும் கருவிகளும் அவற்றின் செயன்முறைகளும் முக்கியமானவை:
வானலை உள் வாங்கி (aerial) - இது மின்காந்த அலைகளை உள் வாங்கும் கருவி. தேவையற்ற அலைவரிசைகள் பலவற்றையும் இது உள்வாங்கும்.

இசைவாக்கச் சுற்று (tuning circuit) - இது தேவையான வானொலி அலை வரிசையை மட்டும் தெரிவு செய்ய உதவுவது.
வானலை மிகையாக்கி (radio frequency amplifier) - இது வானலை அதிர்வெண்ணைப் பொரிதாக்குவது. சாதாரண

அமைப்புகளிலே இது இருக்கமாட்டாது. பெரிதாக்க வேண்டிய தேவை இல்லை.
அலை மாற்றி (demodulator or detector) - இது வானலை அதிர்வெண்ணை மீண்டும் ஒலியலை அதிர்வெண் ஆக்குவது.
ஒலியலை மிகையாக்கி (audio frequency amplifier) - இது ஒலியலை அதிர்வெண்ணைப் பெரிதாக்குவது.
ஒலி பெருக்கி (loud speaker) - இது ஒலியலைகளை வலிதாக்குவது.



வாங்கி (receiver)

மேலே விளக்கப்பட்ட கருவிகள் அடங்கிய அமைப்பு அடிப்படையிலே வானொலி தொழிற்படுகின்ற தன்மையை எளிதான முறையிலே எடுத்துக் காட்டுகின்றது. ஆயினும் தொழில் நுட்பத் தன்மையை நோக்கின், விஞ்ஞான முன்னேற்றத்தோடு வளர்ந்துவந்த நிலைமையால் இன்று எத்தனையோ வகையான மேலதிக கருவிகளை இணைத்துக் கொண்டுள்ளது. இதனாலே பலவகையான வானொலிகளை நாம் அனுபவிக்கத் தக்கதாக இருக்கின்றது. செவிக்கும் மனத்திற்கும் இன்பம் ஏற்படுத்துவதற்கென மட்டுமன்றித் தேவைக்கேற்பவும் இவை அமைக்கப்படுகின்றன. அதாவது வானொலி ஒலிபரப்பப்படவேண்டிய திசை, தூரம் இன்னோரன்னவைக்கேற்பத் தன்மையைத் தெரிவுசெய்யும் வசதி இன்று உண்டு.

வானொலி அலைகள்

வானொலி அலைகள் மின்காந்த அலைகள் வகையின. இவை ஒளியின் வேகத்திலே - அதாவது செக்கன் ஒன்றிற்கு ஏறத்தாழ 300,000 கிலோ மீற்றர் செல்லவல்லன. ஆரம்ப காலத்தில் நேர்கோட்டிற் செல்லும் அலைகளிலேயே இவை தங்கியிருந்தன. முதன்முதலாக 1901 ஆம் ஆண்டிலே மார்க்கோனி (1874-1937) என்பவர் கோன்வோல் (Cornwall) என்னும் இடத்திலிருந்து செலுத்தப்பட்ட வானொலி அலைகளை அத்திலாந்துச் சமுத்திரத்தின் (Atlantic Ocean) அப்பால் நியுபௌண்ட்லான்ட் (Newfoundland) என்னும் இடத்திலிருந்து கேட்டார். வானொலி வரலாற்றிலேயே முக்கிய திருப்பத்தை இந்நிகழ்ச்சி ஏற்படுத்தியது. ஆனாலும் நேர்கோட்டிலே செல்லும் அலைகள் பூமியின் வளைவு காரணமாக அதிகதூரம் செலுத்தப்பட முடியாதனவாக இருந்தன. எட்வேர்ட் அப்பிள்ட்டன் என்பாரின் அயனமண்டலக் கண்டுபிடிப்பு இச்சிக்கலைத் தீர்த்து வைத்தது. இவ்வயன மண்டலம் பிரதிபலிக்கும் தன்மை கொண்டவை என்பதை இவர் விளங்க வைத்தார். பின்னர், இம் மண்டலம் பல உட்படைகளாக அமைந்து இருப்பதும் தெரியவந்தது.

வானொலி அலைகள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்தைப் பல வழிகளிலே சென்றடையலாம்.



தளவலைகள் (Ground or surface waves) இவை நிலத்தின் தளத்தை அடியொட்டிச் செல்லும். மணலினாலான தளத்திலும் பார்க்க நீரினாலான தளத்திலே இப்பரவுகை கூடிய தூரம் செல்லும். சாதாரணமாக இவ்வாறான முறையிலே 1000 கில்லோ மீற்றர் வரை
வானொலி அலைகள் செல்லக்கூடும். 2 மெகாஹேட்ஸ் (MHz) வரையிலான அதிர்வெண் கொண்ட அலைகளே இவ்வாறு பரவ வல்லன.

வானலைகள் (Sky waves) 3 தொடக்கம் 30 மெகாஹேட்ஸ் (ஆர்ண) அதிர்வெண் கொண்ட அலைகள் பரவுவதற்கான முறை இதுவேயாகும். இவ்வலைகள் நிலத்திற்கும் அயனமண்டலத்திற்கும் இடையே மாறிமாறித் தெறித்துப் பரவும். இதனால் முழு உலகையுமே இவ்வாறு தொடர்பு கொள்ளலாம்.

வெளியலைகள் (Space waves) 30 மெகாஹேட்ஸ் (MHz) அதிர்வெண்ணிலும் கூடிய அலைகள் அயனமண்டலத்தினூடு வெளியேறிவிடும். இதனால் இவை செலுத்தியிலிருந்து நேரடியாக வாங்கியை நோக்கிச் செலுத்தப்படும். இதனால் 100 கில்லோ மீற்றர் வரையே இவ்வசதியை ஏற்படுத்தலாம். மேலும் இடையிலே மறைப்புகள் தடையாக இருத்தலாகாது.

செய்மதி அலைகள்

மேலே கூறப்பட்ட அனைத்தும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட இவை மிகவும் அண்மைக்காலத் தொழில் நுட்பங்கள் பலவற்றை அடிப்படையாகக் கொண்டவை. பூமியிலிருந்து செலுத்தப்படும் அலைகள் குறிப்பிட்ட செய்மதியை அடைந்து தெறித்து மீண்டும் பூமியை அடைகின்றன. அவ்வாறு வருகின்ற அலைகளை இதற்கென அமைக்கப்பெற்ற தட்டுகள் (discs) ஏற்று உரிய கருவிகள் மூலம் ஒலியலைகளாக மாற்றும்.

இறுதியாக, ஒரு வானொலியை நாம் SW 31 / 9520 KHz எனக் குறித்தால் அதன் கருத்து என்ன என்பதைப் பார்ப்போம். ஞறு 31 என்பது குறிப்பிட்ட அலை வரிசையின் அலைநீளத்திற்குரிய குறியீடு. 9520 KHz என்பது அலையின் அதிர்வெண். அதாவது ஒரு செக்கனில் 9,520,000 சுற்றுகள் வெளியேறும்.

வானலை பற்றிய வளர்கலை தன்னிலே
தேனுறு தமிழிலே தெளிவுற வேண்டியே
நானறி செய்திகள் நலம்பெற எழுதினேன்
கூனறத் தமிழர்நாம் குயிலெனக் கூவிடும்
வானொலி எல்லாம் வளமுற வாழ்கவே!
கானமாய் முழங்கக் கன்னித் தமிழ் வாழ்க!

(இக்கட்டுரையின் முக்கிய பகுதி வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணிக்காக எழுதப்பட்டது. தொழில் நுட்ப அறிவுத் தேவை கருதி இங்கு மீள் வெளியீடாகியுள்ளது. நன்றி.)

:Voice Telecom



:VOICE DIRECT

Home Account

now you can dial... 1651
to call:

Sri Lanka } from 4p
India }

EUROPE from 2p

CUSTOMER SERVICE: 0800 519 4 519

The above minutes are based on calls made from 0207/0845 local access numbers. Surcharge applies on payphone access numbers.
E & OE. Billing per minute. For further information please contact our customer service. 0800 519 4 519 or visit our website : www.voicetelecom.com







your link to the world

தரணி எங்கும் தமிழ் பரப்பும்
தலைமை ஒலிபரப்பாளர்
பீ. எச். அப்துல்ஹமீத் அவர்களே
உங்கள் சேவை மென்மேலும் தொடர
எங்கள் நல் வாழ்த்துக்கள்

கோபரா ஞானம்

அழகு ஜொலிக்கும்
அசல் 22 கரட் நகைகள்
அத்னையும் ஒரே இடத்தில் .....

நங்கையர் விரும்பும் நவீன ரகப்
பட்டுப் புடவைகள் பஞ்சாபிகள், சட்டைகள்
ஆடவர் விரும்பும் சேட்ஸ், குருத்தா,
பட்டுவேட்டி இன்னும் பல.....

இசைக் கருவிகள்,
அழகிய அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்துக்கும்



GOPARA GNANAM

Import & Export
Wholesale & Retail

98 - 100 UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EN
Tel: 020 8682 4004

249, NORT HALT DOAD,
SOUTH HARROW
Tel: 020 8864 9393

Printed by VASAN PRINTERS UK 020 8646 2885